# முற்றுப்புள்ளியில் ஆரம்பம்

பட்டுக்கோட்டை பிரபாகர்



## உள்ளே...


| | |
|---|---|
| முற்றுப் புள்ளியில் ஆரம்பம் ................. | 5 |
| இரவுகள் கனவுக்காக... ........................ | 79 |
| மலரோடு தனியாக... ........................... | 147 |


# முற்றுப் புள்ளியில் ஆரம்பம்

1

உமா பத்மநாபனும், வரதராஜனும் கோரஸாகப் புன்னகைத்து விட்டு, ''வணக்கம் தமிழகம் நிகழ்ச்சியின் அடுத்த பகுதியான சிறப்பு விருந்தினர் சந்திப்பில் இன்று நாம் சந்தித்து உரையாட இருக்கும் நபர் தமிழகத்தின் தொழிலதிபர்களில் ஒருவரான கே.பி.சக்கரவர்த்தி. இருபது வருடங்களுக்கு முன்பாக சென்னைக்கு எந்த மூலதனமும் இல்லாமல் வந்து வேலை தேடி அலைந்த ஒரு இளைஞர் இன்றைக்கு வெற்றி பெற்ற தொழிலதிபர். கே.பி.சி. சொட்டு நீலம், கே.பி.சி. வாஷிங் பவுடர் என்றால் குழந்தைக்குக் கூடத் தெரியும் அளவில் உழைப்பால் வெற்றி பெற்று உயர்ந்து நிற்கும் கே.பி.சக்கரவர்த்தியை இப்போது நாம் சந்திப்பதில் மகிழ்ச்சி'' என்றதும்...

கேமிரா திரும்பி கதர் வேட்டி, கதர் சட்டை அணிந்த கே.பி.சக்கரவர்த்தியைக் காட்ட -

''அய்யோ! மம்மி! சீக்கிரம் வா! ஆரம்பிச்சாச்சு!''

அந்த பங்களாவில், டி.வி. முன்னால் உட்கார்ந்திருந்த மேகா குரல் கொடுத்தாள். மாடிப்படிகளில் அவசரமாக இறங்கி வந்தாள் காஞ்சனா.

மேகாவின் தம்பி முந்தாநாள் தான் மீசை முளைத்த விஷ்ணு, ''டாடி டை அடிச்சிட்டுப் போயிருக்கலாம்'' என்றான் டி.வி.க்கு ரொம்பப் பக்கத்தில் அமர்ந்து கொண்டு.

அவர்களைத் தவிர, பங்களாவில் வேலை பார்க்கும் ஊழியர்கள் ஏழெட்டுப் பேர் மரியாதையான தூரத்தில் தள்ளி நின்று ஆர்வமாக தங்கள் 'அய்யா'வின் பேட்டியைப் பார்க்கக் காத்திருந்தார்கள்.

''வணக்கம் சார்.''

பதிலுக்குக் கைகுவித்து வணக்கம் சொன்ன சக்கரவர்த்தியின் விரல்களில் மோதிரங்கள் ஏதுமில்லை. நெற்றியில் விபூதியும், குங்குமமும் பளிச்சென்று இருக்க, அதைவிடப் பளிச்சென்று புன்னகை.

''தர்மசங்கடப்படுத்தறதா நினைக்கக்கூடாது. எந்த மூலதனமும் இல்லாம சென்னைக்கு வந்து தொழில் ஆரம்பிச்சதா ஒரு பத்திரிகைப் பேட்டில நீங்க சொல்லியிருந்தீங்க. அது மிகைப்படுத்திச் சொன்னதா? இல்லை அப்பட்டமான உண்மையா?''

''எதுக்காக நான் மிகைப்படுத்தணும்? பொதுவா எனக்கு மேடையில பேசச் சொன்னாலே உதறும். பத்திரிகைல பேட்டி கொடுத்ததும், இந்த டி.வி. பேட்டிக்கு ஒத்துக்கிட்டதும் என் புகழை வளர்த்துக்கறதுக்காகவோ, என் தொழிலுக்கு விளம்பரம் தேடிக்கிறதுக்காகவோ இல்லை. ஒரு மனுஷனோட அனுபவம். இன்னொரு மனுஷனுக்குப் பாடமா இருக்கணும். நான் தொழில்ல வெற்றியடைஞ்சதைச் சொன்னா, எத்தனையோ இளைஞர்களுக்கு அது நம்பிக்கை ஊட்டறதா அமையும்னுதான் ஒத்துக்கிட்டேன்.''

ஜீன்ஸ் பேண்டும், டீ.ஷர்ட்டும் அணிந்து பாதி முதுகுவரை வெட்டின கூந்தலை முகம் நீங்கலாகப் பரப்பி வைத்திருந்த மேகா இந்த இடத்தில் கைதட்டி, ''சூப்பர்ப் டாட்!'' என்றாள்.

''கொஞ்சம் சும்மா இருடி!'' என்றாள் காஞ்சனா.

மேகா அவள் காதோரம், ''அம்மா, உன் காதுக்குள்ளே சோப்பு'' என்று விட்டு டி.வி.யைப் பார்த்தாள்.



''சரி. எப்படி தொழில் ஆரம்பிச்சிங்க சார்?''

''சென்னைக்கு நான் மட்டும் தனியா வரலை, என் மனைவியோட வந்தேன். அது மட்டுமில்லை. அப்போ என் மனைவி அஞ்சு மாச கர்ப்பம். எங்க கல்யாணம் காதல் கல்யாணம். ரெண்டு பேர் வீட்டுக்கும் தெரியாம நடந்தது.''

''ஓ! மம்மி! நீ இதைச் சொன்னதே இல்லையே!'' என்றான் விஷ்ணு.

''ஷ்! குறுக்கேப் பேசாமல் பாருடா ராஸ்கல்!'' என்றாள் காஞ்சனா.

''அதனால எங்களுக்கு யாரோட ஆதரவும் இல்லை. ஏதோ ஒரு நம்பிக்கையில மெட்ராசுக்கு வந்துட்டோம். மோகன்ராம்னு எனக்கு ஒரு ஃப்ரெண்டு. அவன் வீட்லதான் தங்கினோம். அவன் என் வாழ்க்கைல செஞ்ச உதவியை மறக்கவே முடியாது. வேலை தேடினேன். எதுவும் கிடைக்கலை. எனக்கு ஃபினாயில் தயாரிக்கத் தெரியும். மோகன்ராம்கிட்ட நூறு ரூபா கடன் வாங்கி அதுக்கான கெமிக்கல் காம்பவுண்ட்ஸ் வாங்கிட்டு வந்து ஃபினாயில் தயாரிச்சி, அதே தெருவுல இருந்த நாலஞ்சி வீடுகளுக்குக் கொண்டு போய் வித்தேன். அந்த நூறு ரூபாதான் ஆரம்பம். தெருவுல இறங்கி வீடு வீடாப் போய் விக்கிறது கேவலமில்லைன்னு நினைச்ச அந்த நினைப்புதான் ஆரம்பம்.''

''அப்புறம்?''

''மூணே மாசத்துல அதே தெருவுல ஒரு வீடு வாடகைக்குப் பிடிச்சேன். ஒரு சைக்கிள் வாங்கினேன். பத்து தெருவுக்கு சுத்த முடிஞ்சது. உழைச்சேன், அப்படி உழைச்சேன். பணமில்லாம நான் பட்ட பல அவமானங்களுக்கு ஒரே பதிலடி அந்தப் பணத்தை சம்பாதிக்கிறது தான்னு மனசுல ஒரு வைராக்யம் வந்திச்சு. திட்டம் போட்டு உழைச்சேன். ஃபினாயிலோட, வாஷிங் சோப்பு, சொட்டு நீலம் இப்படி ப்ராடக்ட் சேர்த்துக்கிட்டேன். பிராண்ட்

எல்லாம் அப்ப போடலை. படிப்படியா முன்னேறி இப்போ அம்பத்தூர்ல ரெண்டு யூனிட்ல மூணு ஷிஃப்ட் வேலையில, மொத்தம் நானூத்திப் பதினேழு பேர் வேலை பார்க்கற நிறுவனத்தை நேரடியா நிர்வாகம் பண்ணிட்டு இருக்கேன்.''

விஷ்ணு திரும்பி, ''ஏன் மம்மி, கார்ஷெட்ல கிடக்குதே அதான் டாடி வாங்கின அந்த முதல் சைக்கிளா?'' என்று சிரித்தான்.

''கிண்டலா இருக்கா? வெயில் படாம, மழையில நனையாம உங்களை வளர்த்தாச்சு. அதான் கேலியா பேசறிங்க'' என்றாள் காஞ்சனா.

''இப்போ உங்க கே.பி.சி. நிறுவனத்தில் என்னென்ன பொருள்கள் தயார் பண்ணி விக்கிறிங்க சார்?''

''சொட்டு நீலம். வாஷிங் பவுடர் - இது ரெண்டுதான் பாப்புலரா போயிட்டு இருக்கு. சோப்பு, ஷாம்பூ இதெல்லாம் கூட தயாரிக்கிறோம். அதெல்லாம் பெருசா ஹிட் ஆகலை.''

''இப்போ இதைத் தவிர வேற என்ன தொழில்கள் பண்றிங்க?''

''கே.பி.சி. ஃபைனான்ஸ்னு நிதி நிறுவனம் ஒண்ணும் நடத்தறேன். இப்போ அப்பளம், ஊறுகாய் பெரிய அளவுல தயாரிக்கிற பிளான்ல இருக்கேன்.''

''நூறு ரூபாய் கடன் பணத்தில ஆரம்பிச்ச உங்க தொழிலோட இன்னிக்கு மதிப்பு என்ன சார்? தர்ம சங்கடமான கேள்வி கேட்டுட்டேனா?''

''இல்லை, இல்லை. நான் ஒழுங்கா வருமானவரி கட்டற குடிமகன். அரசாங்கம் இதைச் செய்யலை, அதைச் செய்யலைன்னு சும்மா குறை சொல்லிக்கிட்டு, அதே சமயம் அரசாங்கத்துக்கு நாம செலுத்த வேண்டிய வரிகளை கட்டாம டபாய்க்கிறது அசிங்கம்னு நினைக்கிறவன் நான். இன்னிக்கு தேதிக்கு என் தொழில்ல உள்ள மூலதனம், எனக்கு இருக்கற



சொத்துக்கள் எல்லாம் சேர்த்து கிட்டத்தட்ட முப்பத்தஞ்சி கோடி தேறும்.''

காஞ்சனா நெற்றியில் தட்டிக் கொண்டு, ''அய்யோ! எதெதில வெளிப்படையா இருக்கறதுன்னு இல்லையா? இதையெல்லாமா பப்ளிக்கா சொல்வாங்க?'' என்றாள்.

''சும்மா இரும்மா, அப்பதான் யங்ஸ்டர்சுக்கு ஒரு கான்ஃபிடென்ஸ் வரும்'' என்றாள் மேகா.

''நூறு ரூபாயில ஆரம்பிச்சி இருபது வருஷத்தில முப்பத்தஞ்சி கோடிக்கு அதிபதி ஆகியிருக்கிங்கன்னா இது பெரிய சாதனைதான். இந்த வெற்றிக்குக் காரணமா உங்க உழைப்பைச் சொல்வீங்களா?''

''உழைப்புங்கறது நம்ம உடம்புல இதயத் துடிப்பு மாதிரிங்க. இதயம் துடிக்கிறதை நிறுத்திட்டா? எல்லாமே போச்சு! அந்த மாதிரி எந்தத் தொழில்லயும் உழைப்புங்கற இதயத்துடிப்பு கடைசி வரைக்கும் இருந்தாகணும். எப்படி உழைக்கிறது. எதை நோக்கி உழைக்கிறதுன்னு ஒழுங்கா திட்டம் போடற பிளானிங் ஒரு முக்கியமான பாயிண்ட். உடம்புல மூளையோட வேலை மாதிரி! நான் உழைக்கிறேன்னு, பாறை பூமில நெஞ்சடைக்க ஆயிரம் அடி தோண்டினாலும் தண்ணி கிடைக்குமா? எங்கே தோண்டினா தண்ணி கிடைக்கும். எப்படித் தோண்டினா தண்ணி கிடைக்கும்னு சிந்திக்கிறதுதான் பிளானிங்! திட்டமிடாத உழைப்பு வேஸ்ட்டாயிடும். திட்டமிட்டாச்சு! உழைக்கத் தயார். ஒத்துழைக்க கை, கால் வேணுமே. இதைத்தான் நட்பு, குடும்பம், சந்தர்ப்பம், சூழ்நிலைன்னு சொல்வேன். கர்ப்பிணியோட, பாக்கெட்ல பணமில்லாம வந்தவனை வீட்ல தங்க வெச்சி மூணு மாசம் சோறு போட்டு நூறு ரூபா பணமும் கொடுத்தானே ஒரு நண்பன்.. அவனுக்கு இந்த வெற்றில பெரிய பங்கு இருக்கு! 'ஒண்ணுமில்லாதவனைப் போய் கட்டிக்கிட்டமே'ன்னு ஒரு தடவைகூட மனசு சலிச்சுக்காம 'தைரியமா இருங்க, நீங்க நல்லா வருவிங்க,

எனக்கு நம்பிக்கை இருக்கு'ன்னு நான் சறுக்கறப்பல்லாம் தாங்கிப் பிடிச்சி ஆறுதல் சொன்னாளே என் மனைவி - அவளுக்கு இந்த வெற்றியில பங்கு இருக்கு.''

''ஹேட்ஸ் ஆஃப்!'' என்று காஞ்சனாவின் கையைப் பற்றிக் குலுக்கினாள் மேகா, ''ஹேய் மம்மி, அழறியா என்ன?''

''உழைக்கிற நோக்கமும், திட்டமிடற மூளையும், தோள் கொடுக்கற குடும்பமும் துணை நிக்கிற நட்பும் இருந்துட்டா மட்டும் போதுமா? இது எல்லாத்தையும் எனக்கு அமைச்சிக் கொடுத்தது எது? சக்தி! கடவுள் சக்தி! எனக்கு கடவுள் நம்பிக்கை உண்டு. கடவுள் விரும்பினதாலதான் எனக்கு இந்த வாழ்க்கை கிடைச்சது.''

''உங்க வெற்றிக்கான காரணங்களை அழகாச் சொன்னீங்க சார். ஒரு சந்தேகம், உங்க தோற்றத்துல இந்த வெற்றியோட பிரதிபலிப்பு எதுவுமே தெரியலையே... ரொம்ப எளிமையா இருக்கீங்களே?''

''நான் பணம் சம்பாதிச்சதை நீங்களும், நானும் வெற்றி, வெற்றின்னு குறிப்பிடறப்ப எல்லாம் கொஞ்சம் குறுகுறுப்பாவும் இருக்கு. தப்பான வழில போறவங்க இந்தப் பணத்தை குறுகிய காலகட்டத்தில அடைஞ்சிட றாங்க இன்னிக்கு. இதை நேர்மையா சம்பாதிச்சதுக்கு தான் நான் பெருமைப்படறேன். பணம் சம்பாதிக்கிறது மட்டுமே வாழ்க்கை வெற்றியா நான் நினைக்கலை. ஒரு நல்ல மனுஷனா வாழறதுதான் வாழ்க்கை வெற்றி! அதில் வெற்றி பெற்றவன் குடிசைலயும் இருக்கலாம். பங்களாலயும் இருக்கலாம். பணம் என் குணத்தில எந்த மாற்றத்தையும் கொண்டு வரலை. சைக்கிள்ல போனவனை, கார்ல போக வெச்சிருக்கு. ஒண்டிக் குடித்தனத்தில வாழ்ந்தவனை பங்களால வாழ வெச்சிருக்கு. என் தோற்றத்திலயும் சரி, உள் மனசுலயும் சரி. அதால எதுவும் செய்ய முடியாது.''

''தத்துவார்த்தமாய் பேசறிங்க. சமுதாயப் பணிகள்ல ஈடுபடுத்திக்கிறதுண்டா?''



''பல சமுதாய அமைப்புகளுக்குப் பண உதவி செய்துட்டு வர்றேன். இந்த சமுதாயம் கொடுத்த பணம்தான் என்னை வாழ வெச்சிட்டு இருக்கு. அதனால இந்த சமுதாயத்துக்கு அந்தப் பணத்தால முடிஞ்சவரைக்கும் செய்யணும்னு எண்ணம் உண்டு. சில திட்டங்களும் வெச்சிருக்கேன்.''

''உங்க குடும்பத்தைப் பத்தி சொல்லுங்களேன்.''

''என் மனைவி காஞ்சனா என் நம்பிக்கையோட முதுகெலும்பு ஹோம் மினிஸ்டர். வீட்டு விவகாரம் பூரா அவதான் கவனிச்சுக்கறா. என் டிரைவருக்கு என்ன சம்பளம்னு எனக்குத் தெரியாது. இன்னிக்கு அரிசி என்ன விலைன்னும் எனக்குத் தெரியாது.''

''பார்த்துட்டு இருக்கிறவங்க எல்லாம் சிரிக்கப் போறாங்க'' என்றாள் காஞ்சனா.

''உண்மை பேச கட்ஸ் வேணும். டாடி ஹேஸ் எ லாட்'' என்றான் விஷ்ணு.

''ஒரு பொண்ணு, ஒரு பையன். மேகா, விஷ்ணு, மேகா டிசைனிங் கோர்ஸ், கம்ப்யூட்டர் கோர்ஸ்னு எனக்குப் புரியாததை எல்லாம் படிச்சிட்டு இருக்கா. இண்ட்டீரியர் டெகரேஷன்ல தொழில் செய்யணும்னு ஆசை. விஷ்ணு ப்ளஸ் ட்டூ முடிச்சிருக்கான். கம்ப்யூட்டர் சயின்ஸ்ல என்ஜினியராகணும்னு ஆர்வமா இருக்கான்.''

''ரெண்டு பேருமே உங்க தொழில்ல ஈடுபடுத்திக்க விரும்பலையா?''

''அதைத்தான் நான் அட்வைஸ் பண்ணிட்டிருக்கேன். எனக்கு உதவிக்கு ஆள் இல்லாம தொழிலை ரொம்பவும் அபிவிருத்தி செய்யாம இருக்கேன். இவங்க வேற வேற லைன்ல கனவுகள் வெச்சிருக்காங்க. அவங்க இன்னிக்கு உள்ள தலைமுறை! அவங்க மேல நம்ம விருப்பங்களைத் திணிக்கிறதில எனக்குச் சம்மதமில்லை. அவங்க இஷ்டப் படற துறைகள்ல சாதிக்கிறதுக்கு உதவ வேண்டியதுதான்.''

விஷ்ணு முகம் சுளித்து, ''மேகா, இவரைப் பார்! குடும்ப விஷயத்தை எல்லாம் இப்படிப் போட்டு உடைக்கிறாரே...'' என்றான்.

''அவங்கவங்க இஷ்டப்படற துறைகள்ல விட்டுடப் போறேன்னுதான் சொல்லிட்டாருல்லே. கிப் கொயட் விஷ்ணு!'' என்று அதட்டினாள் மேகா.

''இளைஞர்களுக்கு நீங்க சொல்ல விரும்பறது என்ன சார்?''

''ஒரு கோலம் வரையறப்போ முதல்ல புள்ளிகள் வைப்போம். அப்புறம் கோடுகள் ே ாடுவோம். கடைசியா வர்றதுதான் கோலம். ஆரம்பிக்கிறப்போ வைக்கிற முதல் புள்ளியை மட்டும் தனியாப் பார்த்தா இது ஒரு கோலத்துக்கான ஆரம்பப் புள்ளியாத் தெரியாது. ஒரு தனிப்புள்ளி முற்றுப்புள்ளியாதான் தெரியும். ஆனா, அதிலதான் ஒரு கோலம் ஆரம்பிக்குது. அந்த மாதிரி அவ்வளவுதான், நம்ம வாழ்க்கை முடிஞ்சி போச்சி'ன்னு விரக்தியா நினைச்சுக்கிறப்ப எல்லாம் 'இல்லை, இந்த விரக்தி ஒரு பெரிய வெற்றிக்கான ஆரம்பம்'னு நம்பிக்கை வளர்த்துக்கிட்டாப் போதும். வெற்றியும், சாதனையும் தொடங்க வேண்டிய இடம் மனசு! அப்புறம்தான் செயல்!''

''வாவ்!'' என்று குதித்தாள் மேகா. ''பொளந்து கட்றார்ம்மா டாடி!''

''ரொம்ப நன்றி சார். இந்தக் காலை நேரத்தை எங்க டி.வி. நேயர்களுக்கு ரொம்பப் பயனுள்ளதா அமைச்சிக் கொடுத்துட்டிங்க.''

''இப்படி என் மனசுல உள்ளதை வெளிப்படையாப் பேச ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த உங்களுக்கும், உங்க நிறுவனத்துக்கும் நான்தான் நன்றி சொல்லணும். நன்றி, வணக்கம்.''

சக்கரவர்த்தி கைகூப்பியதும் -



மேகா, ரிமோட் கண்ட்ரோல் எடுத்து வி.சி.ஆரில் ரெக்கார்டிங்கை நிறுத்தினாள். டி.வி.யை நிறுத்தினாள். ஊழியர்கள் தணிந்த குரல்களில் பெருமையாகப் பேசிக் கொண்டு கலைந்ததில் ஒரு டயலாக்! 'நீயும்தான் இருக்கியே. எதுக்கும் உதவாம! அம்பது ரூபா கைல இருந்தா எந்தக் கடையில பிராந்தி வாங்கறதுன்னுதானே போகும் உனக்கு புத்தி!'.

''மம்மி, பாம்பேல டாடி எந்த நம்பர்ல இருக்காரு? விஷ்ணு போன் போடு!'' என்று பரபரத்தாள் மேகா.

''டெலிபோன் பக்கத்தில் எழுதி வெச்சிருக்கேன் பாரு.''

விஷ்ணு தொடர்புக்கு முயன்று கொண்டிருக்கும்போது மற்றொரு போன் ஒலிக்க, மேகா எடுத்து கூந்தலைத் தள்ளிக்கொண்டு ''ஹலோ'' என்றாள்.

''யாரு, மேகாவாம்மா? நான் மோகன்ராம் பேசறேன். எங்கே டாடி? பேசச் செல்லு.''

''டாடி பாம்பே போயிருக்கார் அங்கிள். நைட்தான் வர்றார்.''

''டி.வி.ல இண்ட்டர்வியூ பார்த்தேன்ம்மா. ரொம்ப நல்லாருந்திச்சு. உடனே பேசணும்னு நினைச்சேன்.''

''அவர் வந்ததும் பேசச் சொல்றேன். அங்கிள், ரொம்ப தேங்ஸ்.''

''எதுக்கும்மா?''

''எங்க குடும்பத்துக்கு நீங்க செஞ்ச உதவிக்கு டாடி எத்தனையோ தடவை நன்றி சொல்லியிருப்பார். நான் சொன்னதே இல்லை, இப்போ சொல்லணும்னு தோணிச்சு.''

''அடப்போம்மா! நான் என்ன பெருசா செஞ்சிட்டேன்னு என்னைப் பத்தி பப்ளிக்கா சொன்னான்னு சண்டை போடத்தான் போன் செஞ்சேன்! யார் உதவியும் இல்லாம யாரும் வாழ முடியாதும்மா. எனக்கு எத்தனையோ பேர் உதவி செஞ்சிருக்காங்க. அப்ப என்னால முடிஞ்சதை நான் செஞ்சேன். இன்னிக்கு உங்கப்பா எத்தனை பேருக்கு

வேலை போட்டுக் கொடுத்திருக்கான், எத்தனை பேருக்குக் கல்யாணம் செஞ்சி வெச்சிருக்கான். அவங்க எல்லாம் நன்றி சொல்றதுன்னு ஆரம்பிச்சா தினம் உங்கப்பாவுக்கு அதைக் கேக்கத்தான் நேரம் இருக்கும்.''

''ஓகே அங்கிள், ஷியாமா இருக்காளா?''

''இப்பதான் ப்ரோக்ராம் பாத்துட்டு குளிக்கப்போனா. அப்புறமா பேசச் சொல்றேன்ம்மா.''

''சரி அங்கிள்'' என்று வைத்தாள்.

விஷ்ணு குதித்து, ''மம்மி, டாடி லைனுக்கு வரப்போறார். நீ முதல்ல பேசு'' என்று கார்ட்லெஸ் ஹேண்ட்செட்டை காஞ்சனாவிடம் கொடுத்தான்.

''ஹலோ'' என்றாள் காஞ்சனா.

''ஹலோ, என்னம்மா? இண்ட்டர்வியூ பார்த்தியா, எப்படி இருந்திச்சி?''

''என்னைப் பத்தி ரொம்பதான் சொல்லிருக்கிங்க.''

''உண்மைதானே?''

''சொன்ன உதாரணம் எல்லாம் நல்லா இருந்திச்சி. இருங்க மேகா பேசணுமாம்.''

மேகா வாங்கி, ''டாடி, தூள் பண்ணிட்டீங்க! இன்னிக்கு ப்ரோக்ராம் பார்த்தவங்கல்ல பத்து பேராவது இன்னிக்கே ஃபினாயில் கலக்க ஆரம்பிப்பாங்க'' என்றாள்.

''ஏய்! கிண்டலா?'' என்றார் சக்கரவர்த்தி.

''நிஜம்தான் டாடி. அவ்வளவு பாசிடிவாப் பேசினிங்க. எனக்கே உடம்பு பூரா விறுவிறுன்னு இருந்திச்சி. விஷ்ணு சுரண்டறான். அவன் கிட்டப் பேசிடுங்க.''

விஷ்ணு பிடுங்கி, ''ஹாய் டாட்! ரொம்ப தேங்ஸ்'' என்றான்.

''எதுக்குடா?''



''என்ஜினியரிங் படிப்பெல்லாம் வேணாம். ஆபீசுக்கு என்னோட வந்து அட்மினிஸ்ட்ரேஷன் கத்துக்கோன்னு சொல்லிட்டிருந்திங்க. பேட்டில பர்மிஷன் கொடுத்துட்டிங்களே.''

''இன்னும் ஃபைனல் முடிவு எடுக்கலை விஷ்ணு.''

''நோ டாட்! லட்சக்கணக்கான ஜனங்க முன்னாடி, அவங்க இஷ்டப்பட்ட துறையில விடுவேன்னு சொல்லிருக்கிங்க. நோ வாபஸ் டாட்!''

''ஓகே, ஓகே... நேர்ல நைட் பேசிக்கலாம். ஏர்போர்ட்டுக்கு வண்டியை அனுப்பிச்சிடு.''

''நானே வர்றேன் டாடி.''

''ஏன்?''

''என்னமோ நானே வந்து ரிசீவ் பண்ணணும் மாதிரி இருக்கு.''

''சரி, வா! பாம்பேலேர்ந்து மேகாவுக்கு ஒரு ஸ்பெஷல் கிஃப்ட் எடுத்துட்டு வர்றேன்னு சொல்லு. பை!''

விஷ்ணு வைத்துவிட்டு, ''மேகா என்ன கேட்டிருந்தே? உனக்கு மட்டும் ஸ்பெஷல் கிஃப்ட் எடுத்துட்டு வர்றாராமே'' என்றான்.

''நான் எதுவும் கேக்கலையே.''

''சொன்னாரே.''

''ஸ்பெஷல் கிஃப்டா? என்னது?''

''அதைச் சொல்லலையே...'' என்றான் விஷ்ணு ஹமாம் சோப்பு விளம்பரக் குழந்தையைப் போல. ''படவா!'' என்று அடிப்பதற்குத் துரத்தினாள் மேகா.



## 2

பங்களாவின் பின்புறம் சிறிய நீச்சல் குளம். நிலா வெளிச்சத்தில் இளம் நீலத் தண்ணீர் மௌனமொழி பேசிக் கொண்டிருக்க... அருகில்

ஜெர்மன் புல்வெளியில் முயல் குட்டிகள் ஓடின. அங்கே மெட்டாலிக் மேஜை. நாற்காலிகள் போட்டு, ரகசிய வெளிச்சம் அமைத்து, வேலைக்காரர்கள் இருவர் பரிமாற, டின்னர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சக்கரவர்த்தியும் அவர் மனைவி மற்றும் குழந்தைகளும்.

அருகில் வைத்திருந்த சி.டி. பிளேயரில் 'துணுக் துணுக்' என்று மூச்சுக்கு மூச்சு தலேர்மெஹந்தி பாடிக் கொண்டிருக்க... கால்களால் தாளம் போட்டு, உடம்பை அசைத்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தான் விஷ்ணு.

''அதைக் கொஞ்சம் நிறுத்தேண்டா'' என்றாள் மேகா.

''ஏன் நிறுத்தணும்? உங்களுக்கு வேணாம்னா நான் மட்டும் கேட்டுக்கறேன்'' என்று ஹெட்போன் பொருத்தி காதில் மாட்டிக் கொண்டான்.

''பிடிவாதம்!''

''விடு! போய்ட்டுப் போறான்.''

''டாடி, எனக்கு என்னமோ ஸ்பெஷல் கிஃப்ட் கொண்டார்றதா விஷ்ணுகிட்ட சொன்னிங்களாமே...''

''நீயா கேக்கறியான்னு பார்த்தேன். வெய்ட்'' என்ற சக்கரவர்த்தி சாப்பிட்டு முடித்து, ஸ்பூன்களைப் போட்டு விட்டு நாப்கினால் கைகளைத் துடைத்துக் கொண்டார். நாற்காலியைக் கொஞ்சம் நகர்த்திப் போட்டுக் கொண்டார்.

''மேகா, உனக்கு என்ன வயசு இப்போ?''

''ஏன் டாடி கேக்கறீங்க? ட்வெண்ட்டி ஒன்.''

''இந்த வயசு எதுக்கு சரியான வயசு?''

''நான் சொல்றேன். கல்யாணத்துக்கு!'' என்றான் விஷ்ணு.

''நீ சும்மா இருடா!'' என்றாள் காஞ்சனா.

''அவனை அதட்டாதே! அவன் சொல்றதுகரெக்ட்!'' என்ற சக்கரவர்த்தி தன் சட்டைப் பாக்கெட்டிலிருந்து ஒரு கவர் எடுத்தார்.



''ஹை! மாப்பிள்ளை போட்டோவா? இதான் ஸ்பெஷல் கிஃப்ட்டா?'' என்று விஷ்ணு அந்த கவரைப் பிடுங்க முற்பட... கையைப் பின்னால் இழுத்துக் கொண்ட சக்கரவர்த்தி, ''முதல்ல மேகாதான் பார்க்கணும்'' என்றார்.

''என்ன டாடி இது! நோ! நான் என்னல்லாம் திட்டம் வெச்சிருக்கேன். திடீர்னு கல்யாணம், மாப்பிள்ளைன்னு டிராக் மாத்திடப் பார்க்கறீங்களே... நோ! எனக்கு கல்யாணம் இப்ப கிடையாது!'' என்றாள் மேகா.

''இரு மேகா. அப்பா முழுசா சொல்லி முடிக்கட்டும். என்னங்க இது திடீர்னு எனக்குக் கூடத் தெரியாம என்னென்னமோ ஏற்பாடெல்லாம் செய்றிங்க?''

''இல்லை காஞ்சனா, நானா எந்த ஏற்பாடும் செய்யலை. உனக்கு ராஜபாஸ்கர் தெரியுமில்லே?''

''யாரு?''

''லெதர் இண்டஸ்ட்ரீஸ் வெச்சிருக்கார். எக்ஸ்போர்ட் எல்லாம் பண்றார். ஒரு தடவை கிளப் பார்ட்டில உனக்கு அறிமுகப்படுத்தியிருக்கேன். அன்னிக்கு பார்ட்டி முடிஞ்சி புறப்பட்டப்போ அவர் கார் ஸ்டார்ட் ஆகாமல் போய் அவரையும் அவர் வைஃபையும் நம்ம கார்ல ஏத்திக்கிட்டு கோட்டூர்புரத்தில அவங்க பங்களால டிராப் செஞ்சோம்.''

''இப்ப ஞாபகம் வருதுங்க. அது இருக்குமே ஏழெட்டு வருஷம்! உள்ளே வந்துட்டுதான் போகணும்னு கூப்புட்டு ஜூஸ் கொடுத்து, குங்குமம், ரவிக்கைத்துணி எல்லாம் வெச்சிக் கொடுத்து அனுப்பினாங்களே அவங்க! இருங்க, வர்றேன்'' என்று சற்றே யோசித்து, ''அவங்க பேர்கூட விசாலாட்சி!'' என்றாள் காஞ்சனா.

''எனக்கும் அவரோட ரெகுலர் டச் எதுவும் இல்லை. எங்கயாவது, எப்பயாவது பார்க்கறப்போ ஹலோ சொல்லிக்கிறதோட சரி. ஆனா, அவரைப்பத்தி எனக்கு நல்லாத் தெரியும். என்னைப்பத்தி அவருக்கு நல்லாத்

தெரியும். அவரை பாம்பேல நேத்து மீட் செஞ்சேன். பிசினெஸ் விஷயமா வந்தவர், நான் தங்கியிருந்த அதே ஹோட்டல்ல தங்கியிருந்தார். நேத்து நைட்டு ஹோட்டல் ரெஸ்ட்டாரெண்ட்ல சேர்ந்து சாப்பிடலாம்னு அவர்தான் இன்வைட் செஞ்சார். சாப்பிட்டுக்கிட்டே பொதுவா ரொம்ப நேரம் பேசிட்டிருந்தோம். அப்பதான் அவர் வருண் பத்தி சொன்னார்.''

''யாரு வருண்?''

''அவரோட ரெண்டாவது பையன், எம்.பி.ஏ. படிச்சிட்டு பிசினெஸ் பார்த்துட்டு இருக்கிறதா சொன்னார்.''

''முதல் பையன்?''

''அவன் ஹைதராபாத்ல ஸாஃப்ட்வேர் கம்பெனி நடத்திட்டு இருக்கானாம்.''

''சரி...''

''முதல் பையனுக்கு மூணு வருஷம் முன்னாடி கல்யாணமாயிடுச்சாம். இப்போ வருணுக்கு பெண் பார்த்துட்டிருக்கிறாராம். பளிச்சுன்னு நேரா விஷயத்துக்கு வந்துட்டார். அதாவது, மேகாவை ஏதோ ஒரு ஃபங்ஷன்ல அவர் வைஃப் பார்த்திருக்காங்களாம். எனக்கு ஜாதியோ, ஜாதகப் பொருத்தமோ முக்கியமில்லை. மனசுப் பொருந்தினாப் போதும். இது வருண் போட்டோ. உங்க டாட்டர்கிட்ட காமிங்க. ஃபேமிலில கன்சல்ட் பண்ணுங்க. விருப்பம் இருந்தா சொல்லுங்க - ரெண்டு ஃபேமிலியும் ஏதாச்சும் ஒரு ஸ்டார் ஹோட்டல்ல மீட் பண்ணிப் பேசலாம். வருணும், மேகாவும் பேசட்டும். ரெண்டு பேரும் சம்மதம் சொன்னா நாம ஃபர்தரா ப்ரொஸீட் பண்ணலாம்'னு வெளிப்படையா சொன்னார். ஃபோட்டோ கொடுத்தார். இன்னிக்கு ஃபிளைட்ல வர்றப்போ இதைப்பத்திதான் யோசிச்சேன். இதே ஊர்ல மேகாவுக்கு மாப்பிள்ளை அமையறது பெரிய ப்ளஸ் பாய்ண்ட். ராஜபாஸ்கர் பெரிய இண்டஸ்ட்ரியலிஸ்ட். நம்ம



அந்தஸ்த்தை விடவும் கொஞ்சம் கூடத்தான் சொல்லலாம். கௌரவமான குடும்பம். ரெண்டே பையன்ங்க. ஒருத்தன் இங்கே இல்லை. வருண் போட்டோவைப் பார்த்துட்டு இன்னும் இம்ப்ரெஸ் ஆயிட்டேன். இப்படி எல்லாம் திடீர்னு கூடி வர்றப்போ 'நோ' சொல்றது சரியில்லைன்னு பட்டுது. இப்ப சொல்லு காஞ்சனா, நான் இப்போ கல்யாணப் பேச்சை எடுத்தது தப்பா?'' என்றார் சக்கரவர்த்தி.

''தெரிஞ்ச குடும்பம், அந்தஸ்தான குடும்பம். அவங்களே விரும்பிக் கேக்கறாங்க. இப்படி ஒரு இடம் அமைய கொடுத்து வெச்சிருக்கணுங்க, எங்கே, போட்டோவைக் கொடுங்க!''

காஞ்சனா ஆர்வமாக வாங்கிப் பார்த்துவிட்டு, ''பிரமாதமா இருக்கான் பையன். மேகா கண்ணை மூடிக்கிட்டு சரின்னு சொல்லலாம். மேகாவை இந்தப் பையன் ஓகே சொல்லிட்டா அது மேகாவோட அதிர்ஷ்டம்தான். மேகா, இந்தா, பாரேன்'' என்றாள்

விரல் நகத்தைக் கடித்துத் துப்பியபடி டென்ஷனாக இருந்த மேகா ''நோ! நான் பார்க்க மாட்டேன். இப்ப எனக்குக் கல்யாணம் வேணாம்னு சொல்றேன். அப்புறம் ஏன் பார்க்கணும்?'' என்றாள்.

விஷ்ணு அம்மாவிடமிருந்து பிடுங்கிப் பார்த்துவிட்டு, ''மேகா, ரொம்பதான் அலட்டிக்காதே! ஆள் சூப்பரா இருக்காரு, பாரு!'' என்றான்.

''முடியாதுன்னு சொல்றேன்ல?''

''ஏன்ம்மா?'' என்றார், சக்கரவர்த்தி.

''டாடி. என் பிளான்ஸ் உங்களுக்குத் தெரியும். நான் இன்னும் கோர்ஸ் முடிக்கலை. முடிக்கணும். ஆபீஸ் போகணும். சொந்தமா சம்பாதிக்கணும். பேர் வாங்கணும்.''

''இதை எல்லாம். நான் ராஜபாஸ்கர்கிட்டே சொன்னேன்மா. அவர் என்ன சொன்னார் தெரியுமா?''

''எனக்குத் தெரிய வேண்டியதில்லை.''

''அவ கிடக்கா! நீங்க சொல்லுங்க. என்ன சொன்னார்?''

''எங்க வீட்ல பனிரெண்டு பேர் வேலை செய்றாங்க. உங்க பொண்ணு வந்து வாசல் தெளிச்சி கோலம் போட்டு, காய்கறி நறுக்க வேண்டியதில்லை. இன்ஃபாக்ட் சமையல்கட்டு பக்கமே போக வேண்டியதில்லை. வருண் ஆபீஸ்ல அவனுக்கு உதவியா இருக்கலாம். இல்லை அவளுக்கு எதில விருப்பமோ அப்படி செயல்படறதுக்கு எங்களுக்கு அப்ஜெக்ஷன் இல்லைன்னு சொன்னார்.''

''அப்புறம் என்ன மேகா? இந்த மாதிரி யார் சொல்லுவாங்க?''

''திடீர்னு இப்படி என்னை எல்லாரும் சேர்ந்து கார்னர் பண்றீங்களே, ஏன்? எனக்கு எதுவும் பிடிக்கலை'' கோபமாக நாற்காலி நகர்த்தி பங்களாவுக்குள் போனாள் மேகா.

சக்கரவர்த்தி யோசனையாக காஞ்சனாவைப் பார்த்தார்.

''அவ கிடக்கா! அவளுக்கு என்ன தெரியும்? எல்லாத்திலயும் அவங்க இஷ்டப்படி விட்டுடக் கூடாதுங்க. இவ்வளவு நல்ல ஜனங்க கிடைக்கமாட்டாங்க. இப்படி ஒரு இடம் அமையாது. நீங்க நாலு நாள் கழிச்சி ரெண்டு ஃபேமிலியும் சந்திக்கத் தேதி முடிவு பண்ணிடுங்க. அதுக்குள்ளே அவளை நான் சமாதானப்படுத்தி சம்மதிக்க வைச்சிடறேன்'' என்றாள் காஞ்சனா.

''அக்கா இந்த போட்டோவைப் பார்க்கலை. பார்த்தாப் போதும். தானா கன்வின்ஸ் ஆயிடுவா'' என்றான் விஷ்ணு.




அந்த நட்சத்திர ஹோட்டலின் வகைவகையான மின்சார விளக்குகளும், உள் அலங்காரங்களும் 'இது வேறு உலகம்' என்றன.

அந்த ரெஸ்ட்டாரெண்ட்டின் கீழ் பகுதியில் சக்கரவர்த்தி, காஞ்சனா, விஷ்ணு, ராஜபாஸ்கர், அவர்



மனைவி விசாலாட்சி ஆகியோர் ரகசியம் போல குறைந்த ஒலியுடன் பேசி சிரித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்க...

அதே இடத்தின் மாடிப்பகுதியில் ஒரு மூலை மேஜையில் எதிரெதிரே மேகாவும், வருணும் அமர்ந்திருந்தார்கள்.

மேகா உறுத்தாதபடி தன்னை மென்மையாக அலங்கரித்திருந்தாள். வளைந்த ஸ்ட்ரா வழியாக ஜூஸ் பருகியபடி தன்னை இமைக்காமல் வருண் பருகுவதை கவனித்துப் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

வருண் மிக உயர்ந்த சூட், கோட்டில் இருந்தான். டை பின்னில் வைரம் மின்னியது. விரல்களிலும்.

''வெல்... மேகா'' என்றான் மெனு கார்டை மூடி வைத்து.

''ம்?'' என்றாள்.

''நாம் ரெண்டுபேரும் மனசுவிட்டுப் பேசிக்கணும்னு தான் தனியாப் பிரிச்சி அனுப்பிட்டாங்க நம்ம பேரண்ட்ஸ், பேசேன்'' என்றான்.

''ம்'' என்றுவிட்டு என்ன பேசுவதென்று யோசித்தாள்.

காத்திருந்து பார்த்துவிட்டு, ''சரி, டு பிகின் வித்.. நானே பேசறேன்'' என்றான்.

''பெட்டர்.''

''நெர்வெஸா இருக்கியா?''

''கொஞ்சம்.''

''நேச்சுரல், ஆனா, இது நம்ம ரெண்டு பேருக்கும் முக்கியமான நேரம். நம்ம வாழ்க்கையோட திருப்பு முனையைத் தீர்மானிக்கிற நேரம்.''

''ஆமாம்.''

''நீ அழகா இருக்கே மேகா.''

''தேங்ஸ், நீங்களும் ஹேண்ட்சமா இருக்கீங்க வருண். போட்டோல விட இன்னும் பெட்டரா இருக்கீங்க.''

''நாம ரெண்டு பேரும் 'யெஸ்' சொல்லிட இது போதாதுன்னு நான் நினைக்கிறேன் மேகா. உன்னை நான் நல்லாப் புரிஞ்சுக்கணும். என்னை நீ நல்லாப் புரிஞ்சுக்கணும். எனக்கு பிஸ்னெஸ் மேல ஒரு காதல் உண்டு.''

''எனக்கும் உண்டு.''

''எங்கப்பா நடத்தற இந்த பிஸ்னெஸை நூறு மடங்கு பெருசாக்கணும்னு வெறியோட உழைச்சிட்டிருக்கேன்.''

''லட்சியம் வெச்சிக்கிட்டு உழைக்கிறவங்களை எனக்குப் பிடிக்கும். எனக்கு நான் விருப்பப்படற துறையில பிஸ்னெஸ் செஞ்சி பேர் வாங்கணும்னு ஆசை.''

''என்ன உன் விருப்பமான துறை?''

''ஆர்க்கிடெக்சர்ல இண்ட்டீரியர் டெக்கரேஷன்.''

''வெரிகுட். பொதுவா பணக்கார வீட்டுப் புள்ளைங்க தனியா லட்சியம் வெச்சுக்கிறதில்லை. அப்பா சொத்தை எப்படியெல்லாம் செலவு செய்யலாம்னு யோசிச்சி ஒரு ஃபிரெண்ட்ஸ் குரூப் வெச்சிக்கிட்டு லாவிஷா செலவு செஞ்சி சதா சுத்துவாங்க. அது எனக்குப் பிடிக்காது.''

''எனக்கும் பிடிக்காது. ஒண்ணுமே இல்லாம தொழில் ஆரம்பிச்சி கஷ்டப்பட்டு முன்னேறின கதையை என் டாடி அடிக்கடி சொல்வாரு. வசதியா வளர்ந்துட்டாலும் எனக்கு காசோட மதிப்பு தெரியும். எனக்காக டாடி ஒரு கார் வாங்கிக் கொடுத்தார். அஞ்சி வருஷம் முன்னாடி. இப்போ லேட்டஸ்ட்டா நிறைய மாடல்ல வந்துடுச்சி, உன் காரைக் கொடுத்துட்டு வேற வாங்கிக்கறியான்னு கேட்டப்போ நான் வேணாம்னு சொல்லிட்டேன். மத்தவங்க நான் எந்த வண்டில வந்து இறங்கறேன்னு பார்த்து என்னை மதிக்க வேண்டியதில்லை. கார் ஒரு போக்குவரத்து சௌகரியத்துக்காக. அதில டிசைன் டிசைனா பத்து கார் வாங்கி தினம் ஒண்ணு ஓட்டறது கொஞ்சம் அதிகப்படியான விஷயமா நான் நினைப்பேன்.''



''வாவ்!'' என்றான்.

''ஏன்?''

''கிட்டத்தட்ட நம்ம ஐடியாலஜி ஒரே மாதிரி இருக்கு. ஏழு வருஷமா நானும் ஒரே அம்பாஸிடர்தான் வெச்சிருக்கேன்.''

''நீங்க எங்கே எம்.பி.ஏ. பண்ணீங்க?''

''டெல்லில. இப்ப நான் கேக்கறதில நீ அதிர்ச்சி அடைய மாட்டேன்னு நினைக்கிறேன். உனக்கு ஏதாச்சும் லவ் அஃபெயர் ஏற்பட்டதுண்டா?''

''நோ, ரெண்டு மூணு பசங்க ரொம்ப முயற்சி பண்ணாங்க. நான் பிடிவாதமா இருந்துட்டேன். எனக்கு காதல்ல நம்பிக்கை இல்லை.''

''ஏன் அப்படி?''

''நம்பிக்கை ஊட்ற மாதிரி காதல் இல்லை! என்னோட ரெண்டு மூணு ஃபிரண்ட்ஸ் அதில மாட்டிக்கிட்டு கடைசில கண்ணைக் கசக்கிக்கிட்டுதான் நின்னாங்க.''

''ஒருவேளை உன்னை சுத்தி நடந்த காதல்கள்ல ஒரு மனப்பூர்வமான வெற்றிகரமான காதலை நீ சந்திக்காமப் போனதுகூட உன் அபிப்பிராயத்துக்குக் காரணமா இருக்கலாமில்லையா?''

''மே பீ, என்ன இவ்வளவு சப்போர்ட் பண்றீங்க? உங்களுக்கு அப்படி அனுபவம் உண்டா?''

''உன்கிட்டே ரொம்ப உண்மை பேச விரும்பறேன் மேகா. டெல்லில நான் படிச்சிட்டிருந்தப்போ... ஐ மீன் ஆறேழு வருஷம் முன்னாடி! அவ பேர் ஷிவானி. மலேஷியா கர்ள். ஸ்டுடண்ட் விசால வந்து ஹாஸ்டல்ல தங்கி படிச்சிட்டிருந்தா. சைனீஸ் பாஷையும், மலாய் பாஷையும் அவ எனக்குக் கத்துத் தந்தா. ஹிந்தியும், தமிழும் நான் அவளுக்குக் கத்துத் தந்தேன். இப்படி ஆரம்பிச்ச நட்புல, நான் காதலை உணர்ந்தேன்.''

''அப்புறம்?'' என்றாள் கதை கேட்பவள் போல.

''நாங்க வாய்விட்டு 'ஐ லவ் யூ'ன்னு சொல்லிக்கலை. ஆனா காதலர்கள் மாதிரி சுத்தித் திரிஞ்சோம். முடிவெடுக்க வேண்டிய சமயம் வந்தப்போ அவ மலேஷியாவை விட்டு வரத் தயாரில்லை. என்னை அங்கே கூப்புட்டா, நான் இந்தியாவுலதான் என் அப்பாவோட தொழிலைப் பார்க்கத் தான் ஆர்வமா இருந்தேன். எவ்வளவோ சொல்லிப் பார்த் தேன். அவ மலேஷியாவை விட்டு வரமாட்டேன்னு சொல் லிட்டா. மூணு நாள் பேசிப் பேசி களைச்சுப் போய் கடைசில ஃப்ரெண்ட்ஸா பிரிஞ்சிடறதுன்னு முடிவு பண்ணிட்டோம். ஒரு வருஷத்துக்கு அந்தக் காதலோட சோகம் மனசுல இருந்திச்சி. தொழில்ல ஆர்வம் காமிச்சதும் மறந்து போச்சு. இந்தக் காதல் மேட்டர் என் டாடி, மம்மிக்குக் கூடத் தெரி யாது. ஆனா, உனக்குத் தெரிஞ்சாகணும்னுதான் சொன்னேன்.''

''உங்க நேர்மை எனக்குப் பிடிச்சிருக்கு வருண்.''

''ரொம்பத் தெளிவா இருக்கே நீ. ஐ லைக் இட். நீங்க பரம்பரை பணக்காரங்க இல்லை. புதுப்பணக்காரங்க. அதனால உன்னை நல்ல விதமா வளர்த்திருக்காங்க.''

''நீங்க?''

''எங்க தாத்தா நிறைய சொத்து சேர்த்துட்டார். அதை எங்கப்பா டபுளாக்கினார். எங்கப்பா பட்டினியை அனுபவிச்சதில்லை.''

''அதனால?''

''என்னை ரொம்ப ஆடம்பரமா வளர்த்துட்டாங்க. இன்னிக்கு ஒண்ணு நான் ஆசைப்பட்டா இன்னிக்கே எனக்கு அது கிடைக்கும். காத்திருந்து, கனவு கண்டு, ஏங்கி அப்புறம் அதை அடையற த்ரில்லை நான் அனுபவிச்சதில்லை. வேற ஏதாச்சும் அவுட்லெட் தேவைப்பட்டோ என்னவோ ஒண்ணு ரெண்டு கெட்ட பழக்கங்கள் வந்துடுச்சி.''

''என்ன?''



''சிகரெட். முதல் சந்திப்புல உன்னை அப்செட் பண்ண வேணாமேன்னு இவ்வளவு நேரம் அடக்கி வெச்சிருக்கேன். ஒரு நாளைக்கு ஒரு பாக்கெட். அப்புறம் ட்ரிங்ஸ் உண்டு. ஆனா அளவா, பார்ட்டிகள்ல மட்டும்.''

''தினம் பார்ட்டி இருக்குமா?''

''சேச்சே. வீக் எண்ட்ஸ்!''

மேகா வாய்விட்டுச் சிரித்தாள். ''ஆனா எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு. உண்மை பேசறவங்க அபூர்வம். கல்யாணத்துக்கு அப்புறம் நான் ஒவ்வொரு விஷயமா தெரிஞ்சிக்கிட்டு கேள்வி கேக்கக்கூடாதுன்னு ரொம்ப முன்னெச்சரிக்கையா திட்டம் போட்டுப் பேசற இந்த 'எம்.பி.ஏ.'த்தனமும் பிடிச்சிருக்கு'' என்றாள்.

''தேங்க்யூ மேகா. ஐ திங்க் நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டா. ரொம் சந்தோஷமா வாழ முடியும். ரெண்டு பேருக்கும் பல விஷயங்கள்ல கருத்து ஒரே அலைவரிசைல இருக்கு. மேரேஜுக்கு தேதி முடிவு பண்ணச் சொல்லி சொல்லிடலாமா? எலெக்ஷன் ரிசல்ட்டுக்கு மாதிரி கீழே அவங்க வெய்ட் பண்ணிட்டு இருப்பாங்க'' என்று சிரித்தபடி எழுந்தான் வருண்.

அவளும் எழுந்து கொண்டபோது முழங்கை மேஜை முனையில் இடிக்க... ''பார்த்து!'' என்றான். சிரித்துக் கொண்டாள்.

4

**கோ**ல்ஃப் கிளப்பில் விளையாடி முடித்த சக்கரவர்த்தி நிழலில் நாற்காலி போட்டு அமர்ந்து வியர்வை துடைத்துக் கொண்டிருந்தார்.

ராஜபாஸ்கர் தன் கடைசி ஸ்ட்ரோக்கை முடித்துவிட்டு, ஸ்டிக்கை உதவியாளனிடம் கொடுத்து விட்டு வந்து சக்கரவர்த்திக்கு எதிராக நாற்காலியை அமைத்துக் கொண்டு அமர்ந்தார்.

''வேட்டி கட்டின உங்களை கோல்ஃப் கிளப்ல பார்க்கறதே வித்தியாசமா இருக்கு. நல்லா ஆடறிங்க சக்கரவர்த்தி.''

சக்கரவர்த்தி சிரித்துக் கொண்டு, ''ராஜா முத்தையா ஹால் விசாரிச்சேன். இன்னும் மூணு மாசம் கழிச்சிதான் அவைலபிள். எனக்கு அந்த மண்டபம்தான் பெஸ்ட்டாப் படுது. என்ன சொல்றீங்க?''

''பரவால்லை, மூணு மாசம் பெரிய இடைவெளி இல்லை. ஃபிக்ஸ் பண்ணிடுங்க.''

''அப்புறம் ஒரு விஷயம் நாம் பேசவே இல்லை.''

''என்ன?''

''கேக்காம இருக்கறது உங்க பெருந்தன்மை. சொல்லாம இருக்கறது எனக்குப் பெருந்தன்மை இல்லை.''

''நீங்க எதைப்பத்திப் பேசறீங்க?''

''மேகாவுக்கு நான் என்ன சீர் செய்யப் போறோம்னு சொல்லிட வேண்டியது என் கடமை இல்லையா?''

''என்ன பேச்சு இது? என் மருமக கொண்டு வந்துதான் இனிமே என் வீடு நிறையணுமா? நான் எதிர்பார்த்தது என் அந்தஸ்துக்கேத்த, என் பையன் மனசுக்குப் பிடிச்ச சம்பந்தம். அது அமைஞ்சிடுச்சி. அது போதும். கே.பி.சி. வீட்டுப் பொண்ணை, என் பையனுக்குக் கல்யாணம் பண்ணப் போறேன்னு என் ஆபீஸ்ல, கிளப்ல சொன்னப்போ எவ்வளவு பெருமையா பாராட்டினாங்க தெரியுமா? வேற என்ன வேணும்?''

''அப்படியில்லை...''

''நோ! நோ! இதைப்பத்தி நாம பேச வேணாம்.''

''நீங்க சொல்லிட்டிங்கன்னு கல்யாணப் புடவையோட அனுப்பி வெச்சிட முடியுமா? சொந்தம்னு ஒண்ணு இருக்கே. உங்க பொண்ணுக்கு என்ன செஞ்சிங்கன்னு கேக்குமே. சொந்தத்தை விடுங்க. என் மகளுக்கு நான் மனசார சீர் செஞ்சி அனுப்ப வேண்டியது என் கடமை இல்லையா?''



''இப்ப நான் என்ன செய்யணும்னு சொல்றிங்க?''

''நான் சொல்றதைக் குறுக்கேப் பேசாம கேட்டுக் கணும்.''

''சரி, சொல்லுங்க.''

''அஞ்சி கோடி - மனசில திட்டம் வெச்சிருக்கேன். மகாபலிபுரம் ரோட்ல ரெண்டு கோடி செலவுல ஒரு ஃபார்ம் ஹவுஸ் கட்டினேன். அதை மேகா பேருக்கு எழுதி வைக்கப்போறேன். மாப்பிள்ளைக்கு மெர்ஸிடீஸ் பென்ஸ் கார் ஒண்ணு கொடுக்கணும்னு பிரியம். அப்புறம் தங்கம், வைரம், வெள்ளி, ரொக்கம்னு... என் எஸ்டிமேட் அஞ்சி கோடி! இதெல்லாம் எங்க சந்தோஷத்துக்காக. நீங்க எதுவும் மறுக்கக் கூடாது.''

''மறுத்தா அடிப்பீங்க போலிருக்கே. வரதட்சணை கேட்டு நாட்ல பல கொடுமைகள் நடக்குது. இங்கே வரதட்சணைக் கொடுத்தேத் தீருவேன்னு அடம் பிடிக்கிறிங்களே...''

''மறுக்கக் கூடாதுன்னு சொன்னேனே...''

''ரைட்டோ! உங்க இஷ்டம். நீங்க எது வேணாலும் பண்ணுங்க. நான் எதுவும் சொல்லலை. கல்யாண சாப்பாட்டுல முந்திரி பக்கோடா மட்டும் போட்டுடுங்க. அது எனக்கு ரொம்பப் பிடிச்ச அயிட்டம்'' என்று சிரித்தார் ராஜபாஸ்கர்.

சக்கரவர்த்தியும் சேர்ந்து சிரித்தார்.

## 5

பாத்டப்பில் சோப்பு நுரைக்குள் ஒளிந்து கொண்டு ஸ்லோமோஷனில் குளித்துக் கொண்டிருந்த மேகா ஒலித்த போனை டவலில் கை துடைத்துக் கொண்ட பின் எடுத்தாள்.

''ஹலோ.''

''ஹாய் ஹனி!''

அது வருண் என்று குரலிலேயே புரிந்ததும் உடனடியாக ஒரு வெட்கம் முகத்தில் கோட்டிங் ஆக...

''ஏய், டார்லிங்... என்ன பதிலே இல்லை?''

''நீங்க யார் பேசறது?''

''யாரா? என் குரல் தெரியலையா மேகா?''

''மேகாவா? ஓ! வருண் தம்பி பேசறீங்களா? நான் அவங்கம்மா பேசறேன் தம்பி'' என்றாள் உதட்டுக்குள் சிரித்தபடி.

''ஓ! ஸாரி! ஆன்ட்டி... ஐ... ம்... ஸாரி. நான் மேகான்னு நினைச்சு...''

''பரவால்லை தம்பி. கொஞ்சம் இருங்க. நான் அவளை பேசச் சொல்றேன்'' என்றவள் சில விநாடிகள் இடைவெளி விட்டு, ''ஹலோ வருண்... என்னப்பா இது பயங்கர ஜொள்ளு போலிருக்கே நீங்க!'' என்றாள்.

''ஏன்? ஏன்?''

''எங்கம்மாகிட்டேப் போயி ஹனி, டார்லிங்னெல்லாம் பேசறதா?''

''போச்சு! என் மானமேப் போச்சு! அதை அவங்க உடனடியா உன்கிட்டே சொல்லலைன்னா என்னவாம்? உங்க ரெண்டு பேர் குரலும் ஒரே மாதிரியா இருக்கு! மேகா ஸாரி சொல்லிடும்மா.''

வாய்விட்டுச் சிரித்த மேகா ''ஏமாந்திங்களா? நான்தான் ரெண்டு விதமாவும் பேசினேன் கண்ணா!'' என்றாள்.

''பாவி! படுபாவி! கொஞ்ச நேரத்துல என்னை எப்படி டென்ஷன் பண்ணிட்டே நீ!''

''நேத்து ஐஸ்க்ரீம் பார்லர்ல திடீர்னு கரண்ட் போனப்போ நீ மட்டும் என்னை டென்ஷன் பண்ணலையா? சப்பக்கன்னு



என் கன்னத்துல முத்தம் கொடுத்துட்டு கரண்ட் வந்ததும் அப்பாவியா முகத்தை வெச்சிக்கிட்டு இருந்தீங்க. நான் கேட்டதுக்கு 'அய்யய்யோ! நான் இல்லை. அப்ப யாரு?'ன்னு கேட்டு என்னைப் பதற வைக்கலை?''

''பழிக்குப் பழியா?''

''ம்கூம். விஷமத்துக்கு விஷமம்.''

''கேரி ஆன் மேகா. இந்த மாதிரி விஷமங்கள் இல்லைன்னா காதல்ல த்ரில்லே இல்லை. நம்ம காதல்ல ரெண்டு விஷயம்தான் போரு!''

''என்னது?''

''ரெண்டு பேரண்ட்சும் சம்மதிச்சு அனுமதி கொடுத்துட்ட காதல்! இதோட க்ளைமாக்ஸ் நமக்குத் தெரிஞ்ச க்ளைமாக்ஸ்!''

''அப்படிங்களா சார்? அப்போ இந்த போரடிக்கிற காதலை நிறுத்திட்டு நேரா மணவறையில மீட் பண்ணிக்கலாமா? போனை வெச்சிடட்டுமா?''

''ஏய்! நான் விளையாட்டுக்குச் சொன்னேன்.''

''நான் மட்டும் வச்சிடுவேனாக்கும்.''

''என்ன பண்ணிட்டிருக்கே? சளக், சளக்னு சத்தம் கேக்குதே.''

''குளிக்கிறப்போ சத்தம் கேக்காதா?''

''வாவ்! இப்போ என் முன்னாடி பூதம் வந்து என்ன செய்யணும்னு கேட்டா என்ன சொல்வேன் தெரியுமா?''

''என்ன சொல்வீங்க?''

''நீயும், நானும் கைல வெச்சிருக்கிற போனை உடனே பிக்சர் போனா மாத்தச் சொல்வேன்.''

''ச்சீ! யாராச்சும் கிராஸ்டாக்ல வந்துட்டா?''

''அய்யய்யோ! வேணாம். ரொம்ப கமகமங்குதே... என்ன சோப்பு?''

''வழியாதிங்க வருண்.''

''ரைட். இன்னிக்கு ஈவினிங் என்ன ப்ரோக்ராம்?''

''தினமும் மீட் பண்ணியாகணுமா?''

''பின்னே? எவ்வளவு விஷயங்கள் புரிஞ்சுக்க வேண்டியிருக்கு. இருட்டுல திடீர்னு முத்தம் கொடுத்தா எப்படி இருக்குன்னு நேத்து புரிஞ்சுக்கிட்டாச்சு. இந்த மாதிரி...''

''ஏய்!''

''இல்லை, இல்லை... இனிமே அப்படிச் செய்யலை.''

''ரைட்டு. நீங்களே ப்ரோக்ராம் சொல்லுங்க.''

''ஸ்நோபால் பவுலிங் ஆடுவியா?''

''தெரியாது.''

''போலாம். நான் கத்துத் தர்றேன். இண்ட்ரெஸ்ட்டிங்கா இருக்கும். அஞ்சரை மணிக்கு தேவதை ரெடியா இருந்தா வந்து பிக்கப் பண்ணிக்கிறேன்.''

''இல்லை. நான் ஆபீசுக்கு வந்துடறேன்.''

''எதுக்கு? என் ரூமை எப்படி வெச்சிருக்கேன்னு பார்க்கணுமா?''

''இல்லை. உங்க செகரெட்டரி ஜெயஸ்ரீயைப் பார்க்கணும்.''

''எதுக்கு?''

''அவ எப்படி இருக்கான்னு பார்க்கணும்.''

''சந்தேகமா?''

''இல்லை, உரிமை.''

''வா, வந்து சேரு. இரு. வெச்சிடாதே. என்ன கலர் காஸ்ட்யூம்ல வருவேன்னு சொல்லிட்டா, நானும் மேட்ச்சா டிரெஸ் பண்ணிட்டிருப்பேன்.''

சிரித்தாள் மேகா.



''ஏன் சிரிக்கிறே?''

''இதெல்லாம் முட்டாள்தனமா இல்லை?''

''ஆனா, முட்டாள்தனமா நடந்துக்க விருப்பமா இருக்கே. ஏன்?''

''வேறென்ன. லவ்வுதான். ஓ.கே. நான் பிளாக் ஜீன்சும், பிளாக் அண்ட் வொய்ட் ஸ்ட்ரைப்ஸ்ல டி-ஷர்ட்டும் போட்டுட்டு வரலாம்னு இருக்கேன்.''

''ரைட். நேத்து ஸாரில வந்தியே, அது ரொம்ப சௌகரியமா இருந்திச்சே டார்லிங்...''

''அதனாலதான் ஜீன்ஸ்ல வர்றதா இருக்கேன்.''

''விவரம்தான்!''

''வெச்சிடட்டுமா? குளிக்கணும்.''

''ஹேவ் எ நைஸ் பாத்'' என்று அவன் சொன்னதும் சிரித்தாள் மேகா.

## 6

சக்கரவர்த்தியின் கார் அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் அவரது கே.பி.சி. புராடக்ட்ஸ் நிறுவனத்தில் அலுவலகக் கட்டிட வாசலில் நின்றதும், வாட்ச்மேன் ஓடி வந்து கதவைத் திறந்து விட்டான். பியூன் அவர் கையிலிருந்து பிரீஃப்கேஸை வாங்கிக் கொண்டான்.

சக்கரவர்த்தி சட்டையை உயர்த்தி லேசாக நெகிழ்ந்திருந்த வேட்டியை இறுக்கமாகக் கட்டிக் கொண்டு நேராக யூனிட்டுக்குள் சென்றார்.

ஆஸ்பெஸ்டாஸ் கூரைக்குக் கீழே தானியங்கி இயந்திரங்கள் சலவைப் பவுடருக்கான காம்பவுண்ட் கலந்த மகா தொட்டியில் கலக்கவும், பேக்கிங் செய்யவும் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. இறுதியாக சேகரமான அரைக் கிலோ, ஒரு கிலோ பாக்கெட்டுகளை வரிசையாக

தொழிலாளர்கள் உட்கார்ந்து இருபது பாக்கெட், நாப்பது பாக்கெட் என்று அட்டைப் பெட்டிகளில் அடுக்கி, சில வைத்து, பேட்ச் நம்பர் குத்தி, ஓரமாக அடுக்கிக் கொண்டிருந்தார்கள்.

அதே மாதிரி சொட்டு நீலம் தயாரிப்புப் பணிகளும் துரிதமாக நடந்து கொண்டிருக்க...

இவர் ஒவ்வொரு இயந்திரம் அருகிலும் வந்து அதன் ஃபோர்மெனிடம் பேசிவிட்டு சில நிமிடங்கள் இயக்கத்தை நின்று பார்த்துவிட்டு அடுத்ததற்குச் சென்றார்.

குடோவ்ன் வாசலில் டெலிவரி வேன்களில் அட்டைப் பெட்டிகள் ஏற்றப்படுவதைப் பார்வையிட்டார்.

அங்கங்கே சில குறிப்புகள் சொல்லிவிட்டு மீண்டும் முன்புற அலுவலகக் கட்டிடம் வந்து முதல் மாடியில் இருந்த தனது அறைக்கு வந்த வழியில் பல காலை வணக்கங்களை வாங்கிக் கொண்டார்.

தன் நாற்காலியில் அமர்ந்து படிக்கின்ற கண்ணாடி எடுத்து துடைத்து மாட்டிக் கொண்டு கம்ப்யூட்டரை ஆன் செய்து கொண்டார். இண்ட்டர்காமில், ''தேவராஜ், வாங்க!'' என்று வைத்தார்.

தேவராஜ் வந்ததும் தன் பிரீஃப்கேஸ் திறந்து இரண்டு கவர்களை எடுத்துக் கொடுத்தார்.

''ரெண்டு டாகுமெண்ட்சும் படிச்சுப் பார்த்துட்டேன். ஒண்ணு ஓ.கே. இன்னொண்ணுல நாம புதுசா பர்ச்சேஸ் பண்ணப் போற மெஷினரீஸ் மட்டும்தான் பேங்கர்சுக்கு ஹைபாதிகேட் பண்றதாப் பேசினோம். அப்படித்தானே பேசினோம்?''

''ஆமாம் சார். நானும் இருந்தனே, ஏ.ஜி.எம். ஒத்துக்கிட்டாரே.''

''இதில இப்ப இருக்கற ரெண்டு மெஷினரீசும் சேர்த்திருக்காங்க.''



''அதெப்படி சார்? இது வேற பேர்ல இருக்கு. லோன் வாங்கற ஃபார்ம் பேரே வேற!''

''ரெண்டுலயும் ஓனர் ஒருத்தர்தானே? இங்கே எல்லா ஹைபாதிகேஷனும் ரிலீஸ் ஆயிடுச்சு. அவங்க அதிகமான பாதுகாப்பா நினைச்சி இப்படிப் பண்ணிருக்காங்க. அதனால நீங்க ஏ.ஜி.எம்மைப் பார்த்துப் பேசுங்க. பேசிய படியே வேற டாகுமெண்ட்ஸ் தயாரிக்கச் சொல்லுங்க. ஏதாச்சும் மழுப்பினா பேசாம வந்துடுங்க. நமக்கு லோன் கொடுக்க நூறு பேங்க் ரெடியா இருக்கு.''

''பணமில்லாமலா லோன் வாங்கறோம்? இண்ட்ரெஸ்ட் பேமெண்ட் ஐ.டி.ல. சலுகை பண்ணிக்க முடியும்னு ஆடிட்டர் சொன்ன அட்வைஸ்லதானே வாங்கறோம். பேசறப்போ வெண்ணெயில் போட்டு அப்புறம் இப்படி நடந்துக்கிட்டா எப்படி?''

''இதெல்லாம் என்கிட்டப் பேசாதிங்க. அங்க பேசுங்க'' என்று இவரிடம் பேசியபடி கம்ப்யூட்டரில் விற்பனை புள்ளி விபரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தவர் திடீரென்று நிமிர்ந்து, ''என்னாச்சு ஸ்வஸ்திக் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்சுக்கு?'' என்றார்.

''என்ன சார்?''

''வாரத்துக்கு பதினாலு லட்சத்துக்கு இன்வாய்ஸ் வரும். ஒரு வருஷமா ரெகுலரா இந்த சேல்ஸ் பண்ணிட்டிருந்தான். போன வாரம் பத்து லட்சம்தான் பில்லாகியிருக்கு. இந்த வாரம் எட்டரை லட்சம் என்னாச்சு?''

கம்ப்யூட்டரில் ஸ்வஸ்திக் டிஸ்ட்ரிபியூட்டர்சின் தனிப் பக்கத்திற்குச் சென்று விற்பனை விபரத்தை விரிவாகப் பார்த்து, ''என்னன்னு விசாரிச்சிங்களா?''

''நான்... நான் கவனிக்கலை சார்.''

''என்ன தேவராஜ், என்ன பேச்சு இது? பிஸ்னெஸ்ல கண் கொத்திப் பாம்பு மாதிரி எப்பவும் அலர்ட்டா இருக்கணும்.

நம்மைச் சுத்தி நூறு போட்டி கம்பெனிங்க இருக்காங்க. டி.வி. பார்க்கறிங்க இல்லை? வாஷிங் பவுடர் விளம்பரம் மட்டும் எத்தனை வருது? திடீர்னு ஒரு டிஸ்ட்ரிபியூட்டர் வாங்கறதைக் குறைச்சிருக்கான். அதை கவனிச்சி ஏன்னு கேக்க வேணாமா? சடகோபனைக் கூப்புடுங்க. மார்க்கெட்டிங் மேனேஜர்னு எதுக்கு உக்காந்திருக்கான் அந்தாளு.''

சக்கரவர்த்திக்கு டென்ஷன் ஏறிக்கொண்டிருந்தது.

கையில் பென்சிலோடு உள்ளே வந்த சடகோபன், ''ஸ்வஸ்திக் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் புதுசா ரெண்டு கம்பெனியோட டிஸ்ட்ரிபியூஷன் எடுத்திருக்காங்க. நாம பேமெண்ட்ல ஸ்ட்ரிக்ட். ஒரு வாரம்தான் அலவன்ஸ் தர்றோம். பணத்தட்டுப்பாடு காரணமா ஆர்டரைக் குறைச்சிருக்கணும்னு நினைக்கிறேன்'' என்றான்.

''நினைக்கிறிங்களா? ஆபீஸ்ல டெலிபோன் எல்லாம் செத்துப் போச்சா? போன் செஞ்சி ஏன் ஆர்டரைக் குறைச்சிங்கன்னு கேட்டு சரியான பதிலை அவன் வாயால தெரிஞ்சுக்க மாட்டிங்களா? இப்படி யூகமா சொல்றவனுக்குப் பேர் எக்ஸிகியூட் இல்லை சார், ஜோசியன்!''

''ஸாரி சார்'' தலைகுனிந்தான் சடகோபன்.

''சிட்டில நமக்கு மூணு டிஸ்ட்ரிபியூட்டர்ஸ். மூணு பேருமே ரெண்டு வாரமா வாங்கறதைக் குறைச்சிருக்காங்க. இதோ பாருங்க! ஒரு பட்டன் தட்டினா தகவல் சொல்றதுக்கு கம்ப்யூட்டர் போட்டு வெச்சிருக்கேன். அப்படி பட்டன் தட்டிப் பார்க்கறதுக்குக்கூட சோம்பேறித்தனமா இருக்குதுன்னா, பேசாம வீட்டுக்குப் போய் டி.வி. சீரியல் பாருங்க சடகோபன்.''

''ஸாரி சார்'' என்றான் மீண்டும்.

''வாட் நான்சென்ஸ்! எனக்கு பத்து நிமிஷத்தில பதில் தெரியணும். கரெக்ட்டான பதில்! திடீர்னு சிட்டில மட்டும் ஏன் சேல்ஸ் குறைஞ்சிருக்கு?''



''இப்ப சொல்லிடறேன் சார்'' என்று ஓடினான் சடகோபன்.

''நான் பேங்குக்கு...'' என்று இழுத்தான் தேவராஜ்.

''போலாம். அது ஒண்ணும் அவசரமில்லை. மத்த ஊர்கள்ல எப்படி இருக்கு?'' என்று கம்ப்யூட்டரில் திருச்சி, சேலம், கோவை, மதுரை, ஈரோடு, நெல்லை என்று ஒவ்வொரு மாவட்ட வாரியான டிஸ்ட்ரிபியூட்டர்களின் கொள்முதல் கணக்குகளைப் பார்க்கத் துவங்கி, ''அங்கெல்லாம் எதுவும் பிராப்ளம் இல்லை'' என்று நிம்மதியாகச் சொல்லிக் கொண்டார்.

சடகோபன் உள்ளே வந்து, ''சார், மூணு டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் கிட்டயும் போன் செஞ்சிப் பேசினேன் சார். ரீடெய்ல் பாய்ண்ட்ஸ்ல ஆர்டர் திடீர்னு குறைஞ்சது, தாங்களா குறைச்சோம்னு சொல்றாங்க சார்'' என்றான்.

''அதான் ஏன்? கடைக்காரங்க ஏன் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்கிட்ட வாங்கறதைக் குறைச்சிருக்காங்க?''

''சார், இந்த மாசத்துல மட்டும் மூணு புது வாஷிங் பவுடர் மார்க்கெட்டுக்கு வந்திருக்கு. எல்லா சானல்கள்லயும் விளம்பரம் வெளுத்துக் கட்டறாங்க. எக்ஸிபிஷன்ஸ்ல ஸ்டால் போட்டு ஸ்கீம்ஸ் வெச்சி புரோமோட் பண்றாங்க. வீட்டுக்கு வீடு போய் இலவசமா சாம்ப்பிள் பாக்கெட்ஸ் கொடுத்து இருக்காங்க.''

''ஸ்டாப் திஸ் நான்சென்ஸ். நம்ம புராடக்ட் மார்க்கெட்டுக்கு முந்தாநாள் வரலை. இருபது வருஷம் ஆச்சு. என்ன போட்டி வந்தாலும் அசையாம ஸ்டெடியா நம்ம கிராஃப் ஏறிக்கிட்டுதான் இருக்கு. இப்ப நாலு வருஷமாதான் விளம்பரத்துக்கு ஒதுக்கற பட்ஜெட்டைக் கொஞ்சம் குறைச்சிருக்கோம். இப்பவும் பிரிண்ட் மீடியா, விஷுவல் மீடியால நம்ம விளம்பரங்கள் தொடர்ந்து வந்துகிட்டுதான் இருக்கு. எனக்கு போட்டிகளால சேல்ஸ் பாதிச்சிருக்குன்ற பதில் சரியாப் படலை. இது

உண்மைன்னா இந்த பாதிப்பு தமிழ்நாடு பூரா ஏற்பட்டிருக்கணும். எல்லா இடத்துலயும் அதே சேல்ஸ் இருக்கே. ஏன் சிட்டில மட்டும்?''

சடகோபன் மௌனமாக நின்றான்.

''யூகத்திலேயே பதில் சொல்ல மறுபடி முயற்சி பண்ணாதிங்க, சடகோபன். உங்களோட நாலு பேரைக் கூட்டிக்கங்க. நம்ம கம்பெனி ஜீப் எடுத்துக்கங்க. நேரா ஸ்வஸ்திக் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்கிட்டப் போங்க. அவங்க கிட்ட நம்ம புராடக்ட்ஸ் வாங்கற சூப்பர் மார்க்கெட்ஸ், கடைக்காரங்க லிஸ்ட் வாங்கிக்கங்க. ஒவ்வொரு இடத்துக்கும் போய் நேரடியாக் கேளுங்க. ஸேல்ஸ்மேனை விசாரிங்க. நாளைக்குக் காலை ஒரு டீட்டெய்ல் ரிப்போர்ட் என் மேஜைல இருக்கணும். கமான்! தேவராஜ், இவரை அனுப்பி வெச்சிட்டு அப்புறமா பேங்குக்குப் போங்க.''

அவர்கள் போனதும் சிந்தனையாக கம்ப்யூட்டர் சொல்லும் எண்களையே பார்த்துக் கொண்டிருந்தார் சக்கரவர்த்தி.

## 7

வினோத் அந்த அலுவலக அறையில் சிந்தனையாக ரிஸீவரைப் பார்த்துவிட்டு வைத்தான்.

''என்ன?'' என்றான் எதிரில் அமர்ந்து சிகரெட் பிடித்துக்கொண்டிருந்த திவாகர்.

''அழகப்பன் போன் செஞ்சான்.''

''என்னவாம்?''

''சக்கரவர்த்தி முழிச்சுக்கிட்டாராம்.''

''ஸோ வாட்? பயப்படறானா?''

''அழகப்பன் பயப்படற ஆளா என்ன?''

''என்ன ஆக்ஷன் எடுத்திருக்கார்?''

''மார்க்கெட்டிங் மேனேஜரை கடை கடையாய் போய் விசாரிச்சிட்டு வரச் சொல்லிருக்காராம்.''



''தெரிஞ்சிடுமா வினோத்?''

''சான்ஸே இல்லை.''

''எப்படிச் சொல்றே?''

''அவ்வளவு கச்சிதமா நாம செயல்பட்டிருக்கோம்.''

''ஒருவேளை அழகப்பன் மாட்டினா?''

''நல்லதை நினையேன்!''

''நாம செய்யறது நல்லதா?''

''திவாகர் போர்லயும், அரசியல்லயும் ராஜதந்திரத்தைப் பயன்படுத்தற மாதிரி இப்போ வியாபாரத்திலயும் பயன்படுத்தியாகணும். நெக் டு நெக் காம்பெடிஷன். பெப்ஸியும், கோகோ கோலாவும் அடிச்சுக்கறாங்க பாரு! ஒருத்தர் கொஞ்சம் அசந்தாலும் அடுத்தவர் அந்த இடத்தை சாப்பிடற சூழ்நிலை. எத்தனை ப்ராடக்ட் வந்தாலும் அதே மக்கள்கிட்டதான் வித்தாகணும். ஒருத்தர் மார்க்கெட்டை சரிய வெச்சாதான் இன்னொருத்தர் மார்க்கெட்ல கொடி நட முடியும். அதுக்கு எது வேணாலும் செய்யலாம்னு நான் நினைக்கிறேன். ரெண்டு பேரும் பேசி திட்டம் போட்டுதானே இறங்கினோம்? இப்ப என்ன திடீர்னு கேள்வி கேக்கறே? நீ இந்த கம்பெனில பார்ட்னரா, கே.பி.சி. கம்பெனில பார்ட்னரா?''

''சரி, சரி, பாயாதே! ஒரு எச்சரிக்கைக்காகக் கேட்டேன்.''

''பயப்படாதே! ஒண்ணும் ஆய்டாது'' என்றான் வினோத், திவாகரன் சிகரெட்டை வாங்கி தன்னுடையதைப் பற்ற வைத்தபடி.

## 8

அந்த பில்லியர்ட்ஸ் கிளப்பில் ஒரு மணி நேரம் விளையாடிய பிறகு அதன் ரெஸ்ட்டாரெண்ட் பகுதியில் டோக்கன் வாங்கி பிஸ்ஸா பெற்று சௌகரியமாக ஒரு பெஞ்சில் அமர்ந்து கொண்டார்கள் வருணும், மேகாவும்.

''ராத்திரி ஒழுங்கா தூங்கறியா மேகா?'' என்றான்.

''இல்லை வர மாட்டேங்குது.''

''என்ன பண்ணுவே?''

''நாம சந்திச்சது, பேசினது எல்லாம் ஒவ்வொரு வார்த்தையும் விடாம நினைச்சிப் பார்த்துட்டிருப்பேன், நீங்க?''

''எக்ஸ்ட்ராவா நாலு சிகரெட் ஆகுது மேகா.''

''வேணாம்ப்பா விட்டுடலாமே.''

''கொஞ்சம் கொஞ்சமா குறைச்சி...''

''இந்தக் கதையெல்லாம் நடக்காது.''

''யெஸ். எனக்கேப் புரியுது மேகா. விட்டுடணும்னு ஒரு ஸ்ட்ராங் தீர்மானத்தை மனசுல வளர்த்துக்கிட்டா ஒரே நிமிஷத்தில விட்டுடலாம்.''

''அப்படி ஒரு தீர்மானம் ஏன் வரமாட்டேங்குது?''

''விட்டுடலாமேன்னு அன்பா, உரிமையா இப்பத்தானே ஒரு ஆள் எனக்கு சொல்லுது!''

''விண்ணப்பம் பரிசீலிக்கப்படுமா?''

''கண்டிப்பா, ஆனா உடனே ரிசல்ட் எதிர்பார்க்காதே.''

''என்னதான் இருக்கோ இதில?''

''வேற பேசுவமே. இந்த லிப்ஸ்டிக் கலர் நல்லாருக்கு.''

''அநியாயத்துக்கு மறதி இருக்கும் போலிருக்கே உங்களுக்கு. முந்தாநாள் நீங்களும் நானும் ஷாப்பிங் செஞ்சப்போ இந்த ஷேடு தான் வாங்கினோம்.''

''கையைத் தூக்கிடட்டுமா? காஸ்மெடிக்ஸ்ல அவ்வளவு புரியாது. நீ சிம்ப்பிளா மேக்கப் பண்ணிக்கிட்டாலும் அழகாத்தான் இருக்கே மேகா.''

''பார்க்கலாம், கல்யாணத்துக்கப்புறம் எத்தனை வருஷம் இதே மாதிரி சொல்றிங்கன்னு!''



''எத்தனை வருஷம் உன் அழகை நீ இதே மாதிரி மெயின்டெயின் பண்றியோ - அத்தனை வருஷம்!''

''அழகு - நம்ம கைல உள்ள விஷயமா என்ன''

''அமைஞ்ச அழகைப் பராமரிக்கிறது நம்ம கைல உள்ள விஷயம்.''

''ஆனா... எனக்கு மனசோட அழகுதான் முக்கியம்.''

''என் மனசோட அழகு எத்தனை மார்க் வாங்குது?''

''உங்க மனசு அழகா இருக்குன்னு யார் சொன்னது?''

''ஏய்! என்ன இது?''

''சும்மா சொன்னேன். மனசுல பதுக்கி வைக்காம எதையும் சுலபமாப் பேசிடறிங்க வருண். இவகிட்ட இதை சொல்லலாமான்னு யோசிக்காம சொன்னிங்க! அது எனக்குப் பிடிச்சிருந்தது.''

''பத்து நாளாப் பழகறமே... எதுதான் என்கிட்ட பிடிக்கலை? அதைச் சொல்லேன்.''

''ம்கூம். சொல்லமாட்டேன்.''

''அப்போ ஏதோ பிடிக்கலை. அப்படித்தானே?''

''நீங்க முதல்ல சொல்லுங்களேன் என்கிட்ட என்ன பிடிக்கலை?''

''ஜீன்ஸ் போட்ட கண்ணகியா இருக்கே, ஐ மீன்... தங்கத் தட்டுல பழைய சோறு சாப்பிடற மாதிரி கொஞ்சம் கலாச்சாரம், சமுதாயம்னு அதிகமா கவலைப்படறே!''

''தப்பா?''

''தப்பில்லை.''

''அது பிடிக்கலையா?''

''நெருடற மாதிரி இருக்கு. இன்னும் உனக்கு அதிகமான எக்ஸ்போசர் தேவைப்படுதுங்கறது என் கருத்து. இப்ப நீ சொல்லு! வெய்ட். வித் யுவர் பர்மிஷன்.''

நாப்கினில் கை துடைத்துப் போட்டுவிட்டு சிகரெட் எடுத்தான்.

''கொஞ்சம் தற்புகழ்ச்சி இருக்கு வருண்.''

''அப்படியா?''

''கொஞ்சம் ஈகோ இருக்கு.''

''எந்த மாதிரி?''

''உங்க ஐடியாதான் சரியானதா இருக்க முடியும்னு சில விஷயங்கள்ல நினைக்கிறிங்க.''

''அப்புறம்?''

''அப்பா வார்த்தைக்கு ஓவர் மரியாதை.''

''அது தப்பா? எதை வெச்சி சொல்றே?''

''ஹனிமூனுக்கு சுவிட்சர்லாந்த் போலாம்னு நீங்களும், நானும் பேசி முடிவுக்கு வந்தோம். மறுநாள் எங்கப்பா சிங்கப்பூர் போகச் சொல்றார். அங்கயே போகலாம்னு முடிவை மாத்திட்டிங்க.''

''ஆமாம். என்னமோ சின்ன வயசுலேர்ந்தே அவர் வார்த்தையை மீறினதில்லை மேகா. அவர் ஒண்ணு சொன்னா அது சரியா இருக்கும்னு அசாத்தியமான நம்பிக்கை. இந்த மரியாதை உனக்குப் பிடிக்கலையா?''

''அப்பாகிட்ட இவ்வளவு மரியாதை வைக்கிற பிள்ளைங்களைப் பார்க்கறது அபூர்வம் வருண். ஹனிமூன் - நம்ம ரெண்டு பேர் சம்பந்தப்பட்ட விஷயம். இதிலே அப்பா முடிவை அப்படியே எடுத்துக்கிட்டதுதான் கொஞ்சம் கஷ்டமா இருந்திச்சி.''

''அவ்வளவுதானே? உன் கஷ்டத்தை சரி செஞ்சிடலாம் மேகா.''

''எப்படி?''

''முதல்ல சிங்கப்பூர் போய்ட்டு வரலாம். அப்புறம் சுவிட்சர்லாந்த் போயிட்டு வரலாம். அப்பாவுக்கும் மரியாதை! மனைவிக்கும் மரியாதை. எப்படி?''



''வேணாம். நான் பேச்சுக்கு சொன்னேன். தன் இஷ்டத்தை சாதிச்சுக்கிறாள்னு எனக்கு கெட்ட பேர் வரும்.''

''ஆமாம், உங்க ஃபார்ம் ஹவுஸ் ரெண்டு கோடில கட்டினதாமே.''

''ஆமாம். அங்கே அழகான தோட்டம் இருக்கு. அழகான ஸ்விம்மிங் பூல் இருக்கு. நாளைக்கு ஃப்ரீயா நீங்க? முழு நாள் ஒதுக்கறதா இருந்தா சொல்லுங்க போலாம்.''

''ஒரு நாள் முழுக்கவா? உன்னோடவா? வாவ்! இப்பவே நான் என் ஆபீசுக்கு லீவு போட்டுடறேன் டார்லிங்.''

''நானும் டாடிகிட்ட சொல்லிடறேன். ஈவினிங் திரும்பிடலாம்.''

''ஒரு கண்டிஷன் மேகா. ரெஸ்ட்டாரெண்ட் போனா சாப்பிடணும். லைப்ரரிக்குப் போனா படிக்கணும். அந்த மாதிரி... ஸ்விம்மிங் பூலை சும்மா சுத்திக் காட்டக்கூடாது. என்னோட நீ ஸ்விம் செய்யணும்.''

''அய்யோ! நான் மாட்டேன். நீங்க வேணும்னா தாராளமா ஸ்விம் பண்ணுங்க.''

''அப்படின்னா நான் வரலை.''

''என்னப்பா இது, சின்னப்பிள்ளையாட்டம்...''

''பின்னே என்ன? என்னோட பைக்ல வர்றே. கார்ல வர்றே. ஷாப்பிங் போறோம். கிளப்ஸ் போறோம். ஸ்விம் பண்ணினா என்ன?''

''அது... அது...''

''நாளைக்கு நீ என்னோட ஸ்விம் பண்றதா இருந்தா நான் ஃபார்ம் ஹவுஸ் வர்றேன். இல்லைன்னா ப்ரோக்ராமே வேணாம்.''

''நான் யோசிச்சு சொல்லட்டுமா?''

''நைட்டு குட்நைட் சொல்றதுக்காக நான் போன் செய்வேனே, அப்ப சொல்றியா?''

''சரி.''

''போவமா?''

''கோபமா?''

''இல்லை, போலாம் மிஸ். ஜீ.போ.க!'' என்று சிரித்தான்.

''இதென்ன புதுசா?''

''ஜீன்ஸ் போட்ட கண்ணகி!'' என்றான்.

''ஏய்!'' என்று கைப்பையால் அவன் தோளில் தட்ட, கையில் பிடித்திருந்த சிகரெட் நழுவி சட்டையில் விழுந்து கீழே விழுந்ததில் சட்டையில் ஒரு சின்ன ஓட்டை விழுந்தது.

''ஸாரி! ஸாரிப்பா!''

''பரவால்லை, விடு!''

''நாளைக்கு நான் ஒரு அழகான சட்டை பிரசண்ட் பண்ணிடறேன்.''

''விடு மேகா!'' என்று காரின் சாவிக் கொத்தை தூக்கிப் போட்டுப் பிடித்தபடி நடந்தான் வருண்.

## 9

அலுவலகத்தில் சக்கரவர்த்தி தன் கையில் இருந்த அறிக்கையை பொறுமையாகப் படித்துக் கொண்டிருக்க, எதிரில் சடகோபனும், தேவ ராஜும் நாற்காலிகளின் முனைகளில் அமர்ந்திருந்தார்கள்.

''வளவளான்னு இருக்கு! டு தி பாய்ண்ட் இல்லை. சூப்பர் மார்க்கெட்டுகள்ல மக்கள் கூடையில அவங்களா தேவையான பொருள்களை எடுத்துப் போட்டுக்கறதால 'இதை வாங்கறதை நிறுத்திட்டு வேற ஒண்ணை எதுக்கு வாங்கறிங்க'ன்னு மக்கள்கிட்ட ஸேல்ஸ்மேன் கேக்கற தில்லைன்னு குறிப்பிட்டிருக்கிங்க. எல்லா மக்களுமா சூப்பர் மார்க்கெட்டுக்குப் போய் செல்ஃப் ஷாப் பண்றாங்க? சின்னக் கடைகள்ல அதிகமா நீங்க ஏன் விசாரிக்கலை?''



''இல்லை சார், சில கடைகள்ல விசாரிச்சோம். 'காரணம் தெரியலை. ரெண்டு வாரமா உங்க சோப்புத்தூள் கொஞ்சம் சேல்ஸ் டல்லுதான்'னு சொல்றாங்க. கஸ்டமர்ஸ்கிட்ட கேக்க மாட்டிங்களான்னு கேட்டா, அதுக்கெல்லாம் நேரமேதுன்னு சொல்றாங்க சார்.''

''நேரடியா நம்ம கஸ்டமர்ஸ்கிட்டயேப் போயி விசாரிக்க வேண்டியதுதான்.''

''ரெண்டு கடையில சொன்னாங்க சார். சில கஸ்டமர்ஸ் இப்ப கே.பி.சி. வாஷிங் பவுடர் முந்தி மாதிரி இல்லை'ன்னு கம்ப்ளைண்ட் செஞ்சாங்களாம். அதை நான் இதில் குறிப்பிடலை.''

''அதானே சடகோபன் முக்கியம்? எந்தக் கடையில சொன்னாங்க?''

''மந்தைவெளில ஒரு கடையிலயும், வெஸ்ட் மாம்பலத்தில ஒரு கடையிலயும் சொன்னாங்க சார்.''

''சரி, நானே வர்றேன். நீங்க என் கூட வந்து கடையைக் காட்டுங்க.''

''சார், நீங்களா?''

''ஏன்ப்பா? சைக்கிள்ல தெருத் தெருவாப் போய் வித்தவன்தான் நான். எனக்கு பிரஸ்டீஜ் எல்லாம் இல்லை. எனக்கு சிட்டில சேல்ஸ் குறைஞ்சதுக்குக் காரணம் தெரிஞ்சாகணும். வாங்க'' என்று எழுந்து விட்டார் சக்கரவர்த்தி.

மேற்கு மாம்பலத்தில் குறிப்பிட்ட கடையில் சக்கர வர்த்தி உட்கார மறுத்து, குளிர்பானம் மறுத்து, ''நம்ம கே.பி.சி. வாஷிங் பவுடர் ரெகுலரா வாங்கிட்டு சமீபத்தில புகார் சொன்ன கஸ்டமர்ஸ் யாருன்னு கொஞ்சம் சொல்லுங்களேன்'' என்றார்.

''நாலஞ்சு பேர் சொன்னாங்க சார்'' என்றார் கடை முதலாளி.

''என்ன சொன்னாங்க?''

''கை எல்லாம் எரியுதாம். துணி கிழியுதாம்.''

''யார் யார் சொன்னாங்கன்னு தெரியுமா?''

''தெரியும் சார். பக்கத்தில அட்சயா அபார்ட் மெண்ட்ஸ்னு இருக்கு. அங்கே மூணு வீட்டுக்கு நாங்கதான் சப்ளை பண்றோம். அங்கே ரெண்டு வீட்ல சொன்னாங்க. அப்புறம் ஸ்கூல் டீச்சர் ரோசம்மான்னு...''

''உங்க கடைப் பையனைக் கொஞ்சம் என்னோட அனுப்பி அந்த வீடுகளை அடையாளம் காட்டச் சொல்ல முடியுமா, ப்ளீஸ்?'' என்றார்.

அட்சயா அபார்ட்மெண்ட்சில் முதல் வீட்டில் கதவு திறந்த பெண்மணியிடம் தன்னை அறிமுகம் செய்து கொண்டதும் அவர், ''உங்க பேட்டிகூட பார்த்தேன் சார். உள்ளே வாங்க. உட்காருங்க'' என்று ஃபேன் போட்டாள்.

அமர்ந்து, ''சும்மா தயங்காம சொல்லுங்கம்மா. எங்க பவுடர் சரியில்லைன்னு கடையில புகார் சொன்னிங்களா?'' என்றார்.

''ஆமாங்க சார். இதோ பாருங்க'' என்று அவள் தன் இரண்டு கைகளையும் காட்ட, தோல் உரிந்து இருந்தது.

''என்னாச்சு?''

''பத்து வருஷமா உங்க பவுடர்தான் நான் யூஸ் பண்றேன். இப்போ கொஞ்ச நாளாதான் சரியில்லை சார். கை எல்லாம் எரியுது. அழுக்கும் போகமாட்டேங்குது.''

''அப்படியா? ஒவ்வொரு பேட்ச்சும் குவாலிட்டி செக் பண்ணித்தானே அனுப்பறோம்! மிஸ்டேக் உள்ள கே.பி.சி. பவுடர் இருக்காம்மா?''

''இருக்கு சார். அரைக் கிலோ பாக்கெட்ல கொஞ்சம்தான் எடுத்து யூஸ் பண்ணேன். சரியில்லைன்னதும் அப்படியே வெச்சிட்டேன்.''



''அதை எடுத்துட்டு வாங்க.''

அவள் எடுத்து வந்தாள்..

வாங்கி பாக்கெட்டில் தயாரிப்பு மாதமும், பேட்ச் நம்பரும் பார்த்தார்.

''இதை நான் எடுத்துட்டுப் போறேன். மிக்சிங்ல ஏதோ தப்பாயிருக்கும்மா. என்னை மன்னிச்சிடுங்கம்மா.''

''அய்யோ! பரவால்லை சார்.''

''இல்லைம்மா! இது பெரிய தப்பு! தரம் குறையவேக் கூடாது. பாருங்க, தோல் உரிஞ்சிருக்கு. வேதனைதானே? நீங்க தப்பா எடுத்துக்காதிங்க'' என்று பாக்கெட்டில் கைவிட்டு ஐநூறு ரூபாய் நோட்டு ஒன்று எடுத்து, ''இதை வெச்சிக்கங்கம்மா.''

''வேணாம் சார்.''

''ஒரு சின்ன நஷ்ட ஈடா நினைச்சுக்கங்க. இது எப்படி நடந்ததுன்னு கவனிக்கிறேன். சரி பண்றேன். நன்றிம்மா'' என்று எழுந்தார்.

இதேப்போல வேறு சில வீடுகளிலும் மீதமிருந்த கே.பி.சி. பவுடர் பாக்கெட்டுகளை சேகரித்துக் கொண்டார்.

அலுவலகத்திற்கு வந்து சேர்ந்ததும்...

''காரணம் புரியுதா சடகோபன்?'' என்றார்.

''புரியுது சார். ரா மெட்டீரியல்ஸ் கலவையில ஏதோ தப்பு நடந்திருக்கு. அதனால சில பேர் பாதிக்கப்பட்டு தொடர்ந்து வாங்கறதை நிறுத்திட்டாங்க.''

''கலவையில தப்பு நடந்திருக்கிறதா நான் எல்லார் கிட்டயும் சொன்னேன். நீங்களும் அதையே சொல்றிங்களா? தேவராஜ், நீங்க என்ன சொல்றீங்க?''

''எனக்கும் வேற காரணம் தெரியலையே.''

''என்ன கவனிச்சிங்க? அந்த பாக்கெட்சை எடுத்துப் பாருங்க. அது நம்ம தயாரிப்பு இல்லை. பிரிண்ட்டிங் இங்க்

கலர்ல லேசா மாற்றம் தெரியுது. பாலிதீன் கவர் திக்னெஸ் வேற! நாம் கலெக்ட் செஞ்சிட்டு வந்திருக்கிற பாக்கெட்ஸ் எல்லாமே டூப்ளிகேட்ஸ்! அப்படியே அச்சா நம்ம கம்பெனி எம்ப்ளம் போட்டு பிரிண்ட் பண்ணி பேக் பண்ணி வித்திருக்காங்க.''

தேவராஜும், சடகோபனும் இப்போது நுணுக்கமாக அந்த பாக்கெட்டுகளைப் பார்த்துவிட்டு, ''ஆமாம் சார்!'' என்றார்கள்.

''இப்போ தப்பு நடக்குதுன்னு புரியுதா?''

''புரியுது சார். சிட்டில மட்டும் எவனோ டூப்ளிகேட் சரக்கு தயாரிச்சி கடைகளுக்கு சப்ளை பண்ணிட்டிருக்கான். அவன் கண்டிப்பா நம்ம விலையை விட கம்மியாதான் சப்ளை செய்வான். அதை வாங்கி வித்தா அதிக லாபம் கிடைக்குதேன்னு சில பேர் வாங்கி விக்கிறாங்க. அதனால டிஸ்ட்ரிபியூட்டர்கிட்ட ஆர்டரைக் குறைச்சிடறாங்க.''

''யார் இதைச் செய்யறது? உடனே கண்டுபிடிச்சி நிறுத்தியாகணும்'' என்ற சக்கரவர்த்தி தன் பர்சனல் டெலிபோன் டைரியை எடுத்து எண் தேடி டெலிபோன் செய்து, ''வணக்கம். நான் கே.பி.சக்கரவர்த்தி பேசறேன். அசிஸ்டெண்ட் கமிஷனர் மிஸ்டர் ஜார்ஜ்கிட்ட பேச முடியுமா?'' என்றார்.

10

அந்த தோட்ட பங்களாவின் நீச்சல் குளத்தில் ரப்பர் நாற்காலியில் அமர்ந்து மிதந்து கொண்டிருந்த மேகா நீச்சல் உடையில் இருந்தாள்.

டைவிங் போர்டிலிருந்து நீரில் குதித்தான் வருண்.

நீந்தி அவளருகில் வந்தான்.

''கமான், சேர்ந்து ஸ்விம் பண்ணலாம்'' என்றான்.



''ம்கூம்'' என்றவளின் கையைப் பிடித்து தண்ணீருக்குள் இழுத்து விட்டான். நீந்தினாள்.

தண்ணீருக்கடியில் நீந்தி அவள் கால்களைப் பிடித்து இழுத்தான். மேற்பரப்புக்கு வந்து போட்டி வைத்து நீந்தினார்கள்.

பிறகு கரையில் நீளமான பிளாஸ்டிக் நாற்காலிகளில் அருகருகே சாய்ந்து அமர்ந்தார்கள்.

அவள் உடம்பில் ஊர்ந்து வழியும் தண்ணீர் துளிகளை குறுகுறுவென்று பார்த்தான்.

''நான் டிரெஸ் சேஞ்ச் பண்ணிட்டு வந்துடறேன்.''

உடைகள் மாற்றிக் கொண்டு பங்களா உள்ளே டீ பருகியபடி டி.வி.யில் ஆங்கிலப் படம் பார்த்தார்கள்.

அவள் அருகில் நெருங்கி அமர்ந்தான் வருண்.

''மேகா!''

''ம்?''

''ஐ லவ் யூ.''

''தெரியுமே.''

அவள் கையோடு கை கோர்த்துக் கொண்டான். ஒரு விரலால் அவள் புருவத்தின் மேல் புருவம் வரைந்தான். தன் மேல் சாய்த்துக் கொண்டான்.

''ஏய்!''

''ப்ளீஸ்...'' என்று கன்னத்தில் முத்தமிட்டான்.

வெடுக்கென்று விலகிக் கொண்டாள் மேகா.

''என்னாச்சு மேகா? கமான்!'' என்றான் தாபத்துடன்.

''வேணாம் வருண். புறப்படலாம்'' நகர்ந்து அமர்ந்தாள்.

''ஈவ்னிங்தானே புறப்படறதா திட்டம்?'' என்றான் எரிச்சலுடன்.

''இல்லை, இப்பவே புறப்படலாம்'' என்றாள் வேறு திசை பார்த்து.

''ஏன்? வா மேகா! வாட்ஸ் தேர்! எதுக்குப் பயப்படறே? நீ என் மனைவியாகப் போறவ! நான் உன் கணவனாகப் போறவன். நத்திங் ராங். ப்ளீஸ் டார்லிங்'' என்று அவள் கையைப் பிடித்தான்.

நெளிந்தாள். தவித்தாள். மெதுவாக உருவிக் கொண்டாள்.

''இல்லை வருண்'' உறுதியாக மறுத்தாள்.

''இதெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம்தான்னு ஒரு வசனம் இந்த இடத்தில் நீ சொல்லியாகணுமே! சொல்லிடு! அதை ஏன் பாக்கி வெச்சிருக்கே?'' என்றான் லேசான கோபத்துடன்.

''ஒரு த்ரில் மிச்சமிருக்க வேணாமா?''

''ஹைலி இடியாட்டிக் செண்டிமெண்ட்ஸ்! உண்மையைச் சொல்லு. உனக்கு என்மேல நம்பிக்கை இல்லை! அப்படித்தானே?''

''என்ன பேச்சு இது?''

''பின்னே என்ன? தேதி முடிவு செஞ்சாச்சு. இன்னும் ரெண்டு மாசத்துல கல்யாணம். எல்லா ஏற்பாடுகளும் நடந்திட்டிருக்கு. நாம இப்போ சந்தோஷமா இருந்தா என்ன ஆகும்? என்ன உன் பயம்?''

''ப்ளீஸ்... இது ஆர்க்யூ பண்ற விஷயமில்லை, வருண்!''

''ஓகே! ஓகே!''

வருண் சட்டென்று தனது ஷூ எடுத்து அணியத் துவங்கினான்.

காரில் இருவரும் ஃபார்ம் ஹவுசை விட்டுப் புறப்பட... எதுவும் பேசாமல் காரை ஓட்டினான்.

''கோபமா வருண்?'' என்று அவன் சிகரெட்டுக்கு நெருப்பு காட்டினாள்.

''இல்லை, குளுகுளுன்னு இருக்கு. ஸ்விம் சூட் எல்லாம் போட்டுக்கிட்டு என்னோட சேர்ந்து ஸ்விம் பண்ணியே, அது மட்டும் சரியா?''



''இல்லைன்னா வரவே மாட்டேன்னு நேத்து நீங்க கண்டிஷனா சொன்னதாலதான்...''

''ஏமாத்திட்டே மேகா'' ஸ்டியரிங்கை வெறுப்பாகக் குத்தினான்.

''கொஞ்சம் பொறுமையா இருக்கக் கூடாதா? காரை அப்படி ஓரமா நிறுத்தி இளநீர் வாங்குங்க. சூடு தணியும்'' என்றாள்.

திரும்பி அவளை முறைத்து விட்டு, ''ஜோக்கா?'' என்றான்.

''ரொம்பதான் அலையறிங்கப்பா!'' ராகமாக சொன்னாள்.

''ரொம்பதான் அலைக்கழிக்கிறிங்கப்பா!'' என்று அவள் சொன்ன ஸ்டைலிலேயே அவனும் சொல்ல... இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

11

அசிஸ்டெண்ட் கமிஷனர் ஜார்ஜ் வீட்டின் வரவேற்பறையில் கம்ப்யூட்டர் அச்சடித்து தந்த அந்த ரிப்போர்ட்டை கண்ணாடி மாட்டி பொறுமையாகப் படித்து முடித்தார் சக்கரவர்த்தி.

''ஆச்சரியமா இருக்கே சார்! கண்டிப்பா டூப்ளிகேட் சரக்கு மார்க்கெட்ல இருக்கு. ஆனா, ஒரு கடைக்காரன்கூட ஒத்துக்கலையே?''

''சார், நான் நாலு சப்-இன்ஸ்பெக்டர்சை மஃப்டியில ஏரியா பிரிச்சி அனுப்பிச்சேன். மொத்தம் ரீடெய்ல் ஷாப்ஸ் [illegible] அறுபது கவர் செஞ்சிருக்காங்க. நான் கொடுத்திருந்த குறிப்பு என்ன தெரியுமா? ஒரு கடைக்குப் போக வேண்டியது, 'சார், கே.பி.சி. வாஷிங் பவுடர் மாதிரியே நான் தயாரிச்சி சப்ளை பண்ணிட்டிருக்கேன். டூப்ளிகேட் ஏற்கனவே மார்க்கெட்ல இருக்கிறது உங்களுக்கேத் தெரியும். அவங்க எந்த ரேட்ல சப்ளை பண்றாங்கன்னு சொல்லுங்க. அதைவிட விலை குறைச்சி நான் தர்றேன்.'

இப்படி தன்னை ஒரு டூப்ளிகேட் தயாரிப்பாளரா அறிமுகப் படுத்திக்க வேண்டியது. கடைக்காரனோட ரெஸ்பான்ஸை நோட் பண்ண வேண்டியது! ரிப்போர்ட் பார்த்திங்க இல்ல, சொல்லி வெச்ச மாதிரி எல்லாரும் 'கே.பி.சில டூப்ளி கேட் வருதுன்னு யார் சொன்னது'ன்னு கேட்ருக்காங்க. நாங்க டிஸ்ட்ரிபியூட்டர் கிட்டேர்ந்து ஒரிஜினல் சரக்கு தவிர வேற வாங்கறதில்லைன்னு சொல்லிருக்காங்க.''

''நான் நேரடியா கலெக்ட் செஞ்ச கம்ப்ளைண்ட் உள்ள பாக்கெட்டுகள் எதுவுமே எங்களோடது இல்லை. அது நிச்சயம்.''

''எதை வெச்சி டூப்ளிகேட்னு சொல்றிங்க?''

''மேலோட்டமாப் பார்த்தா வித்தியாசமே தெரியாது. அப்படித் தெரிஞ்சா கடைக்காரங்களும் சரி, கஸ்டமர்சும்சரி உடனே கண்டுபிடிச்சி உஷாராயிடுவாங்களே... இந்த மாதிரி டூப்ளிகேட்ஸ் வந்துடக் கூடாதுங்கறதுக்காகவே எங்க பேக்கிங் கவர்ல பயன்படுத்த பிரிண்ட்டிங் இங்க்ஸ் ஸ்பெஷலா ஆர்டர் கொடுத்து வாங்கறோம். அதில இருக்கற வயலட் கலர் வேற யாராலயும் கொண்டு வர முடியாது. கிட்டத்தட்டதான் கொண்டு வர முடியும். நான் கைப்பற்றின பாக்கெட்ஸ்ல எங்க ஸ்பெஷல் வயலட் கலர் இல்லை. அப்புறம் அந்த பாலிதின் கவரோட திக்னெஸ் ஸ்ட்ராங்கா இருக்கணும்னு, நல்ல திக்னெஸ்ல நாங்க போடறோம். காஸ்ட் அதிகம் ஆகும். இந்த பாக்கெட்ஸ்ல பாலிதின் கவர் எங்க கவர் திக்னெஸ்ல முக்கால் பங்குதான் இருக்கு.''

''ஐ ஸீ! கடைக்காரங்க வெளில யார்கிட்டயும் டூப்ளிகேட் சரக்கு வாங்கலைன்னா... ரெண்டே வாய்ப்புதான் சார்.''

''என்ன?'' என்றார் கண்ணாடியைக் கழற்றிக்கொண்டு.

''உங்களுக்கேத் தெரியாம உங்க கம்பெனிலயே டூப்ளிகேட்டும் தயார் செஞ்சி நல்ல பாக்கெட்ஸ் நடுவுல கலந்து வெச்சிடலாமில்லையா?''



''சான்சே இல்லை. தினம் என் யூனிட்ல ரெண்டு தடவை சுத்தறவன் நான். ராத்திரி திடீர்னு ஒரு மணிக்குப் புறப்பட்டு வந்து நைட் ஷிஃப்ட் வேலை எப்படிப் போகுதுன்னு கண்காணிப்பேன். என் கம்பெனில ஒரு குண்டூசி இடம் மாறி இருந்தாலும் எனக்குத் தெரியும் சார்.''

வேலைக்காரன் டீ கொண்டு வந்து வைத்துவிட்டு விலக, ''எடுத்துக்குங்க சார். அப்போ இன்னும் ஒரே ஒரு சான்ஸ் இருக்கு'' என்றார் ஏ.சி.

''அது என்ன?'' என்றார் டீ பருகியபடி.

''நீங்க சரக்கு தயாரிச்சி டிஸ்ட்ரிபியூட்டர்சுக்கு அனுப் புறீங்க. டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் கடைகளுக்கு சப்ளை பண்றாங்க. அப்படித்தானே?''

''ஆமாம்.''

''உங்க சைடுல தப்பு நடக்க சான்ஸ் இல்லைன்னு சொல் றீங்க. கடைக்காரங்களும் வெளி ஆளுங்க யார்கிட்டயும் டூப்ளிகேட் வாங்கறதா தெரியலை. அப்போ தப்பு செய்யறது டிஸ்ட்ரிபியூட்டரா இருக்கலாமா சார்?''

''அதாவது எங்க டிஸ்ட்ரிபியூட்டரே ரகசியமா யூனிட் போட்டு டூப்ளிகேட் தயாரிச்சி நல்ல சரக்கோட கலந்து கடைகளுக்கு சப்ளை பண்ணிருக்கலாமான்னு கேக்கறிங் களா?''

''யெஸ்.''

''இடிக்குது சார். சிட்டில எனக்கு மூணு டிஸ்ட்ரிபி யூட்டர்ஸ். டூப்ளிகேட் சரக்கு சிட்டில எல்லா ஏரியாலயும் சப்ளை ஆகியிருக்கிறதாலதான் மூணு டிஸ்ட்ரிபியூட்டருமே வாங்கறதைக் குறைச்சிருக்காங்க. நீங்க சொல்ற மாதிரியான தப்பு நடக்கணுமின்னா மூணு டிஸ்ட்ரிபியூட்டர்சுமே சேர்ந்து இந்த சதியை செஞ்சாத்தான் உண்டு. மூணு பேரும் பெரிய புள்ளிகள். பல வருஷப் பழக்கம். அவங்களுக்கு என்

புராடக்ட்ஸ் மட்டும்தான் இருக்கா என்ன? நூத்துக்கணக்கான அயிட்டம்ஸ் டிஸ்ட்ரிபியூஷன் எடுத்து நடத்திட்டிருக்காங்க. அதில எங்க கம்பெனி அயிட்டம்சும் ஒண்ணு.''

பெருமூச்சு விட்டார் ஏ.சி.

''என்னால இவ்வளவு வாய்ப்புகள்தான் இப்போதைக்கு யோசிக்க முடியுது. ஒண்ணு செய்யலாம். மூணு டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் அட்ரசும் கொடுங்க. அவங்களை ரகசியமா கண்காணிக்கச் சொல்றேன். உங்க கம்பெனியிலயே உங்களுக்குத் தெரியாம இது நடக்க வாய்ப்பு இருக்கான்னு நீங்க மறுபடி நல்லா யோசிங்க. உங்க குடோவ்ன்ல நல்லா சுத்திப் பாருங்க. உங்க கம்பெனில யார் மேலயாச்சும் சந்தேகம் வந்தா சொல்லுங்க. கண்காணிச்சி லபக்குன்னு பிடிச்சிடலாம்'' என்றவர் தன் வாட்சைப் பார்த்தார்.

எழுந்து கொண்டார் சக்கரவர்த்தி, கவலையுடன்.

12

மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் சுவாமி கும்பிட்டு விட்டு பிரகாரத்தில் அமர்ந்திருந்தார்கள் மேகாவும், ஷியாமாவும்.

ஷியாமா அர்ச்சனைத் தட்டிலிருந்த பாதித் தேங்காயை தரையில் மோதி உடைத்து தேங்காய் துண்டு நீட்டினாள்.

''இங்க பாரு, நீ தேவையில்லாம கவலைப்படறே!''

''அது ஏன் அவ்வளவு வற்புறுத்தணும்? அவரைப் பத்தி எனக்கு ஒரு பயம் வருதே ஷியாமா.''

''என்ன பயம்?''

''ஏற்கனவே டெல்லில ஏழு வருஷம் முன்னாடி ஒரு மலாய் பொண்ணை லவ் பண்ணிருக்கார்.''

''அப்படியா? அவரே சொன்னாரா இதை?''



''ஆமாம். ஃபர்ஸ்ட் மீட்டிங்லயே சொல்லிட்டார். இவ்வளவு வெளிப்படையா இருக்காரேன்னுதான் தோணிச்சு.''

''அப்புறம் என்ன? இதப்பாரு மேகா, இதையெல்லாம் நீ யார்கிட்டயும் சொல்லாம இருக்கறது நல்லது.''

''உன்கிட்ட கூடவா? எத்தனை வருஷமாப் பழகறோம்? வேற யார்கிட்டயும் எல்லாம் பேச முடியாது ஷியாமா.''

''சரி, உன் பயம் என்ன? நேராச் சொல்லு!''

''சிகரெட், மது அனுபவம் உண்டுன்னு பளிச்சுன்னு ஒத்துக்கிட்டார். லேடீஸ் விஷயத்திலயும் கொஞ்சம் அப்படி இப்படி இருப்பாரோன்னு லேசா ஒரு சந்தேகம் வருது.''

''டெல்லில நடந்ததை ஓப்பனா சொன்னதால இந்த சந்தேகம் வருது! உண்மை பேசினாலும் வம்புதான் போலிருக்கு!''

''அப்படி இல்லை!''

''பின்னே என்ன? அம்மா, அப்பாவுக்கே தெரியாத லவ் மேட்டரை உன்கிட்டே சொல்லிருக்கார். அது நேர்மை இல்லையா? அதோட விட்டிருக்கலாம். எந்த அளவுக்கு லவ்வுன்னு விளக்கம் வேறக் கொடுத்திருக்கார். அப்படிப் பட்டவரை திடீர்னு கேவலமா நினைக்கிறியே... உன்கிட்டே அவசரமா உணர்ச்சி வசப்பட்டதுல உன் பங்கும் இருக்கு!''

''என்ன சொல்றே?''

''நாலு வருஷமா லவ் பண்ற லவ்வர்ஸ் மாதிரி சட்டுன்னு அவரோட ஒட்டிக்கிட்டு ஊர் சுத்தினியா இல்லையா? தனக்கு உரிமை உள்ள ஒருத்தியை சொட்டச் சொட்ட நனைஞ்ச ஸ்விம் சூட்ல பார்த்தா யாருக்கும் கிக் ஏறும். அதுவும் இல்லாம நீ ஏன் கிஸ் வரைக்கும் பேசாம இருந்தே? யாருக்கும் தடுமாறும் மேகா.''

அமைதியாய் தன் கை வளையல்களை நெருடினாள் மேகா.

''தப்புதான். என் மேல தப்பு இருக்குதான். என்னமோ தெரியலை ஷியாமா. இந்தக் காதல் - தர்க்கத்துக்கு எல்லாம் கட்டுப்பட மாட்டேங்குது. கல்யாணமே வேணாம்னு சொன்னேன். அவர் போட்டோ பார்த்ததும் அந்த வேகம் எங்கேப் போச்சுன்னே தெரியலை. முதல் சந்திப்புல சிம்ப்ளி ஹி லேண்டட் ஆன் மை ஹார்ட். ரொம்பப் பிடிச்சுப் போச்சு. இப்போ அவரோட பழகறது என் ரொட்டீன் வேலைகளை எல்லாம் கெடுத்துடுச்சி. ஆனா கவலை வர மாட்டேங்குது. இந்தத் துள்ளல்லதான் கொஞ்சம் நானும் இடம் கொடுத்துட்டேன்.''

''அப்புறம் ஏன் அவரை மட்டும் சந்தேகப்படறே?''

''தப்புதான். இப்போ மனசு தெளிவா இருக்கு ஷியாமா'' என்று புன்னகையோடு அவள் கையைப் பற்றி பொத்திக் கொண்டாள் மேகா.

## 13

சிந்தனையோடு தன் அறையில் உலவிக் கொண்டிருந்தார் சக்கரவர்த்தி. உறக்கத்தில் புரண்டு படுத்த காஞ்சனா அருகில் அவரைக் காணாமல் எழுந்து உட்கார்ந்து நேரம் பார்த்து, ''என்னாச் சுங்க? மணி ரெண்டாகுது. தூங்கலையா?'' என்றாள்.

''தூக்கம் வரலை காஞ்சனா. வராது. யாரோ ரொம்ப சாமர்த்தியமா நமக்கு துரோகம் செய்றாங்க. யாரு, எப்படின்னு புரியலை. சிட்டில நம்ம சோப் பவுடர் சேல்ஸ் குறையுது காஞ்சனா. இப்படியே விட முடியாது. ஒரு பக்கம் போலீசும் முயற்சி பண்ணிட்டிருக்கு. நானும் என் சைடுல அலையறேன். ஒரு சின்ன க்ளூ கிடைக்க மாட்டேங்குது.''

''இதெல்லாம் காலைல யோசிக்கக் கூடாதா?'' கொட்டாவி விட்டாள்.

''நீ தூங்கும்மா. எனக்கு தூக்கம் வராது. நான் முட்டாளடிக்கப்படறேன்மா. அழகா ஏமாத்தறாங்க.



எப்படித் தூக்கம் வரும்? இது இல்லாம இன்னிக்கு ஆபீஸ்ல வேற ஒரு டென்ஷன்!''

''என்னங்க அது?''

''சிட்டில டிஸ்ட்ரிபியூட்டருக்கு காலைல சரக்கு டெலிவரிக்காக வேன் ஒம்போது மணிக்குப் புறப்பட்டுப் போயிருக்கு. வழில டயர் பர்ஸ்ட் ஆகியிருக்கு. நிறுத்தி மாத்தி வேன் போறதுக்கு ரெண்டு மணி ஆயிடுச்சி. அதுக்குள்ளே டிஸ்ட்ரிபியூட்டர் மூணு தடவை போன் செஞ்சி லோலோன்னு கத்த ஆரம்பிச்சிட்டான். வேற ஒரு டென்ஷன்ல இருந்த நானே லைன்ல வந்து கொஞ்சம் கோபமாக கத்திட்டேன்.''

''சரக்கு வர லேட்டாகுதுன்னு அவங்க கோபப்பட்டது நியாயம். லேட்டானதுக்கு என்ன காரணம்னு உங்களுக்குத் தானே தெரியும். அவங்களுக்கு எப்படித் தெரியும்?''

''கரெக்ட்டுதான். நமக்கும் அப்புறம் வந்து டிரைவர் சொல்லித்தானே தெரியும். ஆனாலும், எனக்கிருந்த டென்ஷனுக்கு...'' என்றவர் வாக்கியம் முடிக்காமல் சிந்தனையில் ஆழ்ந்தார்.

''என்னங்க, திடீர்னு யோசிக்க ஆரம்பிச்சிட்டிங்க?''

'ஒருவேளை இப்படி இருக்குமோ? மே பீ!' சக்கரவர்த்தி தனக்குள் பேசிக்கொண்டு அவசரமாக லுங்கியை அவிழ்த்து வீசிவிட்டு வேட்டி எடுத்துக் கட்டினார். சட்டை அணிந்தார். கார் சாவியைக் கையில் எடுத்தார்.

''என்னங்க?''

''இரு காஞ்சனா, எனக்கு ஒரு புது சந்தேகம்! கம்பெனி வரைக்கும் போய்ட்டு வந்துடறேன்.''

''இந்த நேரத்திலயா? துணைக்கு வேணும்னா விச்சுவை...''

''விளையாடறியா? நான் என்ன சின்னக் குழந்தையா? தூங்கு! நான் திரும்பி வர்றதுக்கு லேட்டாகலாம்.''

வேகமாகப் புறப்பட்டார்.

தனது கம்பெனிக்கு வந்த சக்கரவர்த்தி யூனிட்டில் வேலைகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு அலுவலகம் வந்து உட்கார்ந்து வாட்ச்மேனை அழைத்தார்.

''அய்யா!'' என்று ஓடி வந்தான்.

''நம்ம கம்பெனி வேன், ஜீப், கார் எதுவா இருந்தாலும் வெளில போற நேரம், திரும்பி வர்ற நேரம் குறிக்கிற பழக்கம் இன்னும் நடக்குதில்லை?''

''ஆமாங்கய்யா!''

''ரெண்டு மாச நோட்டுக் எடுத்துட்டு வா! சூப்பர்வைசர் முத்துராமனை வரச் சொல்லு!'' என்றார்.

வந்து நின்ற முத்துராமன். ''தினமும் யாருக்கு என்ன வேலைன்னு வொர்க் அலாட்மெண்ட் பிரிச்சிப் போடுவிங்களே, அந்த லெட்ஜர் எடுத்துட்டு வாங்க'' என்றார்.

இருவரும் வருவதற்குமுன் கம்ப்யூட்டரை ஆன் செய்து கடந்த ஒரு மாதத்தில் சென்னையில் மூன்று டிஸ்ட்ரிபியூட்டர்களும் எந்தெந்த தேதியில் எவ்வளவு சரக்கு வாங்கினார்கள் என்கிற கணக்கைக் கேட்டு அதை பிரிண்ட்டரில் அடித்து உருவி மேஜைமேல் வைத்துக் கொண்டார்.

அவர் கேட்ட இரண்டு லெட்ஜர்களும் வந்தன.

அரை மணி நேரம் இரண்டிலும் அலசிவிட்டு நிமிர்ந்தார்.

''முத்துராமன்... நம்ம நாலு வேன்ல சிட்டிக்கு டெலிவரி கொடுக்க மட்டும் ரெண்டு வேன் தனியா ஒதுக்கியிருக்கோம். அதில டெலிவரிக்கு ஆரம்பத்தில ஒரு டெலிவரி கிளார்க் கூட போயிட்டு இருந்தாரு. அப்புறம் டிரைவர்சை மட்டும் அனுப்ப ஆரம்பிச்சிட்டோம். இல்லை?''



''ஆமாம் சார். ஆரம்பத்தில ஏரியா வாரியா முப்பத்தேழு ஸ்டாக்கிஸ்ட்டுக்கு நேரடியா சப்ளை செஞ்சோம். அப்புறம் மூனே டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்ன்னு முடிவானதால இன்வாய்ஸ் காப்பீஸ், டெலிவரி செலான் எல்லாம் டிரைவர்ஸ்கிட்ட கொடுத்து அனுப்பிச்சாப் போதும், தனியா ஒரு கிளார்க் வேஸ்ட்டுன்னு நீங்கதான்...''

''நான்தான் அந்த சிஸ்டத்தை மாத்தினேன். சிட்டில சரக்கு டெலிவரிக்கு வேன் எடுத்துட்டுப் போற டிரைவர்ஸ் யார், யாரு?''

''நாகப்பன், அழகுராஜா, பத்மநாபன், அழகப்பன்.''

''அதுல சமீபத்தில அழகப்பன் டெலிவரிக்காக வேனை எடுத்துட்டுப் போறப்பல்லாம் லேட்டாவே திரும்பி வந்திருக்கான். பார்த்திங்களா?''

''டயர் பர்ஸ்ட், டிராஃபிக்ல மாட்டி மாமூல் கொடுத்தேன். ஆக்ஸிடெண்ட் ஆனதால சுத்திட்டுப் போனேன்னு ஏதாச்சும் காரணம் சொல்வான் சார். சரியான வாய் அட்டை! சரி, வேலை நடந்தாப் போதும்னு அதிகம் கண்டுக்காம...''

''சரி, நீங்க போங்க.''

முத்துராமன் போனதும் சக்கரவர்த்தி போனை எடுத்தார். ஏ.சி. ஜார்ஜ் அறிமுகப்படுத்தியிருந்த இன்ஸ்பெக்டர் இளங்கோவனுக்கு லைன் போட்டார்.

''சார், நான் சக்கரவர்த்தி பேசறேன். நம்ம டூப்ளிகேட் சரக்கு மேட்டர்ல எனக்கு என்கிட்ட டிரைவரா வேலை பார்க்கற அழகப்பன் மேல ஸ்ட்ராங்கா சந்தேகம் ஏற்பட்டிருக்கு.''

''அட்ரஸ் மட்டும் சொல்லுங்க. அவன்கிட்டேர்ந்து உண்மையை நான் வரவழைக்கிறேன்.''

சக்கரவர்த்தி கம்ப்யூட்டரில் தேடி அட்ரஸ் சொன்னார்.

## 14

**போ**லீஸ் ஸ்டேஷனில் ஒலித்த போனை எடுத்த இன்ஸ்பெக்டர் தன் பெயரைச் சொன்னார்.

''சார், நான் சக்கரவர்த்தி பேசறேன், குட் மார்னிங்.''

''குட்மார்னிங் சார். நேத்து ராத்திரி இங்கே கொண்டாந்ததிலர்ந்து அந்த அழகப்பனை பலவிதமா விசாரிச்சுப் பார்த்தாச்சு. நான் எந்தத் தப்பும் பண்ணலைன்னு சாதிக்கிறான்.''

''அதைப்பத்தி சொல்லத்தான் கூப்புட்டேன். கொஞ்சம் முன்னாடி அழகப்பன் பொண்டாட்டி இங்கே என் வீட்டுக்கு வந்து கால்ல விழுந்து கதறினா சார். தண்ணி போட்டுட்டு போதையில அவகிட்டே தான் செய்ற துரோகம் பத்தி இவன் சொல்லிருக்கான். புதுசா அவன் வாங்கிப் போட்ட நகை, அம்பதாயிரம் ரொக்கம் எல்லாம் எடுத்துட்டு வந்திருக்கா. 'என் புருஷன் தப்பு பண்ணிட்டார். மன்னிச்சி விட்டுடச் சொல்லுங்கய்யா'ன்னு சொல்றா. அவளை அழைச்சுக்கிட்டு நான் இப்ப உங்க ஸ்டேஷனுக்கு வர்றேன்.''

''வாங்க சார்'' என்று வைத்தார் இன்ஸ்பெக்டர்.

**லா**க்கப்பில் இருந்த அழகப்பன் சலனம் எதுவும் முகத்தில் காட்டாமல் சக்கரவர்த்தியை நிமிர்ந்து பார்த்தான். அருகில் இன்ஸ்பெக்டர் உருவிய பெல்ட்டோடு நின்றிருந்தார்.

''பதினஞ்சி வருஷமா என்கிட்டே இருக்கறே. உனக்கு எவ்வளவு நல்லது செஞ்சிருக்கேன். ஏன் இப்படி செஞ்சே? பாரு! நான் எதுவுமே செய்யலைன்னு இன்னும் பிடிவாதம் பிடிக்காதே! அஞ்சலை எல்லாம் சொல்லிட்டா. சிட்டில டிஸ்ட்ரிபியூட்டர் குடோவ்ன்ல சரக்கை டெலிவரி பண்றதுக்காக நம்ம குடோவ்ன்லேர்ந்து புறப்படறப்போ நேரா அங்கேப் போறதில்லை. வேற ஒரு ரகசியமான



இடத்துக்குப் போயி... அங்கே ரெடியா இருக்கிற டூப்ளிகேட் சரக்கை ஏத்தி அதே அளவுக்கு நம்ம சரக்கை அங்கே இறக்கிட்டு அப்புறம் கொண்டு போய் டெலிவரி செஞ்சிருக்கே. பணத்துக்காக இந்த துரோகத்தை செஞ்சிருக்கே! உண்டா, இல்லையா?'' என்றார் சக்கரவர்த்தி.

''பேசாம ஒத்துக்கய்யா! உண்மையை ஒத்துக்கிட்டா உன்னை அய்யா மன்னிச்சிடுவாரு!'' என்றாள் லாக்கப் அறைக்கு வெளியில் நின்ற அஞ்சலை.

அழகப்பன் மௌனம் சாதித்தான்.

''சொல்லு அழகப்பா! எனக்கு எதிரா செயல்படறது யாரு? டூப்ளிகேட் சரக்கு தயாரிச்சி இந்த மாதிரி உன்னைப் பயன்படுத்தி என் மார்க்கெட்டை சரிய வைக்க முயற்சி பண்றது யாரு?''

பெல்ட் அவன் உடம்பில் விர்ரென்று தொட்டு விலகியது.

''கேக்கறாரில்லை? சொல்லுடா!'' உறுமினார் தினகரன்.

**தி**வாகர் போன் பேசி முடித்து வைத்துவிட்டு எதிரில் இருந்த வினோத்திடம், ''வினோத், டேஞ்சர்!'' என்றான்.

''என்ன சொல்றே?''

''லாக்கப்ல இருக்கற அழகப்பன் எல்லா உண்மையையும் சொல்லிடுவான் போல இருக்காம்.''

''அப்படியா?'' என்றான் வினோத்.

''என்ன சாதாரணமா கேக்கறே?''

''ஹெலிகாப்டர்ல பறக்கறவன் ஆபத்து ஏற்பட்டா எப்படி தப்பிப்பான் திவாகர்?''

''பாராசூட் இருந்தா முதுகில் கட்டிக்கிட்டு ஹெலிகாப்டர்லேர்ந்து குதிச்சிடுவான்.''

''பாராசூட் இல்லைன்னா?''

''கஷ்டம்தான்!''

''நம்மகிட்ட பாராசூட் இருக்கு திவாகர். எதுக்குக் கவலைப்படணும்?''

''புரியலையே?''

''சொல்றேன்'' என்று சிரித்தான் வினோத்.

அண்ணா நகரில் இருந்த 'வின்ஸ்' வாஷிங் பவுடர் நிறுவனத்தின் விலாசம் விசாரித்துக் கொண்டு இன்ஸ்பெக்டர் தினகரனின் தலைமையில் அதிரடி ரெய்டு நடத்தி கே.பி.சி. டூப்ளிகேட் சரக்குகள், பேக்கிங் கவர்கள், பிளாக்ஸ் எல்லாவற்றையும் கைப்பற்றுவதற்காக மூன்று போலீஸ் ஜீப்புகள் விரைந்தன.

அவர்கள் வந்து சேர்ந்தபோது அந்த நிறுவனத்தில் ஒரே பரபரப்பு. ஒரு மூலையில் இருந்து கரும்புகை!

ஒருவரைத் தடுத்து தினகரன் விசாரித்தார்.

''என்னாச்சு? எல்லாரும் ஏன் டென்ஷனா ஓடறீங்க?''

''எங்க சரக்கு குடோவ்ன்ல நெருப்பு பிடிச்சிடுச்சி சார்!''

எரிச்சலோடு தொப்பியைக் கழற்றினார் தினகரன்.

சக்கரவர்த்தியின் அலுவலக அறையில் தேவராஜ், சடகோபன் மற்றும் சில முக்கியமான ஊழியர்களிடம் சக்கரவர்த்தி ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கும்போது அனுமதி பெற்று உள்ளே வந்தார் இன்ஸ்பெக்டர் தினகரன்.

''சார், அந்த வினோத் பயங்கர கிரிமினல் மைண்ட் உள்ளவனா இருக்கணும். ரெய்டுக்குப் போறது தகவல் தெரிஞ்சி குடோவ்ன்ல நெருப்பு வெச்சிட்டாங்க. உங்க சரக்குகள் பூரா எரிச்சிட்டாங்க. எப்படி எப்படியோ விசாரிச்சேன். மாட்டலை. அழகப்பன் வேணும்னே தன் மேல பழி போடறதா சாதிக்கிறான். 'என் முன்னாள் முதலாளி சார் சக்கரவர்த்தி, அவர்தான் சார் என் தொழிலை



ஆரம்பிச்சி வெச்சார், அவர் வியாபாரத்தைக் கெடுக்க நான் ஏன் செய்வேனா?'ன்னு வெண்ணெயாப் பேசறான். ஆதாரம் ஏதும் இல்லாம அவனை அரெஸ்ட் பண்ண முடியாது சார். அவன் யூனிட்ல வேலை பார்க்கறவங்களை எல்லாம் மிரட்டி வெச்சிருப்பான் போலிருக்கு. யாருமே வாயைத் திறக்க மாட்டேங்கறாங்க. வினோத் நடவடிக்கைகளை ரகசியமா கண்காணிக்க ஏற்பாடு செய்றேன். கொஞ்சம் பதுங்கிதான் பாயணும்.''

''ராஸ்கல்! அவனுக்கு தொழில் கத்துக் கொடுத்ததே நான்தான். அவனுக்குக் கல்யாணம் பண்ணி வெச்சேன் சார். அவன் மச்சான் அமெரிக்காலேர்ந்து பணம் அனுப்பிச்சான். நீ தனியா தொழில் ஆரம்பியேன்ப்பான்னு யோசனையும் நான்தான் சொன்னேன். தீட்டின மரத்தில் பதம் பார்க்கறது மாதிரி பண்ணிட்டான். என் கன்னத்தில அவன் அறைஞ்சிருந்தாக்கூட மன்னிச்சிடுவேன். என் தொழில்ல நான் வாங்கியிருக்கிற நல்ல பேரைக் கெடுக்கப் பார்த்தானே! தொழில் பண்றது பணத்துக்காக மட்டும் இருக்கக் கூடாதுன்னு நினைக்கிறவன் நான். அன்னிக்கு அந்த அம்மா கைல தோல் உரிந்து இருந்ததைப் பார்த்து கண் கலங்கிட்டேன். நான் பார்த்தது ஒரு லேடி! நான் பார்க்காம எத்தனைப் பேர் கஷ்டப்பட்டிருப்பாங்க! இதுவே அமெரிக்காவா இருந்தா கன்ஸ்யூமர் கோர்ட்ல கேஸ் போட்டிருப்பாங்க! சார், அவனை விடக்கூடாது!''

உணர்ச்சி வசப்பட்டு சக்கரவர்த்தி கத்தினார்.

''கொஞ்சம் அமைதியா இருங்க சார். நான் பார்த்துக்கறேன். அப்புறம்... இப்ப நான் வந்தது வேற ஒரு அதிர்ச்சியான விஷயம் சொல்றதுக்காக சார். அது உங்க தொழில்ல எந்த அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கும்னு எனக்குத் தெரியலை'' என்றார் தினகரன்.

''என்ன விஷயம் சார்?''

''உங்க கம்ப்யூட்டர்ல நான் சொல்ற தகவலை சரி தானான்னு முதல்ல பாருங்க. சரியா இருந்தா மேற்கொண்டு சொல்றேன். இந்த மாசம் ஆறாம் தேதி ரயில் மூலமா ஐநூறு மூட்டை 'சோடா ஆஷ்'ன்ற கெமிக்கல் பவுடர் உங்களுக்கு வந்திருக்கா?''

தேவராஜ் கம்ப்யூட்டரில் பார்த்து, ''ஆமாம் சார்.''

''அந்த ஐநூறு மூட்டையையும் ஆறேழு டிரிப்பா அழகப்பன் தான் ரயில்வே குடோவ்ன்லேர்ந்து உங்க குடோவ்னுக்கு கொண்டு வந்து இறக்கினானா?''

''ஆமாம் சார். கரெக்ட்டு'' என்றார் சூப்பர்வைசர்.

''அதிலயும் தப்பு நடந்திருக்கு சார். வினோத் உங்க சரக்கை டூப்ளிகேட் தயாரிச்சி மார்க்கெட் விடறதுக்கு அழகப்பனை பயன்படுத்தினா சிட்டில மட்டும்தான் சாதிக்க முடியும். ஆல் ஓவர் தமிழ்நாடு உங்க சரக்குக்கு கெட்டப் பேர் வாங்கித் தர முடிவு செஞ்சி அழகப்பன் மூலமா இன்னொரு காரியமும் செஞ்சிருக்கான். 'ஆசிட் ஃப்ளெர்ரி'ன்னு ஒரு அயிட்டம் உங்க வாஷிங் பவுடர்ல சேர்க்கறிங்களா?''

''எல்லா வாஷிங் பவுடர்லயும் அது கொஞ்சம் சேரும் சார். சேர்க்கணும். சல்ஃப்பூரிக் ஆசிட்டோட கடைசி வேஸ்ட்லேர்ந்து தயாரிக்கப்படற கெமிக்கல் பவுடர் அது. நுரை வர்றதுக்கும், அழுக்கை எடுக்கறதுக்கும் அது ஒரு முக்கிய அயிட்டம். குறிப்பிட்ட பர்செண்ட்டேஜ் அது சேர்த்தாகணும். அதுக்கு என்ன?''

''அழகப்பன் 'சோடா ஆஷ்' கெமிக்கல் மூட்டை களை ரயில்வே குடோவ்ன்லேர்ந்து ஏத்திக்கிட்டு வினோத் தோட குடோவ்னுக்கு கொண்டு போயிருக்கான். அங்கே ஒவ்வொரு மூட்டையையும் பிரிச்சி உள்ளே 'ஆசிட் ஃப்ளெர்ரி' கலந்து மறுபடி தச்சிருக்காங்க.''

''மைகாட்!'' என்று முகம் சிவந்தார்.



''நீங்க சரக்கு தயாரிக்கிறப்போ வழக்கமா எத்தனை சதவிகிதம் 'ஆசிட் ஃப்ளெர்ரி' சேர்ப்பிங்களோ அதை சேர்த்துடுவிங்க. அதைத் தவிர 'சோடா ஆஷ்' சேர்க்கறப்போ உங்களுக்குத் தெரியாம இன்னும் கொஞ்சம் 'ஆசிட் ஃப்ளெர்ரி' சேரும். அது உங்க புராடக்ட் தரத்தைப் பாதிக்கும் இல்லையா? அதான் அவன் நோக்கம்! இப்ப கொஞ்சம் முன்னாடிதான் அழகப்பன் இந்த சதியையும் ஒத்துக்கிட்டான்!''

''அடக் கடவுளே!'' என்று நாற்காலியில் உட்கார்ந்த சக்கரவர்த்தி, ''தேவராஜ், போய் குடோவ்ன்ல பாருங்க. ஆறாம் தேதி வந்த இந்த ஐநூறு மூட்டை 'சோடா ஆஷ்' உபயோகிக்க ஆரம்பிச்சாச்சான்னு பாருங்க! க்விக்!''

பலர் ஓடினார்கள். சக்கரவர்த்தி கர்ச்சிப் எடுத்து நெற்றியில் துளிர்த்த வியர்வையை ஒற்றினார்.

''இன்னைக்கு தேதி பத்தொன்பது. எப்பவும் என்கிட்ட எல்லா மெட்டீரியலும் நிறைய ஸ்டாக் வெச்சிருப்பேன். இந்த ஐநூறு மூட்டையும் இன்னும் தயாரிப்புக்கு எடுத்துக்காம இருந்தா நல்லது!''

சற்று நேரத்தில் தகவல்கள் வந்தன - பதினோராம் தேதி முதல் இந்த ஐநூறு மூட்டைகள் எடுக்கத் துவங்கி இப்போது நாற்பது மூட்டைகளே மிச்சம் இருப்பதாக!

''புரொடக்ஷனை நிறுத்துங்க! டெலிவரி நிறுத்துங்க! எல்லா டிஸ்ட்ரிபியூட்டருக்கும் தகவல் கொடுங்க! சேல்ஸ் நிறுத்துங்க! ரீட்டெய்ல் கடைகள்ல பதினோராம் தேதிக்கு அப்புறம் சப்ளை செய்யப்பட்ட எல்லா வாஷிங் பவுடர் பாக்கெட்டுகளையும் திரும்ப எடுக்கச் சொல்லுங்க!'' கத்தினார் சக்கரவர்த்தி.

தேவராஜ் கம்ப்யூட்டரில் தட்டிப் பார்த்து, ''சார், நிறைய சரக்கு தமிழ்நாடு பூரா போயிடுச்சு. எல்லாத்தையும் பேன் பண்றதுன்னா... கிட்டத்தட்ட ரெண்டு கோடிக்கு மேல நஷ்டமாகும்'' என்று இழுத்தார்.

''பரவால்லை! நஷ்டமானாப் பரவால்லை! நமக்கு தகவல் தெரிஞ்சப்புறம் தப்பான சரக்கை வியாபாரம் பண்ணக் கூடாது! நான் சொன்னதைச் செய்ங்க! நம்ம கைல உள்ள அந்த சோடா ஆஷ் போட்டுத் தயாரிச்ச அவ்வளவு சரக்கையும் தனியாப் பிரிச்சி ஒதுக்கி வெச்சிடுங்க! ஒரு நாலு நாள் புரொடக்ஷன் நின்னாலும் பரவால்லை. நடந்த தப்புக்கு நடவடிக்கை எடுத்ததுக்கு அப்புறம்தான் மத்த வேலை, புரிஞ்சுதா?'' என்றார் சக்கரவர்த்தி.

## 15

அப்படியாக திடுதிப்பென்று சக்கரவர்த்திக்கு ஏற்பட்ட முதல் சரிவு ஒரு வைரஸ் கிருமியாக பரவத் துவங்கியது.

அவர் எங்கே சறுக்குவார் என்று காத்துக் கொண்டிருந்த போட்டி கம்பெனிகள் தோள் தட்டி களத்தில் இறங்கின.

அவர் சரக்கால் தோல் பாதிக்கப்பட்ட இரண்டு பெண்களுக்கு பின்னணியில் இருந்துகொண்டு கன்ஸ்யூமர் கோர்ட்டில் வழக்கு தொடரச் செய்தனர்.

புலன் விசாரணை செய்து பரபரப்பாக எழுதும் பத்திரிகை களுக்கு லட்டு லட்டாக செய்திகளை அனுப்ப... அவர்கள் 'கே.பி.சி. வாஷிங் பவுடரில் கலப்படம்! கைகள் எரி கின்றன! தோல் வியாதி ஏற்படுகிறது! பொதுமக்கள் பீதி!' என்றெல்லாம் தலைப்புக் கொடுத்து எழுதத் துவங்கி னார்கள்.

டி.வி.யில் போட்டி கம்பெனி ஒன்று கீழ்கண்டபடி வசனம் அமைத்துத் தங்கள் வாஷிங் பவுடருக்கு விளம்பரம் அமைத்தது.

''கை எரியணுமா? தோல் உரியணுமா? அப்படின்னா அந்த மூணெழுத்து பவுடரே வாங்கு! துணி பொத்த லாகணுமா? நாலே நாள்ல கிழியணுமா? அப்படின்னா அந்த மூணெழுத்து பவுடரே வாங்கு!''



பேங்கில் புதிதாக சேங்ஷன் செய்ய இருந்த புதிய யூனிட்டுக்கான கடனை சேங்ஷன் செய்யத் தயங்கினார்கள். விளம்பர ஏஜன்ஸிகள் தங்கள் பில்களை உடனே செட்டில் செய்யச் சொல்லி வற்புறுத்தத் துவங்கினார்கள்.

சக்கரவர்த்தி தனது டிஸ்ட்ரிபியூட்டர்களை எல்லாம் அழைத்து மீட்டிங் போட்டு ஒரு மணி நேரம் பேசினார். புதிதாக விளம்பரம் தயாரிக்க ஏற்பாடுகள் செய்தார். பத்திரிகைகளில் 'நிகழ்ந்த தவறு சரி செய்யப்பட்டு விட்டது. இப்போது எங்கள் கே.பி.சி. வாஷிங் பவுடரில் எந்தக் குறையும் இல்லை' என்று தொடர்ந்து விளம்பரம் கொடுத்தார்.

ஆனாலும்...

ஆர்டர்கள் வேகமாக குறைந்து கொண்டிருந்தன. தயாரிப்பு குறைந்து கொண்டிருந்தது. மூன்று ஷிஃப்ட், இரண்டு ஷிஃப்ட் ஆகி, ஒரு ஷிஃப்டில் வந்து நின்றும்... குடோவ்னில் தயாரிக்கப்பட்ட கே.பி.சி. சரக்குகள் தேங்கத் துவங்கின.

எல்லாம் சில வாரங்களில்!

இதுவரை ஏறுமுகமாகவே வெற்றிகளை சந்தித்து வந்த சக்கரவர்த்தியால் இந்த திடீர் வீழ்ச்சியைத் தாங்கவே முடியவில்லை.

வீட்டில் மனைவியிடம் எல்லாம் சொல்லி, ''காஞ்சனா, நிலைமை சரியாயிடும். எல்லாத்தையும் சமாளிச்சுட முடியும்னு நம்பிக்கையோட போராடிக்கிட்டு இருக்கேன். ரஞ்சனாவுக்கும், விஷ்ணுவுக்கும் எதுவும் தெரிய வேணாம். இது பிஸினெஸ்ல ஏற்பட்டிருக்கிற தற்காலிக பிரச்சனை! இதை எல்லாம் அவங்ககிட்ட சொல்லிக்கிட்டு இருக்க வேணாம். புரிஞ்சுதா?'' என்றார்.

அலுவலகத்திலேயே அதிக நேரம் முடங்கிக் கிடந்தார். அலுவலக ஊழியர்களை தனித்தனியாக அழைத்து ஆலோசனைகள் நடத்தினார். மீண்டும் வியாபாரத்தைத் தூக்கி நிறுத்த அத்தனை வழிகளையும் யோசித்தார்.

இந்தச் சூழ்நிலையில் மற்றொரு அதிர்ச்சியான செய்தி யோடு வந்து நின்றார் கே.பி.சி. பைனான்ஸ் நிறுவனத்தை நிர்வகித்து வந்த மேனேஜர் நரசிம்மன்.

''சார், ஒரு பேட் நியூஸ்! மேக்னா லெதர் இண்டஸ்ட்ரீஸ் அதிபர் விக்ரம்சின்ஹாவை நேத்து சி.பி.ஐ. போலீஸ் அரெஸ்ட் பண்ணிருக்கு. அவரோட இண்டஸ்ட்ரியையும் அத்தனை ஆபீசையும் சீல் வெச்சிட்டாங்க.''

''கடவுளே! ஏன்?''

''லெதர் எக்ஸ்போர்ட்ஸ்ல ஏதோ ஃப்ராடு நடந்திருக்கு ஏகப்பட்ட அன்னிய செலாவணி குற்றங்கள்! ஜாமீன்ல எடுக்கவே போராடிக்கிட்டிருக்காங்க. அவரோட அக் கவுண்ட்ஸ் எல்லாத்தையும் ஃப்ரீஸ் பண்ணிட்டாங்க. நம்ம ஃபைனான்ஸ் கம்பெனிலேர்ந்து அவங்களுக்கு பதினாறு கோடி கடன் கொடுத்திருக்கோம். எல்லாம் மெஷினரி மேல லீகல் அட்வைஸரை கன்சல்ட் செஞ்சேன். ரொம்ப கிரிட்டிகல் சூழ்நிலைன்றார். சி.பி.ஐ. கேஸ் முடிஞ்சப் புறம்தான் நாம எந்த நடவடிக்கையும் எடுக்க முடியுமாம். நிறைய சிக்கல் இருக்காம்.''

''பணம் வந்துடும்ல?'' என்றார் சக்கரவர்த்தி லேசான நடுக்கத்துடன்.

''லேட்டாகும் சார். ஆனா வந்துடும். இண்ட்ரெஸ்ட்ல பிரச்சினை வரலாம். ஆனா, கொஞ்சம் நாள் ஆகும். ஆனா இப்போ உடனடியா நமக்கு தலைக்கு மேல பிரச்சினை இருக்கே சார். ஒரு வருஷம் டைம் போட்டு நம்ம கம்பெனில ஃபிக்ஸட் டெபாசிட் போட்டிருக்கிறவங்களுக் கெல்லாம் அடுத்த மாசம் திருப்பிக் கொடுக்க வேண்டிய ட்யூ வருது. இப்போ நம்ம 'கே.பி.சி. ப்ராடக்ட்ஸ்' பத்தி கொஞ்சம் இமேஜ் அடிபட்டிருக்கிறதால யாரும் டெபா சிட்ஸ் புதுப்பிக்க மாட்டாங்க. இப்பவே பல பேர் ப்ரீமெச்சூர் க்ளோஸ் பண்ணி பணம் கேக்க ஆரம்பிச்



[illegible]க்காங்க. அவங்களை எல்லாம் சமாதானப் படுத்தி ட்யூ [illegible] கட்டாயம் பேமெண்ட் கிடைக்கும்னு சமாதானப் [illegible]ட்டிருக்கோம்.''

''ஒரு மாசம் கழிச்சி எவ்வளவு டெபாசிட் தொகை [illegible]களுக்கு திருப்பித் தர வேண்டியிருக்கும்?'' என்றவரின் [illegible] பிசிறியது.

''பத்தரை கோடி ரூபா சார்!''

சக்கரவர்த்தி நெஞ்சைப் பிடித்துக் கொண்டார்.

''சார், உங்களுக்குத் தெரியாததில்லை. தனியார் ஃபைனான்ஸ் கம்பெனிகள் மேல மக்களுக்கு பொதுவா [illegible]க்கை போயிடுச்சு. உங்க மேல உள்ள நம்பிக்கைலயும், [illegible] பேளருக்கு உள்ள குட்வில் காரணமாவும் பணம் [illegible]டிருக்காங்க. இந்த கிரைசிஸ்ஸ சரியா மீட் [illegible]லைன்னா நேரா கமிஷனர் ஆபீஸ் போயிடுவாங்க [illegible].''

சக்கரவர்த்தி தண்ணீர் எடுத்துக் குடித்தார். விரல்கள் [illegible]ந்து கிளாஸ் டம்ளர் நழுவியது. கண்கள் செருக... [illegible]த்தவரைத் தாங்கிப் பிடித்தார் ஃபைனான்ஸ் மேனேஜர்.

''ஐ'ம் ஆல்ரைட் ஐ'ம் ஆல்ரைட். நீங்க புறப்படுங்க. நான் [illegible]க்கிறேன். நம்ம ஆடிட்டரையும், லீகல் அட்வைஸ [illegible]யும் உடனே இங்கே வரச்சொல்லுங்க!'' என்றார் சக்கரவர்த்தி.

## 16

தன் கார்மேல் சாய்ந்துகொண்டு தூரத்து கடல் அலைகளை வெறித்தபடி பார்த்துக் கொண் டிருந்தார் சக்கரவர்த்தி.

அருகில் பதைப்புடன் நின்றிருந்தார் மோகன்ராம்.

''சக்கரவர்த்தி, நம்பிக்கையை தளர விட்டுடாதேப்பா!''

''பயமா இருக்கு மோகன். ரொம்ப பயமா இருக்கு. [illegible] திடுதிப்புன்னு எல்லா சூழ்நிலையும் எனக்கு

எதிராத் திரும்பும்னு நான் எதிர்பார்க்கலை. விக்ரம் சின்ஹா இன்னும் பதினஞ்சு நாள்ல தன் லோன் எல்லாத்தையும் கம்ப்ளீட்டா முடிச்சுடறதா போன வாரம் தான் சொன்னார். பதினாறு கோடி அவர்கிட்ட மாட்டிட்டு இருக்கு! ரொம்ப பெரிய தொகை! அவரோ கவர்மெண்ட்கிட்ட மாட்டிக்கிட்டு இருக்காரு. இந்தப் பக்கம் பிசினெஸ் படு பாதாளத்துல விழுந்துடுச்சி. குடோவ்ன் பூரா சரக்கு அப்படி அப்படியே இருக்கு. தமிழ்நாடு பூரா டெபாசிட் கட்டி டிஸ்ட்ரிபியூஷன் வாங்கினவங்க பாதி பேரு டெபாசிட் தொகையைத் திருப்பிக் கேக்கறாங்க. பேப்பர்ல எல்லாம் கண்டபடி எழுதிட்டாங்களா, அதனால பொதுமக்கள்கிட்ட நம்பிக்கை போய்டுச்சி. கேஷுவல் லேபர்ஸ் அறுபது பேரை வேலையை விட்டு நிறுத்திட்டேன். வர்ற ஒண்ணாம் தேதி எல்லாருக்கும் சம்பளம் போடணும்னு நினைச்சா பகீர்ன்னு இருக்கு. பேங்க்ல கெடுபிடி பண்றாங்க. இந்தச் சூழ்நிலையில இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே டெபாசிட் செஞ்சவங்களுக்கு பத்தரை கோடி திருப்பித் தர வேண்டிய சூழ்நிலை. இரண்டு வருஷம்னு குறிப்பிட்டு டெபாசிட் செஞ்சவங்களும் இப்பவே செட்டில் பண்ணச் சொல்லி திருப்பிக் கேக்க ஆரம்பிச்சிட்டாங்க. எனக்கு எதுவுமேப் புரியலை மோகன்.''

''கல்யாணம் வேற நெருங்கிக்கிட்டே இருக்கே சக்கரவர்த்தி.''

''அது வேற பயமா இருக்கு. வீட்ல இன்னிக்கு உள்ள ஃபைனான்ஷியல் பிரச்சினை காஞ்சனாவுக்கு மட்டும்தான் தெரியும். பிள்ளைங்களுக்குத் தெரிய வேணாம்னு சொல்லிட்டேன். அதனால ரகசியமா அழுதுட்டு இருக்கா அவ! சம்பந்தி நடுவுல ஒரு தடவை போன் பண்ணி 'பேப்பர்ல படிச்சேன்'னு ஆரம்பிச்சார். 'இது வியாபாரப் பிரச்சினை, சரி பண்ணிட்டே'ன்னு கெத்தா சொல்லிட்டேன்.''

''எல்லாம் அந்த வினோத் ராஸ்கலாலதானே?''



''அவன் பார்ட்னர் திவாகர் வீட்ல ரெய்டு நடத்தி நம்ம கம்பெனி பேர் போட்ட பேக்கிங் அயிட்டம்ஸ், பில்ஸ், ஃபைலிங்ஸ் எல்லாம் கைப்பற்றினாங்க. வினோத், திவாகர் ரெண்டு பேரையும் அரெஸ்ட் பண்ணி ஜாமின்ல விட்டிருக்காங்க. அந்த கேஸ் வேற நடந்துட்டு இருக்கு. அவன் என் பிஸ்னெசுக்கு வேட்டு வெச்சான். விக்ரம்சின்ஹா என் கௌரவம், மானம், மரியாதை எல்லாத்துக்குமே வேட்டு வெச்சிடுவான் போலிருக்கேப்பா'' என்ற அவர் குரல் தழுதழுத்தது.

''இப்போ எல்லாப் பிரச்சினையிலேர்ந்தும் நீ வெளில வரணும்னா எவ்வளவு தேவைப்படுது உனக்கு?''

''கே.பி.சி. பைனான்ஸ் கம்பெனி மேல மக்களுக்கு நம்பிக்கை போய்டுச்சி மோகன். அத்தனை டெபாசிட் தாரர்களுக்கும் பேசின வட்டிப்படி பணம் திருப்பிக் கொடுத்து, டிஸ்ட்ரிபியூட்டர்சுக்கு டெபாசிட் பணம் திருப்பிக் கொடுத்து என் நாணயத்தைக் காப்பாத்திக் கணும்னா கிட்டத்தட்ட இருபது கோடி தேவைப்படுது.''

''பேங்க்ல...''

''வாய்ப்பே இல்லை. என் பங்களா ஃபார்ம் ஹவுஸ், மெஷினரிஸ், கார்ஸ், பேங்க் பேலன்ஸ், வேற சில சொத்துக்கள் டோட்டலா வித்துடறதுன்னு முடிவுக்கு வந்தாலும் பதினேழு கோடி வரைக்கும் தான் தேறும்.''

''விக்கிறதா? என்ன பேச்சு இது?''

''வேற வழி? விக்ரம் சின்ஹாகிட்ட அவ்வளவு பெரிய தொகை மாட்டிக்கிட்டு நிக்குதே! அது எனக்குத் திரும்ப வருமா, எப்ப வரும், எதுவும் புரியலை. அது இல்லாம பார்த்தா என் சொத்து, நான் தர வேண்டியது எல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்தா நான் திவால் மோகன்! மூணு கோடி பற்றாக்குறை! பெரிய ஜீரோ!'' சட்டென்று கர்ச்சிப்பால் தன் வாயைப் பொத்திக்கொண்டு விம்மினார் சக்கரவர்த்தி.

மோகன்ராமுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. ஆறுதலாகத் தோளில் தட்டிக் கொடுத்தார்.

''இப்படி எல்லாம் ஆகும்னு தெரியாம என் பொண்ணுக்கு அஞ்சு கோடிக்கு சீர் பண்றதா சம்பந்திகிட்ட பெருமையா சொன்னேன் மோகன். என் பையன் விஷ்ணுவுக்கு பிரைவேட் இன்ஜினியரிங் காலேஜ்லதான் சீட் வாங்க வேண்டிய சூழ்நிலை. பத்து லட்சம் செலவாகும். ஏன் லேட் பண்றிங்கன்னு நேத்து கேக்கறான். பதில் சொல்ல முடியலை. என்னப்பா செய்யட்டும்?''

''நான் ஒரு யோசனை சொல்றேன். தலைக்கு மேல வெள்ளம் போயிட்டிருக்கு. இப்போ கௌரவம் எல்லாம் பார்க்க முடியாது. உன் சம்பந்தி உன்னைவிட மூணு, நாலு மடங்கு வசதி! அவர்கிட்ட எதையும் மறைக்காம மனசு விட்டுப் பேசலாம். நானும் கூட வர்றேன். இருபது கோடி கடனா கொடுக்கச் சொல்லி வாங்கு. எல்லாம் செட்டில் பண்ணு. தெம்பா உழைச்சி மறுபடி நிமிர்ந்திடு. நீ செய்வே. உன்னால முடியும்.''

''என்மேல எனக்கு நம்பிக்கை இருக்கு. அவர் எப்படி நம்புவார்? இன்னும் கல்யாணம் நடக்காத சூழ்நிலையில எப்படி அவர்...''

''உன் நிலைமையை மூடி மறைச்சி கல்யாணத்தை நடத்திட முடியும்னு நம்பறியா? வேற எப்படியாச்சும் இதை சமாளிக்க யோசனை இருக்கா?''

இரண்டு கைகளையும் பரிதாபமாக விரித்தார் சக்கரவர்த்தி.

''அப்புறம் என்ன? இப்போ உன் சம்பந்தி ஒருத்தர் மனசு வெச்சாதான் உண்டு. வா, போய்ப் பேசலாம்.''

மௌனமாக காரில் அமர்ந்தார் சக்கரவர்த்தி.

ராஜபாஸ்கரின் வீட்டின் தனியறை.



மெத்தை போட்ட ஊஞ்சலில் மெதுவாக அசைந்தபடி [illegible] உபயோகித்தபடி ராஜபாஸ்கர் எதிரே அமர்ந்திருந்த மோகன்ராம் சொன்னதை எல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

தலைகுனிந்தபடி அமைதியாய் இருந்தார் சக்கரவர்த்தி.

''பணம் இன்னைக்கு வரும். நாளைக்குப் போகும். [illegible] மனசுதான் முக்கியம். சக்கரவர்த்தி யாருக்கும் [illegible] நினைச்சதில்லை. திறமைசாலி, அபார நம்பிக்கை [illegible]. ஒரே சமயத்தில் பல பாதிப்புகள் ஏற்பட்டதால [illegible] போயி நிக்கிறான். இப்ப நீங்க தான் மனசு வெச்சுக்கணும்'' என்றார் மோகன்ராம்.

''நான் அரசல்புரசலா கேள்விப்பட்டேன். ஆனா, இந்த அளவுக்கு சிக்கல் மாட்டியிருப்பாருன்னு நினைக்கலை. [illegible] அதிர்ச்சியாவும் இருக்கு. கஷ்டமாவும் இருக்கு. இருபது கோடி பெரிய விஷயம். நான் கொஞ்சம் யோசிச்சு [illegible] நாளைக்கு சொல்றனே. என்ன சாப்பிடறிங்க?'' என்றார் ராஜபாஸ்கர்.

''ஒண்ணும் வேணாம்'' என்றார் சக்கரவர்த்தி.

17

மறுநாள் காலை தன் படுக்கையறையில் சுவரில் மாட்டியிருந்த காலண்டரில் முருகன் படத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் சக்கரவர்த்தி. [illegible] வைக்கப்பட்ட காபி ஆடை அணிந்திருந்தது.

ஒலித்த போனை எடுத்தார். தன் பெயர் சொன்னார்.

''ஹலோ... நான் ராஜபாஸ்கர் பேசறேன்.''

''சொல்லுங்க சம்பந்தி!''

''ராத்திரி பூரா யோசிச்சேன். ஒரு துடுப்பு போயிடுச் [illegible] வாங்கித் தரலாம். படகே கவுந்துடுச்சின்னா என்ன

பண்றது? தப்பா எடுத்துக்கக் கூடாது? சுழல்ல சிக்கிட்டு இருக்கிறவனுக்கு கை கொடுத்தா அவனையும் சேர்த்து இழுத்துடுவான்னு சொல்வாங்க. அந்த மாதிரி கதை யாயிடக்கூடாது பாருங்க. என்னமோ நமக்குள்ளே உறவுக் காரங்களாகணும்னு ஆசைப்பட்டோம். விதி இடம் கொடுக்கலை. நல்லவேளையாப் பாருங்க, கல்யாண மண்டபம் கிடைக்காததால ரெண்டு மாசம் கல்யாணத்தைத் தள்ளி வெச்சோம். நீங்க இந்தச் சிக்கல்லேர்ந்து விடுபட்டு மறுபடி நல்லபடியா வரணும். உங்க பொண்ணுக்கு ஒரு நல்ல இடத்துல மாப்பிள்ளை அமையணும். என்னோட பிரார்த்தனைகள் பரிபூரணமா உண்டு சார். யாருக்கு எங்கே எப்படி வாழ்க்கைன்னு நமக்கு மேல இருக்கிறவன் தீர்மானிக்கிறான். அப்போ வெச்சிடட்டுமா?''

எதிர்முனையில் போன் வைக்கப்பட... சக்கர வர்த்தி தன் எதிரில் வந்து நின்ற காஞ்சனாவைப் பார்த்தார்.

''சம்பந்திதானே? என்ன சொன்னார்?''

''சார்ன்னு சொன்னாரு'' என்றார் வெறுமையாக. ''கல்யாணம் நின்னுபோச்சு!''

''அய்யோ! மேகா நொறுங்கிப் போய்டுவாளே!''

''காஞ்சனா, கதவை சாத்திட்டு வா!'' என்றார் அழுத்தமாக.

''இவர்கிட்டேர்ந்து இந்த பதில்தான் நான் எதிர் பார்த்தேன். காஞ்சனா, இந்த நிமிஷம் நான் கோடீஸ்வரன் இல்லை, கடன்காரன்! எல்லா சொத்தையும் கொடுத்துட்டு தெருவுலதான் நிக்கணும். சென்னைக்கு கல்யாணமான புதுசுல நீயும், நானும் வந்தமே... அந்த நிலைமைதான். அன்னிக்கு இருந்த தைரியம் இப்ப இல்லை. வயசும் இல்லை. இல்லாதவன் இல்லாதவனாவே வாழ்ந்துட முடியும். எல்லாம் அனுபவிச்சிட்டு மறுபடி இல்லாதவ னாகறது கொடுமை! அன்னிக்கு இந்த ஊர்ல என்னை



யாருக்கும் தெரியாது. இன்னைக்கு? தெருவல எப்படி நடக்கறது? யார் முகத்தை எப்படிப் பார்க்கறது? பசின்னா என்ன, பிரச்சனைன்னா என்னன்னு தெரியாம நம்ம குழந்தைங்களை வளர்த்தோம். அவங்க எப்படி தாங்கு வாங்க? என் பொண்ணு தலை காத்துல கலைஞ்சி இருந்தாலே கவலைப்படுவேன் நான். அவ கண் கலங்கினா நான் எப்படிப் பார்க்க முடியும்? நம்ம குழந்தைங்களுக்கு எவ்வளவு கனவுகள் இருக்கு? விஷ்ணு எப்படி என்ஜினியர் ஆக முடியும்? கொடுமை காஞ்சனா! கொடுமை! என்னால கற்பனையாக்கூட நினைக்க முடியலை.''

விக்கி அழத் துவங்கினாள் காஞ்சனா.

''அழக்கூடாது காஞ்சனா. இப்போ அழாம தைரியமா முடிவெடுக்கணும். மான, அவமானப் பிரச்சினையை சந்திக்காம, நாணயத்தையும் காப்பாத்திக்கிட்டு, எல் லாருக்கும் நிம்மதி கிடைக்க ஒரு வழி இருக்கு.''

''என்னங்க?''

''என் சொத்து எல்லாத்தையும் ஒரு உயில் மாதிரி என் கடன்களுக்கு செட்டில் செய்யச் சொல்லி எழுதி வெச் சிடறேன். நாம நாலு பேரும் குடும்பத்தோட தற்கொலை செய்துக்கலாம். என்ன சொல்றே?'' என்றார் சக்கரவர்த்தி - உணர்ச்சிப்பூர்வமாக.

''வாழ்ந்து கெடக்கூடாதுங்க. நான் ரெடிங்க. எந்த விஷத்தை வேணாலும் கொடுங்க. உங்க கையால கொடுங்க. முதல்ல நான் போயிடறேன்'' என்றாள் காஞ்சனா.

''பிள்ளைங்க?'' என்றாள் தயங்கி.

''அவங்களுக்குப் பிரச்சினை எதுவுமே தெரியாதே காஞ்சனா. நிலைமையை சொல்லி அவங்களுக்கு அதிர்ச்சி தர்றதுக்குப் பதிலா எதுவுமே சொல்லாம நாம குடிக்கிற விஷத்தையே அவங்களுக்கு விஷம்னு சொல்லாம கொடுத்துட்டா என்ன? இது கொலை இல்லை! அவங்க

கஷ்டப்படக்கூடாது! அவமானப்படக்கூடாது! நொந்து போகக்கூடாது! அதுக்காக! பொம்பளை பிள்ளையை வளர்த்து கட்டிக் கொடுக்கறது கஷ்டம்னு கருவுலயே கலைக்கிறதில சம்பந்தப்பட்டவங்களுக்கு ஏதோ ஒரு முரட்டு நியாயம் இருக்கற மாதிரி... இதுவும் ஒரு அன்புக் கொலை! கருணைக் கொலை! பொதுமக்கள் பார்வையில நாலு தற்கொலையாதான் தெரியப் போகுது!''

''நீங்க எப்படி சொன்னாலும் சரி'' என்றாள் காஞ்சனா அழுகையினூடே.

பங்களாவின் நீச்சல்குளம் அருகில் புல்வெளியில் நிலவொளியில் நாற்காலிகளில் சக்கரவர்த்தி, காஞ்சனா, மேகா, விஷ்ணு சாப்பிடத் தயாராய் உட்கார்ந்திருக்க...

''நாங்க சர்வ் பண்ணிக்கிறோம். நீங்க போங்க'' என்றதும் பரிமாற வந்த இரண்டு பணியாளர்களும் போய்விட்டார்கள்.

''இன்னிக்கு வெஜிடபிள் சூப் நானே செஞ்சேன் மேகா, சாப்பிடு. விஷ்ணு, உனக்கு வெஜிடபிள் சூப் ரொம்பப் பிடிக்குமில்லை? சாப்பிடு!'' என்றாள் காஞ்சனா.

''அதுசரி, கொஞ்ச நாளா நீங்க ரெண்டு பேரும் ரொம்ப டல்லா இருக்கீங்களே, ஏன்?'' என்றாள் மேகா இருவரையும் பொதுவாகப் பார்த்து.

''ஒண்ணுமில்லையே'' என்றாள் காஞ்சனா.

''கொஞ்சம் பிஸ்னெஸ் டென்ஷன்'' என்றார் சக்கரவர்த்தி.

விஷ்ணு தன் சூப்பை ஸ்பூனால் கலக்கிவிட்டு சாப்பிடப் போக...

''இரு விஷ்ணு!'' என்று தடுத்த மேகா, ''ஏம்மா, பெப்பர் போட்டியா?'' என்றாள்.

''போட்டேன்ம்மா.''



''பாய்ஸன் போட்டாச்சா? மறந்திருக்கப் போறே!''

இருவரும் திடுக்கிட்டுப் பார்த்தார்கள்.

''பாய்ஸனா? வாட் நான்சென்ஸ்?'' என்றான் விஷ்ணு.

''ஆமாம்! நான்சென்ஸ்தான்! நிலைமை மாறும்போது புத்தி கெட்டுப்போய் ரொம்ப சென்ஸ் உள்ளவங்ககூட நான்சென்ஸா நடந்துக்குவாங்க'' என்ற மேகா எழுந்து நான்கு பேரின் முன்னாலும் இருந்த சூப் கப்களில் இருந்த சூப் புல்வெளியில் கொட்டினாள். அப்பாவைப் பார்த்தாள்.

''நீங்களும், அம்மாவும் பேசிட்டிருந்ததைக் கேட்டுட்டேன் அப்பா. ரெண்டு குடும்பத்தையும் எதிர்த்துகிட்டு பாக்கெட்ல பணமே இல்லாம இங்கே வந்து நம்பிக்கை ஒண்ணை மட்டும் மூலதனமா வெச்சி போராடி முன்னேறின நீங்க எடுக்கற முடிவாப்பா இது? உங்களை உதாரணமா எத்தனை இளைஞர்கள் நினைச்சுட்டிருக்காங்க! அவங்களுக்கெல்லாம் இப்படி ஒரு அவமரியாதை செய்ய எப்படி மனசு வந்திச்சி? தற்கொலை ஒரு தீர்வாப்பா? அசிங்கமான தப்பித்தல் இல்லையா? நீங்க தற்கொலை செஞ்சிக்கிறதே தப்பு! இதில் எங்களை வேற பலிகடாவாக்க நினைச்சது [illegible] தெரியலையா? நாங்க கஷ்டப்படக் கூடாதுங்கறதுக்காக... ச்சே! என்ன முடிவு இது? நீங்க எங்களுக்கு பணத்தையும் வசதியான வாழ்க்கையையும் மட்டும்தான் கொடுத்திங்களா? நம்பிக்கையைக் கொடுத்திருக்கங்க உங்க அனுபவமா! போராடினா ஜெயிக்க முடியும்னு அழுத்தமா எங்க மனசுல விதைச்சிருக்கீங்க! நேர்மையை, நாணயத்தை, நல்ல பண்புகளை, ஒழுக்கத்தைக் கொடுத்திருக்கிங்க! அன்னிக்கு உங்க வாழ்க்கையை சூன்யத்தில துவங்கினப்போ உங்களுக்கு இருந்த அதே நம்பிக்கை எங்களுக்கு இருக்காதுன்னு எப்படி நினைச்சிங்க? உங்க வாழ்க்கையில முன் பாதில கஷ்டப்பட்டிங்க. பின் பாதி சந்தோஷப்பட்டிங்க. எங்களுக்கு முன் பாதில சந்தோஷத்தைக் காட்டிட்டிங்க.

இப்போ கஷ்டப்படணும்னா பட்டுட்டுப் போறோம். வசதி முக்கியமில்லை. ஆனா வாழ்க்கை முக்கியம்'' என்றாள் மேகா.

தலைகுனிந்து அமர்ந்திருந்தார் சக்கரவர்த்தி.

''என்னை மன்னிச்சிடும்மா. என்னோட சூழ்நிலை அப்படி. எனக்கு வேற வழி தெரியலை'' என்றவர் தன் நிலையை அழுகையினூடே புலம்பினார்.

விஷ்ணு உறைந்து போய் பார்த்துக் கொண்டிருந்தான்.

''அவ்வளவுதானே? உங்களை சிம்ப்பிளா ஒரே ஒரு கேள்வி கேக்கறேன். ஒரு காதல் ஜோடி பெற்றோர் எதிர்க்கறதால சேர்ந்து ஜோடியா தற்கொலை செஞ்சிக்கிட்டா என்ன சொல்விங்க? அதுக்கு பதிலா எங்கயாவது ஓடிப்போய் கண்காணாத தூரத்தில வாழ்ந்திருக்கலாமேன்னு சொல்விங்களா மாட்டிங்களா? அதையேத்தான் நானும் சொல்றேன். நாம எல்லோரும் இதே ஊர்ல இருந்தாதான் மானப் பிரச்சினை. வேற ஊர் போகலாம். ஓடிப்போக வேணாம். முறையா நம்ம எல்லாச் சொத்துக்களையும் வச்சி எல்லாப் பிரச்சினைகளையும் முடிச்சிட்டுப் போலாம். எங்களுக்காக நீங்க உழைச்சிட்டிங்க. உங்களுக்காக நாங்க உழைக்கத் தயாரா இருக்கோம்ப்பா. உங்களுக்கு ஒரு துறை கை கொடுத்தது. ஒரு நட்பு கை கொடுத்தது. எங்களுக்கும் ஒரு வழி கிடைக்கும். நம்பிக்கை இருக்குப்பா. முதல்ல வேலைக்குப் போறேன். அப்புறம் தொழில் ஆரம்பிக்கிறேன். உங்களை பழைய நிலைமைக்கு கொண்டு வர்றது என் பொறுப்பு! இந்தப் பைத்தியக்காரத்தனமான முடிவை மனசாலகூட நினைக்க மாட்டேன்னு எனக்கு நீங்க ப்ராமிஸ் பண்ணணும்'' என்றாள்.

தன் மகளை உணர்ச்சிப் பெருக்கில் அணைத்து அவள் நெற்றியில் முத்தமிட்டு, ''மகாபாவம் செய்ய இருந்தேன்ம்மா'' என்று தன் முகத்தில் அறைந்து கொண்டார்



சக்கரவர்த்தி. ''உன் கல்யாணத்தை எப்படி எல்லாம் நடத்திப் பார்க்க நினைச்சேன்.''

''அதை விடுங்கப்பா. நேத்திலேர்ந்து மூணு தடவை நான் செஞ்சும் வருணைப் பிடிக்க முடியலை. ஒரு தடவை இல்லைன்னு சொல்லுன்னு அவரே சன்னமா சொன்னது கேட்டது. என்மேல எதுவும் கோபமோன்னு புரியாம தவிச்சேன். இப்பத்தானேப் புரியுது. இந்தக் கல்யாணம் நின்னது என்னமோ சந்தோஷமாதான் இருக்கு. இப்ப என் லட்சியம் அது இல்லைப்பா!'' என்றாள்.

போனை எடுத்த வருண். ''ஹலோ வருண் ஸ்பீக்கிங்'' என்றான்.

''வருண், நான் மேகா பேசறேன். ராங் நம்பர்னு சொல்லி தப்பு பண்ணிடாதீங்க. நம்ம கல்யாணத்தைப் பத்தி என்ன முடிவு செஞ்சிங்க?''

''அது... அது... அதான் எங்கப்பா உங்கப்பா கிட்ட பேசிட்டாரே!''

''பேச வேண்டியது நீங்களும் நானும் இல்லையா வருண்?'

''ஐ'ம் ஸாரி மேகா! இப்படி எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும்னு நான் எதிர்பார்க்கவே இல்லை! நல்லவேளை! நாம எல்லை மீறாம ஃப்ரெண்ட்ஷிப் வெச்சிருந்தது சண்ட்டா பிரியறதுக்கு நல்லதாப் போச்சு!''

''ச்சீ! பேசாதே வருண்! நமக்குள்ளே இருந்தது ஃப்ரெண்ட்ஷிப்பா? எல்லை மீறி பழகலையா? எது எல்லை? மனசு எல்லை மீறலை? உடம்புல மீறப் பார்க்கலை? ஒரு நாளைக்கு பத்து தடவை 'ஐ லவ் யூ' சொல்லிக்கலை? இப்போ இப்படிப் பேச உனக்கு வெட்கமா இல்லை? உன் மனசாட்சி உறுத்தலை? என்னை 'ஜீ.போ.க.'ன்னு கிண்டல் செய்வியே. நான் ஜீன்ஸ் போட்ட கன்னியா இருந்ததுனாலதான் இப்போ இப்படி திமிராப்

பேசறே! இல்லை! தப்பு! அன்னிக்கு நான் உன்னை அனுமதிச்சிருந்தாலும் இப்படித்தான் பேசுவே! என்னிக்குமே உனக்கு மனசை விட மணிபர்ஸ்தான் முக்கியம்! கேவலம் பணத்துல நாங்க தாழ்ந்துட்டதால தூக்கி எறிஞ்சிட்டிங்களே... இந்த அவமானம்தான் என் லட்சியத்துக்கு எரு! வைடா போனை!''

வருண் வைத்துவிட்டு சிகரெட் பற்ற வைத்தான்.

சில மாதங்களுக்குப் பிறகு...

பெங்களூரில் அந்த வாடகை வீட்டில்...

வீட்டுக்குள் உற்சாகமாக நுழைந்த மேகா அப்பா, அம்மா, தம்பிக்கு சாக்லேட் டின்னைத் திறந்து நீட்டினாள்.

''அபூர்வா இண்ட்டீரியர் டெகரேட்டர்ஸ் கம்பெனில எனக்கு வேலை கிடைச்சிருக்கு. மூவாயிரம் சம்பளம். இதோ பாருங்கப்பா அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர்!'' என்றாள்.

சக்கரவர்த்தி அவள் கையைப் பற்றிக் குலுக்கினார்.

# இரவுகள் கனவுக்காக...



அதிகாலை 5.30க்கு சென்ட்ரல் ரயில் நிலையத்தின் வாடின மலர்களாக பயணம் முடித்தவர்கள் ரயில்களிலிருந்து இறங்கி லக்கேஜ் எண்ணிக் கொண்டிருக்க, பது மலர்களாக பயணம் துவக்குபவர்கள் ரயில்களில் லக்கேஜ் அடுக்கிக் கொண்டிருந்தார்கள்.

வானத்தில் விடியலுக்கான ஆயத்தங்கள் இருந்தன. முன்னிரவு மழையின் தடயங்கள் தரையிலும், காற்றிலும் தென்பட்டன. சக்கர வண்டிகளில் இட்லி, வடை, மினரல் வாட்டர், காலை பத்திரிகைகள் விற்றுக் கொண்டிருக்க, உயரத் தொலைக்காட்சிப் பெட்டிகளில் வாஷிங் பவுடருக்கு விளம்பரம் கூவியது.

ஜெகன் தோளில் லெதர்பேக், கையில் சூட்கேஸ் சகிதம் கலைந்த தலையுடன் நடந்து வந்து காகிதக் கோப்பையில் தன் காபி அருந்தி முதல் பருகலில் நாக்கைச் சுட்டுக் கொண்டான்.

தொங்கின செய்தித்தாள்களில் பில் போஸ்டர்களில் தலைப்புச் செய்திகளை வாசித்தான்.

ஜெயின் கமிஷன் அறிக்கை குறித்து தமிழக முதல்வர் சிறப்புப் பேட்டி - உ.பி.யில் தற்போதைய

அரசியல் நிலவரம் - வீரப்பனைப் பிடித்தே தீருவேன் - போலீஸ் உயர்திகாரி ஆவேசப் பேட்டி - படைப்பாளிகள் சங்கத்துடன் சமரசமா? - மீண்டும் ஒரு போலிச் சாமியார் கைது - மழை வெள்ளத்தால் ஒரே குடும்பத்தில் 7 பேர் பலி, தீபாவளி படங்கள் - ஒரு பார்வை.

ஜெகன் ஏராளமான நாற்காலிகளில் ஒரு காலி நாற்காலி தேடிச் சென்று அமர்ந்து கால்களுக்கிடையில் சூட்கேசையும், பேகையும் வைத்துக் கொண்டான்.

சிகரெட் எடுத்துப் பற்ற வைத்தான். பக்கத்துப் பெரியவர் இருமியதும் புகையை மாற்று திசையில் ஊதினான். நேரம் பார்த்தான்.

இங்கேயிருந்து பத்து நிமிடத்தில் சிவாவின் அறைக்குச் சென்று விடலாம். சிவா ஏழு மணிக்கு முன்பாக எழுந்திருக்க மாட்டான். இப்போது புறப்பட்டுப் போய் நின்றால் அநியாயத்திற்கு அவனுடைய ஒரு மணி நேரத் தூக்கம் கெட்டுப் போய்விடும்.

ஒரு மணி நேரம் இங்கேயே உட்கார்ந்து விட்டுப் பிறகு அவன் அறைக்குப் போகலாம். அது வரை?

தன் பேகிலிருந்து பாதி படித்து வைத்திருந்த ஆங்கிலப் புத்தகத்தைக் கையில் எடுத்தான். விண்ட்சன் சர்ச்சிலின் வாழ்க்கை வரலாறு!

சில பக்கங்கள் படித்ததும் மனம் ஒத்துழைக்கவில்லை.

நேற்று இரவு ரயில் ஏறியதிலிருந்து மனசாட்சியின் சுட்டு விரல் ஒன்று 'நீ செய்தது சரிதானா?' என்று கேள்வி கேட்டுக் கொண்டேயிருக்கிறது.

வாழ்க்கை என்பதே நம்பிக்கையின் அடிப்படையில்தான். இன்னும் ஒரு நாள் கண்டிப்பாக நாம் உயிருடன் இருப்போம் என்கிற நம்பிக்கையில்தான் நாளைக்கும் சேர்த்து காய்கறி வாங்குகிறோம். இன்னும் ஒரு வருடம் நாம் இருப்போம் என்கிற நம்பிக்கையில்தான் அடுத்த வருடம்



உடைகிற மாதிரி கட்டடம் கட்டுகிறோம். இன்னும் பத்து வருடம் நாம் இருப்போம் என்கிற நம்பிக்கையில்தான் மூன்றாண்டு ஃபிக்ஸட் டெபாசிட் கணக்கில் பணம் போடுகிறோம்.

அப்படியிருக்க ஜோதிராமன் என் மேல் நம்பிக்கை இல்லாமல் எப்படி அந்தக் கேள்வியைக் கேட்கலாம்?

இவனிடம் நான் போய் வேலை கொடு என்று கெஞ்சினேனா?

"ஜெகன், படிச்சுட்டு சும்மாத்தானே இருக்கே? இப்போ நான் மூணு பேருக்கு வீடு கட்டிக் கொடுத்திட்டு இருக்கேன். ப்ராஜெக்ட் சூபர்வைசரா என்கூட சேர்ந்து வேலை பாரேன். உனக்கும் ஒரு அனுபவமா இருக்கும். ஆயிரத்தைந்நூறு தர்றேன்.''

அழைத்தது யார்? நீ தானே? என் படிப்புக்கேற்ற, தகுதிக்கேற்ற ஐந்தாயிரத்துக்கும் அதிகமாக சம்பளம் தருகிற பல வேலைகளுக்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தபோது, நேரத்தை செலவு செய்ய வேண்டாமே என்று நினைத்துத்தானே உன்னிடம் சேர்ந்தேன்.

உன்னோடு படித்தவன் என்கிற உரிமை, நட்பு வேண்டாம், ஆனால் மனித நேயம் வேண்டாம்?

தொழிலாளர்கள் முன்னிலையில் எத்தனை விதமான எத்தனை தடவை என்னைத் திட்டியிருக்கிறாய், நினைத்துப் பார்!

"என்ன ஜெகன், அறிவுகெட்டத்தனமா இப்படிப் பண்ணி வெச்சிருக்கே? படிச்சவன்தானே நீ? ராம் நகர்ல உள்ள சைட்ல இருக்க வேண்டிய லோடை சாய்பாபா காலனிக்கு அனுப்பி வெச்சிருக்கே... உனக்கு என்ன காது செவுடா?''

"காலைல எட்டு மணிக்கு சைட்ல இருக்கச் சொன்னா பத்தரை மணிக்கு வர்றியே... ராத்திரி சினிமா போனியா? இல்லை பீரா? இல்லை வேற பழக்கம் வெச்சிருக்கியா?''

''ஒரு சின்ன டோட்டல் மிஸ்டேக்தானேன்னு சாதாரணமாச் சொல்றியே... உன் காசா இருந்தாதான் உனக்கு வலி தெரியும்.''

அத்தனைத் திட்டுக்களையும் நான் பொறுமையோடு புன்னகையோடு ஏற்றுக் கொண்டேன். ஏன் தெரியுமா? நான் கற்றுக்குட்டி. நீ வித்தைக்காரன். எனக்குத் தெரியாத தொழில். பழகாத வார்த்தைகள். புரியாத விஷயங்கள். பயிற்சி காலத்தில் தவறுகள் சகஜம். நீ இயல்பிலேயே கோபக்காரன் என்பதும் தெரியும்.

நானும் கோபக்காரன்தான். உன்னைவிடப் பெரிய கோபக்காரன். ஆனால் என் கோபங்களுக்கு அழுத்தமான காரணம் இருக்கும். உன்னைப்போல அர்த்தமில்லாத அற்பத்தனமான விஷயங்களுக்கு நான் கோபப்படுவதில்லை.

நேற்று கோபப்பட்டதும் அழுத்தமான காரணத்திற்காகத்தான்.

என்ன கேள்வி கேட்டாய் நீ?

''ஜெகன், நான் நேத்து காலைல செக் செஞ்சப்ப நாப்பத்தெட்டு மூட்டை சிமெண்ட் இருந்திச்சே. நேத்து வேலைக்கு பதினெட்டு மூட்டை எடுத்திருக்காங்க. பாக்கி முப்பது மூட்டை இருக்கணுமே. இருபத்தஞ்சு மூட்டைதான் இருக்குன்னு சொன்னா எப்படி? அஞ்சு மூட்டை எங்கே போச்சு?''

''அதான் எனக்குப் புரியலை.''

''மேஸ்திரி என்னோட பத்து வருஷமா வேலை பார்க்கறான். ஸ்டோர் ரூம் சாவி உன்கிட்டதான் இருக்கு. அஞ்சி மூட்டை சிமெண்ட் கால் முளைச்சி நடந்து போயிடுச்சா? அப்படிப் போறதுக்கும் கதவு திறந்திருக்கணுமே... இல்லை காத்துல கரைஞ்சி போறதுக்கு அதென்ன கற்பூரமா?''



இந்தக் கேள்விக்கு என்ன பொருள்?

என்னை நேரடியாக சந்தேகப் படுவதாகத்தானே அர்த்தம்? வேறு ஏதாவது கணக்கில் தவறு இருக்கலாம் என்று யோசிக்க நீ தயாராக இல்லை. பிறகு மேஸ்திரி வந்து அன்றைய வேலைக்கு எடுத்தது பதினெட்டு மூட்டை இல்லை, இருபத்தி மூன்று மூட்டை என்று விளக்கம் சொன்னதும், நீ என்னிடம் ஒரு ஸாரியாவது சொன்னாயா?

என்னைத் திட்டினால் பொறுத்துக் கொள்வேன் - என் மீது தவறு இருக்கும் பட்சத்தில். ஆனால் என்னை சந்தேகப் பட்டுவிட்டால் மட்டும் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது.

அதனால் நான்கு வரிகளில் கடிதம் எழுதி வைத்துவிட்டு நான் புறப்பட்டு வந்தது சரிதான்.

முடிந்த சிகரெட்டை சுண்டப் போன ஜெகன் எழுந்துச் சென்று குப்பைத் தொட்டியில் போட்டான். மறுபடி வந்து உட்கார்ந்து கொண்டான்.

[illegible] அதிக நாட்கள் சிரமம் கொடுக்கக் கூடாது. ஒரு மாதத்திற்கு மேல் அவனோடு தங்கக்கூடாது. அதற்குள் வேலை தேடிக் கொண்டு தனியாக ஒரு அறை பார்த்து [illegible] விட வேண்டும்.

முடியுமா? முடிய வேண்டும். பார்க்கலாம்.

தாமதமாக வந்து கொண்டிருக்கிற ரயில்களைப் பற்றியும், இன்னும் சில நிமிடங்களில் புறப்படப் போகிற ரயில்களைப் பற்றியும் தமிழ், ஹிந்தி, ஆங்கிலத்தில் அறிவிப்புக்கள் வந்து கொண்டிருந்தன.

எழுந்து கொண்டான். இப்போது புறப்பட்டால் சரியாக இருக்கும்.

செண்ட்ரலுக்கு வெளியே வந்தான்.

ஆட்டோக்காரர்களும், டாக்ஸிக்காரர்களும் விசாரித்தார்கள். ஜெகன் யோசித்துக் கொண்டிருக்கும்போது அருகிலிருந்த ஒருவர் கோபமாகக் கத்திக் கொண்டிருந்தார்.

''என்னய்யா அநியாயமா இருக்கு? மீட்டரைப் போட மாட்டேன்னு சொல்றே. சரி, கேக்கற தொகையாவது நியாயமா இருக்க வேணாமா? நான் ஒத்தையாள். லக்கேஜும் எதுவும் இல்லை. இங்க இருக்கிற மைலாப்பூருக்கு போறதுக்கு அறுபது ரூபா கேக்கறியே...''

அந்த ஆட்டோக்காரன் அவரை மதிப்பதாக இல்லை.

''இத பாருங்க, இஷ்டம்ன்னா வாங்க. இல்லைன்னா நகருங்க. சும்மா கூவுற வேலையெல்லாம் வேணாம்.''

அவருக்கு ஐம்பது வயது இருக்கலாம். பஞ்ச கச்சமாக வேஷ்டி கட்டியிருந்தார். வெள்ளை முழுக்கைச் சட்டை. தலையில் கொஞ்சம் குடுமி. காதுகளில் கடுக்கன்கள். கழுத்தில் ருத்ராட்சக் கொட்டையுடன் கூடிய ஒரு கயிறு. நெற்றியில் பட்டையாக விபூதி. நடுவில் குங்குமப் பொட்டு.

''எக்ஸ்க்யூஸ் மி சார், இப்படி வாங்க'' என்று ஜெகன் அழைத்ததும் அவர் ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தார். அருகில் வந்தார்.

''என்ன?''

''மைலாப்பூருக்கு அவன் எவ்வளவுக்குன்னு வந்தா நீங்க போவீங்க?''

''நாப்பது ரூபான்னாகூட கொடுத்து ஒழியலாம். அதுவே அதிகம்.''

''சரி, நானும் மைலாப்பூருக்குத்தான் போகணும். முப்பது ரூபா நான் உங்களுக்குக் கொடுத்துடறேன். உங்களுக்கும் மிச்சம். எனக்கும் மிச்சம். என்ன சொல்றீங்க? ரெண்டு பேரும் ஒரே ஆட்டோல போயிடலாமா?''

''இது நல்ல யோசனையா இருக்கே. இப்படி அநியாயமா கேக்கறவனை எல்லாம் இந்த மாதிரிதான் பழி வாங்கணும். வாங்க போலாம்.''

இருவருமாக ஆட்டோவை நெருங்கினார்கள்.



''சரிப்பா. இவரு என் ஃபிரண்டு இவரும் வர்றார். [illegible]ப்படி.''

ஆட்டோக்காரனால் எதுவும் பேச முடியவில்லை.

இருவரும் ஏறிக் கொண்டார்கள்.

ஆட்டோ ஓடத் துவங்கியதும் ஜெகன் ஒரு சிகரெட்டைக் கையில் எடுத்தான். அருகில் அவர் அதை கவனித்து லேசாக முகம் சுளித்ததும்... ''ஸாரி சார்'' என்று மறுபடி பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

''எந்த ஊர் தம்பி உங்களுக்கு?''

''கோயமுத்தூர் சார்.''

''நான்கூட இப்ப கோயமுத்தூர்லேர்ந்துதான் வர்றேன்.''

''அப்படியா? நீங்க என்ன பண்றீங்க சார்?''

''என் பேரு வேங்கட கிருஷ்ணன். ஆனா அப்படிச் சொன்னா அக்ரஹாரத்துல யாருக்கும் புரியாது. வெங்கின்னு பேரைச் சுருக்கிட்டாங்க. கல்யாணத்துக்கு புரோகிதம் பண்றது, ஜாதகம் கணிக்கிறது நம்ம தொழில். சொந்த வீடு, போன்னு வசதியா இருக்கேன். ஏழு பேரு [illegible] அசிஸ்டெண்ட்ஸ் இருக்காங்க. திவசம், [illegible]ன்னா அவங்களை அனுப்பிச்சுடுவேன். கல்யாணம், [illegible] ஹோமம், புண்ணியாஜனம் இந்த மாதிரி நல்ல [illegible]களுக்கு மட்டும்தான் போறது. எனக்கு ஸ்பைனல் [illegible] ஒரு பிராப்ளம். மூணு வருஷம் முன்னாடி ஆபரேஷன் பண்ணிக்கிட்டேன். அதனால அதிகம் பயணம் [illegible]க்கறதில்லை. கோவையில என் பெரிய பொண்ணைக் கட்டிக் கொடுத்திருக்கேன். மாப்பிள்ளை புதுசா வீடு கட்டினார். அதுக்கு மனை பூஜை நடத்தினார். அதுல கலந்துக்கிட்டு திரும்பி வர்றேன். நீங்க கோயமுத்தூர்ல என்ன பண்றீங்க?''

''ஒரு கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனில சூபர்வைசரா வேலை பார்த்துட்டு இருந்தேன். இனிமே மெட்ராஸ்லதான் தங்கப் போறேன்.''

''இங்க வேலை கிடைச்சிடுச்சா?''

''இனிமேதான் தேடிக்கணும். நான் பிஃபார்ம் படிச்சிருக்கேன். நிறைய ஸ்கோப் இருக்கு.''

''பார்த்த வேலையை எதுக்காக விட்டீங்க?''

ஜெகன் சில விநாடிகள் மௌனம் சாதித்தான்.

''சங்கடமான கேள்வியைக் கேட்டுட்டேனா? மன்னிச்சுடுங்க.''

''இல்லை சார். யாரும் சகஜமா கேக்கறதுதானே? கொஞ்ச நேரத்துல பிரிஞ்சிப் போறோம்னாலும் உங்ககிட்ட உண்மை சொல்ல விரும்பறேன். அது என் ஃபிரெண்டோட கம்பெனிதான். என்னை ரொம்ப இன்சல்ட் செஞ்சான். அதெல்லாம் பொறுத்துக்கிட்டேன். கடைசில என்னை சந்தேகப் பட்டுட்டான் சார். அதை என்னால தாங்க முடியலை. என்னதான் வேலை முக்கியம்னாலும் அதைவிட தன்மானம் முக்கியம் சார், இல்லையா?''

''ரொம்ப சரி! அது இல்லைன்னா செத்தப் பொணத்துக்குச் சமம் தம்பி. நான்கூட இதே மாதிரிதான். நம்மளை ஒருத்தன் மதிக்கலைன்னு தெரிஞ்சா அவன் எவ்வளவு பெரிய மனுஷனா இருந்தாலும் நான் மதிக்க மாட்டேன். இப்படித்தான் ஒரு எம்.எல்.ஏ. வீட்டு ஃபங்க்ஷனுக்குப் போயிருந்தேன். நிச்சயதார்த்தம் நடந்துட்டு இருக்கு. என்னை ஒரு சின்ன விஷயத்துக்குக் கேவலமாப் பேசிட்டார். மறுநாள் முகூர்த்தம். நீ யாரையாவது வெச்சி கல்யாணத்தை நடத்திக்கோன்னு புறப்பட்டு வந்துட்டேன்.''

''அய்யோ! அப்புறம்? கல்யாணம் என்ன ஆச்சு?''

''ஊர்ல அய்யருக்கா பஞ்சம்? வேற ஒருத்தரை வெச்சி கல்யாணம் நடத்திட்டாரு.''

''உங்களை ஆள் விட்டு மிரட்டலையா?''

''மிரட்டினாரு. நேர்ல வந்து மன்னிப்புக் கேக்கணும்னு சொல்லி விட்டாரு. நான் வர முடியாதுன்னு சொல்



[illegible]டேன். கடவுள் ஒருத்தருக்கு மட்டும்தான் பயப்படணும் தவிர. எனக்குக் கோபம் வந்திச்சின்னா பின் விளைவுகளைப் பத்தியெல்லாம் யோசிச்சிட்டிருக்க மாட்டேன்.''

''நியாயமான காரணத்துக்குக் கோபப்படலாம் சார். கோபமும் ஒரு உணர்ச்சிதானே? கட்டுப்படுத்தி வைக்கிற எந்த உணர்ச்சியும் நல்லதில்லை. பாசமா இருந்தாலும், கோபமா இருந்தாலும் வெளிப்படுத்திட்டா மனசு காலி ஆயிடும்.''

''நல்லா பேசறீங்க. உங்க பேர் சொல்லலையே...''

''ஜெகன் சார்.''

''மைலாப்பூர்ல யார் இருக்கா? எங்க தங்கப் போறீங்க?''

''என் ஃபிரண்டு ஒருத்தன் இருக்கான். அவன் ரூம்லதான் கொஞ்ச நாளைக்கு தங்கப் போறேன்.''

''நான்கூட என் வீட்டு மாடில ஒரு ரூமை வாடகைக்குதான் விட்டிருக்கேன். நாங்க புழங்கறதில்லை. எதுக்கு சும்மா பூட்டி வைக்கணும்னு விட்டிருக்கேன். நல்ல டெனண்ட் அமைஞ்சிருக்கார். ரயில்வேல டிக்கெட்ஸ் இஷ்யூ பண்ற கம்ப்யூட்டர் செக்ஷன்ல வேலை பார்க்கறார். அதுவும் எனக்கு ரொம்ப சௌகரியமாப் போச்சு. வீட்டுக்கே [illegible] டிக்கெட்.''

''சார், மைலாப்பூர்ல எந்த தெரு?''

''பரமேஸ்வரன் தெரு.''

''சார், அவன் பேரு சிவாவா?''

''அட! ஆமாம் எப்படி கரெக்டா சொல்றீங்க?''

''சார், நான் அவன் ரூம்லதான் தங்கப் போறேன்.''

''சரியாப் போச்சுப் போங்க! கடைசில என் வீட்டுக்குத்தான் நீங்களும் வர்றீங்களா? ஒரே ஆட்டோல ஏறினது [illegible]. எப்படியும் அறிமுகம் ஆகித்தான் இருப்போம். [illegible] எடுப்புலயே அறிமுகமாயிட்டோம் பாருங்க.''

''ரொம்ப ஆச்சரியமா இருக்கு சார். நான் அவனோட தங்கறதுக்கு சிவா சம்மதிச்சாலும் வீட்டு ஓனர் சம்மதிப்பாரோ என்னவோன்னு எனக்குள்ளே ஒரு உதைப்பு இருந்திச்சி. நீங்க ரொம்ப நல்ல டைப்பா தெரியறிங்க.''

''தாராளமா தங்கிக்கங்க தம்பி. மனுஷனுக்கு மனுஷன் சின்னச் சின்ன உதவிகள் செய்துக்கலைன்னா அப்புறம் மனுஷத் தன்மையே இல்லாமப் போயிடும்.''

வெங்கி அய்யர் ஆட்டோக்காரனிடம் தன் தெருவுக்கு வழி சொன்னார்.

சில நிமிடங்களில் பூவரசு மரம் வாசலில் நின்ற ஒரு பழைய டைப் வீட்டின் முன்பாக ஆட்டோ நின்றது.

''இருக்கட்டும் சார், பரவால்லை. நானே கொடுத்தர் இருக்கட்டும்.''

''அது தப்பு. எனக்கு உள்ளுக்குள்ளே உறுத்திக்கிட்டே இருக்கும். இந்தாங்க, முப்பது ரூபா. எப்பவுமே பண விஷயம் தனியா இருக்கணும். பழக்கம் தனியா இருக்கணும்.''

''சரி, கொடுங்க.''

''அப்புறம் பார்க்கலாம். சாவகாசமாய்ப் பேசலாம். மாடில் சிவா அநேகமா இன்னும் எழுந்திரிச்சிருக்க மாட்டார். போங்க.''

வீட்டின் வாசலுக்கு அருகிலேயே தனியாகப் புறப்பட்டன மாடிப்படிகள். வெங்கி அய்யர் தன் வீட்டின் அழைப்பு மணியின் பித்தானை அழுத்திவிட்டு ''சரஸ்வதி!'' என்ற குரலும் கொடுக்க. ஜெகன் மாடிப்படிகளில் ஏறினான்.

2



''நான் இங்க கொஞ்ச நாள் தங்கறதில உனக்கு ஏதாச்சும் தர்ம சங்கடம் இருந்தா வெளிப்படையா சொல்லிடு சிவா. நான் வேற ஏற்பாடு செஞ்சிக்க முடியும்'' என்றான் ஜெகன் தன் ஈரத் தலையைத் துவட்டியபடி.



கால்களில் ஸாக்ஸ் அணிந்து கொண்டிருந்த சிவா அவனை நிமிர்ந்து பார்த்தான்.

''என்னடா இப்படி அர்த்தம் கெட்டத்தனமா கேள்வி கேக்கறே? இதில எனக்கு என்ன தர்ம சங்கடம்? வெங்கி அய்யரைத்தான் வந்து இறங்கினதுமே ஃபிரெண்டு பிடிச்சிட்டியே. அப்ஜெக்ட் செஞ்சா அவர்தான் செய்யணும். அவரேதான் ஓகே சொல்லிட்டாரே...''

''அது இல்லை சிவா! உனக்கு எப்படியும் பிரைவசி பாதிக்குமே.''

''உளறாதே! எனக்குக் காலைல எட்டுலேர்ந்து நாலு மணி வரைக்கும் டூட்டி. அஞ்சி மணிக்கெல்லாம் ரூமுக்கு வந்துட்டு பொழுதை எப்படி ஓட்டறதுன்னு புரியாம தவிச்சிட்டிருப்பேன். எவ்வளவு நேரம்தான் டி.வி. பார்க்கறது? எவ்வளவு நேரம்தான் புக்ஸ் படிக்கிறது? எல்லாமே போரடிக்கும். அதனால எங்கயாச்சும் கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம், பாட்டுக் கச்சேரின்னு புரோக்ராம் இருக்குதான்னு பேப்பர்ல பார்த்து அங்க போய் உக்காந்துடுவேன். ஒம்போது மணிக்குத்தான் வருவேன். படுத்துத் தூங்கறதுக்கும், குளிக்கிறதுக்கும்தான் எனக்கும் ரூம் தேவைப்படுது. பேச்சுத் துணைக்குக்கூட ஆளில்லாம தவிச்சிட்டிருக்கிறப்ப நீ வந்து சேர்ந்திருக்கியேன்னு சந்தோஷப்பட்டுக்கிட்டிருக்கேன். தர்ம சங்கடமான்னு இன்னொரு தடவை கேட்டு வெறுப்பேத்தாதே. புரிஞ்சுதா?''

''ரைட்டு. கேக்கலை. இன்னைக்கு எந்த கவியரங்கம் போறே?''

''நீ வந்திருக்கிறப்ப நான் ஏன் கவியரங்கம் போறேன். டூட்டி முடிஞ்சதும் நேரா வந்துடுவேன் ஜெகன். உன் ப்ரோக்ராம் என்ன?''

''நத்திங். மூணு நாலு சட்டை, பேண்ட் துவைக்கணும். அப்புறம் கொஞ்சம் தூங்கணும். நாளையிலேர்ந்து என்ன செய்யலாம்னு உரக்கச் சிந்திக்கணும். தட்ஸ் ஆல்.''

''உன் கோபம் நியாயமானதா இருந்தாலும் ஜோதிராமன் கிட்ட நீ நேரடியா சொல்லிட்டு வந்திருக்கலாம் ஜெகன். அதான் நாகரீகம்.''

''புரியுது சிவா! ஆனா அவன் போக விடமாட்டானே. அவன் பேசியே மனசை மாத்திடுவான். விலகிடணும்னு எண்ணம் எப்பவோ வந்திடுச்சி. சந்தேகப்பட்ட விஷயம் என்னை ஸ்ட்ராங்கா தீர்மானிக்க வெச்சிடுச்சி.''

''சரி, விடு! எவ்வளவு பெரிய சிட்டி இது. உனக்கு சீக்கிரத்துல வேலை கிடைச்சிடும். நானும் சொல்லி வைக்கிறேன் பல பேர் கிட்ட. நான் புறப்படட்டுமா?'

''சரி, நீ ஏன் உன் குடும்பத்தை மெட்ராசுக்குக் கொண்டு வராம இருக்கே?''

''அவளுக்கு செங்கல்பட்டுல ஒரு ஸ்கூல்ல வேலை கிடைச்சிருக்கு ஜெகன். ஆயிரத்தைந்நூறு கொடுக்கறாங்க. அந்த வேலையை விடறதுக்கு அவளுக்கும் யோசனையா இருக்கு. எனக்கும் யோசனையா இருக்கு. இங்க இருக்கிற செங்கல்பட்டுதானே... வாரா வாரம் நான் போய்ட்டு வந்துடறேன். ஒண்ணும் பிரச்சினையா இல்லை.''

''என்ன இருந்தாலும் வைஃபோட, குழந்தையோட சேர்ந்து இருக்கிறது எப்படி? இப்படி பிரிஞ்சிருக்கிறது எப்படி?''

''எனக்கு செங்கல்பட்டுக்கு டிரான்ஸ்பர் கிடைக்கு மான்னு ஒரு பக்கம் முயற்சி பண்ணிக்கிட்டுதான் இருக்கேன். பார்க்கலாம். இதே தெருவுல ஒரு சந்துல அன்னை மெஸ்ன்னு இருக்கு. டிபன், சாப்பாடு எல்லாம் டேஸ்ட்டா இருக்கும். ரேட்டும் நியாயமா இருக்கும். நான் அங்கதான் சாப்பிடுவேன். நீயும் அங்கேயே சாப்பிட்டுக் கலாம் ஜெகன்.''

''ஓ.கே. இன்னைக்கு மட்டும் அங்க சாப்பிட்டுக் கறேன்.''



''அப்ப நாளைக்கு?''

''உனக்கும் சேர்த்து நானே சமைக்கிறேன் சிவா.''

''உனக்கு சமைக்கத் தெரியுமா?''

''என் சமையலை சாப்பிட்டுப் பாரு. அப்புறம் சொல்லு. [illegible] நீ வெச்சிருக்கே. ரெண்டு, மூணு பாத்திரம் வாங்கிட்டாப் போதும்.''

''எதுக்குடா உனக்கு இந்த வேண்டாத வேலை?''

''ஏன் வேண்டாத வேலைன்னு சொல்றே? காலையில பூந்தோட்டத்துக்கு தண்ணி ஊத்த மாட்டாங்களா? [illegible]றதில்லையா? அந்த மாதிரிதானே இதுவும். நம்ம ரெண்டு பேருக்கு சமைக்க அதிக பட்சம் அரை மணி நேரம் போதும். நம்ம சௌகரியத்துக்குத்தானே எல்லா அயிட்டமும் ரெடிமிக்ஸா விக்கிறாங்க? ரெண்டு நாள் என் சமையலை சாப்பிட்டுப் பாரு. உனக்குப் பிடிக்கலைன்னா [illegible]சில கண்டினியூ பண்ணிக்க.''

''உனக்கும் வேலை கிடைச்சிட்டா அப்புறம் நேரம் கிடைக்காதுடா.''

''எப்படியும் நேரம் ஒதுக்கலாம் ஜெகன். நேரம் இல்லைன்னு சொல்றவங்க யாரு தெரியுமா?''

''யாரு?''

''நேரத்தை சரியா ப்ளான் பண்ணத் தெரியாதவங்க. திட்டம் போட்டுக்கிட்டு எதை செஞ்சாலும் சீக்கிரம் செய்யலாம். எந்தத் திட்டமும் இல்லாம செய்றவங்க அஞ்சி நிமிஷத்துல செய்ய வேண்டிய வேலையை அரை மணி நேரம் செய்வாங்க. குளிக்கிறதுல கூட ஒரு பிளான் வேணும் சிவா.''

''குளிக்கிறதுல என்ன திட்டம் இருக்கு?''

''இருக்கு. குளிக்கப் போறதுக்கு முன்னாடி டவல், சோப்பு, டூத் பிரஷ் அப்புறம் போட்டுக்கப் போற பனியன்,

ஜட்டி இதையெல்லாம் ஆர்கனைஸ் பண்ணி எடுத்துட்டுப் போய் குளிச்சிப் பாரு. குளிக்கிற நேரம் பத்து நிமிஷம்தான் ஆகும். ஒவ்வொண்ணுக்கும் தேடி அலைஞ்சி, டென்ஷனாகி சொதப்பினா இருபது நிமிஷம் ஆகும்.''

''யப்பா! உன்கிட்ட நிறைய கத்துக்கணும். வர்றேன். கதவை மூடிக்கோ.''

''இங்க திருட்டு பயம் இருக்கா?''

''திருட்டு பயம் இல்லை. குரங்கு பயம் இருக்கு.''

''குரங்கு பயமா?''

''ஆமாம். ஏழெட்டு குரங்குங்க அப்பப்ப வருது. அதனாலதான் ஜன்னலுக்கெல்லாம் வலை அடிச்சாங்க. வரட்டுமா?''

சிவா புறப்பட்டுப் போனதும் கதவை மூடி விட்டு தலை சீவி, பவுடர் அடித்துக் கொண்டான். கட்டிலில் முதுகுக்கு இரண்டு தலையணைகள் கொடுத்து சாய்ந்து கொண்டு பயணத்தில் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை எடுத்தான்.

காற்றில் ஒரு ஜன்னலின் கதவு படாரென்று அறைந்து மூடிக் கொண்டது. அதைத் திறந்து கொக்கிப் போட்டான். ஜன்னல் வழியாக சிறிய செவ்வக மொட்டை மாடி தெரிந்தது.

தன் அறைக்கு வெளியே வந்து சிறிய நடைபாதையில் நடந்து அந்த மொட்டை மாடிக்கு வந்தான். உள்ளங்கால்களில் சிலீர் என்று குளிர்ச்சி. சிவப்புச் சதுர டைல்ஸ் ஈரம் காயாமல் இருந்தது. கறுப்பு சின்டெக்ஸ் டேங்க் ஒரு ஓரமாக இருக்க, அதன் மேல் உட்கார்ந்திருந்த ஒரு குட்டிக் குரங்கு மிரண்டு அடுத்த மாடிக்குத் தாவியது.

இரண்டு டி.வி. ஆண்ட்டெனாக்களில் காக்கைகள் அமர்ந்திருந்தன. மொட்டை மாடியின் இரண்டு விளிம்புகளிலும் இரும்புக் கம்பம் நட்டு குறுக்கில் நைலான்



கயிறுகள் கொடிகளாகக் கட்டப்பட்டு அதில் கிளிப் வைத்த புடவைகள், வேட்டிகள், துண்டுகள் என்று காய்ந்து கொண்டிருந்தன.

அதிக உயரமற்ற குழந்தைகளை அனுமதிக்க முடியாத கைப்பிடிச் சுவரில் அங்கங்கே வெடிப்புகள் இருந்தன. ஒரு பக்கத்திலிருந்து வீட்டின் வாசல் சாலை தெரிந்தது. சக்கர வண்டியில் வாழைப் பழங்கள் வைத்து ஒருவன் தள்ளிச் சென்றான்.

கைப்பிடிச் சுவர் ஓரமாகவே ஜெகன் நடக்க... மற்றொரு பக்கம் வீட்டின் பின் பகுதியில் வாழை மரங்களும், கொய்யா மரமும், ஒரே ஒரு தென்னை மரமும் தெரிந்தன. நந்தியா வட்டைச் செடிகளில் பறிக்கத் தவறின, கைக்கெட்டாமல் தப்பித்துக் கொண்ட வெள்ளை மலர்கள் செடிகளின் உச்சந்தலைகளை அலங்கரித்துக் கொண்டிருந்தன. சற்றுத் தள்ளி ஓடு வேய்ந்த ஒரு தொழுவத்தில் பசு மாடு ஒன்று கட்டப்பட்டிருந்தது.

பசுமாடு தன் வாலை சுழற்றி மொய்க்கின்ற ஈக்களை ஓட்டும் போதெல்லாம் அதன் கழுத்தில் கட்டின மணி ஒலிக்க... அதை ரசித்துக் கொண்டு நின்றிருந்தபோது தன் மேல் முதல் மழைத்துளியை உணர்ந்தான் ஜெகன்.

''மழை வர்ற மாதிரி இருக்கு. மொட்டை மாடியில காயப் போட்டிருக்கிற துணியெல்லாம் எடுத்துட்டு வந்துடு.''

கீழ் வீட்டிலிருந்து இந்தக் குரல் கேட்டுக் கொண்டிருக்கும் போதே படபடவென்று பெரிய தூறல்களாக விழத் துவங்க...

ஜெகன் அவசர அவசரமாக அங்கே காய்ந்து கொண்டிருந்த துணிகளை உருவி கைகளில் அள்ளிக் கொண்டு முழுக்க நனைவதற்கு முன்பு ஓட்டமாக தன் அறைக்கு வந்தான்.

அதே சமயம் மாடிப் படிகளில் கொலுசுக் கால்கள் விரைவாகப் படியேறி வர... ஜெகன் எட்டிப் பார்த்தான்.

தாவணியின் தலைப்பை முக்காடாக தலையில் போட்டபடி ஏறி வந்த அவளை, ''ஹலோ! துணியெல்லாம் எடுத்துட்டேன். இங்க இருக்குங்க'' என்று குரல் கொடுத்தான்.

அவள் அறைக்குள் பாதி நனைந்து விட்ட நிலையில் அந்த அறைக்கு வந்து மிதியடிகளில் கால்களைத் துடைத்தாள்.

''பாவம்... நீங்க எதுக்கு சிரமம் எடுத்துக்கிட்டீங்க?'' என்றாள் நாற்காலிமேல் குவியலாகப் போடப்பட்டிருந்த துணிகளிடம் வந்தபடி.

''பரவால்லைங்க. இது என்ன பெரிய சிரமம்? இல்லைன்னா இந்நேரம் முழுக்க நனைஞ்சிப் போயிருக்கும்.''

மழை இன்னும் வேகம் கூட்டிக்கொள்ள... ஜன்னல் வழியாக சாரல் கட்டிலை நனைக்கத் துவங்க... ஜன்னலின் இரண்டு கதவுகளையும் இழுத்து மூடினான் ஜெகன். அறை இருட்டாகி விடவே டியூப் லைட்டைப் போடும் முயற்சியில் ஒவ்வொரு சுவிட்சாகப் போட்டுப் பார்க்க.

''மூணாவது சுவிட்சுங்க'' என்றாள்.

சுவிட்சைப் போட்டு விட்டு அவளைப் பார்த்தான்.

மௌனமாக அவள் ஒவ்வொரு துணியாக மடிக்கத் துவங்க... அவளின் எளிமையான தோற்றத்தில் இருந்த ஒரு வசீகரம் ஜெகன் மனதில் இதமாக இறங்கியது. கூந்தலில் சில மழைத் துளிகள் உருண்டன. மூக்குத்தி அவள் அசைவில் மின்னியது. மடிக்கும்போது வளையல்கள் சங்கீதம் பாடின. விரல்களின் முனைகளில் மருதாணிச் சிவப்பு விரல்களுக்குக் கவர்ச்சி சேர்த்திருந்தது.

ஏதாவது பேசலாமா என்று தோன்றியது.

எல்லாத் துணிகளையும் மடித்து எடுத்து விட்ட அவள் வாசலில் தீவிரமாகப் பெய்யும் மழையைப் பார்த்து, ''மூணு நாளா இப்படித்தான் திடீர் திடீர்னு பெய்யுது. இப்படிப்



போனா தெப்பலா நனைஞ்சுடுவேன். சிவா சார் ஒரு குடை வெச்சிருப்பாரு. இன்னைக்கு எத்துட்டுப் போயிருக்காரா இல்லை இங்கதான் இருக்கா?'' என்று அறைக்குள் தேடினாள்.

''அவன் கையில எடுத்துட்டுப் போனான். அஞ்சி நிமிஷம் வெயிட் பண்ணுங்களேன். சும்மா உக்காருங்க.''

''இருக்கட்டும் சார்.''

''நீங்க வெங்கி அய்யரோட...''

''ரெண்டாவது பொண்ணு.''

தன் பெயரை அவளாகச் சொல்லுவாள் என்று எதிர்பார்த்த ஜெகன் சற்றே ஏமாற்றத்துடன், ''உங்க அம்மா பேரு வரலட்சுமி தானே?'' என்றான்.

''இல்லையே மீனாட்சி.''

''அப்படின்னா உங்க பேரு சரஸ்வதி. சரியா?''

''எப்படிச் சொன்னிங்க?'' என்றாள் ஆச்சரியத்துடன்.

''காலைல ஊர்லேர்ந்து வந்ததும் உங்கப்பா காலிங் பெல்லை அடிச்சுட்டு கூடவே சரஸ்வதின்னு குரல் கொடுத்தார். உங்க அம்மா பேரு அது இல்லைன்னு ஆனதும் அது உங்க பேராத்தானே இருக்க முடியும். லாஜிக் கரெக்ட்டா?''

''தப்பு!'' என்று அவள் வாய்விட்டுச் சிரித்தாள்.

''ஏன்?''

''எங்கம்மா பேரு மீனாட்சிதான். ஆனா எங்கப்பாவோட அம்மா பேரும் மீனாட்சி. அதனால எங்கப்பா எங்கம்மாவை சரஸ்வதின்னுதான் கூப்புடுவார்.''

''ஓகே. தப்புதான் உங்க பேர் என்னன்னு கேட்டாத்தான் சொல்லிங்களா?''

''வேணாம் சார். உங்களுக்குக் கிண்டல் செய்யணும்னு தோணும்.''

''பேர் ஒரு அடையாள வார்த்தை. இதில் கிண்டல் பண்றதுக்கு என்ன இருக்க முடியும்?''

''குலதெய்வம் பேர்தான் வைக்கணும்னு 'முனி க்ன்னியம்மாள்'ன்னு வெச்சிட்டாங்க. சுருக்கிக் கூப்புட்டா திட்டற மாதிரி இருக்கும். அதனால சின்னப் பொண்ணுன்னு கூப்புடறாங்க.''

''கேக்க கஷ்டமாத்தான் இருக்கு.''

''என் இஷ்டத்துக்கு விட்டிருந்தா எனக்குப் பிடிச்சப் பேரா வெச்சிட்டிருப்பேன்.''

''உங்களுக்குப் பிடிச்சப் பேர் என்ன?''

''டயானா! மழை நின்னுடுச்சிங்க. நான் போறேன். பொறுப்பா துணி எடுத்து வெச்சதுக்கு ரொம்ப தேங்ஸ்.''

அவள் சட்டென்று மடித்த துணிகளை மார்பாடு அணைத்துக் கொண்டு கொலுசுச் சத்தம் தேய சென்றுவிட்டாள்.

ஜெகனுக்கு தன் கையில் இருந்த மலர்க்கொத்து திடீரென்று நழுவி விழுந்தது போல இருந்தது.

அவள் நின்றிருந்த இடத்தில் உதிர்ந்திருந்த ஒன்றிரண்டு மல்லிகைப் பூக்களின் மேல் பார்வை சென்றது. சற்று முன் ஒலித்துக் கொண்டிருந்த அவளின் வளையல் ஒலி இப்போது காதருகில் கேட்டது.

அந்த உதிர்ந்த பூக்களைக் கையில் எடுக்க உந்துதல் ஏற்பட்டது. எதற்கு அதை எடுக்க வேண்டும் என்று உள்ளே கேள்வி எழுந்துக் கொண்டிருந்தபோதே, உட்கார்ந்து எடுத்து உள்ளங்கையில் சேகரித்தான். வாசனை பார்த்தான்.

திடீரென்று தன் நடவடிக்கைகளில் ஒரு குழந்தைத்தனம் சேர்ந்து விட்டது போல உணர்ந்தான்.

எதற்காக அவளை அப்படி பார்வையைத் திருப்பாமல் பார்த்துக் கொண்டிருந்தேன்? எதற்காக அவள் இங்கே இருந்தபோது இயல்பாக இல்லாததுபோல உணர்ந்தேன்?



எதற்காக அவளிடம் ஏதாவது பேச வேண்டுமென்று [illegible]தேன்? எதற்காக பிடிவாதமாக அவள் பெயரைத் [illegible] கொள்ளத் துடித்தேன்? சட்டென்று அவள் [illegible]ம் ஒரு வெறுமையை ஏன் உணர்ந்தேன்? இன்னும் கொஞ்ச நேரம் அவள் இங்கே இருந்திருக்கலாம் என்று ஏன் [illegible]த்தேன்? அவள் கூந்தலில் இருந்து உதிர்ந்த மல்லிகைப் பூக்களை எதற்காகச் சேகரித்தேன்?

'என்ன இதெல்லாம்? புதிதாய் இருக்கிறதே... இப்படியெல்லாம் நான் நடந்து கொள்ள மாட்டேனே.'

'இன்றைக்குத்தான் முதன் முதலாக ஒரு இளம் பெண்ணைச் சந்திக்கிறேனா என்ன? கோவையில் எத்தனை [illegible]டன் பேசிக்கிறேன், பழகியிருக்கிறேன்.

இப்போது மட்டும் ஏன் இப்படி?

'இவளைப் பார்த்ததும் ஏன் இந்தத் தடுமாற்றம்? எதற்காக இந்த சுய விசாரணை? ஒரு வேளை இதுதான்... இதுதான்... ச்சீ!'



இரவு அன்னை மெஸ்சில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது சிவா கேட்டான். ''ஜெகன், எங்க ஞாபகம்? சாம்பார் வழியுது பாரு'' என்றான்.

இலையைத் தாண்டி ஓட இருந்த சாம்பாரை இலை [illegible] அவசரமாகத் தூக்கித் தடுத்து இட்லி வைத்து [illegible] கட்டினான் ஜெகன்.

''ஆனாலும் பாவம் சிவா.''

''யாரு?''

''இப்படியா பேர் வைப்பாங்க?''

''நீ யாரைச் சொல்றே?'

''சின்னப் பொண்ணைத்தான் சொல்றேன்.''

''யாரு சின்னப் பொண்ணு?''

''வெங்கி அய்யரோட ரெண்டாவது பொண்ணைப் பத்தி சொல்றேன்.''

''அவளுக்கு என்ன?''

''எவ்வளவு லட்சணமா இருக்கா? என்னதான் குலதெய்வம் பேருன்னாலும் இப்படி பேர் வைக்கலாமா?''

''ஏன்? ஸ்வாதிங்கறது நல்ல பேர்தானே?''

''ஸ்வாதியா?''

''என்னடா போட்டுக் குழப்பறே? வெங்கி அய்யரோட பொண்ணு பேரு ஸ்வாதிதான்.''

''நான் ரெண்டாவது பொண்ணைப் பத்திச் சொல்றேன்.''

''நானும் அவளைப் பத்திதான் சொல்றேன். வீட்ல இருக்கறது இப்ப ஒரு பொண்ணுதானே. மூத்தப் பொண்ணு பத்மாவுக்குக் கல்யாணமாகி அவ கோயமுத்தூர்ல இருக்கறா.''

''அப்படியா? சரி, வெச்சிக்கிறேன்.''

''கல்யாணமாயாச்சுன்னு சொல்றேன், நீ வெச்சுக்கிறியா?''

''இது வேற 'வெச்சிக்கிறேன்' சிவா. என்கிட்ட வேணும்னே பொய் சொல்லிட்டா அந்த ஸ்வாதி.''

''எப்ப உன்னைப் பார்த்தா?''

''காலையில மழை வந்தது. துணி எடுக்க மாடிக்கு வந்தா. நனைஞ்சுடுமேன்னு நான் அவசரமா எடுத்து வெச்சிட்டேன். அதை எடுத்துக்க ரூமுக்கு வந்தா. மழை நிக்கிறதுக்கு பத்து நிமிஷம் ஆச்சு. அது வரைக்கும் பேசிட்டிருந்தோம். அப்போதான் தன் பேருக்கு முண்டகன்னியம்மான்னு குறும்பா பொய் சொல்லிட்டா!''

''டேய்! நீ நிஜமாத்தான் சொல்றியா?''

''இதுல பொய் சொல்றதுக்கு என்ன இருக்கு?''



''அவ பேசினான்னு சொல்றே. குறும்பா பொய் வேற சொன்னான்னு சொல்றே! என்னால நம்பவே முடியலையே...''

''அவ என்னமோ இதுவரைக்கும் ஊமையா இருந்து இன்னைக்கு வாய் திறந்து பேசிட்ட மாதிரி இவ்வளவு அதிசயப் படறியே...''

''நிஜமாவே அவ ஊமையோன்னு நினைக்கிற மாதிரி அதிகமா பேசவே மாட்டா ஜெகன். என்கிட்ட இத்தனை வருஷத்துல ஒரு பத்து, இருபது வார்த்தை பேசியிருந்தா அதிகம். அதுக்காகத்தான் ஆச்சரியமாக் கேட்டேன்.''

''இல்லையே.. நல்லா இயல்பா நேரா முகம் பார்த்துப் பேசினாளே. உன்கிட்ட சரியாப் பேசாததுக்கு ஒரு காரணம் இருக்கு சிவா.''

''என்ன?''

''நீ கல்யாணமானவன். நான் பேச்சிலர். நீ எக்ஸ் பேச்சிலர். அது மட்டுமில்லை சிவா. ஒரு அழகான பொண்ணுக்கு அழகான பையன்கிட்டதான் பேச ஆர்வமா இருக்கும்'' என்றான் ஜெகன்.

சாப்பிடுவதை நிறுத்தின சிவா, ''என்ன ஜெகன், லட்சணமான பொண்ணுன்னு சொல்றே, அழகான பொண்ணுன்னு சொல்றே. அவளைப் பத்தியே பேசறே, ஒரு மாதிரியான அபிப்பிராயம் இருக்கா என்ன? இப்பவே சொல்லிடு'' என்றான்.

''ஒரு மாதிரியான அபிப்பிராயம்னா?''

''காதலிக்கிற மாதிரி ஐடியா இருக்கா?''

''இது என்ன திட்டம் போட்டு செய்ற வேலையா?''

''நீதானே சொன்னே ஜெகன், எந்த ஒரு வேலையையும் திட்டம் போட்டு செஞ்சா சிறப்பா செய்ய முடியும்னு...''

''அது வேற. இது வேற. காதல் தானா உருவாகிற உணர்ச்சி. திடீர் மழை மாதிரி. திடீர் மின்னல் மாதிரி. அது திடீர்னு ஏற்படும். தானா வளரும்.''

''ஸ்பீடா வளர உரம் போட முடியுமே...''

''ஃபீலிங்ஸ் சம்பந்தப்பட்ட விஷயத்தை ரொம்ப பிராக்டிகலாப் பேசாதே சிவா.''

''பிராக்டிகலாவும் யோசிக்கணும். அவளை காதலிக்கிற மாதிரி ஐடியா இருக்கான்னு எதுக்காகக் கேட்டேன் தெரியுமா?''

''எதுக்காகக் கேட்டே?''

''ஸ்வாதிக்கு மாப்பிள்ளை பார்த்துட்டிருக்கார் வெங்கட் அய்யர். நாளைக்குக் கும்பகோணத்திலேர்ந்து பொண்ணு பார்க்க வர்றாங்க. 'நல்ல உத்தியோகத்துல இருக்கற மாப்பிள்ளை. நல்ல இடம், ஜாதகமும் பிரமாதமா பொருந்தியிருக்கு. அநேகமா செட்டிலாய்டும்'னு சொல்லிக்கிட்டிருந்தார். அதனாலதான் சொன்னேன்.''

ஜெகன் மெல்வதை நிறுத்தினான். சட்டென்று யாரோ அவன் முகத்தில் குத்தியது போலிருந்தது. இதயத்தில் இருள் சூழ்ந்தது. தன் உணர்வின் மாற்றத்தை தள்ளி நின்று யோசிக்கும்போது சற்று வேடிக்கையாகவும் இருந்தது.

'இன்றைக்குக் காலையில் சந்தித்த, ஐந்தே நிமிடங்கள் பேசிச் சென்ற ஒரு அறிமுகமில்லாத பெண்ணுக்குக் கல்யாணம் என்றால் எனக்கு ஏன் மனதில் பாரமாக இருக்கிறது?'

''என்ன ஜெகன், பதில் பேச மாட்டேங்கறே?''

''ஒண்ணுமில்லை சிவா. வேலை விஷயமா நாளைக்கு யாரைப் பார்க்கலாம்னு யோசனைல இறங்கிட்டேன்'' என்றான் ஜெகன்.

இரவில் இருட்டு உத்தரத்தில் ஒற்றை மூக்குத்தி மின்ன ஸ்வாதி திரும்பத் திரும்பப் புன்னகைக்க... குப்புற படுத்துக் கொண்டு உறங்க முயற்சி செய்தான் ஜெகன்.





மறுநாள் சிவா அலுவலகம் புறப்பட்டுச் சென்றதும் ஜெகன் அன்றைக்கு சந்திக்க வேண்டிய நபர்களின் விலாசங்களையும், தொலைபேசி எண்களையும் தன் டைரியிலிருந்து ஒரு தனித்தாளில் எடுத்து எழுதிக் கொண்டிருந்தபோது கொலுசு சப்திக்க, அவள் வந்தாள்.

''எக்ஸ்க்யூஸ் மி சார். உங்ககிட்ட அஞ்சி பத்து ரூபா நோட்டு இருந்தா வாங்கிட்டு வரச் சொன்னார் அப்பா'' என்று ஒரு ஐம்பது ரூபாய் நோட்டை நீட்டினாள்.

''இருக்கு. ஆனா நான் தர்றதா இல்லை.''

''ஏன் சார், எங்கப்பா மேல உங்களுக்கென்ன கோபம்?''

''அவர் மேல எனக்கென்ன கோபம்?''

''பின்னே?''

''பொய் சொல்றவங்களுக்கு ஏன் உதவணும்?''

''நான் என்ன பொய் சொன்னேன்?''

''ஸ்வாதிங்கறது எவ்வளவு அழகான பேர் தெரியுமா?''

''ஸாரி சார். சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். [illegible]காரனுக்கு இருபது ரூபா தரணும். வெய்ட் [illegible]...''

''இருங்க, தர்றேன்.''

தன் மணிபர்சில் துழாவி, ''என்கிட்ட முப்பது ரூபாதாங்க இருக்கு. இந்தாங்க. நீங்க சில்லரை மாத்தி அப்புறமா [illegible]க் கொடுங்க'' என்றான்.

''தேங்ஸ்'' என்று அவள் பெற்றுக் கொண்டபோது லேசாகத் [illegible] அவள் விரல்களின் ஸ்பரிசம் ஜெகனை வதைத்தது.

அவள் சென்றதும் 'இது முட்டாள்தனம்' என்று மனதுக்குள் திட்டிக் கொண்டான்.

இன்றைக்கு பெண் பார்க்க வருகிறார்கள். பேசி முடிவாகி விட்டால், இவள் இன்னொருவனுக்கு

நிச்சயமான கல்யாணப் பெண்! இவளிடம் கிண்டலாய் பேசுவதும், சின்ன ஸ்பரிசத்திற்கு சிலிர்த்துக் கொள்வதும் அர்த்தமற்றது என்பது புத்திக்குப் புரிந்தாலும், மனம் இவளைப் பார்த்த மாத்திரத்தில் கிறங்கிப் போகிறதே.

சிறிது நேரத்தில் மீண்டும் வந்து மூச்சிரைத்தாள் ஸ்வாதி.

''இந்தாங்க முப்பது ரூபா.''

''மெதுவாகக் கொடுக்கலாமே...''

''அப்பா கடைக்குப் போயி மாத்திட்டு வரச் சொன்னார். உடனே கொடுத்துட்டு வந்துடுன்னு சொல்லிட்டார். அவருக்குக் கடனே பிடிக்காது.''

''சரி கொடுங்க.''

''நான் வர்றேன்.''

''ஒரு நிமிஷம்...''

''என்ன?''

''உங்களை இன்னைக்கு பொண்ணு பார்க்க வர்றாங்களா?''

உடனே அவள் கன்னங்களில் செம்மை பரவுவதைப் பார்த்தான்.

''ஆமாம், எப்படித் தெரியும்?''

''சிவா சொன்னான்.''

''சரி, நான் வர்றேன்...''

''என்னோட வாழ்த்துக்கள்.''

''தேங்ஸ் சார். ஆமாம் இதென்ன காய்கறி எல்லாம் வாங்கி வெச்சிருக்கிங்க?''

''நான் சமைக்கப் போறேன்.''

''சமைக்கத் தெரியுமா உங்களுக்கு?''

''தெரியும். உங்களுக்குப் பிடிச்ச ஸ்வீட் என்ன?''

''பால் பாயசம்.''



''உங்களுக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுச்சின்னு வந்து நல்ல சேதி சொல்லுவீங்க. நான் பால்பாயசம் செஞ்சித் தர்றேன்.''

''தேங்ஸ் சார்.''

ஸ்வாதி போய்விட்டாள். உள்ளே போராட்டம் துவங்கியது.

'வருகிற மாப்பிள்ளைக்கு ஸ்வாதியைப் பிடிக்காமல் போக வேண்டும்! ச்சீ! என்ன வேண்டுதல் இது? கல்யாணம் பற்றி விசாரித்ததும் எப்படி வெட்கப்பட்டு கன்னம் சிவந்தாள்! அவள் மனதில் எத்தனைக் கனவுகள் இருக்கும்! இப்படிக் கேவலமாக வேண்டுகிறேனே நான்.'

ஆனால் ஏதோ ஒரு காரணத்தால் இந்தக் கல்யாணம் நிச்சயமாகக் கூடாது என்று அரக்கத்தனமாக பேய் மனசு நினைக்கத் துவங்கியதில் ஜெகன் தன் மீதே கோபமுற்று வேகமாக வெளியே புறப்பட்டான்.

மாலை நான்கு மணிக்கு ஒரு பெரிய நிறுவனத்தின் உதவி மேனேஜரை சந்திப்பதற்காக அறைக்கு வெளியே வெயிட்டிங் ஹாலில் கைகட்டிக் காத்திருந்தபோது...

உள்ளேப் போனதும் அவரிடம் என்ன பேசலாம் என்பதை விட, இப்போது மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்து இறங்கியிருப்பார்கள் என்றுதான் சிந்தனை ஓடியது.

சிகரெட் பற்ற வைக்கப் போக, ஸ்டூல் போட்டு அமர்ந்திருந்த பியூன் வந்து, ''இங்க சிகரெட் பிடிக்கக் கூடாது சார். அப்படி பால்கனிக்குப் போயிடுங்க'' என்றான்.

பால்கனிக்கு வந்து நின்றான்.

எட்டாவது மாடியின் பால்கனி, கீழே இரைச்சலாய் போக்குவரத்து.

''இவதான் என் பொண்ணு ஸ்வாதி!

''என்னம்மா படிச்சிருக்கே?''

''ப்ளஸ் டூ.''

''மேற்கொண்டு படிக்க வைக்கலையா?''

''அப்போ டைபாய்டு ஜுரம் வந்தது. சரி, போதும்னு நிறுத்திட்டேன்.''

''பாடுவாளா?''

''நல்லாப் பாடுவா. முறையா சங்கீதம் கத்துக்கிட்டா. வீணை வாசிப்பா. தையல், கோலம், ரங்கோலி இதிலெல்லாம் எக்ஸ்பர்ட்.''

''ஒரு பாட்டு பாடும்மா.''

*''கலைவாணி அருளாலே...*

*புவியதில் நினைத்தாலே...*

*சங்கீதம் பொங்கி வரும்...''*

''நல்லாப் பாடறேம்மா.''

''சாப்பிட்டுக்கிட்டேப் பேசலாமே. எதுவுமே எடுத்துக் கலையே...''

''நீ உள்ளேப் போம்மா ஸ்வாதி.''

''என்னடா சொல்றே ஸ்ரீராம்?''

''எனக்குப் பொண்ணைப் பிடிச்சிருக்குப்பா.''

சிகரெட் நெருப்பு விரலைச் சுட அவசரமாக உதறிக் கொண்டான் ஜெகன். முகம் வியர்த்திருந்தது.

அந்த ஸ்ரீராம் ஸ்வாதியிடம் தனியாகப் பேச வேண்டும் என்று சொல்லியிருப்பானோ... பெரியவர்களும் அனுமதித்த பிறகு அவளை ஆசையாகப் பார்த்து, மருதாணி பூசின விரல்களை மெதுவாக எடுத்துத் தன் உள்ளங்கையால் பொத்தி, 'உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா ஸ்வாதி' என்று கேட்பானோ...

கேட்டால், 'போடா! எனக்கு உன்னைப் பிடிக்கலை!' என்று இவள் பளாரென்று அறைந்தால் எப்படி இருக்கும்?



எல்லோரும் அறைக்குள் ஓடிவர...

''என்னடி ஆச்சி உனக்கு? உனக்கென்ன பைத்தியமா?''

''ஆமாம். பைத்தியம். காதல் பைத்தியம்.''

''காதலா?''

''ஆமாம். மாடிக்குப் புதுசா வந்திருக்காரே ஜெகன். அவரை நான் காதலிக்கிறேன். அதனால வேற யாரையும் பிடிக்க மாட்டேன்.''

'ச்சீ! என்ன இது வக்கிரத்தனமான கற்பனை?'

'நான் என்ன ஸ்வாதியை நேசிக்கிறேனா? அதற்குள்ளாகவா? சாத்தியமா? இதுதான் நேசமா?'

''சார், அசிஸ்டெண்ட் மேனேஜர் உங்களைக் கூப்பிடறார்'' என்று பியூன் வந்து அழைத்தபோது...

''அட, போய்யா!'' என்று கத்தத் தோன்றியது.

ஜெகன் உதடுகளை ஈரப்பதுத்திக் கொண்டு நடந்து வந்து அறைக்குள், 'வரலாமா?' என்று கேட்டு அனுமதி பெற்று பிறகு உள்ளே நுழைந்தான்.

6



ஜெகன் அயர்ன் செய்து கொண்டிருந்தான். மனம் பொசுங்கிக் கொண்டிருந்தது.

ஸ்வாதியைப் பெண் பார்த்துவிட்டுப் போனவர்கள் என்ன சொன்னார்கள்? கல்யாணம் நிச்சயமாயிற்றா இல்லையா?

இரண்டு நாட்களாக தகவல் எதுவும் தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தான். சிவாவிடம் கேட்கத் தயக்கமாக இருந்தது. அவனுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றும் பட்டது.

யதேச்சையாக வெங்கி அய்யரை சந்திக்க நேர்ந்தால் 'என்ன சார் பொண்ணு பார்த்துட்டுப் போனதா சிவா சொன்னாரே... என்ன ஆச்சு?' என்று இயல்பாகக் கேட்கலாம்.

ஆனால் அவர் கண்ணில் படவேயில்லை.

ஸ்வாதியும் மாடிக்கு வரவேயில்... மாடிப்படிகளில் கொலுசுச் சத்தம் அதிகரிக்கத் துவங்கியதும் இவன் மனதின் துடிப்புச் சத்தமும் அதிகரிக்கத் துவங்கியது.

அறைக் கதவு தட்டப்பட்டது. போய்த் திறந்தான். கையில் இலை போட்டு மூடின தட்டு வைத்திருந்தாள் ஸ்வாதி.

''வாங்க'' என்றான்.

உள்ளே வந்து தட்டை மேஜை மேல் வைத்தாள்.

''இன்னைக்கு எங்க வீட்ல ஒரு விசேஷம். அதிரசம் வடையும் செஞ்சோம். அம்மா கொடுத்துட்டு வரச் சொன்னாங்க'' என்றாள்.

''ரொம்ப தேங்சுங்க. தட்டு உடனே வேணுமா? இலையில எடுத்து வெச்சிட்டுத் தரட்டுமா?''

''ஒண்ணும் அவசரமில்லை. அப்புறமா வந்து நானே வாங்கிக்கறேன்.''

''உங்களுக்கு அவசரமா கீழேப் போகணுமா?''

''ஏன்?''

''உங்ககிட்ட ஒண்ணு கேக்கணும்.''

''என்ன?''

''இது உங்க பர்சனல் விஷயம். தப்பா எடுத்துக்காதிங்க. அன்னைக்கு உங்களை பொண்ணு பார்த்துட்டுப் போனாங்களே, என்ன ஆச்சு? நான் பால் பாயசம் செய்றதா வேண்டாமா?''

''பால் பாயசமா?''

''அன்னைக்குச் சொன்னேனே... இந்தக் கல்யாணம் நிச்சயமாயிட்டா பால்பாயசம் பண்ணித் தர்றேன்னு...''

ஸ்வாதி சிரித்தாள். ''அவங்க முடிவை போய் தபால்ல எழுதறதா சொல்லிட்டுப் போனாங்க. அப்பா அவங்க



தபாலை எதிர்பார்த்துட்டு இருக்கார். அந்த தபாலுக்கப்புறம்தான் ரிசல்ட் தெரியும்.''

''அப்பா மட்டும்தான் அந்தத் தபாலை எதிர்பார்க்கிறாரா? நீங்க எதிர்பார்க்கலையா?'' என்றவன் அவள் முகத்தில் உணர்ச்சிகளைத் தேடினான்.

சில விநாடிகள் மௌனமாக நகர்ந்தன.

''நான் ஏதாச்சும் அதிகப்பிரசங்கித்தனமா கேட்டுட்டேனா?''

''இல்லை, இல்லை. தெரிஞ்சுக்கறதுக்காக கேக்கறிங்க. அதனால என்ன? சார், ஒரு நண்பரா நினைச்சு இந்த விஷயத்துல என் ஃபீலிங்சை உங்ககிட்ட ஷேர் பண்ணிக்கட்டுமா? ஏன்னா அப்பா, அம்மா கிட்ட வெளிப்படையா பேச முடியாது. நீங்களும் நானும் ஒரு ஏஜ் குரூப். அதனால உங்களால புரிஞ்சுக்க முடியும்னு நினைக்கிறேன். ஆனா மனம் விட்டுப் பேச தயக்கமா இருக்கு'' என்று தரை பார்த்துப் பேசினாள்.

''ஏன்?''

''உங்க ஃபிரண்டு சிவாவும் எங்கப்பாவும் அடிக்கடி சந்திப்பாங்க. பேசுவாங்க. இப்ப நான் உங்ககிட்ட சொல்றதை நீங்க சிவா சார் கிட்ட சொல்லி அவர் மூலமா எங்கப்பா, அம்மாவுக்குத் தெரிஞ்சுதுன்னா... நான் மாட்டிப்பேன்.''

''உங்க மனசுல ஏதோ பிரச்சினை இருக்குதுன்னு புரியுதுங்க. எவ்வளவு ஒரு நம்பிக்கை என்மேல ஏற்பட்டிருந்தா என்கிட்ட சொல்லலாமான்னு நீங்க யோசிச்சிருப்பீங்க. அந்த நம்பிக்கைக்கு நான் துரோகம் செய்ய மாட்டேங்க. தைரியமா சொல்லுங்க. முதல்ல... உக்காருங்களேன்.''

நாற்காலியில் தயங்கி அமர்ந்தாள். ஜெகன் அயர்ன் செய்வதை நிறுத்திவிட்டு கட்டிலில் வந்து அமர்ந்தான்.

''என்னை பொண்ணு பார்க்க வந்தவர் பேரு ஸ்ரீராம். நல்ல குடும்பம். நல்ல வருமானம். அழகா இருப்பாரு அதுஇதுன்னு நிறைய சொல்லி வைச்சிருந்ததால நான் எதிர்பார்ப்போட இருந்தேன் ஆனா...''

''அவர் அழகா இல்லையா?''

''அழகாத்தான் இருந்தாரு. நல்ல குடும்பம்தான். வீட்ல அவர் இருந்த அரை மணி நேரத்துல சில சின்ன சின்ன நடவடிக்கைகளை கவனிச்சப்போ லேசா ஒரு ஏமாற்றமும், பயமும் ஏற்பட்டது சார்.''

''அப்படி என்ன செஞ்சாரு ஸ்ரீராம்.''

''வீட்டுக்குள்ளே வந்த அத்தனைப் பேரும் வாசல்ல செருப்பைக் கழட்டிப் போட்டுட்டு வந்தப்ப இவர் மட்டும் ஷூவைக் கழட்டாம அப்படியே வந்து உக்காந்தாரு.''

''சில பேருக்கு ஷூ ரொம்பப் பழகிப் போயிடுங்க. அதை கழட்டணும்னு தோணாது. கைல வாட்ச் எப்பவும் இருக்கிற மாதிரி கால்ல ஷூ இருக்கணும். இது தப்பில்லைங்க.''

''சரி. தப்புன்னு நான் வாதம் செய்யலை. எனக்கு உறுத்தலா இருந்திச்சி.''

''அப்புறம்?''

ஜெகனுக்கு தன் உள் மனம் அந்த ஸ்ரீராமைப் பற்றி நெருடலாக அவள் பேசும்போது லேசாக சந்தோஷப் படுவதையும், அவளை சமாதானப்படுத்துவதற்காக நாடகமாப் பேசுகிறோம் என்பதையும் உணர முடிந்தது.

''கால் மேல கால் போட்டு உட்கார்ந்தார். வயசில பெரியவங்க எதிர்ல அப்படி போட்டுக்கிட்டு உட்கார்றது ஒரு அகம்பாவத்தை எனக்குக் காட்டிச்சு. நீங்க இதை சௌகரியத்துக்காகப் போட்டுக்கறதுன்னு இதுக்கும் விளக்கம் சொல்லலாம்.''

''நான் என்ன அந்த ஸ்ரீராமுக்கு உறவா? இல்லை தரகரா? நான் பொண்ணு வீட்டுக்காரங்க. நீங்கதான் முக்கியம். அப்புறம்... சொல்லுங்க.''



'நீங்கதான் முக்கியம்' என்று சொன்னதும் ஒரு முறை அவன் முகத்தை நிமிர்ந்துப் பார்த்துவிட்டு பார்வையை திசை திருப்பிக் கொண்டாள்.

''ஸ்வீட், காரம் எல்லோருக்கும் கொடுத்தோம். இந்த ஸ்வீட் வீட்ல செஞ்சதா கடையில வாங்கினதான்னு கேட்டார். மைசூர் பாகை காட்டி. 'கிருஷ்ணா ஸ்வீட்ஸ்ல வாங்கினதுங்க. ரொம்ப நல்லாருக்கும்'னு அப்பா சொன்னார். 'ஸாரி, அதை எடுத்துடுங்க. நான் கடையில செஞ்ச ஸ்வீட் சாப்பிடறதில்லை'ன்னு சொன்னார்.''

''அது அவரோட கொள்கையா இருக்கலாம். ஆனா சபை நாகரீகம்னு ஒண்ணு இருக்கே. அந்தக் கேள்வி அவர் கேட்டிருக்கவே வேணாம். சரி, கேட்டுட்டார். பிடிக்காதுன்னா சாப்பிடாம பேசாம தட்டுலயே வெச்சிட்டா யாராச்சும் கோவிச்சுக்கப் போறாங்களா என்ன?''

''அதான் நானும் நினைச்சேன். இதையெல்லாம் வெச்சிப் பார்க்கிறப்போ கொஞ்சம் கோபக்காரரா, முரட்டுத் தனமானவரா இருப்பாரோன்னு நினைச்சேன்.''

''உங்க நினைப்பு நியாயம்தான்.''

''அப்புறம் அவர் யாரோ ஃபிரண்டைப் பார்க்கணும்னு புறப்பட்டுப் போய்ட்டார். பெரியவங்க சீர் பத்தி எல்லாம் பேசினாங்க.''

''பொண்ணு பிடிச்சிருக்குன்னு சொன்னாங்களா இல்லையா?''

''அதைத்தான் தபால் போடறோம்னு சொல்லிட்டாங்களே...''

''அந்தக் கட்டம் தாண்டிதானே சீர் பத்திப் பேசுவாங்க பொதுவா.''

''இவங்க இதைப்பத்தி முடிவு பண்ணிட்டு அப்புறம்தான் அதைத் தெரியப்படுத்துவோம்னு சொன்னாங்க. அவங்க எழுபத்தி அஞ்சு பவுன் போடச் சொன்னாங்க.''

''உங்கப்பா என்ன சொன்னார்?''

''என் பெரிய பொண்ணுக்கு அம்பது பவுன் போட்டேன். அதே அம்பது பவுன் போட்டுடறேன்னு சொன்னார்.''

''ரெண்டு பொண்ணுங்க இருக்கிற வீட்ல கூடக் குறைச்சல் சீர் செஞ்சா அப்புறம் வேற விதமான பிரச்சினைகள் வந்துடுமே. உங்கப்பா சொன்னது சரிதான்.''

''அவங்க அரை மனசோட புறப்பட்டுப் போயிருக்காங்க.''

''தங்க விக்கிரகம் மாதிரி இருக்கிற உங்களை கட்டிக்கத் தனியா வேற தங்கம் வேணுமா? நியாயமா? சரி, உங்கப்பா 'மாப்பிள்ளையை உனக்குப் பிடிச்சிருக்காம்மா?'ன்னு கேட்டாரா?''

அவளைப் பற்றி பாராட்டி குறிப்பிட்டதில் ஒரு சின்ன புன்னகை முகத்தில் தோன்றியது.

''எங்கப்பா என்கிட்ட அபிப்பிராயம் கேக்கறதாவது! எங்க வீட்ல எந்த ஒரு முடிவும் அவர் எடுக்கறதுதான், சமையல்லேர்ந்து அவர்தான் முடிவெடுப்பார்.''

''சரி, நேரடியா கேக்கறேன். உங்களுக்கு பர்சனலா இந்த மாப்பிள்ளையை கல்யாணம் செய்துக்கப் பிடிக்கலையா?''

''அப்படிச் சொல்ல முடியாது. கொஞ்சம் பயமா இருக்குது. பிடிக்குது. பிடிக்கலைன்னு சொல்ற அளவுக்கு நான் பெரிய மனுஷியா? எனக்கு எது நல்லதுன்னு எங்கப்பா அம்மாவுக்குத் தெரியாதா?''

''அப்போ அவங்ககிட்டேர்ந்து சம்மதம் சொல்லி தபால் வந்தா இந்தக் கல்யாணம் நிச்சயமாயிடும். நீங்களும் சம்மதம் சொல்லிடுவிங்க. அப்படித்தானே?''

''கல்யாணம் நிச்சயமாயிடுங்கறது உண்மைதான். ஆனா என் சம்மதத்தை யார் கேக்கப் போறாங்க?''

''சப்போஸ் உங்கப்பா உங்களைக் கூப்பிட்டு அபிப்பிராயம் கேட்டா என்ன சொல்வீங்க?''



''உங்களுக்கு எல்லாம் சரியா வரும்னு பட்டா எனக்கும் சரிதான்னு சொல்லிடுவேன். அவர் ஏற்கனவே எங்க ரெண்டு பேர் ஜாதகமும் பொருத்தம் பார்த்து பதினோரு பொருத்தம் இருக்கிறதாவும் எங்க தாம்பத்தியம் ரொம்ப அமோகமா இருக்கும்னும் சொல்லிருக்கார்...''

''உங்களுக்கு ஜாதகத்துல எல்லாம் நம்பிக்கை இருக்கா?''

''எங்கப்பாவுக்கு தொழிலே அதுதானே.''

''நான் உங்களுக்கு நம்பிக்கை இருக்கான்னு கேட்டேன்.''

''கண்டிப்பா. நல்லவன் செய்யாததை நாள் செய்யும்னு சொல்வாங்களே... இன்னைக்கு இதெல்லாம் யார் நம்பலை? ராக்கெட் அனுப்பறதுக்குக்கூட நேரம் பார்த்து பூஜை நடத்தறாங்களே ஏன். உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?''

''இல்லை!''

''ஸ்வாதி...'' என்று கீழேயிருந்து அம்மாவின் குரல் கேட்டது.

''நான் வர்றேன். அப்புறம் பேசலாம்'' என்று ஓடினாள் ஸ்வாதி.

6



அவள் போனதும் ஸ்வாதியைப் பற்றிக் கலவையாக எண்ணங்கள் தோன்றின. அவளுக்கு வந்த மாப்பிள்ளையை அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. அதனால் அர்த்தமற்ற சந்தோஷம் ஏற்பட்டது.

அதே சமயம் இந்தக் கல்யாணத்தில் அப்பாவின் முடிவுக்குக் கட்டுப்படுவேன் என்று சொன்னதும், ஜாதகத்தை நம்புவதாகச் சொன்னதும் அவள் மேல் சின்ன வருத்தத்தை ஏற்படுத்தின.

'இறக்கைகள் முறிக்கப்பட்ட கூண்டுக்கிளி' என்று தோன்றியது. சடங்குக் கிளிக்கு பறக்க வேண்டும் என்று ஆசை ஏற்படலாம். ஆனால் அது தன் நிலை உணர்ந்து சமாதானப் படுத்திக் கொள்வது போலத்தான் இவளும் தன் இயலாமையை ஜீரணித்துக் கொள்கிறாளோ...

சாப்பிட்டு முடித்து விட்டு ஸ்வாதி கொண்டு வந்த எவர்சில்வர் தட்டைக் கொடுத்து விடலாம் என்று எடுத்துக் கொண்டு ஜெகன் கீழே இறங்கி வந்தான்.

வீட்டின் வாசலில் ஆட்டோ ஒன்று நின்றிருக்க... வெங்கி அய்யர் வாசலில் எங்கோ புறப்படத் தயாராய் நின்றபடி உள்ளே பார்த்துக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்.

''சீக்கிரம் வா சரஸ்வதி! கோயிலை மூடிடுவாங்க.''

''சார், தட்டு...'' என்று இழுத்தான் ஜெகன்.

''கொடுங்க தம்பி. என்ன, வேலை எதுவும் கிடைச்சுதா?''

''முயற்சி பண்ணிட்டிருக்கேன். கிடைச்சுடும் சார்.''

''குடும்பத்தோட கோயிலுக்குப் போறேன். சாயங்காலம்தான் திரும்புவோம். யாராவது மாடியேறி வந்து விசாரிச்சா சொல்லுங்க.''

''சரி சார்.''

அவர்கள் புறப்படுவதை அருகில் நின்று பார்ப்பது அநாகரீகமாகப் பட்டதால் ''நான் ரூமுக்குப் போகிறேன் சார்'' என்று படிகள் ஏறினான்.

மேலே சென்று திரும்பிப் பார்த்தபோது கடைசியாக ஸ்வாதி ஏறிக் கொண்டிருந்தாள். ஆட்டோ அரை வட்டமடித்துத் திரும்பியபோது அவள் தலை உயர்த்தி தன்னைப் பார்த்ததையும், தான் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்து வேறு எங்கோ பார்ப்பது போல தலையை திசை திருப்பிக் கொண்டதையும் கவனித்தபோது மனதில் ஜில்லென்றிருந்தது.



அறைக்குள் வந்ததும் சிகரெட் தேடினான். பாக்கெட் காலியாக இருந்தது. அறையைப் பூட்டிக் கொண்டு சென்று கடையில் அங்கேயே ஒன்றை பற்ற வைத்துக் கொண்டு திரும்பி வந்தபோது -

வெங்கி அய்யர் வீட்டு வாசலில் ஸ்டாண்டு போட்டு சைக்கிளிலிருந்து இறங்கிய போஸ்ட்மேன் வெங்கி அய்யரின் வீடு பூட்டியிருப்பதைப் பார்த்துக் கையில் இருந்த தபாலை கதவு இடுக்கின் வழியாக உள்ளே போடுவது என்று தேடினார்.

''என்ன சார் தபாலா?'' அவங்க கோயிலுக்குப் போயிருக்காங்க. கொடுங்க. வந்ததும் கொடுத்துடறேன்.''

போஸ்ட்மேன் கவரைக் கொடுத்துவிட்டுப் போனதுமே மேலே வந்து மேஜையில் வைத்து விட்டு நாற்காலியில் அமர்ந்து ஸ்வாதி பற்றி யோசித்தான்.

அவளிடம் அதிக பட்சம் பத்து, இருபது வார்த்தைகள் மட்டும் பேசியுள்ள ஸ்வாதி என்னிடம் மட்டும் ஏன் இயல்பாகப் பேசுகிறாள்?

தன் அப்பா, அம்மாவிடம் சொல்லாத தன் கருத்துக்களை எப்படி என்னிடம் துணிந்து பேசினாள்?

அதிரசமும், வடையும் அம்மாதான் கொடுக்கச் சொன்னாளா, இல்லை இவளாகக் கொண்டு வந்தாளா? அதைக் கொடுப்பதுதான் நோக்கமா இல்லை என்னைப் பார்க்க அது ஒரு சாக்கா?

ஆட்டோவில் ஏறியவள் எதற்காக தலையை உயர்த்தி என்னைப் பார்த்துவிட்டுப் போனாள்?

இந்த சில சந்திப்புகளிலேயே அவள் மேல் எனக்கு அழுத்தமான ஈர்ப்பு ஏற்பட்டிருப்பது போல அவளுக்கும் ஏற்பட்டிருக்குமோ? கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கும் நேரத்தில் இந்த ஈர்ப்பு தப்பு என்று அவள் மனம் அதட்டல் போடுகிறதோ? அதனால் தவித்துக் கொண்டிருக்கிறாளோ...

ச்சே! இதென்ன இங்கே வந்ததில் இருந்து சதா இவளை பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறேன். இவளுக்கு இந்த இடம் நிச்சயமாகக் கூடாது என்று நாகரீகமில்லாமல் மனம் புலம்பிக் கொண்டிருப்பதற்கு என்ன அர்த்தம்?

நான் ஸ்வாதியை நேசிக்கத் துவங்கி விட்டேனா?

இது சரியோ, தப்போ... இதுதான் உண்மை என்று புரிகிறது.

இந்த அவஸ்தை தேவைதானா? சம்மதம் என்று தபால் வந்து விட்டால் அவள் அந்த ஸ்ரீராமுக்குச் சொந்தமாகப் போகிறாள் இந்த நிலையில் இந்த அவசர தேவை அர்த்தமற்றது என்று தெரிந்தும் ஏன் ஏற்படுகிறது?

சட்டென்று அவன் பார்வை அந்தத் தபாலுக்குச் சென்றது.

எடுத்து அனுப்பியவர் முகவரி பார்த்தான். கும்பகோணம் முகவரி. ரங்கநாதன் என்று துவங்கியிருந்தது.

பெண் பார்த்து விட்டுப் போன மாப்பிள்ளை வீட்டுக்காரர்களின் கடிதம் என்று உடனே புரிந்தது. உள்ளே கடிதத்தில் இவன் காதல் தொடர வைக்கிற அல்லது சுத்த வைக்கிற விஷயம் இருக்கிறது என்பது உறைத்தது.

ஜெகனுக்கு உடனே அந்தக் கடிதத்தில் இருப்பதைப் படித்துப் பார்க்க வேண்டும் என்று உந்துதல் ஏற்பட்டது.

ச்சீ! இன்னொருவருக்கு வந்த முக்கியக் கடிதம். இதைத் திருட்டுத் தனமாகப் படிப்பதா? அநாகரீகம்!

ஆனாலும் ஜெகன் டம்ளரில் தண்ணீர் எடுத்து வந்து ஒற்றை விரலால் தொட்டு பசை ஒட்டப்பட்டுள்ள பகுதியில் தடவி லேசாக ஊற வைத்து நகத்தால் நிமிண்டி கொஞ்சம் கூடக் கிழியாமல் அந்தக் கவரைப் பிரித்தான்.

'இது தப்புடா!' என்று உள்ளே ஒலித்தாலும் மெதுவாக நடுங்கும் விரல்களுடன் அந்தக் கடிதத்தை வெளியில் எடுத்தான் படித்தான்.



அன்புள்ள திரு. வெங்கி அய்யர் அவர்களுக்கு கும்பகோணம் ஆர்.ரங்கநாதன் எழுதிக் கொண்டது. நலம், நலமறிய ஆவல்.

தங்கள் மகள் ஸ்வாதியை எங்களுக்கு பரிபூரணமாகப் பிடித்திருக்கிறது. சீர்வரிசை விஷயத்தில் நீங்கள் பிடிவாதமாக இருக்காமல் இன்னும் ஒரு பத்து பவுனாவது சேர்த்துப் போட்டால் சிறப்பாக இருக்குமென்று கருதுகிறோம்.

தங்கள் பதிலுக்குப் பிறகு திருமண நிச்சயதார்த்தத் தேதியை முடிவு செய்யத் தயாராய் இருக்கிறோம்.

இப்படிக்கு

ஆர்.ரங்கநாதன்.

படித்ததும் வியர்த்துப் போனது ஜெகனுக்கு.

உள்ளே புத்தி கோணலாக வேலை செய்யத் துவங்கியது.

இந்தக் கடிதத்தை வெங்கி அய்யர் பார்த்தால் 'பத்து பவுன் தானே அதிகம் கேட்கிறார்கள். இதற்காக ஒரு நல்ல சம்பந்தத்தை ஏன் இழக்க வேண்டும்' என்றுதான் யோசிப்பார். சம்மதம் தெரிவிப்பார். திருமணம் நிச்சயமாகி விடும்.

கூடாது. இந்தத் திருமணம் நிச்சயமாகக் கூடாது.

இதில் ஸ்வாதிக்கு முழுமனச் சம்மதமும் இல்லை. எதிர்த்துப் பேசி பழகாதவள் என்பதால் சம்மதிப்பாள். எனக்கும் ஸ்வாதியை இழக்கப் பிரியமில்லை.

என்ன செய்யலாம்?

ஜெகன் அந்தக் கடிதத்தைச் சுக்கு நூறாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டான்.

ஒரு வெள்ளைக் காகிதம் எடுத்து எழுதத் துவங்கினான்.

அன்புள்ள திரு. வெங்கி அய்யர் அவர்களுக்கு கும்பகோணம் ஆர்.ரங்கநாதன் எழுதிக் கொண்டது. நலம், நலமறிய ஆவல்.

சீர்வரிசை விவகாரமும் மனதிற்கு திருப்தியாக இல்லை. பெண்ணும் முழு திருப்தி இல்லை என்று என் மகன் சொல்கிறான். எனவே தாங்கள் வேறு இடம் பார்த்துக் கொள்ளுங்கள்.

இப்படிக்கு

ஆர்.ரங்கநாதன்

எழுதிய கடிதத்தை எடுத்து கவருக்குள் வைத்து லேசாக கம் தடவி முன்போலவே ஒட்டினான்.

இன்னொரு யோசனை தோன்றியது. ஒருவேளை அந்த ரங்கநாதன் நான்கு தினங்கள் கழித்துப் போனில் விசாரித்தால்?

இன்னொரு காகிதம் எடுத்தான். எழுதினான்.

'மதிப்பிற்குரிய திரு. ஆர்.ரங்கநாதன் அவர்களுக்கு வெங்கி அய்யர் எழுதியது. தங்கள் கடிதம் கிடைத்தது.

தாங்கள் சீரிலேயே குறிப்பாக இருப்பது எங்களுக்குப் பிடிக்கவில்லை. தவிரவும் தங்கள் மகனை என் மகளுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்பதும் உண்மை. எனவே இது தொடர்பாகக் கடிதம் மூலமோ, போன் மூலமோ எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாம்.

இப்படிக்கு,

வெங்கி அய்யர்.

ஒரு காலி உறை எடுத்துக் கும்பகோணம் விலாசம் எழுதினான். கடிதம் உள்ளே வைத்து ஒட்டி, ஸ்டாம்ப் ஒட்டினான்.

முதல் காரியமாக தெருமுனைக்குச் சென்று அதை தபாலில் சேர்த்துவிட்டு திரும்பி வரும்போது வெங்கி அய்யர் வீட்டுக் கதவின் கீழ் இடுக்கு வழியாக அவருக்கு வந்த கவரை உள்ளேத் தள்ளிவிட்டு அறைக்கு வந்தான்.



செய்த காரியத்தில் அநியாயம் இருப்பதாகவும் பட்டது. நியாயம் இருப்பதாகவும் பட்டது. ஸ்வாதியின் நன்மைக்காக... முளை விட்டிருக்கும் புதிய காதல் துளிர் விடுவதற்காக... என்று சமாதானப் படுத்திக் கொண்டான்.



வெங்கி அய்யர் சுழலும் மின் விசிறியைப் பார்த்தபடி ஈஸி சேரில் சாய்ந்து அமர்ந்திருந்தார். மீனாட்சி செம்பில் தண்ணீர் எடுத்து வந்து அவர் அருகில் வைத்தாள்.

''என்னங்க யோசனை பண்ணிட்டிருக்கீங்க?''

''நம்ம பொண்ணுக்கு என்னடி குறைச்சல்? பிடிக்கலைன்னு எழுதிட்டாங்களே சரஸ்வதி.''

''அவங்க கிடக்கிறாங்க விடுங்க. அவங்களுக்கு பொண்ணைப் பிடிச்சிருக்கு. அந்த எழுபத்தி அஞ்சு பவுன்லயே குறியா இருக்காங்க. விடுங்க. வேற இடம் பாருங்க.''

''அதில்லைம்மா. வந்ததில இந்த ஜாதகத்துலதான் பதினோரு பொருத்தம் இருந்திச்சி. பலன்களும் அமோகமா இருந்திச்சி.''

''அதுக்கு என்ன பண்றது?''

''பிடிக்கலைன்னு எழுதறதிலயும் ஒரு நாகரீகம் வேணாமா சரஸ்வதி?''

இதுக்கு முன்னாடி மூணு லெட்டர் இது சம்பந்தமா அந்த ரங்கநாதன் எழுதியிருந்தார். இந்தத் தடவை வேற யாரையோ விட்டு எழுதச் சொல்லிட்டார். இது என்னை அவமானப்படுத்தற மாதிரி இருக்கு.''

''அவங்களுக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான். இதுக்கெல்லாம் ஏன் வருத்தப் படறீங்க? மாப்பிள்ளை வீட்டுக்காரங்கன்னாலே தனி திமிர் வந்துடுமே. நீங்க வேற இடம் பாருங்க.''

''ஸ்வாதி வருத்தப் பட்டாளா?''

''அப்படி ஒண்ணும் தெரியலை. எப்பவும் மாதிரிதான் இருக்கா.''

செம்பெடுத்து தண்ணீர் குடித்தார் வெங்கி அய்யர்.

★ ★ ★

வெளியே சென்று விட்டு தன் அறைக்குத் திரும்பிய ஜெகன் மொட்டை மாடியில் ஒரு நாற்காலி போட்டுக் கொண்டு கையில் ஒரு நீளமான குச்சி வைத்துக்கொண்டு ஸ்வாதி உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். வெயிலுக்காக நாற்காலியின் முதுகில் ஒரு விரித்த குடை சணல் போட்டுக் கட்டியிருந்தது. தரையில் பழைய வேஷ்டியில் வடாம் பிழியப்பட்டிருந்தது.

அறைக்குச் செல்லாமல் அவளருகில் வந்தான்.

சத்தம் கேட்டு ஆனந்த விகடனிலிருந்து நிமிர்ந்தாள்.

''என்ன, காக்கா ஓட்டிக்கிட்டிருக்கீங்களா?''

''ஆமாம்'' என்று சிரித்தாள்.

''ஜிமிக்கி புதுசா?''

''ஆமாம், எப்படி தெரியும்?''

''இதுவரைக்கும் நீங்க இந்த டிசைன் போட்டதில்லையே...''

அவள் மௌனமானாள்.

''கும்பகோணத்திலேர்ந்து தபால் இன்னும் வரலையா?''

''நேத்து வந்துடுச்சி?''

''அப்படியா? என்ன சொல்றாங்க?''

''அவங்களுக்கு என்னைப் பிடிக்கலையாம்.''

''இது ரொம்ப அநியாயம்!''

''அப்பாவுக்கு அதுலகூட வருத்தமில்லை. அவங்க வேற யாரையோ விட்டு லெட்டர் எழுதியிருக்காங்கன்னு கோபம்.''



இருக்கென்றது ஜெகனுக்கு.

''சில பேர் நல்ல விஷயம்னாதான் அவங்களே எழுதுவாங்க. மத்ததெல்லாம் யாரையாச்சும் விட்டு எழுதச் சொல்வாங்க.''

''அப்பாவுக்கு அவமானப் படுத்திட்டதா கோபம்.''

''விடுங்க... நீங்க என்ன நினைக்கிறிங்க?''

''எனக்கும் இது திமிராத்தான் படுது.''

''அதில்லை. உங்களைப் பிடிக்கலைன்னு சொல்லியிருக்கிறது...''

''எனக்கு அதில் வருத்தமில்லை.''

''ஏன்?''

''அன்னைக்குத்தான் சொன்னேனே... மாப்பிள்ளையைப் பார்த்துக் கொஞ்சம் பயமா இருக்குன்னு. அதனால இந்த இடம் அமையாமல் போனதில் எனக்கு உள்ளுக்குள்ளே கொஞ்சம் சந்தோஷமாவே இருக்கு.''

''எனக்குத் தெரியும் - நீங்க வருத்தப்பட மாட்டிங்கன்னு.''

''வேலை விஷயமாத்தான் வெளில போயிட்டு வர்றீங்களா?''

''ஆமாம்.''

''என்ன நிலைமை?''

''முயற்சி பண்ணிட்டுதான் இருக்கேன். மூவாயிரம் சம்பளத்துல ஒரு வேலை கிடைக்கிற மாதிரி இருக்கு. ஆனா தற்காலிகம்னு சொல்றாங்க. அதான் யோசிக்கிறேன்.''

''ஏதோ ஒரு வருமானம் வேணுமே...''

''இந்த மாசத்துக்குள்ளே ஏற்படுத்திடுவேன்.''

''அதுக்கப்புறம்?''

''அதுக்கப்புறம்தான் எந்தப் பிரச்சினையும் இல்லையே...''

''நான் அதைக் கேக்கலை. வேலை கிடைச்சதுக்கப்புறம் இங்கேர்ந்து போயிடுவீங்களா?''

அவள் கேள்வியில் ஏக்கம் அடிக்கோடிட்டிருந்தது.

''அதானே நியாயம். சிவாவுக்கு தொந்தரவு கொடுக்கறேனோன்னு இப்பவே உறுத்தலா இருக்குது. உங்கப்பா இதே மாதிரி இன்னொரு ரூம் கட்டியிருந்தா நிம்மதியா உங்க வீட்லயே இருந்துடுவேன். எனக்கு இங்கதான் வசதி.''

''இந்த ரூம்ல என்ன பிரமாதமா வசதி இருக்கு?''

''ரூம் வசதி எப்படி இருந்தாலும்... நல்ல மனுஷங்களோட பழக்கம் எல்லா இடத்திலயும் கிடைக்குமா?''

''சிவாவையும் எங்கப்பாவையும் சொல்றிங்களா?''

''அவங்க ரெண்டு பேர் மட்டும்தான் இங்கே நல்லவங்களா?''

''எங்கம்மாகூட இருக்காங்க.''

''ஏன், நீங்க?''

''நான் நல்லவன்னு உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும்.''

''எப்படித் தெரியும்?''

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.''

அவள் சட்டென்று குனிந்து கொண்டு ''அகம் மட்டும்தான் அழகா?'' என்று குறும்பாகக் கேட்க...

ஜெகன் உள்ளுக்குள் விசிலடித்தான்.

உதடுகள் 'சொல்லி விடு, சொல்லிவிடு' என்று துடித்தன.

''தங்க விக்கிரகம்னு அன்னைக்கே சொன்னேனே...'' என்றான் வேறு பக்கம் பார்த்துக் கொண்டு.

''விக்கிரகத்துக்கு உயிர் இல்லையே...''

''சரி, ஒரு திருத்தம். உயிருள்ள தங்க விக்கிரகம்!''



''நிஜமாவா?''

''ஸ்வாதி! நீங்க என்ன நினைச்சுட்டாலும் சரி, சொல்லிடறேன். எனக்கு... எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு.''

அவள் கன்னம் சிவந்தாள். புன்னகைத்தாள்.

சட்டென்று எழுந்து வேகமாகப் படியிறங்கிச் சென்று விட்டாள்.

அந்தப் புன்னகை அங்கீகாரம் அவனை ஓவென்று உற்சாகமாகக் கத்தத் தூண்டியது. அடக்கிக் கொண்டான்.



கோயிலில் சுவாமி சன்னிதியில் தீபாராதனை முடியும் வரைக் காத்திருந்து, தொட்டுக் கும்பிட்டு நெற்றியில் விபூதி, குங்குமம் வைத்துக் கொண்டு பிரகாரம் சுற்றி வரும்போது பிரகாரத்தில் ஒரு படியில் உட்கார்ந்திருந்த ஜெகனைப் பார்த்தாள் ஸ்வாதி. அருகில் வந்தாள்.

''என்ன இது ஆச்சரியமா இருக்கு?''

''எது?''

''கோயிலுக்கு வருவீங்களா நீங்க?''

''ம். அம்பாள் தரிசனத்துக்காக.''

''இது முருகன் கோவில்.''

''நான் சொன்னது ஸ்வாதி அம்பாள். உட்காரு.''

''ம்கூம். யாராவது பார்த்துட்டுப் போய் எங்கப்பா கிட்ட சொல்லிடுவாங்க.''

''சொல்லட்டும். நீயா சொல்ற வேலை மிச்சம். உட்காரு.''

''மாட்டேன்.''

''உட்கார்ந்தா 'உங்க வீட்டு மாடியில புதுசா வந்த பையன்கூட உட்கார்ந்துப் பேசிட்டிருந்தா'ன்னு சொல்லப்

போறாங்க. நின்னுக்கிட்டேயிருந்தா அதையே கொஞ்சம் மாத்தி நின்னுக்கிட்டே பேசிட்டிருந்தா'ன்னு சொல்லப் போறாங்க. அவ்வளவுதான் வித்தியாசம். அட! உட்காரு ஸ்வாதி!''

அவள் கைகளைப் பற்றித் தன் அருகில் அமர்த்தினான்.

''என்ன, நீங்க தொடறீங்க?''

''தொடாம எப்படி காதலிக்கிறதாம்?''

''உங்களைக் காதலிக்கறதா யார் சொன்னாங்களாம்?''

''இல்லைன்னா விடு. நான் மட்டும் காதலிச்சுட்டுப் போறேன். ஒன் சைடு லவ்வை யார் என்ன பண்ண முடியும்? நான் கற்பனையில உனக்கு முத்தம் கொடுத்தா நீ என்ன செய்வே?''

''ச்சீ!''

''இதில வெக்கம் என்ன? கற்பனைதானே? இப்ப கற்பனையில நான் உன் கன்னத்துல முத்தம் கொடுத்துட்டேனாம்...''

''கன்னத்திலயா?''

''ஆமாம். கற்பனையிலயும் என்ன ஒரு பண்பாடு பார்த்தியா? இப்போ கற்பனையில நீ எனக்கு முத்தம் கொடுக்கணும்.''

''மாட்டேன்.''

''அட! கற்பனைதானே! கண்ணை மூடிக்கோ. மனசில முத்தம் கொடு. கொடுத்துட்டேன்னு சொல்லு. அது எனக்கு சேர்ந்துடும்.''

''சரி. போனாப் போகுது. கற்பனைதானே?''

''ம்.. கொடுத்தாச்சு.''

''ஜெகன். ஏதாச்சும் சீரியஸா பேசுவோமா?''

''லவ் பண்றது உனக்கு சீரியஸான விஷயமா தெரியலையா?'' இதென்ன பொழுது போகாம விளையாட்டு பண்ணிட்டிருக்கமா?''



''பயமா இருக்கு ஜெகன்.''

''என்ன பயம்?''

''அப்பாவுக்குத் தெரிஞ்சா?''

''காதலிக்கிறப்ப காமனைத்தான் நினைக்கணும். அப்பனை நினைக்கக் கூடாது.''

''முந்தா நாள் நீங்க கொடுத்த லெட்டரை படிச்சிட்டிருந்தப்போ திடீர்னு அப்பா வந்துட்டார். நான் அதை மறைக்கிறதுக்குப் பட்ட பாடு...''

''நீ எங்கே எப்படி மறைச்சிருப்பேன்னு எனக்குத் தெரியும்.''

''அதான் கிட்டத்தட்ட தினம் சந்திக்கிறோமே, அப்புறம் லெட்டர் வேற எதுக்கு எழுதிக்கிறோம்?''

''பாவம்! நீயும் மாடிக்கு வர்றதுக்கு தினம் புதுசு புதுசா சாக்கு கண்டுபிடிக்க வேண்டியதா இருக்கு. நாலு தொட்டிச் செடி வாங்கி மொட்டை மாடில வெச்சிட்டு அதுக்கு தண்ணி ஊத்தறதா சொல்லிட்டு வர்றே. அப்படியும் திடீர் திடீர்னு உங்கம்மா கூப்புட்டுடறாங்க. பேச நினைக்கிறதெல்லாம் பேச முடியறதில்லை. அதனாலதான் லெட்டர்ஸ்.''

''காதல் சுலபமா பண்ணிட்டீங்க. வேலை எப்ப வாங்கப் போறீங்க?''

''காதல் சுலபமா செஞ்சேனா?'' என்று ஆரம்பித்தவன் சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டான். அந்த லெட்டர் அந்த வேலையைப் பற்றி இப்போது சொல்ல வேண்டாம் என்று நினைத்துக் கொண்டான்.



**வெ**ங்கி அய்யர், ஊஞ்சலில் மெதுவாக அசைந்தபடி கார்ட்லெஸ் போனில் பேசிக் கொண்டிருந்தார்.

''என்ன தேதி சொன்னீங்க? இருபத்தி நாலு, இருபத்தி ஏழு, முப்பதா? ஒரு நிமிஷம் லைன்ல இருங்க கையோட குறிச்சுக்கறேன்.''

வெங்கி அய்யர் ஒரு துண்டுக் காகிதம் தேடினார். கண்களில் எதுவும் படாததால் போனோடு அருகில் இருந்த ஸ்வாதியின் அறைக்கு வந்தார்.

அவள் மேஜை டிராயரை இழுத்து, டைரியை எடுத்துப் புரட்டிக் கொண்டு பேனா எடுத்து ஏதோ ஒரு பக்கத்தில் அவசரமாகக் கிறுக்கிக் கொண்டார்.

''ரைட்டு. நான் பலாபலன்கள் பார்த்துட்டு எந்த தேதியில திறப்பு விழாவை வெச்சுக்கிட்டா சிறப்பா இருக்கும்னு சொல்றேன்.''

போனை வைத்து விட்டு அந்த டைரியைக் கையில் எடுத்தபோது அது தவறி கீழே விழுந்தது.

உள்ளேயிருந்து நிறையக் கடிதங்கள் சிதறின.

புருவத்தில் முடிச்சு விழ குனிந்து எடுத்தார்.

ஒன்றைப் பிரித்தார்.

'என் இனிய ஸ்வாதி விக்கிரகத்திற்கு முத்தங்களுடன் உன் ஜெகன் எழுதியது...'

வெங்கி அய்யருக்கு விரல்கள் நடுங்கின. கண்கள் சிவந்தன.

''சரஸ்வதி?'' கத்தினார்.

''ஏங்க இப்படி கத்தறீங்க?''

வந்த மீனாட்சியிடம் கடிதங்களை விசிறினார்.

''பாரு! படிச்சிப் பாரு! நீ பொண்ணை வளர்த்திருக்கிற லட்சணம் தெரியும்!''

மீனாட்சி படித்து விட்டுத் திடுக்கிட்டாள்.

''சொல்லு! சொல்லுடி! உனக்குத் தெரிஞ்சிதான் நடக்குதா இந்தக் கடிதக் கூத்து? ம்? சொல்லு!''



''அய்யோ! சத்தியமா எனக்கு எதுவுமே தெரியாதுங்க.''

''எங்கடி ஸ்வாதி?''

''கோயிலுக்குப் போயிருக்கா?''

''எதுக்கு? வீட்ல பண்ற பாவத்துக்கு விமோசனம் தேடறதுக்கா? போ! போய் அவளை உடனே கூட்டிட்டு வா.''

''அவளா வரட்டுமே. இப்ப வந்துடுவா. பொறுமையா என்ன ஏதுன்னு விசாரிப்போம்.''

''பொறுமையா விசாரிக்கிற காரியமா பண்ணிருக்கா? பொறுக்கித் தனம் பண்ணியிருக்கா. ஒரு லெட்டர்ல என்ன எழுதியிருக்கான் படிச்சியா இல்லையா? நேற்று நீ தந்த முத்தம் தித்தித்ததுன்னு எழுதிருக்காண்டி. முத்தம் மட்டும்தான் கொடுத்தாளா இல்லை மொத்தத்தையும் கொடுத்துட்டாளா?''

''அய்யோ! ஏங்க இப்படியெல்லாம் பேசறீங்க. அவ சின்னப் பொண்ணுங்க. ஏதோ புத்தியில்லாம...''

''அவளுக்குப் பரிஞ்சிட்டு வந்தேன்னா உன்னைத் தொலைச்சுடுவேன். ஆமாம்! சின்னப் பொண்ணு பண்ற காரியமாடி பண்ணிருக்கா? புத்தியில்லாம பண்ற காரியமாடி இது?''

''அந்தப் பையன் ஏதோ விளையாட்டா எழுதி இருப்பான்... விசாரிப்பமே...''

''விளையாட்டா? முத்தம் கொடுத்துக்கறது விளையாட்டா? என்ன விளையாட்டு? அம்மா - அப்பா விளையாட்டு? ஒரு பக்கம் நான் அவளுக்கு தீவிரமா மாப்பிள்ளை பார்த்துட்டிருக்கேன். இவ என்னன்னா...''

கோபமாகப் பேசியவர் சட்டென்று பேச்சை நிறுத்தினார்.

''இருடி.... வர்றேன்.''

வேகமாகத் தன்னுடைய அறைக்குச் சென்று பீரோவைத் திறந்தார். ஒரு ஃபைல் எடுத்தார். அவசரமாகப் புரட்டினார். கும்பகோணத்திலிருந்து தபாலில் வந்த 'அந்த'க் கடிதத்தைப் பிய்த்து எடுத்துக் கொண்டு வேகமாகத் திரும்பி வந்தார்.

ஜெகன் எழுதின காதல் கடிதங்களில் ஒன்றை எடுத்தார். இரண்டு கையெழுத்துக்களையும் ஒப்பிட்டுப் பார்த்தார்.

''இதோ பார்த்தியா? மனுஷனாடி அவன்?''

''யாரைச் சொல்றீங்க?''

''உன் அருமை பொண்ணுகிட்ட முத்தம் வாங்கிருக்காளே அந்தப் பொறுக்கி ராஸ்கல் ஜெகனைத்தான் சொல்றேன். அவன் கையெழுத்துதாண்டி இது! கும்பகோணத்திலிருந்து வந்த லெட்டர்ல அவன் கையெழுத்து.''

''அப்படின்னா என்னங்க அர்த்தம்?''

''இவன் தில்லுமுல்லு பண்ணிட்டான்னு அர்த்தம்.''

''இவன் எப்படிங்க பண்ண முடியும்?''

''என்ன பேசறே? பெருமாளே பக்கத்தில துணையா இருந்தா அய்யர் தயவு எதுக்குடி வேணும்? உன் பொண்ணு சொல்லிருப்பா. இதான் அட்ரஸ். இதான் பேரு. இந்த மாதிரி எழுதி இந்தக் கல்யாணத்தை நிறுத்திடுங்கன்னு உன் பொண்ணு கதை, வசனம் எழுதிக் கொடுத்திருப்பா. அவன் டைரக்ஷன் பண்ணிட்டான்.''

''பதறாம இருங்க. கொஞ்சம் தண்ணி குடிக்கிறீங்களா?''

''தண்ணியடிக்கறீங்களான்னு கேளு! அப்பதான் இப்ப நடக்கறதெல்லாம் சகிச்சுக்க முடியும் போலிருக்கு.''

வீட்டுக்குள் உற்சாகமாக அர்ச்சனைக் கூடையுடன் நுழைந்தாள் ஸ்வாதி. தன் அறையிலிருந்து பேச்சுக்குரல் வர... அங்கு வந்தாள்.

தரையெங்கும் கடிதங்கள். ஆவேசமாக அப்பா, அழுதபடி அம்மா.



அவளுக்குச் சட்டென்று சூழ்நிலை புரிந்தது.

''வாம்மா... தவமிருந்து பெத்தெடுத்த திருமகளே... உங்கப்பாவும் அம்மாவும் சீக்கிரத்துல செத்துப் போயிடணும்னு சாமிகிட்ட வேண்டிக்கிட்டு வந்தியா?'' என்றார் வெங்கி அய்யர்.

''அப்பா!''

''நீ பண்ணிருக்கிற காரியத்துக்கு நாங்களே தூக்குல தொங்குறோம். சாமிக்கு எதுக்கு அநாவசியமா வேலை?'' என்றாள் அம்மா.

''அம்மா!''

வெங்கி அய்யர் நிதானமாக அடி வைத்து அவளை நோக்கி வந்தார். அவள் முகத்தையே உதடுகள் துடிக்கப் பார்த்தார்.

பளாரென்று அறைந்தார்.

அறையின் மூலைச் சுவரில் மோதிச் சிதறியது அர்ச்சனைக் கூடை.

## 10



**கை**களைக் கட்டியபடி அமைதியாக உட்கார்ந்திருந்தான் ஜெகன்.

எதிரே கோபம் கொப்புளிக்க ஊஞ்சலில் வெங்கி அய்யர். அவருக்கு அருகில் மீனாட்சி பதட்டத்துடன். ஜெகனுக்கு அருகில் சிவா அமர்ந்திருந்தான்.

அடுத்த அறையில் கதவுக்குப் பின்னால் நின்றபடி காதுகளை இங்கே செலுத்தியிருந்தாள் ஸ்வாதி.

''இப்ப என்ன செய்யலாம் சார்?'' என்றான் சிவா.

''நீயே சொல்லுப்பா. எது நியாயம்னு நீயே சொல்லு. எனக்குன்னு இந்த அக்ரஹாரத்துல ஒரு கௌரவம் இருக்கு. கல்யாணம்ங்கிறது சின்ன விஷயம் இல்லை'' என்றார் வெங்கி அய்யர்.

''காதலும் சின்ன விஷயம் இல்லை சார்'' என்றான் ஜெகன்.

''நீ பேசாதே! படவா ராஸ்கல்! திருட்டு சதி பண்ணின நீ பேசாதேடா!''

''இது என் வாழ்க்கை. நான்தான் சார் பேசியாகணும்!''

''ஒண்ணும் தெரியாத பொண்ணு மனசுல விஷமேத்தின பாவிடா நீ!''

''ஸ்வாதி மனசில அன்புதான் சார் ஏற்பட்டது. அதுவும் நான் ஏற்படுத்தலை அதுவா உருவானது.''

''என்னை எதிர்த்து ஒரு வார்த்தை பேசாத அவ இன்னைக்கு எவனோ திடீர்னு வந்தவனுக்கு சப்போர்ட்டாப் பேசறான்னா என்ன அர்த்தம்?''

''அந்த எவனோ ஒருத்தன் தன் வாழ்நாள் பூரா சப்போர்ட்டா வருவான்னு மனசுல ஏற்பட்ட நம்பிக்கைன்னு அர்த்தம்!''

''நீ பேசாதேன்னு சொன்னேன்.''

''காதலிச்சிட்டுருக்கிறது நான்தான் சார். என்னைப் பேசாதே பேசாதேன்னு சொன்னா எப்படி?''

''பெரிய காதல்! புடலங்கா காதல்!''

''கற்கண்டு இனிக்கும்னு அனுபவிச்சவன் தான் சொல்ல முடியும். அதை கண்ணால கூடப் பார்க்காதவனால கண்டிப்பா புரிஞ்சுக்க முடியாது சார்!''

''இந்த மாதிரிப் பேசிப் பேசி என் பொண்ணை மயக்கிட்டே! நான் அவளைத் திட்டிப் பார்த்துட்டேன். அடிச்சுப் பார்த்துட்டேன். இதமா சொல்லிப் பார்த்துட்டேன். இந்த ஒரு வாரத்துல அவ மனசை மாத்தறதுக்கு என்னவெல்லாமோ செஞ்சிப் பார்த்துட்டேன். உன்னைத்தான் கட்டிக்குவேன்னு பிடிவாதமா நிக்கிறான்னா... நீ மயக்கியிருக்கேன்னுதான் அர்த்தம்.''

''நான் என்ன மந்திரவாதியா?''

''இடக்கு பேசாதே!''



''மை போட்டு மயக்கற விஷயமில்லை சார் காதல்!''

''இவ்வளவு வியாக்யானமாப் பேசறவனுக்கு இன்னொருத்தனுக்கு வந்த தபாலைத் திருடிப் படிக்கிறதும், அதில் நில்லுமுல்லு பண்றதும் அநாகரீகம், நியாயம்னு தோணலையோ?''

''தப்புதான் சார். நான் செஞ்சது தப்புதான். மனசில இருந்த காதலோட வேகம் என்னை அப்படி நடந்துக்க வச்சிருச்சி. ஆனா நான் அப்படி செஞ்சதுக்கு இன்னொரு காரணமும் உண்டு.''

''என்ன?''

''உங்க மகளோட கல்யாண வாழ்க்கை திருப்தியா அமையணும்னு நினைச்சிதான் அப்படி செஞ்சேன்.''

''நடக்க இருந்த கல்யாணத்தை நிறுத்திட்டா எப்படி திருப்தியா அமையும்?''

''திருப்தியில்லாத கல்யாணத்தைத்தான் நான் நிறுத்தினேன். ஸ்வாதிக்கு நீங்க பார்த்த மாப்பிள்ளை பிடிக்கலை சார்.''

''உனக்கு எப்படிப் பிடிக்கும்?''

''எனக்கில்லை சார். ஸ்வாதிக்குப் பிடிக்கலை சார்.''

''யார் சொன்னது?''

''ஸ்வாதியே என்கிட்ட சொன்னா. உங்ககிட்ட தன் விருப்பத்தைச் சொல்ல தயக்கம்! பயம்! அப்படி வளர்த்திருக்கீங்க!''

''இல்லை. நீ பொய் சொல்றே!''

''இங்கதானே இருக்கா உங்க பொண்ணு. வேணும்னா கூப்பிட்டு விசாரிங்க. இவ்வளவு ஆனப்புறம் கண்டிப்பா அவ உண்மையைச் சொல்லுவா. நான் அந்தக் கல்யாணத்தை நிறுத்தினப்போ அவ எதிர்காலம்தான் முக்கியமா நினைச்சேன். என் காதலை இரண்டாம் பட்சமாத்தான் நினைச்சேன்.''

''ஒருவேளை என் பொண்ணு தனக்குப் பார்த்திருக்கிற மாப்பிள்ளை பிடிச்சிருக்கிறதா சொல்லியிருந்தா...?''

''அந்த லெட்டரை தொட்டுக்கூடப் பார்த்திருக்க மாட்டேன் சார். என் காதலை உள்ளுக்குள்ளேயே உடைச்சிப் போட்டிருப்பேன்.''

''அதையே இப்பவும் செய்யின்னு சொல்றேன். ஸ்வாதிக்குப் பிடிச்ச வேற மாப்பிள்ளையை நான் பார்த்து கட்டி வெச்சுக்கிறேன்னு சொல்றேன்.''

''இதுக்கு இப்ப அவளும் சம்மதிக்க மாட்டா. நானும் சம்மதிக்க மாட்டேன்.''

''ஏன்?''

''அப்போ நாங்க காதலை வெளிப்படுத்திக்கலை. இப்ப நாங்க காதலர்கள் பல தடவை பார்த்தாச்சு. பேசியாச்சு. பழகியாச்சு, உனக்கு நான்தான் எனக்கு நீதான்னு நெஞ்சில அழுத்தமா எழுதியாச்சு!''

''தாலி எதுவும் கட்டிடலையே?''

''அது வெறும் சம்பிரதாயம் சார். சமூக அங்கீகாரம்.''

''அந்த அங்கீகாரம் வேணும்னு புரியுதா இல்லையா?''

''அது உங்க சம்மதத்தோட கிடைக்கணும்னுதான் பொறுமையா இருந்தோம்.''

''இல்லைன்னா?''

''தாலி கட்டி தம்பதியா உங்களைப் பார்க்க வந்திருப்போம். எங்களுக்கு உங்க சம்மதம் வேணும். ஆசீர்வாதம் வேணும்.''

''அது கிடைக்காது. அப்புறம்?''

''கிடைக்கும் சார். நீங்க மனசு மாறுவீங்க.''

''மாட்டேன். என் கௌரவம் பத்தி நீங்க ரெண்டு பேரும் யோசிக்கிறதாவே இல்லையா?''

''காதலை ஆதரிச்சா கௌரவம் கெட்டுமா?''



''கண்டிப்பா! நீ என்ன ஜாதி? நான் என்ன ஜாதி?''

''எந்தக் காலத்துல சார் இருக்கீங்க நீங்க?''

''ஏன், இந்தக் காலத்துல ஜாதியை ஒழிச்சுட்டிங்களா? தென் மாவட்டத்துல நடக்கற கலவரம் எல்லாம் சோத்துச் சண்டையா?''

''அது வேற விவகாரம். இன்னைக்குக் காதலை ஆதரிச்சா யாரும் கேவலமா பார்க்கிறதில்லை. உங்க விசாலமான மனசைப் புரிஞ்சுக்கிட்டு பாராட்டத்தான் செய்வாங்க.''

''என் கேள்வி - நான் பிடிவாதமா மறுத்தா நீ என்ன செய்வே? என் பொண்ணை தூக்கிட்டுப் போயிடுவியா? சொல்லு!''

''எதுக்கு சார் தூக்கிட்டுப் போகணும்? அவளுக்கு அதுல இஷ்டமில்லைன்னாதானே கட்டாயப்படுத்தணும். இப்ப இந்த நிமிஷம் 'ஸ்வாதி, வாம்மா போயிடலாம்'னு நான் சொன்னா அவ உடனே வரத் தயாரா இருக்கா. இதை நடத்திக் காட்டி உங்க தன்மானத்தைக் காயப்படுத்த நான் விரும்பலை. எனக்கு அப்படி ஒரு கல்யாணம் நடத்தறதில விருப்பம் இல்லை. எனக்கு இதை முறைமா, மனப்பூர்வ ஆசீர்வாதத்தோட நடத்தணும்னுதான் ஆசை.''

''எனக்கு இஷ்டமே இல்லாத ஒரு விஷயத்தை நான் எப்படி மனப்பூர்வமா ஆசீர்வாதம் செய்ய முடியும்?''

''முடியும் சார். பொறுமையா யோசிச்சுப் பார்த்தாப் போதும். கண்டிப்பா முடியும். கோபத்தைக் கழட்டி வெச்சிட்டு, நீங்க போட்டுக்கிட்டு இருக்கிற ஜாதியைக் கழட்டி வெச்சிட்டு, ஒரு மனுஷனா அன்போட யோசிச்சுப் பார்த்தா முடியும்.''

''எனக்கு புத்தி சொல்றியா?''

''அந்த அளவுக்கு எனக்கு அறிவும் இல்லை. அனுபவமும் இல்லை.''

''பின்னே? என்னப்பா சிவா... எங்க ரெண்டு பேரையும் பேசவிட்டு நீ வேடிக்கைப் பார்க்கறியா? நான்தான் தெளிவா எனக்கு இஷ்டமில்லைன்னு சொல்லிட்டேனே. உன் ஃபிரண்டுகிட்ட சொல்லி 'இனிமே என் பொண்ணை பார்க்க மாட்டேன்'னு சொல்லச் சொல்லு, உடனடியா இடத்தைக் காலி பண்ணச் சொல்லு.''

சிவா தவித்தான். ஜெகனைப் பார்த்தான். கதவுக்குப் பின்னாலிருந்து வந்த விசும்பலைக் கேட்டான்.

''சரி சார். ஸ்வாதியை இங்க கூப்பிடுங்க. 'எங்கப்பாதான் எனக்கு முக்கியம். என்னை மறந்துடுங்க. வெளியே போங்க'ன்னு ஸ்வாதி சொல்லிடட்டும். அதுக்கப்புறம் ஜெகனால எந்தத் தொந்தரவும் இல்லாம பார்த்துக்கறதுக்கு நான் கியாரண்டி'' என்றான்.

''அவ்வளவுதானே! ஸ்வாதி இங்க வா!''

ஸ்வாதி கண்ணீர் வழிய தயங்கி வந்து நின்றாள்.

''நாங்க பேசிட்டிருந்ததெல்லாம் கேட்டுக்கிட்டுத்தானே இருந்தே? வாயைத் திறந்து சொல்லு.''

ஸ்வாதி அமைதியாக நின்றாள்.

ஜெகன் தவிப்போடு காத்திருந்தான்.

''சொல்லுன்னு சொல்றேன்ல?''.

''என்னை மன்னிச்சிடுங்கப்பா. என்னால அப்படிச் சொல்ல முடியாது.''

விருட்டென்று உள்ளே ஓடினாள் ஸ்வாதி.

ஊஞ்சலின் ஆட்டம் நின்றது. வெங்கி அய்யரின் முகம் இறுகியது. எழுந்தார். திரும்பி சுவரில் மாட்டியிருந்த சுவாமிப் படங்களைப் பார்த்தார். கண்களை மூடியபடி கொஞ்ச நேரம் இருந்தார். திறந்தார்.

''ஸ்வாதி! இங்க வா!''

ஸ்வாதி மறுபடி வந்து நின்றாள்.



''நேத்து வந்தவன் மேல ஏற்பட்ட பிரியம். அவன் மேல நம்பிக்கை கொடுத்துடுச்சி. பெத்து வளர்த்த எங்க பாசம் கொடுத்த நம்பிக்கையை விட அது பெருசாப் போயிடுச்சி. ஆனா இந்த ரெண்டு நம்பிக்கையைவிட கடவுள் நம்பிக்கை பெருசுன்னு புத்திக்குப் புரியுதா? இல்லை கடவுள் நம்பிக்கையும் போயிடுச்சா? சொல்லு!''

''ஏன்ப்பா இப்படிக் கேக்கறிங்க? அந்தக் கடவுளாப் பார்த்து தான் இவரை என் துணைன்னு அடையாளம் காட்டியிருக்கிறதா நான் நினைக்கிறேன்.''

''அப்படியா? அப்போ அந்தக் கடவுளோட சம்மதமாவது முக்கியம்னு படுதில்லையா? என் பிடிவாதத்திலேர்ந்து இறங்கி வர்றேன். அவன் ஜாதகத்தைக் கொடுக்கச் சொல்லு. உன் ஜாதகத்தோட பொருத்தம் பார்க்கறேன். ரெண்டு ஜாதகமும் பொருந்தியிருந்தா உங்க கல்யாணத்துக்கு நான் சம்மதிக்கிறேன். சம்மதமா?''

''சரிப்பா'' என்றாள் ஸ்வாதி.

''ஏய் ஸ்வாதி! என்ன இது?'' பதறினான் ஜெகன்.

''அப்பா சொல்றது எனக்கும் நியாயமாத்தான் படுதுங்க.''

''என்ன பைத்தியக்காரத்தனமாப் பேசறே? நாம ரெண்டு பேரும் ஜாதகம் பொருந்தியிருக்கான்னு பார்த்துட்டா காதலிக்க ஆரம்பிச்சோம்?''

''ஜாதகத்திலயும் பொருத்தம் இருக்கறதாலத்தான் நமக்குள்ளே காதலே ஏற்பட்டுச்சிங்கறது என் நம்பிக்கைங்க.''

''எனக்கு ஜாதகத்தில நம்பிக்கை இல்லை ஸ்வாதி.''

''எனக்கு இருக்கே! நூறு சதவிகிதம் இருக்கு. இதில நீங்க தயங்கவே வேணாம். நம்ம ஜாதகம் எல்லா விஷயத்திலயும் கண்டிப்பா பொருந்திதான் இருக்கும். உங்க ஜாதகத்தைக் கொடுங்க.''

''என்கிட்ட ஜாதகமே இல்லை.''

''பொறந்த தேதியும் நேரமும் தெரிஞ்சாப் போதும்.''

''என்னடா சிவா இது?''

''ஜெகன்... அடுத்தவங்களோட நம்பிக்கைகளையும் உணர்ச்சிகளையும் மதிக்கிறதுதான் நாகரீகம். உன்னோட காதலை ஏதோ ஒரு வகையில அவர் ஏத்துக்க முன் வந்தது பெரிய விஷயம். உனக்கு நம்பிக்கை இல்லைன்னா என்ன ஸ்வாதி நம்பிக்கையா சொல்றப்ப எதுக்காக விதண்டாவாதம் பண்ணிட்டு இருக்கே?''

''ஸ்வாதி. என்னைப் பாரு! என் பிறந்ததேதி, நேரம் சொல்றேன். ஆனா எனக்குத் தெளிவா சொல்லு. ஒரு வேளை ரெண்டு ஜாதகமும் பொருந்தலைன்னா நீ என்னை மறந்துடுவியா?''

''கண்டிப்பாப் பொருந்தும்.''

''ஒருவேளை பொருந்தலைன்னா?''

''இந்தக் கேள்விக்கே இடமில்லை.''

''எப்படிச் சொல்றே?''

''உங்களுக்கு நம்ம காதல் ஜெயிக்கும்னு நம்பிக்கை இருக்கா?''

''இருக்கு நூறு சதவிகிதம் இருக்கு.''

''எப்படி ஜெயிக்கும்? என்ன உங்க நம்பிக்கையோட ஆதாரம்?''

''அது... அது...''

''விளக்கம் சொல்ல முடியலை இல்லை? ஒரு நம்பிக்கைதானே அது? அந்த மாதிரி எனக்குக் கடவுள் மேல நம்பிக்கை இருக்கு. நம்ம காதலும் பொருந்தும்'' என்றாள் ஸ்வாதி.

''இது என் பொண்ணு சம்பந்தப்பட்ட விஷயம். அதனால நான் வேற ஒரு அய்யரை நாளைக்கு வரச் சொல்லிடறேன். ஜாதகப் பொருத்தத்தையும், பலாபலன்களையும் அவரே பார்த்துச் சொல்லட்டும். எந்த முடிவையும் ஏத்துக்க நாம எல்லோரும் தயாரா இருப்போம்'' என்றார் வெங்கி அய்யர்.



11



மறுநாள்.

வெங்கி அய்யர் வீட்டின் ஹாலில் ஜமுக்காளம் விரித்து அனைவரும் உட்கார்ந்திருந்தார்கள்.

மற்றொரு அய்யர் பேப்பர், பேனாவோடு அமர்ந்திருந்தார்.

''பார்க்கலாமா?'' என்றார் அவர்.

வெங்கி அய்யர் தலையசைத்து சம்மதம் தெரிவித்ததும் அவர் கண் மூடி பிரார்த்தித்துவிட்டு பேனாவைத் திறந்தார்.

கண்ணாடி எடுத்து அணிந்து கொண்டார். காகிதத்தில் கணக்குகள் போடத் துவங்கினார். இரண்டு ஜாதகங்களையும் எடுத்து நடுநடுவில் பார்த்துக் கொண்டார்.

ஜெகன் எரிச்சலோடு உட்கார்ந்திருந்தான். சிவாவிடம் திரும்பி, ''இது எதுவும் எனக்குப் பிடிக்கலை'' என்றான் ரகசியமாக.

''கொஞ்ச நேரம் பொறுமையா இரேன்'' என்றான் சிவா.

கண்களை மூடி ஏதோ ஸ்லோகத்தை முணுமுணுத்தபடி இருந்தாள் ஸ்வாதி. அவளருகில் மீனாட்சி பயபக்தியாக.

அந்த அய்யர் பேனாவை மூடி வைத்தார். கனைத்துக் கொண்டார்.

''வெங்கி அய்யருக்குத் தெரியாத விஷயம் இல்லை. இருந்தாலும் என்னைப் பார்க்கச் சொல்லிட்டிங்க. ரெண்டு ஜாதகத்தையும் பார்த்த மாத்திரத்தில் தெரியற விஷயம் இது. இருந்தாலும் ஏதாச்சும் சான்ஸ் இருக்கான்னு துருவிப் பார்த்தேன். யாரும் மன வருத்தப்படக் கூடாது. உண்மை கசப்பாகத்தான் இருக்கும். ரெண்டு ஜாதகமும் கொஞ்சம் கூடப் பொருந்தலை.''

ஸ்வாதி திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

''இவர் இதைத்தான் சொல்வார்னு நான் எதிர்பார்த்தேன்'' என்றான் ஜெகன்.

''சும்மா இரு ஜெகன். ஏன் சுவாமி. இன்னும் கொஞ்சம் நல்லா...'' என்று இழுத்தான் சிவா.

''ஜாதகம் பார்க்கத் தெரிஞ்ச யார்கிட்டே வேணும்னாலும் கொண்டு போய்க் காட்டுங்க. இதைத்தான் சொல்வாங்க. வெங்கி அய்யர் உத்தரவு கொடுக்கணும், புறப்பட்டுடுவா.''

''உங்களுக்கு தட்சணை?''

''சங்கடமான விஷயத்தைச் சொல்லிட்டு பணத்தை வாங்க மனசுக்குச் சங்கடமா இருக்கு. தட்சணை இருக்கட்டும், விடுங்க. நான் வர்றேன்...''

அவர் எழுந்து போனார்.

ஸ்வாதியைப் பார்த்தான் ஜெகன்.

அவள் கண்ணீர் பொங்க எழுந்து உள்ளேச் சென்றாள்.

வெங்கி அய்யர் இவர்கள் பக்கம் திரும்பினார்.

''உன் காதலுக்கு ஆயிரம் விளக்கம் கொடுத்தே. ஆனா கடவுள் உத்தரவு கிடைக்கலையேப்பா. நானும் என் கௌரவம், மரியாதை எல்லாத்தையும் தூக்கி ஓரமா வெச்சிட்டுதான் இறங்கினேன். என்ன பண்றது? யாருக்கு யாருன்னு மனுஷங்க தீர்மானிக்கிறதில்லை. அது எப்பவும் மேல இருக்கிறவன்தான் தீர்மானிக்கிறான்.''

ஜெகன் எதுவும் பேசாமல் எழுந்து விருட்டென்று வெளியேற, அவனைத் தொடர்ந்தான் சிவா.

ஜெகன் மறுபடியும் வந்து பதட்டமாகச் சிகரெட் பிடிக்கத் துவங்கினான்.

''நான்சென்ஸ்! இது சுத்த நான்சென்ஸ்!''

''பொறுமையா இரு ஜெகன்.''

''என்னடா பொறுமையா இருக்கறது? மனப் பொருத்தத்தை விட ஒரு பெரிய பொருத்தம் இல்லைடா! இவரு பார்த்தாரே கும்பகோணத்து மாப்பிள்ளை! பதினோரு பொருத்தமும் அமோகமாக இருக்கிறதா சொன்னாரே...



மனப் பொருத்தம் இருந்திச்சாடா? ஸ்வாதிக்கு அவனைப் பிடிச்சிருந்ததா?''

''சரி, விடு.''

''எப்படிடா விடறது?''

''விடாம என்ன பண்றது? ஸ்வாதிக்கு இதுல நம்பிக்கை இல்லைன்னா பரவால்லை. அவளுக்கே நம்பிக்கை இருக்கே.''

''அது ஏற்பட்ட நம்பிக்கை இல்லை. சின்ன வயசுலேர்ந்து ஏற்படுத்தப்பட்ட நம்பிக்கை. சரியா, தப்பான்னு பரிசீலனை பண்ணிப் பார்க்கற பக்குவம் அவளுக்கு இல்லை.''

''விட்டுடு. இதை இத்தோட விட்டுடு. அவளை மறந்துடு. நீ இங்கே இருக்க வேணாம். இது உன் நன்மைக்காகச் சொல்றேன். நீ வேற ஏரியாவில் ரூம் பார்த்துட்டுப் போயிடு. வேலை தேடு. மனசை அதில் செலுத்து.''

''எப்படிடா முடியும்?''

''நடக்க முடியாததை நினைச்சிட்டிருக்கிறதில அர்த்தம் இருக்கா?''

''இது நடக்க வேண்டிய விஷயம் சிவா. முட்டாள்தனமான நம்பிக்கையை தடையா வெச்சிருக்காங்க. மனசுல பலம் இருந்தா அந்தத் தடையை உடைக்கலாம்.''

''சரி, பலம் இல்லையே.''

''நான் ஏற்படுத்தறேன்.''

''என்ன செய்யப் போறே?''

''நான் ஒரே ஒரு தடவை ஸ்வாதியைப் பார்க்கணும். பேசணும்.''

''நீ என்ன பேசினாலும்...''

''நான் பேசிப் பார்க்கறேனே...''

''இப்ப வெங்கி அய்யர் அனுமதிக்க மாட்டாருடா.''

''அவர் அனுமதிச்சா நாங்க சந்திச்சோம்! உதவி பண்ணு.''

''அவளை கோயிலுக்கு ஈவினிங் வரச் சொல்லி ரெண்டு வரில ஒரு லெட்டர் தர்றேன். அதை அவகிட்ட சேர்த்துடு நான் பேசிப் பார்க்கறேன்.''

யோசனைக்குப் பிறகு ''சரி'' என்றான் சிவா.

## 12



**கோ**யில் பிரகாரத்தில் காத்திருந்தான் ஜெகன்.

ஸ்வாதி வருவாளா?

வந்துவிட்டாலே என் காதலை அவளால் உதற முடியாது என்பது உறுதியாகிவிடும். பேசிப் பார்க்க வாய்ப்பிருக்கிறது. வரவில்லை என்றால்... ச்சீ! வருவாள்! நம்பிக்கை இருக்கிறது.

கொலுசுச் சத்தம் கேட்டுத் திரும்பினான் ஸ்வாதி!

''ரொம்ப சந்தோஷம் ஸ்வாதி. உட்காரு.''

''சீக்கிரம் சொல்லுங்க. எதுக்கு வரச் சொன்னிங்க?''

''நம்ம எதிர்காலத்தை இவ்வளவு அர்ஜெண்ட்டா பேசணுமா''

அமைதியாக எதிரில் படியில் அமர்ந்தாள்.

''சொல்லு. எதுக்கு வந்தே?''

''நீங்கதானே வரச் சொன்னிங்க லெட்டர்ல.''

''என் வார்த்தைக்கு இன்னும் மதிப்பு வெச்சிருக்கே சந்தோஷம். ஸோ... ஜாதகம் பொருந்தலை. மேற்கொண்டு என்ன செய்யப் போறோம்.''

''என்ன செய்ய முடியும்?''

''மனசு இருந்தா எதுவும் செய்ய முடியும் ஸ்வாதி காதலைவிட கடவுள் பெரிய விஷயமா ஸ்வாதி?''

''இல்லையா? என்னை உருவாக்கினவர் கடவுள்.''



''உனக்குள்ளே காதலை ஏற்படுத்தினவர் யாரு? அதுவும் கடவுள்தானே?''

''இருக்கலாம். சரியா வராதுன்னு தீர்ப்பும் சொல்லிட்டாரே.''

''இதுதான் தீர்ப்புன்னு நடுவுல உன் மனசை எதுக்காக அவர் அலைக்கழிக்கணும்? எதுக்கு உன் மனசோட விளையாடிப் பார்க்கணும்?''

''இது... அவர் நடத்தற சோதனை!''

''நீ ஏன் தீர்ப்பை மீறினே? அது தப்பில்லையா?''

''நான் எங்கே மீறினேன்?'

''இப்ப ரகசியமா என்னைத் தேடி வந்திருக்கே. இது மீறல் இல்லையா? இதுக்குக் காரணம் காதல்தானே?''

''இல்லை. இது நாகரிகம். இவ்வளவு பழகிட்டு கடைசியா சந்திச்சுப் பேசாம இருக்கறது அநாகரிகம்னு பட்டுது.''

''அப்ப உன் மனசில இந்த நிமிஷம் காதல் எதுவும் இல்லை? ஜாதகம் பொருந்தலைன்னு சொன்னதும் துடைச்சி சுத்தம் பண்ணிட்டே. அப்படித்தானே? சொல்லு ஸ்வாதி.''

ஸ்வாதி தலையைக் குனிந்து கொண்டாள்.

''நீ உனக்கு, உன் உணர்வுகளுக்கு உண்மையா இரு ஸ்வாதி. உண்மைதான் கடவுள்! நீ உண்மையோட இரேன். எது உண்மையோ, அதைச் சொல்லேன். வார்த்தை ஜாலம் வேணாமே...''

''ஆமாம். என் மனசுல இன்னும் காதல் இருக்குதான். கொஞ்சம் கொஞ்சமா உள்ளே வந்ததை கொஞ்சம் கொஞ்சமாத்தானே வெளில அனுப்ப முடியும்?''

''ஆக... என்னை மறந்துடறதுன்னு முடிவு பண்ணிட்டே....''

''வேற வழி இல்லையே...''

''ஏன் இல்லை?''

''ஜாதகம் பொருந்தலையே...''

''உன்னோட வாதத்துக்கே வர்றேன். ஜாதகப் பொருத்தம் பார்க்க என்னை சம்மதிக்க வைக்கிறதுக்கு நீ என்ன சொன்னே?''

''என்ன சொன்னேன்?''

''நம்ம ஜாதகம் பொருத்தமா இருந்ததாலதான் நமக்குள்ளே காதலே வந்திரிச்சின்னு சொல்லலை நீ அப்படிப் பார்த்தா பதினோரு பொருத்தம் இருந்த அந்த ஸ்ரீராம் மேல உனக்கு ஏன் காதல் வரலை? அட்லீஸ்ட் சின்ன மரியாதைகூட வரலையே... சொல்லப் போனா நேரடியா ஒரு வார்த்தைகூடப் பேசலை. ஆனாலும் அந்த ஒரே சந்திப்புலயே அவனை நீ வெறுக்க ஆரம்பிச்சியே, அது ஏன்?''

''அது... அது...''

''வாழ்க்கையில எல்லா கேள்விகளுக்கும் பதில் கிடையாது ஸ்வாதி. கேள்விகளைத் தாண்டின விஷயம்தான் காதல். அது தானா பூக்கிற காட்டுப் பூ மாதிரி. அங்கே யாரும் விதை போடறதில்லை, உரம் வைக்கிறதில்லை. மாடு தின்னுடக்கூடாதேன்னு வேலி போடறதில்லை. தானா செடி வளர்ந்து பூ பூக்குது. அப்படித்தான் மனசுல காதல் ஏற்படறதும். வளர்றதும். நீ தடுத்தாலும் அதை நிறுத்த முடியாது. காதலை மறந்திட முடியும்னு நீ சொல்றது அசட்டுத்தனம். உன்னையே ஏமாத்திக்கிற விஷயம். மறக்க முயற்சி செஞ்சா இன்னும் அதிகமா ஞாபகப்படுத்தறதுதான் காதல்!''

மௌனமாக இருந்தாள் ஸ்வாதி.

''ஸ்வாதி, இது நம்ம வாழ்க்கை. நீயும், நானும் சம்பந்தப்பட்ட இந்தக் காதலை நீயும் நானும் மட்டும்தான்



தீர்மானிக்கணும். எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு. என் வாழ்க்கை பூரா நீ வேணும். உனக்கு என்னைப் பிடிச்சிருக்கு. உன் வாழ்க்கை பூரா நான் வேணும். இதில் மாற்றம் இல்லை. இதில் உறுதியா இருந்தா அதுக்குத் தடை எது வந்தாலும் தாண்டலாம். அது மனித ரூபத்துல வந்தாலும் சரி, ஜாதக ரூபத்துல வந்தாலும் சரி!''

ஸ்வாதி எதுவும் பேசவில்லை.

''நாளைக்குக் காலையில ஏழு மணிக்கு நான் ரூமைக் காலி செஞ்சிட்டுப் போறேன். எனக்குப் பாரிஸ் கார்னர்ல அஞ்சாயிரம் சம்பளத்தில நல்ல வேலை கிடைச்சிருச்சி. அந்த ஏரியால வீடு பிடிச்சிட்டேன். நீ இந்த ராத்திரி பூரா நல்லா யோசிச்சுப் பாரு. முடிவெடு. காலையில நான் புறப்படறப்போ நீயும் என் கூட வந்தா ரெண்டு பேருமா அந்த வீட்டுக்குப் போகலாம். போற வழியில இதே கோயில்ல மாலை மாத்திக்கலாம். நீ வரலைன்னா நான் மட்டும் போறேன். எந்தத் தகராறும் பண்ண மாட்டேன். மறுபடி உன்னைச் சந்திக்க முயற்சிக்கவும் மாட்டேன். என் மனசுக்குள்ளே எப்பவும் இந்தக் காதல் மாறாம அப்படியே இருக்கும். அது நிச்சயம். அதை மறக்க முயற்சிக்க மாட்டேன். அதுக்காக தாடி வளர்க்க மாட்டேன். தண்ணியடிச்சுட்டுத் திரிய மாட்டேன். ஒரு அன்பான காதலிக்கு மனோபலம் கம்மியா அமைஞ்சுப் போனதை நினைச்சு அப்பப்ப வருத்தப்படுவேன். அவ்வளவுதான். நீ போகலாம் ஸ்வாதி'' என்றான் ஜெகன்.

ஸ்வாதி மெதுவாக நடந்து சென்றாள்.

அவளின் கொலுசுச் சத்தம் மட்டும் அங்கேயே இருந்தது.

13



வீட்டுக்குள் ஸ்வாதி நுழையும்போது வாசலில் நின்றிருந்தார் வெங்கி அய்யர். அவளை முறைப்பாகப் பார்த்தார்.

''எங்க போய்ட்டு வர்றே?''

''கோயிலுக்குப்பா.''

''கோயில்ல ஜெகனோட நீ பேசிட்டிருந்ததை பார்த்துட்டு வந்து சொல்லிட்டாங்க.''

''ஆமாம். அவரைப் பார்த்தேன்ப்பா.''

''உன் மனசுல என்ன இருக்குன்னு சொல்லிடு. நான் எல்லாத்தையும் சகிச்சுக்கிட்டு பாரத்தை பகவான்கிட்ட போட்டேன். ஜாதகம் பொருந்தலை. இந்தக் கல்யாணம் வேணாம்னு பகவான் தீர்ப்பு சொல்லிட்டார். அதையும் மீறி நடந்துக்கறதா யோசனையா?''

பேசாமல் இருந்தாள்.

''பச்சையா கேக்கறேன். வா, ஓடிப் போயிடலாம்னு அவன் சொன்னானா? அந்த ராஸ்கல் அப்படித்தான் சொல்லிருப்பான். அவன் சொன்னது எனக்கு முக்கியமில்லை. நீ என்ன சொன்னே?''

''நான் எதுவும் சொல்லலைப்பா.''

''அப்ப யோசிக்கிறேன்னு அர்த்தமா? இத பாரு! உனக்கு நல்ல மாப்பிள்ளையா தேடிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கு. அதே மாதிரி என்னோட மானம் மரியாதையைக் காப்பாத்த வேண்டிய பொறுப்பு உனக்கு இருக்கு. அவன்தான் முக்கியம், அப்பா, அம்மா, சாதி எதுவும் வேணாம்னு எல்லாத்தையும் உதறிட்டுப் போறதா இருந்தா... அதை ராத்திரியில ரகசியமா செய்ய வேண்டியது இல்லை. பகிரங்கமா செய்யலாம் எங்களைப் பொறுத்த வரைக்கும் ஒரு பொண்ணு செத்துட்டான்னு தலை முழுகிட்டு அடுத்த வேலையைப் பார்க்க சௌகரியமா இருக்கும்.''

ஸ்வாதி கண்ணீரை அடக்கிக் கொண்டு உள்ளே சென்றாள்.

## 14



உறங்கிக் கொண்டிருந்த மீனாட்சி 'விலுக்'கென்று தொடர்ந்த விக்கல் சத்தம் கேட்டு கண் விழித்து அருகில் பார்த்தாள்.



ஸ்வாதி விக்கிக் கொண்டிருந்தாள்.

''ஏய்! போய் தண்ணி குடிச்சுட்டு வ்ந்து படேன்.''

பதில் சொல்லாமல் ஸ்வாதி தொடர்ந்து விக்க... மீனாட்சி எழுந்து டியூப் லைட்டைப் போட்டாள்.

ஸ்வாதிக்கு கண்கள் மேலே செருகிக் கொண்டிருக்க... வாயில் நுரை தள்ளியிருக்க... விக்கிக் கொண்டிருந்தாள்.

''என்னங்க...!'' அலறினாள் மீனாட்சி.

கூடத்தில் படுத்திருந்த வெங்கி அய்யர் பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தார்.

''எதையோ சாப்பிட்டுத் தொலைச்சுட்டாளோ என்னவோ.. இங்க பாருங்க குழந்தைத் துடிக்கிறதை!'

''ஈஸ்வரா! முகத்தில் தண்ணியடி சரஸ்வதி! நான் இப்பவே ஒரு ஆட்டோவைக் கூட்டிட்டு வந்துடறேன்'' என்று ஓடினார் வெங்கி அய்யர்.

★ ★ ★

அந்த ஆஸ்பத்திரியின் வராந்தாவில் வாயைத் துண்டால் பொத்திக் கொண்டு விம்மிக் கொண்டிருந்தார் வெங்கி அய்யர்.

''தைரியமா இருங்க. அவ நம்மளை எல்லாம் விட்டுப் போயிடமாட்டா பொழைச்சுடுவா'' என்றாள் கண்ணீருடன் மீனாட்சி.

''எனக்கு பயமா இருக்குடி சரஸ்வதி.''

''நீங்க கும்புடற தெய்வம் உங்களுக்கு சோதனை கொடுக்காது.''

''இல்லைடி சரஸ்வதி நான் தப்புப் பண்ணிட்டேன் என்னோட சதிக்கு தெய்வத்தையும் துணைக்குக் கூப்பிட்டுக்கிட்டேன். அந்த துரோகத்துக்குக் கடவுள் என்னைத் தண்டிச்சிடப் போறார்.''

''என்ன சொல்றீங்க?''

''என்ன சொல்லியும் ஸ்வாதி மனசிலேர்ந்து காதலைப் போக்க முடியலை. அதனால ஜாதகப் பொருத்தம்னு ஒரு கண்டிஷன் போட்டேன். நான் கூட்டிட்டு வந்த அய்யருக்குப் பணம் கொடுத்து எனக்கு சாதகமா சொல்லச் சொன்னேன். நிஜமா ரெண்டு ஜாதகமும் நல்லப் பொருத்தம் இருக்கு சரஸ்வதி.''

விக்கித்துப் போன மீனாட்சி இரண்டடி விலகி நின்னு அவரைப் பார்த்தாள்.

''என்னை அப்பபடிப் பார்க்காதே சரஸ்வதி! பெரிய தப்புதான் நான் செஞ்சது.''

''ஏங்க... ஊருக்கெல்லாம் பொருத்தம் பார்த்து எத்தனை கல்யாணத்தை நீங்களே மந்திரம் சொல்லி நடத்தி வெச்சிருக்கிங்க? உங்க பொண்ணு விஷயத்துல நீங்க இவ்வளவு கேவலமா நடந்திட்டிருக்கிங்களே...''

''தப்புதான். தப்புதான்.''

''நீங்க செஞ்ச சதியில ரெண்டு மனசைப் பிரிக்க முடிஞ்சிருக்கலாம். துடிச்சிட்டிருக்கிற ஒரு உயிரை உங்களால காப்பாத்த முடியுமாங்க? உங்க பொண்ணுக்கு இப்படி ஒரு மரண கண்டம் இருக்குன்னு ஜாதகப் பலன்ல நீங்க சொன்னதே இல்லையேங்க!''

''ஜாதகத்தையே தப்பாச் சொல்லாதே சரஸ்வதி. அது ஒரு கணக்கு. அது ஒரு நம்பிக்கை அதை என் மன வக்கிரத்துக்குப் பயன்படுத்திக்கிட்டது தப்பு.''

''இத்தனை நாளா என் மனசுல போட்டு மூடி வெச்சிருந்த ஒரு விஷயத்தை இப்ப சொல்றதுக்கு எனக்குத் தைரியம் வந்துடுச்சிங்க. ஏன்னா நீங்களே உங்க தொழிலை தெய்வமா மதிக்கலையே...''

''என்ன சொல்றே சரஸ்வதி?''



''நமக்குக் கல்யாணம் நடக்கறதுக்கு முன்னாடி என்னை ஒரு பேர் பொண்ணு பார்த்துட்டு வேணாம்னு சொன்னாங்க. ஜாதகத்தில தோஷம் இருக்கறதா காரணம் சொன்னாங்க. இறந்துப் போன எங்கப்பா என்னோட ஜாதகத்தை உங்க ஜாதகத்துக்கு அமோகமா பொருந்தற மாதிரி திருத்தி எழுதி அனுப்பி வெச்சார். இதை சொல்லிடாதேன்னு என்கிட்ட சத்தியத்தையும் வாங்கிட்டார். ஏங்க... இத்தனை வருஷ நம்ம தாம்பத்தியத்துல எப்பவாச்சும் நாம சண்டை போட்டிருக்கமா? சௌக்கியத்தில குறைச்சல் உண்டா? நோய், நொடி வந்து படுத்திருக்கமா? வாய்ப்பு, வசதி, கூடலையா? வம்சம் பெருகலையா? செல்வாக்கா இல்லையா? நான் தப்பாப் பேசலை. எதுலயும் நம்பிக்கை இருக்கலாம். மூடத்தனமான நம்பிக்கை தேவை இல்லை. வீட்டை விட்டு வெளில வரவேக் கூடாதுன்னு பொம்பளைங்களைச் சொன்ன ஆம்பளைங்க இப்ப வேலைக்கு அனுப்பி வைக்கலையா? மனசு சுத்தமா இருந்தா எல்லா நாளுமே நல்ல நாள்தாங்க. நல்ல நேரம் குறிச்சத் தர்ற உங்க மனசே சுத்தமா இல்லையே...''

''சரஸ்வதி! போதும்மா. என்னை வார்த்தையால அடிச்சது போதும். ரொம்ப வலிக்குது. ஜாதகம் மேல எனக்கு இருக்கிற நம்பிக்கை இப்பவும் மாறாது. எதிலயும் விதிவிலக்குகள் உள்ள மாதிரி இதிலயும் இருக்கு. பொருந்தா ஜாதகத்தை பொருந்தற ஜாதகமா மாத்தி நடந்த நம்ம கல்யாணத்துல என்ன குறைச்சல்னு நீ கேட்டே. எல்லா கேள்விக்கும் நான் விடை சொல்லிட்டா நான் மனுஷன் இல்லைம்மா, கடவுள்! விதிகளை தீர்மானிக்கிறது அவன்னா விதி விலக்குகளை தீர்மானிக்கிறதும் அவன்தான். காரணம் நெருங்கக்கற அளவுக்கு அவனுக்குப் பக்கத்தில நான் இருக்கலை! போற பாக்கியத்தையும் என் வக்கிர மனசால இழந்துட்டேன்.''

வெங்கி அய்யர் கண்ணீர் வடிக்க...

டாக்டர் அவர்கள் அருகில் வந்தார்.

''உங்க பொண்ணு அபாயக் கட்டத்தைத் தாண்டிட் டாங்க. ரெண்டு நாள் ஹாஸ்பிடல்ல இருந்து [illegible] எடுத்துக்கிட்டா, ஷீ வில் பி ஆல்ரைட்.''

மயக்கம் தெளிஞ்சதும் மகளின் கையைப் பிடித்துக் கொண்ட வெங்கி அய்யர், ''என்னை மன்னிச்சிடு கண்ணு. உங்க கல்யாணத்துல கடவுளுக்கு சம்மதம்தான்ம்மா. இந்த மனுஷனுக்குத்தான் சம்மதம் இல்லாம இருந்தது. [illegible] வைராக்யம் முக்கியமா, உன் பொண்ணோட [illegible] முக்கியமான்னு ஒரு கேள்வி கேட்டு என்னையும் சம்மதிக்க வெச்சுட்டாரும்மா'' என்றார்.

நான்கு தினங்களுக்குப் பிறகு அலங்கரிக்கப்பட்ட கட்டில்மேல் ஸ்வாதி சொன்னாள் ''பார்த்திங்களா? [illegible] நம்பிக்கை பொய்க்கலை.''

சிரித்த ஜெகன், ''காதல் மேல நான் வெச்சிருந்த நம்பிக்கையும்தான் பொய்க்கலை'' என்றான்.

# மலரோடு தனியாக...



1

ஒலிபெருக்கிகள் எல்லாத் திசைகளிலிருந்தும் இரைச்சலாய் விளம்பரங்களை காதுகளில் திணித்துக் கொண்டிருந்தன.

'என்ன ராஜாத்தி, ஏன் இப்படி கவலையா இருக்கே?'

'இந்த சட்டை என்ன போட்டுத் துவைச்சாலும் வெள்ளையாக மாட்டேங்குது. நாளைக்கோ அவருக்கு முக்கியமான மீட்டிங் இருக்கு. அதான் கவலையா இருக்குக்கா.'

'ப்பூ! இவ்வளவுதானா? மயில்மார்க் டிட்டெர்ஜெண்ட் தான் இருக்கறப்போ நீ ஏன் கவலைப்படறே? எந்த அழுக்கையும் அடிச்சி விரட்டிடும்!'

'ஆம்! வாங்குங்கள் மயில் மார்க் டிட்டெர்ஜெண்ட் தான்! போலிகளைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள்! மயில் மார்க் என்று கேட்டு வாங்குங்கள்!'

தமிழ்நாடு அரசின் சாதனைகளை முரசு கொட்டும் பல அரங்கங்களிலும் கியூவில் நின்று கொண்டிருந்தார்கள். கண்காட்சியை ஒரு தரம் சுற்றி வரும் ரயில் இன்னும் இரண்டு பெட்டிகளுக்கு ஆள் சேரக் காத்திருந்தது. பல நிறுவனங்களின் துண்டுப் பிரச்சார நோட்டீசுகள் **"Use Me"**

தொட்டிகளைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் மிதிபட்டன. சோப்புக் குமிழிகள் பல வண்ணங்களைப் பிரதிபலித்துக் காற்றில் அலைந்தன. இரண்டு கையாலும் பிடித்துச் சாப்பிட வேண்டிய மகா அப்பளங்களுக்கும், ஊ பூரா எண்ணெயாகும் மிளகாய் பஜ்ஜிகளுக்கும் டோக்கன் வாங்கிக் கொண்டு முந்திக் கொண்டிருந்தார்கள்.

''கொஞ்சம் பிடிங்களேன்'' என்று சரவணனை ரகுவிடம் ஒப்படைத்து விட்டு சாரதா பீங்கான் கப் அண்ட் சாஸரை எடுத்துப் பார்த்து, ''இது உடையுமாப்பா?'' என்று விசாரித்தாள்.

சரவணன் சிறகு செருகின தொப்பி வைத்து, கன்னத்தில் திருஷ்டிப் பொட்டுடன், கையில் நீள வால் கொண்ட பலூனைப் பிடித்திருந்தான்.

ரகு அருகில் இருந்த செயற்கை நீரூற்றை சரவணனுக்குக் காட்டி அவனை சிரிக்க வைக்க முயன்றாலும், நெரிசலான கூட்டமும் இரைச்சலான சத்தமும் அலர்ஜி செய்ய சரவணன் சிரிப்பதில்லை என்கிற தீர்மானத்தில் இருந்தான்.

''என்னங்க, ஆறு இருபது ரூபாய் சொல்றான். வாங்கட்டுமா?''

''சரி.''

''ஏம்ப்பா ஏழா கொடுக்கக் கூடாதா?''

''வராதும்மா.''

''சரி. நல்லா பேக் பண்ணிக் கொடு.''

சரவணனை ஜாக்கிரதையாக இடுக்கியபடி கைப்பையின் ஜிப் திறந்து இருபது ரூபாய் எடுத்துத் தந்தான் ரகு.

அடுத்து ராஜஸ்தான் சேலைகள் அலங்கரிக்கப்பட்டிருந்த கடைக்குள் நுழைவதற்கு முன்பு, ''சும்மா பார்க்கலாம். எதுவும் எடுக்கணும்னு இல்லை'' என்றாள் சாரதா.

''ஏன், பிடிச்சிருந்தா எடுக்கலாம் சாரதா.''



நுழைந்து அரை மணி நேரம் புரட்டி விட்டு, கேள்விகள் கொடுத்து விட்டு, ''வேணாங்க. சுருங்காதுன்னுதான் சொல்றான். எனக்கு நம்பிக்கை வரமாட்டேங்குது. நூத்தி இருபதுக்கும், நூத்தி நாப்பதுக்கும் இங்க எடுக்கறதுக்கு இன்னும் கொஞ்சம் கூட விலையில் பூனம், ஷிபான் இப்படி எடுத்துட்டா நல்லா உழைக்கும்'' என்றாள்.

''சரி''

சரவணன் அழ ஆரம்பிக்கவே ஒரு பக்கமாக அமர்ந்து ஃபெரெக்ஸ் கலந்து பாட்டிலில் ஊற்றி சரவணன் வாயில் அளித்தாள் சாரதா.

ரகு சற்றுத் தள்ளி நின்று சிகரெட் பற்ற வைத்தான்.

அருகில் நாடக அரங்கத்தில் இருநூறு நாற்காலிகளில் இருபத்தி நான்கு பேர் உட்கார்ந்திருக்க... நடக்கின்ற சத்தம் 'டங், டங்' என்று ஒலிக்கும் மேடையில் நாடகம் நடந்து கொண்டிருந்தது.

''மாலதி, உன்னைப் பார்க்காமல் என்னால் ஒரு நிமிடம் கூட உயிர்வாழ முடியாது.''

''ஆனால் விதியின் விளையாட்டுக்கு நாம் கட்டுப் பட்டுத்தான் ஆக வேண்டும் சுரேஷ். இதுதான் காலம் செய்யும் கோலம். திருமாலின் தீர்ப்பு. அதை மீற மனித ஜென்மங்களாகிய நமக்கு சக்தியில்லை. வாழ்க்கையின் சூத்திரப்பிடியில் நாமெல்லாம் கொலு பொம்மைகள் சுரேஷ், கொலு பொம்மைகள்!''

ரகு வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

''ஹலோ ரகு'' என்று வந்தான் செந்தில்... ரகுவோடு அதே பேங்கில் வேலை பார்ப்பவன், ''தனியாவா வந்திங்க?''

''இல்லைங்க. என் வைஃபும், குழந்தையும் அதோ இருக்காங்க.''

''ரொம்ப தைரியம் தான். நீங்க தம் அடிக்கிறதுக்கு அவங்க எதுவும் சொல்றதில்லையா?''

''சொல்லி அலுத்துப் போய் நிறுத்திட்டாங்க. நீங்க ஃபேமிலி அழைச்சுட்டு வரல்லையா?''

''இல்லை ரகு. ஊர்லேர்ந்து என் மச்சானோட பையன் வந்திருக்கான். அவனுக்கு ராட்டினம் சுத்தணும்னு மட்டும் தான் குறி. எனக்கு மயக்கம் வரும். இஷ்டத்துக்கு சுத்திட்டு வான்னு காசைக் கொடுத்து அனுப்பிச்சிட்டேன்.''

''ஸ்மோக் பண்றிங்களா செந்தில்?'' ரகு பாக்கெட் நீட்ட,

''கொடுங்க'' என்றெடுத்து நெருப்பைப் பரிமாற்றம் செய்து கொண்டு, ''இன்னிக்கு மேனேஜரோட என்ன தகராறு ரகு?'' என்றான்.

''இன்னிக்கு கேஷ்ல நூறு ரூபா ஷார்ட்டேஜ். மேனகா எண்டர்ப்ரைசஸ்ல தான் பதினஞ்சி பண்டல் கொண்டாந்து கட்டினாங்க. பேமெண்ட்டுக்காக அதில் நாலு பண்டல் பிரிச்சிட்டேன். ஏதோ ஒரு பண்டல்ல ஒரு நோட்டு குறைச்சலா இருந்திருக்கணும். இது என் யூகம். மேனேஜர் ஒரு போன் செஞ்சா மறுபேச்சு எதுவும் சொல்லாம அவங்க பணம் கொடுத்தனுப்பிச்சிடுவாங்க. இவர் என்னையே பேசச் சொல்லிட்டார். அந்தாளு கனகராஜைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்காது. நிறைய பேட் மேனர்ஸ் உள்ள ஆசாமி. தேவையில்லாம ஆர்க்யூ பண்ணுவான். மேனேஜருக்குத் தான் நல்ல ரேப்போர்ட். போன்ல என்கிட்ட ரொம்ப நேரம் ஆர்க்யூ பண்ணிட்டு 'உங்க வார்த்தையை நம்பறேன்'னு ஏதோ பிச்சை போடற மாதிரி கடைசில ஒத்துக்கிட்டான். இதை அவாய்ட் பண்ணிக்கலாமேன்னு நான் மேனேஜர் கிட்ட கோபமா சொன்னேன். உடனே இவரு ரூல்ஸ் பேச ஆரம்பிச்சிட்டார்.''

''ஆபீஸ்ல எல்லாமே ரூல்ஸ் படிதான் நடக்குதா?''

''அதைத்தான் நானும் கேட்டேன். ஒருத்தருக்கொருத்தர் எவ்வளவு விஷயங்கள்ல அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போறோம். சரியான நட்டு!''



''சரி, விடுங்க ரகு. எக்ஸ்சேஞ்ச் ஆஃபர்ல உங்க பழைய பைக்கைக் கொடுத்துட்டுப் புதுசு மாத்தப் போறதாச் சொன்னீங்களே, என்ன ஆச்சு?''

''அதெல்லாம் விளம்பரத்திலதான் கவர்ச்சியா இருக்கு. ஓட்டப் போனா கழுத்தைப் பிடிக்குது. பழைய வண்டிக்கு அடிமாட்டு விலை போடறாங்க. அப்பப்ப சர்வீஸ் பண்ணி இதையே வெச்சிக்கிறதுன்னு முடிவு பண்ணிட்டேன். நீங்க வேளச்சேரி பக்கத்தில ஒரு ப்ளாட் போய்ப் பார்த்திங்க இல்லை? வாங்கினிங்களா செந்தில்?''

''பள்ளிக்கரணைல ரோட்டை விட்டு இறங்கி உள்ளேப் போகுது அந்த ஏரியா. நல்ல இடம். எனக்கு வர வேண்டி இருந்த ஒரு பணம் வரலை. அதனால இண்ட்ரெஸ்ட் போயிடுச்சி. உங்களுக்கு எதுவும் ஐடியா இருந்தாச் சொல்லுங்க. நமக்கு வேண்டியவர் தான், பேசி முடிச்சி விடறேன்.''

''என் மாமனார் மூலமா கொஞ்சம் பணம் வர்ற மாதிரி இருக்குது. அதை வைஃப் பேர்லயே ஒரு இன்வெஸ்ட் பண்ணிட்டா லேண்ட் வாங்கிடலாம்னு யோசிச்சேன்.''

''அதான் சார் ஸேஃப்டி. விலை ஏறாமப் போனாலும் இறங்கிடாது. சொத்தா நிலைச்சி நிக்கும். நம்ம பேங்க்லதான் ரொம்ப குறைச்ச வட்டில ஹவுசிங் லோன் தர்றாங்களே... அப்ளை செஞ்சி சின்னதா வீடு கட்டிட்டா வாடகைப் பிரச்சினையும் தீர்ந்திடும். எப்ப வர்றீங்கன்னு சொல்லுங்க, இடம் அழைச்சிட்டுப் போய்க் காட்றேன்.''

''அவளும் பார்க்கணும் செந்தில். கன்சல்ட் பண்ணிட்டு சொல்றேன்.''

அதற்குள் குழந்தையைத் தூக்கிக் கொண்டு சாரதா வந்து, ''அட! எப்படி சார் இருக்கீங்க? உங்க வைஃப் வரலையா?'' என்றாள் செந்திலிடம்.

''இல்லைங்க.''

''என்னங்க, போலாமா?''

''வர்றோம் செந்தில். காலைல பேங்க்ல பார்க்கலாம்.''

ரகுவும், சாரதாவும் கண்காட்சியின் வேறு பகுதிக்கு நடந்தார்கள்.

''பஜ்ஜி சாப்பிடலாமா சாரதா?''

''வேணாங்க. என்ன எண்ணெயோ, என்னவோ... வயிறு கெட்டுடும், பாப்கார்ன் வேணும்னா வாங்குங்க.''

அதிலும் கொஞ்சம் எண்ணெய் போடுவான் என்கிற தகவலறிவை அவளுக்குப் புகட்டாமல் சென்று பாப்கார்ன் வாங்கி வந்தான் ரகு.

''என்னமோ வீடு கட்டறதைப் பத்தி சொல்லிட்டிருந்தது போலிருக்கு?''

''ஆமாம். உங்கப்பா தர்றதா சொல்லிருக்கிற மூணு லட்சத்துக்கு வீட்டு மனை வாங்கலாம்னு பேசிக்கிட்டப்ப அதைச் சொன்னேன். பேங்க்ல ஸ்டாஃபுக்கு ரொம்ப குறைச்சலான வட்டிக்கு வீட்டு லோன் தர்றாங்க. பதினஞ்சு வருஷத்தில திருப்பிக் கட்டினால் போதும். அதில லோன் வாங்கி வீடும் கட்டுங்கன்னு யோசனை சொன்னார்.''

''நல்ல யோசனைதான். ஆனா வாடகைக்குத்தான் விட முடியும்.''

''ஏன் சாரதா? என்கிட்டதான் பைக் இருக்கே. அங்க பேங்குக்கு வந்துட்டுப் போறேன். இன்னிக்கு சிட்டிக்கு வெளிலதான் நல்ல காத்தும் கிடைக்குது.''

''இப்ப அபார்ட்மெண்ட்ல இருக்கறது என்னமோ குடும்பத்துக்குள்ளே இருக்கற மாதிரி கலகலன்னு ஸேஃப்டியாவும் இருக்கு. ஊருக்கு வெளில வீட்டைக் கட்டி குடி போனா நீங்க வர்ற வரைக்கும் பக்கு பக்குன்னு இருக்கும். திருட்டு பயம் வேற. இந்த மாதிரி நினைச்சா நாம இடத்துக்குப் போக முடியுமா? ஏங்க, அப்பா கொடுக்கற பணத்தில சிட்டிக்குள்ளேயே ஒரு அரை கிரவுண்டு வாங்க முடியாதா? வீடு அப்புறம் காசு சேர்த்து கட்டிக்கலாம்.''



''விளையாடறியா? மூணு லட்சத்தில சிட்டிக்குள்ளே மனையா?''

''விசாரிச்சுப் பாருங்களேன். அரை கிரவுண்டு எங்க யாச்சும் கிடைக்கலாம்.''

''நிலைமை புரியாம பேசறே சாரதா.''

''மஃப்ளர் எடுத்து கழுத்துல போட்டுக்கங்க. உங்களுக்கு பனி வாடை ஒத்துக்காது.''

''பரவால்லை, விடு.''

ரங்கராட்டினங்கள் விளிம்பில் சர விளக்குகள் அணிந்து வெளிச்சமாக சுழன்று கொண்டிருக்க...

''சுத்தணுமா சாரதா?''

''இவனை வெச்சிக்கிட்டா? வாந்தியெடுத்துவான்.''

''இவனை நான் வெச்சிக்கிறேன். நீ சுத்திட்டு வா.''

''நான் மட்டும் எப்படிங்க தனியா?''

''சரி, விடு!''

ரங்க ராட்டினத்திலிருந்து ஒருத்தி இவனைப் பார்த்து கையசைப்பது போலிருக்கவே, ரகு திரும்பி வேறு யாரையாவதா என்று பார்த்தான். அடுத்தச் சுற்றிலும் அவள் இவனைப் பார்த்து கையசைக்க...

ரகுவுக்குள் ஜிவ்வென்று ரத்தம் பாய்ந்தோடியது.

'ஆ... ஆர்த்தியா அது? யெஸ்! ஆர்த்திதான்!'

''யாருங்க அது? உங்ககூட வேலை பார்க்குதா?''

''இல்லை சாரதா!''

''பேங்குக்கு வருமா? தெரிஞ்ச பொண்ணா?''

''இல்லை சாரதா!''

''அப்படீன்னா உங்களை தப்பா அடையாளம் புரிஞ்சுக் கிட்டு அந்தப் பொண்ணு கையாட்டுதுன்னு நினைக்கிறேன். சரி, வாங்க போலாம். ஹோட்டல்ல சாப்டுட்டுதானே வீட்டுக்குப் போறோம்?''

''ம்'' என்று கூட நடந்த ரகு ஒரு முறை சுழல் ராட்டினத்தைத் திரும்பிப் பார்த்துக் கொண்டான்.

ஆர்த்திதானா? அவள் எப்படி சென்னையில்?

''என்னங்க யோசனை?''

''ஒண்ணுமில்லை, வா'' என்று நடந்தான் ரகு.



2

அந்தப் பூங்காவில் மரங்கள் கிளை பரப்பி நிழல் விரித்திருந்தன. உதிர்ந்த சருகுகள் தரையில் மெத்தை போட்டிருக்க...

ஒரு அகல மரத்தில் சாய்ந்து அமர்ந்திருந்த அவன் அவளையேப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒற்றைப் பின்னலை முன்புறம் போட்டு முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அவனெதிரில் அமர்ந்திருந்த அவள் அவனையேப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆசை ஆசையான பார்வை. வாழ்வின் கடைசி நிமிடம் இதுதான் என்பது போன்ற அவசர ஆதங்கப் பார்வை. உயிர்வரை ஊடுருவி வார்த்தையின்றி ஆயிரம் அர்த்தம் சொல்லும் பார்வை. மனசும் மனசும் பேசிக் கொள்ளும் மௌன சாட்சிகளாய் விழிகள் அமைத்த பார்வை.

''போதும்'' என்றாள், ''புறப்படலாம்.''

''ப்ளீஸ்... என்ன அவசரம்?'' என்றான்.

''மணி என்ன ரகு?''

''அஞ்சிதான் ஆகுது ஆர்த்தி.''

''டூப் சொல்லாதே, ரொம்ப நேரம் முன்னாடியே அஞ்சி பத்து.''

''ஆறாகப் போகுது.''

''போகணும்ப்பா, இப்ப புறப்பட்டாதான் ஏழு மணிக்குள்ளே வீட்ல இருக்கலாம்.''



''கொஞ்ச நேரம் கழிச்சிப் போகலாம் ஆர்த்தி.''

அவள் கையை தன் மடியில் எடுத்து வைத்துக் கொண்டு மருதாணிச் சிவப்பை விரல் விரலாக ரசித்துப் பார்த்தான்.

''சமயத்தில் என் டாடி ஆபீஸ்லேர்ந்து ஆறரைக்கு வந்துடறார் ரகு. புறப்படலாம்.''

''வந்தா என்ன?''

''கம்ப்யூட்டர் கிளாஸ்லேர்ந்து இன்னும் வரல்லையான்னு அம்மாவைக் கேப்பாரு. திடீர்னு சென்ட்டருக்கு போன் பண்ணி விசாரிச்சுட்டா... தொலைஞ்சேன்.''

''உன் சென்டர்ல அட்ஜஸ்ட் பண்ண மாட்டாங்களா?''

''அதெல்லாம் பண்ண மாட்டாங்க.''

''சரி, விசாரிச்சா என்ன சொல்வாங்க?''

''இன்னிக்கு கிளாசுக்கு வரவேயில்லையேன்னு சொல்லுவாங்க.''

''உடனே உங்கப்பா போலீசுக்கு தகவல் சொல்லி விடுவாரா என்ன?''

''வெய்ட் பண்ணிப் பார்ப்பார்.''

''எவ்வளவு நேரம் வெய்ட் பண்ணுவார்?''

''ம்... ஒரு ஒம்போது வரைக்கும்.''

''அதுக்குள்ளே போய்டலாம். பேசாம இரு!''

''போயி...? என்ன பதில் சொல்றது?''

''உனக்கா பொய் சொல்லத் தெரியாது? உன் ஃப்ரெண்டு மேரேஜ் ரிசப்ஷன்னு சொல்லிட்டு அன்னிக்கு சினிமாவுக்கு வரல்லை என்னோட? அந்த மாதிரி பொருத்தமா நம்பற மாதிரி ஒரு பொய் சொல்லு! ஒரு ஆளுக்கு ஆக்ஸிடெண்ட். அந்தாளை ஆட்டோல தூக்கிப் போட்டு ஆஸ்பத்திரில சேர்த்துட்டு வர்றேன்னு சொல்லு.''

''தேவைதானா?''

''இன்னிக்கு நீ ஸ்பெஷலா டாலடிக்கிற ஆர்த்தி, மனசே வரலை உன்னைப் போகச் சொல்றதுக்கு.''

''என்ன திடீர் உருகல்ஸ்?''

''ஒரே முகம்தான். ஒவ்வொரு நாளைக்கு தேஜஸ் எப்படி?''

''என்ன வேணும் ரகு, கமான்!''

''என்ன கேட்டுடப் போறேன் பெருசா?''

''இந்த வாரக் கோட்டா முடிஞ்சுது கண்ணு.''

''அடுத்த வாரக் கோட்டால அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம்.''

''நோ! நத்திங்! நவர்! லேது! இல்லை!'' கையூன்றி எழுந்தாள். ஆடையில் ஒட்டியிருந்த குப்பைகளைத் தட்டிக் கொண்டாள். துப்பட்டாவை சரி செய்து கொண்டாள்.

''வாப்பா!'' என்று கை நீட்டினாள். அவள் கைபிடித்து எழுந்து அவள் தோளில் கை போட்டபடி, ''தேஜசுக்குக் காரணம் கண்டுபிடிச்சிட்டேன் ஆர்த்தி'' என்றான்.

''நடந்துகிட்டேப் பேசலாம். என்ன கண்டுபிடிச்சே?''

அவள் காதுக்குள் சொல்ல 'ச்சீ!'' என்றாள். கைப்பையால் அவன் தோளில் மொத்தினாள்.

''உண்மையா, இல்லையா?''

''வேற பேசேன்.''

''உண்மையா, இல்லையா?''

''அய்யோ! இதை விட்டுருப்பா!''

''உண்மையா, இல்லையா?''

''எப்படித் தெரியும் உனக்கு?''

''அப்ப உண்மைதானே?''

''சொல்லு, எப்படித் தெரியும்?''

''ஒரு அப்சர்வேஷன்தான்.''



காரணத்தோடும் காரணமில்லாமலும் சிரித்தபடி, ஒருவரை ஒருவர் உரசியபடி மெதுவாக அவர்கள் நடந்து கொண்டிருக்க வானத்தில் வெளிச்சம் ஜகா வாங்கிக் கொண்டிருந்தது. கோவை குளிர்த் தென்றல் மின்விசிறி களை ஓரங்கட்டிக் கொண்டிருந்தது.

3



சமையல் மேடையை சுத்தம் செய்து கொண்டிருந்தாள் சாரதா. தூளியில் உறங்கின சரவணனின் ஒரு பாதம் மட்டும் வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. டி.வி.யில் ஓடிக் கொண்டிருந்த அந்த திரைப் படத்துடன் மனம் ஒட்டாமல் டி.வியை அணைத்தான் ரகு.

''ஏன் அணைச்சிட்டிங்க?'' குரல் கொடுத்தாள்.

''தூக்கம் வருது.''

படுக்கையறைக்குள் வந்து கொசு எதிர்ப்பானுக்கு புதிய மேட் மாற்றினான். இரவு விளக்கைப் போட்டுக் கொண்டு காலுக்கு ஒரு தலையணை அமைத்துக் கொண்டு படுத்தான்.

''தூங்கிடாதீங்க. இதோ பத்து நிமிஷத்தில நானும் வந்துடறேன்.''

அவளுக்கு முன்பாக அவன் கட்டிலில் சாயும் போதெல்லாம் சாரதா வழக்கமாக இதையே சொல்வாள்.

''தூங்கறதுக்கு எதுக்கு கம்பெனி?'' வழக்கமாக ரகு கிண்டலாகக் கேட்பான்.

இன்றைக்கு, ''ம்'' என்று மட்டும் சொல்லிவிட்டு சுழலும் மின் விசிறியைப் பார்த்தாள்.

உள்ளே பிசைந்தது. தொண்டையில் சிக்கியது.

ஆர்த்தி எப்படி சென்னையில்?

திருமணமாகி மும்பைதானே சென்றாள்?

அம்மா வீடு கோவை. எனக்குத் தெரிந்து சென்னையில் உறவு யாருமில்லை. பின்னே எப்படி?

ஒரு வேளை... அவருக்கு உறவினர் இங்கே இருக்கலாம். வந்து தங்கியிருக்கலாம்.

அந்த ராட்டினத் தொட்டிலில் அவளுக்கு அருகில் யார் இருந்தார்கள்? அவளையே சரியாக கவனிக்கவில்லை. மற்ற எதை கவனிப்பது?

நிச்சயமாக கண்காட்சிக்கு அவள் கணவன் வந்திருக்கமாட்டான். இல்லையென்றால் இத்தனை தைரியமாக பொது இடத்தில் கையசைப்பாளா அவனை அருகில் வைத்துக் கொண்டு?

அவளைப் பார்த்த அதிர்ச்சியே விலகாத நிலையில் சாரதா வேறு 'யார் அது?' என்று விசாரணை ஆரம்பித்து அழைத்து வந்து விட்டாள்.

சாரதா இல்லையென்றால் பதிலுக்குக் கையசைத்திருக்கலாம். ராட்டினம் நிற்கும் வரைக் காத்திருக்கலாம். 'எப்படி இருக்கிறாய்?' என்று இரண்டு வார்த்தை பேசியிருக்கலாம்.

மூன்று வருடங்களுக்குப் பிறகு எதிர்பாராத சூழ்நிலையில், எதிர்பாராத இடத்தில் எதற்காக இந்த அவஸ்தையான சந்திப்பு நிகழ வேண்டும்? - அதுவும் அரைகுறையாக.

கையசைத்தாளா இல்லை காத்திருக்கச் சொன்னாளா?

ராட்டினம் நின்றதும் இறங்கி பரபரப்பாக என்னைத் தேடியிருப்பாளா? பேசத் தவறி விட்டோமே என்று தவித்திருப்பாளா?

இதோ இந்த நிமிடம் இதே ஊரில் ஏதோ ஒரு வீட்டில் ஆர்த்தி இருக்கிறாள்.

என்ன செய்து கொண்டிருப்பாள்? என்னைப் போலவே அவளும் இந்த திடீர் அசட்டுச் சந்திப்பைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருப்பாளா? என் அருகில் குழந்தையுடன் இருந்தவள் என் மனைவி என்று புரிந்து கொண்டிருப்பாளா?



'இனி நமக்குள் எதுவும் இல்லை. எல்லாவற்றையும் மறந்து விடுவதுதான் இரண்டு பேருக்கும் நல்லது!' - கடைசி சந்திப்பில் ஆர்த்தி சொன்ன வார்த்தைகள் அவள் குரலின் ஏற்ற இறக்கங்களோடு, முகத்தில் படிந்த அந்த சோக நிழலோடு என் மனதில் அப்படியே பத்திரமாயிருக்கின்றன.

மறந்தேனா?

மெனக்கெட்டு ஒருவரை மறக்க முயற்சிப்பது என்பது என்ன ஒரு முட்டாள்தனமான காரியம்! உடம்பை விட்டு நிழலைப் பிரித்தெடுக்கும் வெட்டி வேலை! சல்லடையில் நீர் பிடித்து வைக்கும் மக்கு வேலை!

சாரதாவின் கள்ளமில்லாச் சிரிப்பில், அன்பில், அரவணைப்பில், இந்தத் தாம்பத்யத்தின் சிறிய பெரிய சுவாரசிய சம்பவங்களில்... ஆர்த்தியை பல சமயம் நினைக்காமலிருந்திருக்கிறேன். ஆனாலும்...

ஐந்தடி ஆறு அங்குல உயரத்தில் காட்டன் புடவை கட்டி யார் கடந்து போனாலும்... ஆர்த்தி என்னை நோக்கி நடந்து வந்திருக்கிறாள்.

ஈறுகள் தெரிய அகலமாக எந்தப் பெண் சிரித்தாலும்... ஆர்த்தி என்னைப் பார்த்துச் சிரித்திருக்கிறாள்.

சடையை உயரமாகத் தூக்கிப் போட்டு யார் வாயால் பிடித்தாலும்... பேனாவின் தலையை உதட்டில் குத்தி யார் யோசித்தாலும்... இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு யார் சமோசா சாப்பிட்டாலும்... விரலால் தொடாமல் தலையை நளினமாக அசைத்து கூந்தல் கற்றையை யார் தள்ளிக் கொண்டாலும்... பெட்ரோல் வாசனையை யார் ஆர்வமாக முகர்ந்தாலும்...

இப்படி அவ்வப்போது ஆர்த்தியை நினைவுபடுத்தவென்றே ஊரில் இத்தனைப் பேர் இருக்கும்போது... மறப்பதா?

யாருமில்லாத தனிமைகளில் முதன் முதலாக சந்தித்ததில் துவங்கி... அப்போது அவள் என்ன டிரெஸ், நான் எத்தனை

தூரத்தில் இருந்தேன், பேசிய சரியான வார்த்தைகள் என்ன? - இப்படி விலாவாரியாக யோசித்து... கடைசி சந்திப்பு வரை மனம் விம்ம விம்ம... வலிக்க வலிக்க யோசித்து... நீளமான பெருமூச்சுகள் விட்டு... உறக்கம் வராமல் புரண்டு... இன்னும் அரை மணி நேரத்தில் யாரும் தொந்தரவு செய்ய மாட்டார்கள் எனும் பட்சத்தில் வாய்விட்டு அழுது... போடா! முட்டாள்!' என்று சொந்தமாக திட்டிக் கொண்டு... கிட்டத்தட்ட பைத்தியம் மாதிரி அரற்றி...

சோகமான நினைவுகளைச் சுமப்பதில் ஒரு சுகம் சத்தியமாய் இருக்கிறது.

இந்த மூன்று வருடங்களில் இதே ரகசிய அவஸ்தைகளை அவளும் பட்டிருப்பாளா? என்னை நினைத்திருப்பாளா?

அதெப்படி நினைக்காமலிருக்க முடியும்? எத்தனையோப் பேர் தினசரி வாழ்வில் அவளை எனக்கு நினைவுபடுத்துவது போல... எத்தனையோப் பேர் என்னை அவளுக்கு நினைவுபடுத்தாமலிருப்பார்களா?

ரொம்பத் தனிமையில் என்னைப் போலவே அவளும் அழுதிருப்பாள். இஷ்டப்பட்டு நடந்த திருமணமா என்ன?

என்னை நினைவிலிருந்து ஒதுக்கியிருந்தால் பொது இடத்தில் அப்படி கையசைத்திருப்பாளா?

ச்சே! பேசாமல் வர நேர்ந்து விட்டதே.

என்ன இது! இன்னொருவன் மனைவியைப் பற்றி இப்படி நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்!

ஆமாம்! அவளை நினைக்கிறேன். இது சர்வ உண்மை! என் நினைவு எனக்கு முழு உரிமை உள்ள இடம். இங்கே கலாச்சாரக் கட்டுப்பாடோ, இந்தியன் பீனல் கோடோ இல்லை.

என்ன நினைக்கத் தோன்றுகிறதோ அதை நினைக்க பரிபூரண சுதந்திரம் எனக்கு இருக்கிறது. இது சுதந்திரம் கூட இல்லை. இதுதான் இயல்பு நிலை. எப்போதுமே



கட்டுப்பாடும், சட்டதிட்டமும் செயலுக்குத்தான் வருகிறது. சிந்தனை - என் ராஜ்யம்.

ஆர்த்தியை என் ரகசிய மனம் இப்போதும் நேசித்துக் கொண்டிருப்பது மறுக்க முடியாத உண்மை. இது இனி வெளிப்படுத்த அவசியமில்லாத, வெளிப்படுத்த வேண்டாத ரசிப்பு! இந்த மனக் காதலுக்கு ஏது தோல்வி?

அறையின் பெரிய விளக்கு போடப்பட்டதில் கண்களைச் சுருக்கினான் ரகு.

''தூக்கம் வருதுன்னு சொன்னீங்க. இப்படி கொட்டக் கொட்ட முழிச்சிட்டிருக்கீங்க?'' என்றாள் சாரதா சரவணனை துணியோடு தூக்கி வந்து படுக்கையறைக் கம்பியில் மாட்டியபடி, புரண்டான் அவன்.

''கலைஞ்சிடுச்சி சாரதா.''

''வாழைப்பழம் இருக்கு. சாப்பிடறிங்களா?''

''வேணாம்மா. நாளைக்கு சாப்பிடறேன்.''

''இன்னிக்கு சாப்பிடற பதத்தில் இருக்கு. நாளைக்கு ரொம்ப கனிஞ்சிடும். நீங்க எடுத்துக்கமாட்டீங்க. வேலைக்காரிக்குதான் கொடுக்கணும்.''

''சரி, கொண்டா.''

சாரதா வாழைப்பழம் இரண்டை உரித்து தட்டில் வைத்து எடுத்து வந்து அவனருகில் வைத்து, ''என்ன, சட்டைகூட கழட்டாம படுத்துட்டீங்க?'' என்றாள்.

அப்போதுதான் கவனித்து பட்டன்களைக் கழற்றிக் கொடுக்க, வாங்கி திருத்தமாக ஹேங்கரில் மாட்டினாள்.

''இந்த பேண்ட்டும், சட்டையும் துவைக்கப் போட்டுட வேணுமா?'' என்றாள் மற்றொரு ஹேங்கரைக் காட்டி.

''ம்'' என்று பழம் சாப்பிட்டான்.

அந்த சட்டைப் பாக்கெட்டிலிருந்த கற்றையான காகிதங்களையும், பணத்தையும் வேறு சட்டைப் பாக்

கெட்டில் மாற்றிவிட்டு துவைக்கும் துணிகளைப் போலப் பிளாஸ்டிக் கூடையில் போட்டாள்.

''என்னங்க திடீர்னு ஏதோ சிந்தனையா இருக்கீங்க?'' சாரதா அவன் அருகில் வந்து அமர்ந்தாள். மின் விசிறி போதாமல் முந்தானை முனையால் கொஞ்சம் விசிறிக் கொண்டாள்.

''ஒண்ணுமில்லையே.''

''எக்ஸிபிஷன்ல கலகலன்னுதான் பேசிட்டிருந்தீங்க. அப்புறம் திடீர்னு சைலண்ட்டாய்ட்டிங்க. ஹோட்டல்லயும் சரி, திரும்ப பைக்குல வந்தப்பயும் சரி, எதுவுமேப் பேசலை. என்னாச்சுங்க?''

''ஒண்ணும் இல்லை சாரதா.''

''வீடு கட்டறதை நினைச்சிட்டிருந்திங்களா?''

அவளை சமாதானப்படுத்தும் விதமாக என்ன சொல்வதென்று அவன் தவிக்க... அவளே காரணத்தை எடுத்துக் கொடுத்ததால், ''ஆமாம் சாரதா, ரொம்ப மலைப்பா இருக்கு நினைச்சா'' என்றான் ரகு.

''திட்டம் போட்டு செஞ்சா எல்லாமே சுலபம் தான்'' என்று படுத்துக் கொண்ட சாரதா அவன் மார்பில் கை போட்டு, ''என்ன, உடம்பு இவ்வளவுசூடா இருக்கு?'' என்றாள்.

''எக்ஸிபிஷன்ல கத்தினது... ரொம்ப டயர்டா இருக்கு சாரதா'' என்றான் ரகு.

''சரி, தூங்கலாம்'' என்று கையை எடுத்துக் கொண்டாள்.



4

தலையை செல்லமாக அசைத்து முன் புற கூந்தல் கற்றையை விலக்கிக் கொண்ட ஆர்த்தி இரண்டு கைகளாலும் பிடித்த சமூசா சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அதி சுத்தக்காரியாக ஒவ்வொரு கடிக்கும் காகித நாப்கின் எடுத்து உதடுகளை ஒற்றிக் கொண்டாள்.



பாதி வளைந்த அகல ஸ்ட்ரா மூலம் ரோஸ் மில்க் உறிஞ்சியபடி மெனு கார்டில் கவனம் செலுத்தியிருந்தான் ரவி.

''ஆர்த்தி...''

''ம்?''

''இன்னும் மூணு மாசத்தில் எங்க பேங்க்ல எனக்கு டிரான்ஸ்பர் ஆர்டர் போட்டுடுவாங்க.''

''கேன்ஸல் செய்ய முடியுமான்னு பார்க்கப் போறேன் ரவியே...''

''ரீஜனல் மேனேஜர்கிட்டேப் பேசினேன். யூனியன் ஆளுங்க கிட்டேப் பேசினேன். ஏதாச்சும் பொருத்தமான ஸ்பெஷல் ரீசன் இல்லாம என் டிரான்ஸ்பரை நிறுத்த முடியாதுன்னுட்டாங்க.''

''உன்கிட்ட ஸ்பெஷல் ரீசன் இல்லையா? சொல்ல வேண்டியதுதானே என் ஸ்வீட் டார்லிங் ஆர்த்தியை விட்டுப் பிரிஞ்சி போக முடியாதுன்னு.''

''விளையாடாதே! நம்ம கல்யாணத்தைப் பத்தி சீரியஸா யோசிக்க வேண்டிய நேரம் இது!''

''ஒரே பொண்ணுன்னு ரொம்ப செல்லமா வளர்த்துட்டாங்க எங்க வீட்ல. நிறைய சுதந்திரம். ஆனா அப்பா பிசினெஸ்ல இருக்கறதால வர்ற மாப்பிள்ளையும் பிசினெஸ்ல இருக்கறவரா வரணும்னு அடிக்கடி சொல்லிட்டிருப்பாரு! அவரை எப்படி சம்மதிக்க வைக்கிறதுன்னு நினைச்சா பயமா இருக்கு.''

''எல்லாத்திலயுமே ப்ளஸ், மைனஸ் இருக்கு ஆர்த்தி, உனக்குத் தெரியாத விஷயமில்லை? கோடி கோடியா புரண்ட எவ்வளவு பெரிய வியாபார நிறுவனங்கள் சரிஞ்சிருக்கு! எத்தனை பிசினெஸ்மேன் இன்சால்வென்சி கொடுத்திருக்காங்க! எப்பவும் அதில ரிஸ்க் இருக்கு. எனக்கு அப்படி இல்லை. ரிட்டையர்மெண்ட் வரைக்கும்

நிச்சயமான சம்பளம் இருக்கு - இன்க்ரிமெண்ட்டோட அப்புறமும் பென்ஷன் இருக்கு. இப்போ அஞ்சி சொச்சம் வாங்கறேன். மெட்ராஸ்ல இன்னும் அதிகம் கிடைக்கும். எனக்கு மெட்ராஸ்தான் அடுத்த போஸ்ட்டிங் ப்ளேஸ். அம்மா சேலத்தில அண்ணன் வீட்ல இருக்காங்க. அங்கேர்ந்து வர மாட்டேன்னு சொல்லிட்டாங்க. நீ - நான் ரெண்டே பேருதான். ஆயிரம் ரூபா வாடகைல விடு பார்த்துட்டா மிச்சப் பணத்தில ஜோரா குடித்தனம் நடத்தி கொஞ்சம் சேமிக்கவும் செய்யலாம் ஆர்த்தி.''

''எனக்குப் புரியுதுப்பா. எங்கப்பாவுக்கு எப்படிப் புரிய வைக்கப் போறோம்?''

''நான் வர்றேன். பேசறேன். புரிய வைக்கிறேன். எப்படியும் ஒருநாள் தெரியப்படுத்திதான் ஆகணும். விளைவுகளை சந்திச்சுதான் ஆகணும்.''

''ஸண்டே ரொம்ப ரிலாக்ஸ்டா இருப்பார்.''

''எத்தனை மணிக்கு, வரட்டும்?''

''காலைல பத்து மணிக்கு.''

''இந்த மாதிரி ரகுன்னு எனக்குத் தெரிஞ்ச ஃப்ரெண்டு ஒருத்தர் ஏதோ ஒரு விஷயமாக உங்களைப் பார்த்து பேசணும்னு சொன்னார், வரச் சொல்லிருக்கேன்னு பொதுவா சொல்லி வெச்சிடு.''

''சரி, ரகு... எனக்கு கலக்கமா இருக்கு.''

''தைரியமா இரு. என்ன ஆய்டும்?''

''அவர் கொஞ்சம் முன்கோபி. உன்னை அவமானப் படுத்தற மாதிரி ஏதாச்சும் பேசிட்டா எனக்கு கஷ்டமா இருக்கும்.''

''பரவால்லை. அவர் ஏது வேணாலும் சொல்லட்டும். நான் பொறுமையாப் பேசறேன். 'உங்க பொண்ணை நான் லவ் பண்றேன் சார்'ன்னு சொன்னா, 'வெரி கங்கிராஜுலேஷன்ஸ்'ன்னு உடனே யாரும் கைகுலுக்க



மாட்டாங்க. முதல்ல கோபமும், ஆத்திரமும் தான் வரும். மெண்ட் செட்டிலாக டைம் கொடுத்தாகணும். அவங்களைப் பொறுத்த வரைக்கும் இது அதிர்ச்சியாத்தான் இருக்கும்.''

''எதுக்கும் உன்கூட யாராச்சும் ஃப்ரெண்டை கூட்டிட்டு வாயேன்.''

''அன்னிக்கு ஆர்.எஸ்.புரத்தில அறிமுகப்படுத்தி வெச்சேனே ராஜசேகர், அவன் நல்லா பக்குவமாப் பேசறவன். சேல்ஸ் ரெப். மெட்ராஸ்ல இருக்கறவன், அவனை போன்ல புடிச்சி வரச் சொல்லிடறேன். வருவான்.''

''அப்போ ஸண்டே வர்றே?''

''ஷ்யூர்!''

''நான் பஜ்ஜி, கேசரி எல்லாம் ரெடி பண்ணமாட்டேன்ப்பா. போனாப் போகுதுன்னு காபி மட்டும் வேணாத் தருவேன்.''

''ஏன் நாங்களே உங்களுக்கும் சேர்த்து ஃப்ளாஸ்க்ல எடுத்துட்டு வந்துடறேமே! ஆமாம், உங்கம்மாவுக்கு கொஞ்சமே கொஞ்சம்கூட நம்ம விஷயம் தெரியாதா?''

''ம்கூம். ஏன்?''

''பொண்ணுங்க பொதுவா அம்மாக்கிட்ட எதுவும் மறைக்கிறதில்லை.''

''எங்கம்மா அதேமாதிரி அப்பாக்கிட்ட எதுவும் மறைக்கிறதில்லை. நியூஸ் நேரா அங்க போய்டுங்கற பயத்திலயே நான் சொல்லலை.''

''உங்கப்பா எப்படி, அம்மா வார்த்தைக்கு மரியாதை கொடுப்பாரா?''

''சில சமயம்! பல சமயம் அவர் எடுக்கறதுதான் முடிவு.''

''ராஜசேகர் நம்பர் இருந்தா இப்பவே நான் போன் பண்ணி வரச் சொல்லிடறேன்'' என்று பாக்கெட் டைரி புரட்டித் தேடி எண்ணை தனியாக பேப்பர் நாப்கின் எடுத்து எழுதிக் கொண்டான் ரகு.

## 5



சிறிய இயந்திரத்தில் 2, 7 என்ற எண்களைத் தொட்டதும் கவுண்ட்டருக்கு வெளியே எலெக்ட்ரானிக் டிஸ்ப்ளேயில் 27 என்கிற எண் சிகப்பாய் ஒளிர்ந்து, கூடவே இயந்திரக் குரல், ''டோக்கன் நம்பர் ட்வென்டி ஸெவன்!'' என்றது.

சிறிய வளைவுத் திறப்பில் நீட்டப்பட்ட [illegible] டோக்கனை வாங்கி கம்பியில் செருகிவிட்டு இரண்டு ஐம்பது ரூபாய் கட்டுக்களைக் கொடுத்தான் ரகு.

கம்பி இடைவெளி வழியாக ஒரு கொத்து [illegible] கிளாஸ்களில் ஒன்றை உள்ளே செலுத்தி வைத்துவிட்டுப் போனான் பையன்.

அந்த பேங்கின் எல்லா கவுண்ட்டர்களிலும் கம்ப்யூட்டர் இருந்தது. வயர்களின் போக்குவரத்துதான் பார்க்க அசிங்கமாக இருந்தது. ஸ்பிளிட் ஏ.சி. ஓசையின்றி குளிர் நிரப்பிக் கொண்டிருந்தது.

உதவி மேனேஜர் ரிசீவரை தனியாகக் கிடத்திவிட்டு, ''ரகு உங்களுக்கு போன்'' என்றார்.

ரகு மேஜையைப் பூட்டி தனது கூண்டின் கதவையும் பூட்டி ஹாலில் நடந்து வந்து வரும்போது செந்திலுக்கு புன்னகைத்தான். ரிசீவரை எடுத்து, ''ஹலோ'' என்றான்.

''நான் ஆர்த்தி பேசறேன் ரகு!''

ரிசீவரை நழுவவிட இருந்து சுதாரித்தான்.

உணர்வுத் தடுமாற்றத்தில் நாக்கு அசையவில்லை.

''ரகு, எப்படி இருக்கேப்பா?''

''ம்'' என்றான்.

''என்ன, பேச மாட்டேங்கறே?''

''எனக்கு... எனக்கு...''

''அதிர்ச்சியா இருக்கா?''

''ம்.''



''எக்ஸிபிஷன்ல திடீர்னு உன்னைப் பார்த்ததும் எனக்கும் அப்படித்தான் இருந்திச்சி ரகு. நான் ராட்டினத்தில் கத் [illegible]ருந்தப்பதானா உன்னைப் பார்க்கணும்? நான் கையசைச் சேன் ரகு. நீ கவனிக்கலை. நான் வேற யாரையோக் கூப் பிடறேனோன்னு திரும்பிப் பார்த்துக்கிட்டுப் போய்ட்டே. என்னை உனக்கு அடையாளம் தெரியலை. கத்திக் கூப்பிட் டாலும் உனக்குக் கேக்காத தூரத்தில நீ இருந்தே. எனக்கு என்ன செய்றதுன்னேப் புரியலை. ராட்டினம் நின்னதும் இறங்கி எல்லாப் பக்கமும் ஓடி ஓடித் தேடினேன். உன்னைக் காணோம். முந்தாநாள் நைட் ரகு! உனக்கு ஞாபகம் இல்லையா ராட்டினத்திலேர்ந்து யாரும் கையாட்டினதா?''

''கவனிச்சேன். முதல்ல புரியலை! அப்புறம் நீதான்னு புரிஞ்சது.''

''மை காட்! என்னை அடையாளம் புரிஞ்சுதா?''

''ம்.''

''அப்புறம் ஏன் பதிலுக்கு கையாட்டலை? ஏன் எனக்காக வெயிட் பண்ணலை?''

''நான் தனியா வரலை ஆர்த்தி. கூட என் வைஃப் இருந்தா.''

''ஸாரி! ஐ ஃபர்காட்! உனக்கு கல்யாணமாய்டுச்சின்னு கேள்விப்பட்டேன்.''

''உன் வாழ்க்கையில பிரச்சினை எதுவும் வரக் கூடாதுன்னுதான் நான் இன்விடேஷன் அனுப்பலை.''

''புரியுது. நானும் எதிர்பார்க்கலை. என்ன பேரு?''

''ம்?''

''உன் வைஃப் பேரு?''

''சாரதா.''

''குழந்தை?''

''ஒரு பையன். எட்டு மாசம்தான் ஆச்சி. உனக்கு குழந்தை...''

''தேங்க் காட்! நல்ல வேளையா இல்லைப்பா!''

''ஏன் அப்படிச் சொல்றே?''

''அப்படித்தான் சொல்லத் தோணுது.''

''புரியலை.''

''லேட்டாப் புரிஞ்சுக்கலாம். உன்னை எப்படி போன்ல பிடிச்சேன்னு கேக்கமாட்டியா?''

''சொல்லு!''

''நீ எந்த பேங்க்ல வேலை பார்க்கறேன்னு எனக்குத் தெரியுமே. உங்க ரீஜனல் ஆபீஸ் போன் செஞ்சி உன் பேரைச் சொல்லி எந்த பிராஞ்ச்ன்னு கேட்டேன். மந்தைவெளி பிராஞ்ச்ன்னு சொல்லி போன் நம்பரும் கொடுத்தாங்க.''

''ஆமா நீ எங்க மெட்ராஸ்ல? எப்ப வந்திங்க?''

''என்ன திடீர்னு மரியாதை? எப்பவும் போல பேச இல்லை. நான் உன்னை வாங்க,போங்கன்னு பேசணும்னு எதிர்பார்க்கறியா?''

''இல்லை, நீயும் உன் புருஷனும் எப்ப வந்திங்கன்னு கேட்டேன். ஃபேமிலியோடதானே வந்தே?''

''இல்லை.''

''நீ மட்டுமா?''

''ஆமாம்.''

''எப்போ வந்தே?''

''ஒரு வாரமாச்சி.''

''எப்போ புறப்படறே?''

''எங்கே?''

''மும்பைக்கு.''

''எதுக்கு?''

''புரியலை.''

''சரி, இப்ப நாம பேசறது உனக்குத் தொந்தரவா?''



''பேங்க் வொர்க்கிங் டைம். ஏழெட்டு பேர் பேமெண்ட்டுக்காக வெய்ட் பண்றாங்க.''

''சரி, நீ வேலையைப் பாரு. லஞ்ச் டைத்தில மறுபடி கூப்புடறேன். அப்போ ஃப்ரீயா பேச முடியுமில்லையா?''

''ம். சரி. நீ இங்கே என்ன பண்றே ஆர்த்தி?''

''சொல்றனே, நிதானமாப் பேசுவமே. வெச்சிடவா?''

''ம்.''

யோசனையுடன் நடந்து கேபின் திறந்து அமர்ந்து எழுநூறு ரூபாய் கொடுக்க வேண்டிய நபருக்கு அறுநூறு ரூபாய் கொடுத்து, அவர், ''குறையுது சார்'' என்று சொன்னதும் மீண்டும் எண்ணிப் பார்த்து, ''ஸாரி'' சொன்னான் ரகு.



## 6

வீட்டின் பின்புறத்தில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்து முயல்களுக்கு கேரட் துண்டுகளை நறுக்கி வீசிக் கொண்டிருந்த ஜெயராமனிடம் அவரின் ஹேங்கரில் மாட்டிய சட்டையுடன் வந்தாள் ஆர்த்தி.

''டாடி... இந்தாங்க... போட்டுக்கங்க, அவங்க வந்திருக்காங்க, ஹால்ல உக்கார வெச்சிருக்கேன்.''

''யாரும்மா?''

''சொன்னனே, ரகுன்னு என் ஃபிரண்டு! அவரும் அவரோட ஃபிரண்டும் வந்திருக்காங்க.''

ஜெயராமன் சட்டையை அணிந்து கொண்டபடியே ஹாலுக்கு வந்து புன்னகையோடு அவர்களை வரவேற்று கை குலுக்கினார்.

''சார். நான் ரகு. பேங்க்ல வொர்க் பண்றேன். இவர் ராஜசேகர். என் ஃபிரண்டு. மெடிக்கல் ரெப்.''

''நீங்க என் பொண்ணுக்கு எப்படி அறிமுகம்?''

''எங்க காலேஜ் ஃபைன் ஆர்ட்ஸ் அசோசியேஷனுக்கு இவர் வொர்க் பண்ற பேங்க்லதான் அக்கவுண்ட் டாடி.

அதோட செகரெட்டரிங்கற முறையில ஹெச்.ஓ.டி. என் பேர்ல செக் போடுவாங்க. நான் பல தடவை பணம் எடுக்க பேங்குக்குப் போயிருக்கேன்'' என்றாள் ஆர்த்தி.

''ஐ ஸீ! என்ன விஷயம் சொல்லுங்க?''

ரகுவும் ராஜசேகரும் பார்த்துக் கொண்டார்கள்.

''உங்க பிசினெஸ் எப்படி இருக்கு சார்?'' என்றான் ராஜசேகர்.

''ஃபைன்! நான் ஏஜன்சி எடுத்திருக்கிற அயிட்டம்ஸ் எல்லாம் ஃபாஸ்ட் மூவிங் அயிட்டம்ஸ். மெயினா பேபி ஃபுட்டும், பிஸ்கெட்டும் கோவை டிஸ்ட்ரிக்ட் முழுக்க கவர் பண்றேன். ஏன், ஏதாச்சும் ஏஜென்சி எடுக்கப் போறீங்களா?''

''ஆமாம் சார். அதான் இந்தத் தொழிலைப் பத்தி உங்க அனுபவத்தைத் தெரிஞ்சுக்கலாம்னு'' என்று வழிந்தான் ரகு. நெற்றியில் சத்தமில்லாமல் தட்டிக் கொண்டாள் அப்பாவின் முதுகுக்குப் பின்னால் நின்றிருந்த ஆர்த்தி.

''எந்தத் தொழிலா இருந்தாலும் உழைப்பு கொஞ்சம், அதிர்ஷ்டம் கொஞ்சம் சேர்ந்தாகணும் சார். இந்த பிஸ்னெஸ்ல கம்பெனிக்கு முதல்ல டெபாசிட் கட்டணும். லைன்ல கிரெடிட் சப்ளை செஞ்சி ஒரு வாரம் கழிச்சுத்தான் வசூல் செய்யணும். பத்து வியாபாரி கரெக்டா பில் செட்டில் செய்வான். ரெண்டு பேரு இழுத்தடிப்பான். ஏமாத்தற வனும் இருப்பான், எல்லாம்தான் இருக்கும். நல்ல கம்பெனில டிமாண்ட் உள்ள அயிட்டம் ஏஜன்சி கிடைச்சா உங்களுக்கு மார்க்கெட்டிங் பிரச்சினை கிடையாது. என்ன கம்பெனி புராடக்ட்ஸ் நீங்க ஏஜன்சி எடுக்கறதா இருக்கீங்க?''

''அது... வந்து...''

''இன்னும் அது முடிவு செய்யலை சார். முதல்ல தொழிலைப் பத்தித் தெரிஞ்சுக்கலாமேன்னு...'' என்றான் ராஜசேகர்.



''சரி, வேற என்ன விஷயம்?''

மீண்டும் தங்களுக்குள் பார்த்துக் கொண்டார்கள்.

இருவரையும் உற்றுப் பார்த்த ஜெயராமன், ''உங்க ரெண்டு பேர்ல ஆர்த்தியை லவ் பண்றது யாரு?'' என்றார்.

அவர்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''சொல்லுங்க! என் பொண்ணு காலைலேர்ந்து ஏழு தடவை வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்ததை வெச்சி யூகிக்க முடிஞ்சது. உங்க பதட்டம் என் சந்தேகத்தை கன்ஃபர்ம் செஞ்சிட்டது.''

''நானும், ஆர்த்தியும் மனசார நேசிக்கிறோம் சார்'' என்றான் ரகு.

ஜெயராமன் திரும்பி ஆர்த்தியைப் பார்க்க... அவள் மெலிதான நடுக்கத்துடன் அமைதியாக தலைகுனிந்து நின்றாள்.

''தகுதி இல்லாத இடத்தில் தெரியாத்தனமா லவ் பண்ணிட்டதுக்காக ஃபீல் பண்ணித்தானே தலை குனிஞ்சி நிக்கிறே?''

முதல் சாட்டையடியில் சுள்ளென்று நிமிர்ந்தாள்.

''டாடி!''

''நீ உள்ளேப் போ! உன்கிட்ட அப்புறமாப் பேசிக்கிறேன்.'' அவள் தயக்கமாய் நிற்க, ''உள்ளே போன்னு சொன்னேன்''என்ற அதட்டலில் நகர்ந்து விட்டாள்.

''சார், நீங்க கோபப்படறது இயல்பான விஷயம். அதே மாதிரி ஏற்பட்ட காதலும் இயல்பான விஷயம் தான்'' என்றான் ராஜசேகர்.

''நீங்க இவருக்கு வக்காலத்தா? நாளைக்கு என் பொண்ணு கண்ணைக் கசக்கிட்டு வந்து நின்னா கவலைப்படப் போறது நீங்களா, நானா தம்பி?''

''அப்படி ஒரு நிலைமை ஏன் வரப் போகுது?''

''சுருக்கமா சொல்லிடறேன். தர்க்கம் பண்ணாம புறப்பட்டுப் போயிடுங்க. காதல் சமாச்சாரம் எல்லாம் வயசு

பண்ற வேலை. எதிர்காலத்தில வாழ்க்கை நல்லா இருக்குமான்னு யோசிக்கத் தெரியாத வயசு! யோசிக்கத் தோணாத வயசு! 'நீ அழகா இருக்கே! நீ கம்பீரமா இருக்கே!' இப்படித்தான் மனசு யோசிக்கும். நாங்க கௌரவமான குடும்பம். ஸ்டேட்டஸ்ல உள்ள குடும்பம். ஆச்சாரமான குடும்பம். ராகுகாலம், எமகண்டம் பார்த்துதான் வீட்டை விட்டு வெளில புறப்படுவோம். எங்களுக்கு ஆர்த்தி ஒரே பொண்ணு. எங்க சொத்து பூரா அவளுக்குத்தான். கிட்டத்தட்ட முப்பது லட்சம் தேறும்னு வைங்களேன். எங்க ஜாதியில உள்ள பையனாப் பார்த்து, ஜாதகப் பொருத்தம் பார்த்து, எங்க தகுதிக்கு சரியான இடமாப் பார்த்துதான் கல்யாணம் செய்வோம். கல்யாணம் சின்ன விஷயம் இல்லை. பிட் நோட்டீஸ் அடிச்சி எடுத்துக்கிட்டு வந்து டொனேஷன் கேப்பாங்களே, அந்த மாதிரி சிம்பிளா வந்து பொண்ணு கேட்டுட்டீங்க. ஒரு மரியாதைக்கு எனக்கு வர்ற ஆத்திரத்தைக் கட்டுப்படுத்திக்கிட்டு இருக்கேன். நீங்க புறப்படலாம் அப்புறம்?'' என்று அவர் எழுந்து கொள்ள,

வேறு வழியில்லாமல் இவர்களும் எழுந்து கொள்ள வேண்டியிருந்தது.

''சார், நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையா கேக்கறிங்களா?'' என்றான் ராஜசேகர்.

''தேவையில்லை. நீங்க போகலாம்னு சொல்லிட்டேன். என் பொண்ணை இனிமே எப்படி கண்டிச்சி வைக்கணுமோ அப்படி கண்டிச்சி வெச்சிக்கறேன். உங்கமேல தப்பில்லை. அவ தைரியம் கொடுத்ததாலதான் படியேறி வந்திருக்கீங்க. அவளுக்குப் பத்தாது. உலகம் தெரியாது. இந்த நினைப்பே வேணாம்.''

''கொஞ்சம் என்னைப் பேச விடுங்களேன். ரெண்டு மனசு ஒண்ணு சேர்றது எல்லா தாம்பத்ய்த்திலயும் நடக்கறதில்லை சார். தாலிங்கற பைண்டிங்குல மனசுல சந்தோஷம் இல்லாம எத்தனை ஜோடிங்க குடித்தனம் நடத்திட்டு



இருக்காங்க தெரியுமா? காதல் ஒரு வரம் சார்! தன் வாழ்க்கைத் துணையைத் தானே தேடிக்கிற இந்த வாய்ப்பு எல்லோருக்கும் அமையறதில்லை. ரகுவுக்கு என்ன தகுதி இல்லைன்னு உங்களால சொல்ல முடியுமா? கவர்ன்மெண்ட் உத்தியோகம் சார். கிட்டத்தட்ட ஆறாயிரம் சம்பளம் வாங்கறான். ஆரோக்யமான உடம்பு. நல்ல மனசு. அந்த மனசு பிடிச்சித்தான் உங்க பொண்ணு பழக ஆரம்பிச்சதே! இந்தக் கல்யாணம் நடந்தா உங்க பொண்ணு சந்தோஷப்படுவாளே ஒழிய, நீங்க சொல்ற மாதிரி கண்ணைக் கசக்கமாட்டா சார்!''

''என்ன பெரிய ஆறாயிரம் சம்பளம்! இன்னிக்கு இருக்கற விலைவாசிக்கு என்ன பெருசா வாழ்ந்துட முடியும்? இன்னிக்கு தேதிக்கு என் பொண்ணு அனுபவிச்சிட்டிருக்கிற எல்லா வசதியும் கொடுக்கமுடியுமா உங்க ஃபிரண்டால? இந்த வீட்ல மூணு ஏ.சி. ரூம் இருக்கு. வாசல்ல நிக்குதே ரெண்டு கார் அதில ஒண்ணு ஆர்த்தியோட உபயோகத்துக்கு மட்டும்தான்.''

''சார், வாழ்க்கையில இந்த சௌகரியங்களைவிட நிம்மதிதான் ரொம்ப முக்கியம். இதெல்லாம் உங்க அந்தஸ்த்தோட அடையாளங்கள்! அதை ஏன் உங்க பொண்ணுமேல திணிக்கிறிங்க? இங்க வசதி இருக்கு. சௌகரியம் செஞ்சிக் கொடுத்திருக்கீங்க. அனுபவிக்கிறது இதெல்லாம் அவ நிஜமான விருப்பங்களான்னு விசாரிச்சிருக்கிங்களா? இதெல்லாம்தான் முக்கியமாப் பட்டிருந்தா ஆர்த்தி என்னைப் பார்த்து நேசிக்கிறதா சொல்லிருக்கமாட்டா சார். இதை விட நூறு மடங்கு வசதியுள்ள பல மில் ஓனர்ஸ் இதே கோவையில இருக்காங்க. வாழப் போறது ஆர்த்தி, என் சம்பாத்தியத்தில என்னோட குடித்தனம் நடத்த அவ தயாரா இருக்கா. நீங்க ஏன் கட்சி பேசறிங்க?''

''முதல்லயே சொன்னேன், நான் வாதம் செய்ய விரும்பலைன்னு. என் பொண்ணுக்கு யாரை மாப்பிள்ளையா

செலக்ட் செய்யணும்னு எனக்குத் தெரியும். இதுக்கு போய் உங்க லெக்சரைக் கேக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. வேற முக்கியமான வேலை இருக்கு.''

ஜெயராமன் வளைந்த படிகளில் ஏறி உச்சிக்கு சென்று ''மரகதம்!'' என்று கத்தினார்.

நடுக்கமாக வந்து நின்ற ஆர்த்தியின் அம்மா, ''என்னங்க?'' என்றாள்.

''அவங்களை வெளில போகச் சொல்லி ரெண்டு தடவை சொல்லிட்டேன். போக இஷ்டமில்லைன்னா இடைஞ்சல் இல்லாம வாசல்ல போய் நிக்கச் சொல்லு. ஆர்த்தியை மாடிக்கு வரச் சொல்லு!'' என்று விட்டு ஒரு அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டார்.



7

லஞ்ச் இடைவெளியில் சாரதா கேரியரில் அனுப்பியிருந்த சாப்பாட்டில் பாதிதான் சாப்பிட்டான் ரகு. ஒவ்வொரு வாய்க்கும் போனைப் பார்த்துக் கொண்டான்.

அவசரமாக கை கழுவி சிகரெட் பிடித்தான்.

''என்ன ரகு, டென்ஷனா தெரியறிங்க?'' என்றான் செந்தில்.

''நத்திங்... நத்திங்...'' என்று பொய் சொன்னான்.

'ஆர்த்தி சென்னையில் தனியாக என்ன செய்கிறாள்?' என்று மனம் மறுபடி மறுபடி கொக்கி போட்டது. 'நல்ல வேளையாக குழந்தை இல்லை' என்றாள். 'மும்பைக்கு ஏன் போக வேண்டும்?' என்றாள். என்ன அர்த்தம்? 'லேட்டா புரிஞ்சுக்கலாம்' என்றாள். என்ன ஆயிற்று?

அவள் எங்கிருந்து பேசுகிறாள் என்று கேட்காமல் விட்டுவிட்டேனே?

இப்போது அவளாக மறுபடி அழைத்தால்தான் உண்டு. சொன்னபடி அழைத்துப் பேசுவாளா?



மூன்று வருடம் கழித்துப் பேசுவது போலவாப் பேசினாள்? என்னவோ நேற்று சந்தித்துவிட்டு இன்று மீண்டும் சந்திக்கும் போது பேசுவது போல இயல்பாக, உரிமையாக, அதே உற்சாகத்துடன், அதே இனிமையான குரலில்...

போன் அடித்ததும் அவசரமாக பாதி சிகரெட்டை அணைத்து விட்டுப் போய் எடுத்து, ''தேவகி, உங்களுக்கு போன்!'' என்று வெறுப்பாக விலகி வந்தான்.

அவள் பேச வேண்டும்! பேசினால் எங்கேயிருந்து பேசுகிறாள் என்று இந்த தடவை தவறாமல் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்! தெரிந்து? தெரிந்து... சந்திக்க வேண்டும். நேரில் பேச வேண்டும்!

'இந்தத் தவிப்பு சரிதானா?' என்று ஒரு உள்கேள்வி எழுந்தது.

'சரியோ, தவறோ... இந்தத் தவிப்பு இந்த நிமிட நிஜம்!' என்று ஒரு உள்பதில் வந்தது.

பாதி சிகரெட்டை அணைத்து விட்டதற்காக வருத்தப்பட்டு, மீண்டும் ஒரு சிகரெட்டைப் பற்ற வைக்கப் போன போது போன் ஒலிக்க... பற்ற வைக்கவில்லை.

''ஹலோ... ரகு ஹியர்!''

''சாப்ட்டாச்சா ரகு?'' என்றாள் ஆர்த்தி.

''ம்.''

''ஹோட்டல்லயா?''

''இல்லை. வீட்லேர்ந்து கேரியர் வரும்.''

''சாரதா நல்லா சமைப்பாங்களா?''

''ம்.''

''இன்னிக்கு என்ன சமையல்?''

''கவனிக்கலை. ஏதோ சாப்ட்டேன்.''

''நீ சாப்ட்டியான்னு கேக்க மாட்டியா?''

''சொல்லு, சாப்ட்டியா?''

''இல்லை.''

''ஏன்?''

''பசிக்கலை. சாப்பிடத் தோணலை. ஐ ஜஸ்ட் ஸ்கிப்ட். ஒரே ஒரு மில்க் ஷேக் மட்டும் குடிச்சேன்.''

''நானும் கேரியரை காலி செய்யணுமேன்னுதான் சாப்ட்டேன். பாதியை பியூனுக்குக் கொடுத்துட்டேன். ஆமாம். எங்கேர்ந்து பேசறே நீ?''

''வெய்ட். எனக்கு மெட்ராஸ் அவ்வளவு பழக்கமில்லை. இந்த ஏரியா மைலாப்பூர். ஒரு நிமிஷம்...'' என்று யாரையோ விசாரித்து விட்டு, ''யெஸ். இந்த இடம் லஸ் கார்னர். எதிரில காமதேனுன்னு ஒரு தியேட்டர் இருக்குது.''

''எங்க பேங்க் இருக்கிற இடத்துக்கு ரொம்பப் பக்கம் ஆர்த்தி.''

''அப்படியா? நடந்தே வந்துடலாமா?''

''இல்லை. பஸ்லன்னா ரெண்டே ஸ்டாப். ஆட்டோல மினிமம் தாண்டாது. ஆமாம், லஸ்ல என்ன பண்றே?''

''ஒரு இண்ட்டெர்வியூக்கு வந்தேன்.''

''என்ன இண்ட்டெர்வியூ? யார் கேண்டிடேட்?''

''கம்ப்யூட்டர் ஆபரேட்டர் போஸ்ட்டுக்கு இண்ட்டெர்வியூ நான்தான் கேண்டிடேட்.''

''விளையாடாமச் சொல்லு ஆர்த்தி.''

''இதில விளையாட என்ன இருக்கு?''

''மிஸ்டர் சேது ஒரு பெரிய டிராவல்ஸ் வெச்சிருக்கிறவர்னு எனக்குத் தெரியும். நீ எதுக்கு வேலைக்குப் போகணும்?''

''சாப்பிடறதுக்கு பணம் வேணாமா ரகு? உன்னை ரொம்பக் குழப்பறேன் இல்ல? நான் உன்னை மீட் பண்றதில எனக்கு எந்த சங்கடமும் இல்லை. உனக்கும் எந்த சங்கடமும் இல்லைன்னா... நாம மீட் பண்ணலாம் ரகு. நீ சொல்லு.''



''மீட் பண்ணலாம் ஆர்த்தி. எங்கே? எப்போ?''

''இந்த ஊருக்கு நான் புதுசு, கரெக்டா வழி சொன்னா வந்துடுவேன். இல்லை, நீ என்னை பிக்கப் பண்ணிக்கிறதா இருந்தாலும் சரி.''

''நான் அரைநாள் லீவு போட்டுட்டு இப்பவேப் புறப்பட்டு வர்றேன் ஆர்த்தி. நீ சொன்னியே அந்த தியேட்டர் வாசல்லயே வெய்ட் பண்ணு. நான் பைக்குல வர்றேன். அங்கேயே இரு. வெச்சிடட்டுமா?''

ரகு அவனாக செயல்படவில்லை. அவனை எதுவோ செலுத்தியது.

அரைமணி நேரத்திற்குள் தனது பொறுப்புகளை முடித்து, பலவற்றை செந்திலிடம் ஒப்படைத்துவிட்டு மேனேஜரிடம் 'ஒரு நண்பனை அவசரமாக சந்திக்க வேண்டியிருக்கிறது' என்று காரணம் சொல்லிப் புறப்பட்டான்.

காமதேனு தியேட்டர் வாசலில் காத்திருந்த ஆர்த்தியை புடவையில் அவன் எதிர்பார்க்கவில்லை. அருகில் பார்த்த போதுதான் அவள் இளைத்திருப்பதும், கன்னங்கள் ஒட்டிப் போயிருப்பதும், தலைமுடி அடர்த்தி குறைந்திருப்பதும், நிறம் கொஞ்சம் மங்கியிருப்பதும் அறிய முடிந்தது.

பைக்கை ஸ்டாண்ட் போட்டு விட்டு கைகளைப் பிசைந்தபடி நின்றான் ரகு. அவளோ மெலிதாக சிரித்தபடி அவனை தீர்க்கமாகப் பார்த்தாள்.

''தொந்தி போட்ருக்கே ரகு. கன்னமெல்லாம் புஸ்சுன்னு உப்பி... கும்முன்னு இருக்கே. ஹேப்பி மேரீட் லைஃப்! ம்?'' என்றாள் கைகளைக் கட்டிக் கொண்டு.

''ம்'' என்றான், ''ஆனா நீ ஏன் இப்படி மாறிட்டே?''

''இங்கயே நின்னு பேசப் போறமா ரகு?''

''எங்கப் போலாம்?''

''நீதான் சொல்லணும்.''

''இந்த தியேட்டருக்குள்ளே மேட்னி டிக்கெட் வாங்கிட்டுப் போயிடலாமா ஆர்த்தி?''

''உனக்குத் தெரிஞ்ச யாராச்சும் உன்னோட என்னைப் பார்த்தா உனக்குப் பிரச்சினை ஆயிடுமா ரகு?''

''சேச்சே. அதுக்காகச் சொல்லலை.''

''அப்படி ஒரு கவலை இருந்தா அது நியாயமானதுதான் பாவம்! உன் லைஃப் என்னால ஏற்கனவே காயப்பட்டிருக்கு. மறுபடி காயப்பட்டுடக் கூடாது. இன்ஃபாக்ட், உன்னை நேர்ல பார்க்கக் கூடாது, போன்ல, மட்டும்தான் பேசணும்னு நினைச்சேன் ரகு. பேசறப்போ என்னை மீறி ஏதும் பண்ணலாம்னு சொல்லிட்டேன்.''

''என்ன ஆர்த்தி அசட்டுத்தனமாப் பேசறே? நீ இன்னும் சாப்பிடலைன்னு சொன்னியில்ல? வா, ஏதாச்சும் ரெஸ்ட்டாரெண்ட் போலாம்.''

பைக்கில் பின்னால் அவள் அமர... புறப்பட்டான்.

மூன்று வருடங்களுக்குப் பிறகு இத்தனை அருகாமையில் ஆர்த்தி. ஆனால் அந்த ஆர்த்தி இல்லை இவள்!

''உனக்கு வீடு எங்கே ரகு?'' காற்றில் புரளும் கூந்தல் உதிரிகளை ஒரு பக்கமாக ஒதுக்கிக் கொண்டு கேட்டாள்.

''திருவான்மியூர்.''

''எங்க இருக்கு அது?''

''மெட்ராஸ்ல அது சவுத் எண்ட். மகாபலிபுரம் போகணும்னா திருவான்மியூர் தொட்டாகணும். என் பிராஞ்ச்க்கு பக்கம். மந்தைவெளிக்கு அடுத்து அடையாறு. அடையாறுக்கு அடுத்து திருவான்மியூர். ஆமாம், நீ வந்து ஒரு வாரமாச்சின்னு சொன்னியே, யார் வீட்ல தங்கியிருக்கே?''

''இங்க யார் இருக்கா எனக்கு? மகாலிங்கபுரத்தில கல்பனான்னு ஒரு காலேஜ் ஃபிரண்டு. கோவைலேர்ந்து அவளுக்கு போன் செஞ்சேன். அவதான் எனக்கு ஆயிரம் ரூபா வாடகையில ஒரு சின்ன போர்ஷன் பிடிச்சுக் கொடுத்தா, வந்துட்டேன்.''



இப்போது கேட்க வேண்டாம் என்று நினைத்த ரகு, அந்த ஏ.சி. அறையில் அவளுக்கு சப்பாத்தியும் அவனுக்கு காபியும் ஆர்டர் செய்துவிட்டு, ''என்னாச்சு ஆர்த்தி?'' என்றான் சன்னமாக.

மெதுவாக சிரித்தாள் ஆர்த்தி.

''என்னை மாதிரி முட்டாள் உலகத்தில் இருக்கவே முடியாது ரகு. ஒரு ஆளை சரியாப் புரிஞ்சுக்க எனக்கு மூணு வருஷமா தேவைப்படும்? பட்டுதே! அப்ப நான் முட்டாள் தானே? இல்லை, அந்தாள் அதிபுத்திசாலின்னும் சொல்ல லாம்.''

''யாரைச் சொல்றே?''

''என்னோட முன்னாள் கணவனைப் பத்திச் சொல்றேன் ரகு.''

''வாட் டு யு மின்?'' என்றான் ஒரு மாதிரி இதை எதிர்பார்த்திருந்ததால் குறைவான அதிர்ச்சியுடன்.

''டைவோர்ஸ் ஆகி பத்து நாளாச்சு ரகு. மியூச்சுவல் கன்சண்ட்ல பிரிய அந்தாளை சம்மதிக்க வைக்கிறதுக்குள்ளே போதும் போதும்னு ஆய்டுச்சி.''

''ஏன் ஆர்த்தி?''

''ஏன்?'' பெருமூச்சு விட்டாள் ஆர்த்தி. ''நிறைய சொல்லணும். இன்னொருநாள் சொல்றனே, மூடு கெட்டுடும். அழுதுடுவேன். வரவழைச்சுக்கிட்ட ஒரு தைரியத்துல இயங்கிட்டிருக்கேன். அந்த தைரியம் பலவீனப்பட்டுடும் ரகு. இப்ப வேணாமே! ப்ளீஸ்... கேக்காதே! சுருக்கமாச் சொன்னா... அந்தாளு ஒரு கிரிமினல்! ஜெயில்ல இருக்க வேண்டிய பொறுக்கி!''

''ஓகே. ஓகே. ரிலாக்ஸ்! ரொம்பக் கஷ்டமா இருக்கு ஆர்த்தி. உன் அப்பா....?''

''இருக்கார். சகல சௌக்கியத்தோட இருக்கார். என் பொண்ணு செத்துட்டான்னு ஊர் பூரா சொல்லிக்கிட்டு இருக்கார்.''

''ஏன்?''

''நான் டைவோர்ஸ் பண்ணதில அவருக்கு சம்மத மில்லை. அனுசரிச்சி அந்தாளோட வாழணும்னு சொன் னார். அந்தாளை எனக்குக் கட்டி வெச்சது எங்கப்பா எனக்கு செஞ்ச மகா பெரிய துரோகம்னா, அவன் சுயரூபம் தெரிஞ்சப்புறமும் தொடர்ந்து வாழச் சொன்னது அதைவிட பெரிய துரோகம் ரகு! - அந்தாளோட வாழறது தினம் தினம் சாகறது மாதிரி!''

ரகு மௌனமாக காபி பருகினான்.

''தப்பு பண்ணிட்டேன் ரகு. நீயும் உன் ஃபிரண்டும் எவ்வளவு கெஞ்சினிங்க என்கிட்ட, 'ரகசியமா கல்யாணம் பண்ணிட்டு அப்புறம் அப்பாவை சமாதானப் படுத்திக் கலாம்'னு நீ சொன்னப்போ என்னால சம்மதிக்க முடியலை. எங்கப்பா 'துப்பாக்கியால சுட்டுக்கிட்டு தற்கொலை செஞ்சுக்குவேன்'னு மிரட்டினப்போ நான் ஆடிட்டேன். அவர் பிடிவாதக்காரர். அவரைப் பத்தி எனக்குத் தெரியும். சொன்னபடி செஞ்சுக்கக் கூடியவரு. 'அவர் செத்தாலும் பரவால்லை, காதல்தான் முக்கியம்'னு நினைக்க என் பாசம் அனுமதிக்கலை ரகு. அப்பா உயிருக்காக காதலை தியாகம் பண்றதா நான் உன்கிட்ட உருக உருக டைலாக் அடிச்சதை நினைச்சா இப்ப சிரிப்பு வருது ரகு. யானை தன் தலையில தானே மண்ணை அள்ளிப் போட்டுக்கற கதையாயிடுச்சி! என் வாழ்க்கை பத்தி அவர் கவலைப்படலை. 'என் பொண்ணு செத்துட்டா'ன்னே இப்ப சொல்றார். ஆனா அவருக்காக கவலைப்பட்டு சீரழிஞ்சு நிக்கிறேன்.''

அவள் குரல் பிசிறி... விழிகளில் முத்துக்கள் தோன்றி... அவசரமாக கைக்குட்டை எடுத்து ஒற்றிக் கொண்டாள்.

''என் கதை போர் கதைப்பா. என்னை விடு. நீ எப்படி இருக்கே ரகு?''

''நல்லாருக்கேன் ஆர்த்தி.''



''சாரதா எப்படி ரொம்ப அண்டர்ஸ்டாண்டிங்கா?''

''ரொம்ப அன்பானவ, சராசரிக் கனவுகள் அவளோடது. வீடு கட்டணும், கார் வாங்கணும், பையனை என்ஜினியராக்கணும், எக்செட்ரா...''

''பையன் பேர் என்ன?''

''சரவணன்.''

''உன் ஜாடையா? அம்மா ஜாடையா?''

''என் ஜாடைதான்.''

''ஹை! இதே காது, இதே மூக்கோட மாஸ்டர் ரகுவா? உன் சின்ன வயசு போட்டோ காமிச்சிருக்கியே, அந்த மாதிரி இருப்பானா?''

''ம்.''

''பார்க்கணும் மாதிரி இருக்குப்பா. உன் வீட்டுக்கு நான் வரலாமா?''

''அது...''

''சாரதாவுக்கு நம்ம காதல் பத்தி சொன்னதில்லையா?''

''இல்லை.''

''உன்னோட வேலை பார்க்கற கர்ள் ஃபிரண்ட் யாரும் வீட்டுக்கு வந்ததில்லையா?''

''பையனோட நாமகரணம் ஃபங்ஷனப்போ நிறைய பேர் வந்தாங்க.''

''திடீர்னு என்னை வீட்டுக்கு கூட்டிட்டுப் போய் என் ஃபிரண்டுன்னு அறிமுகப்படுத்தி வெச்சா... சாரதா சந்தேகப்படுவாங்களா?''

''தெரியலை.''

''ஓ.கே. நான் உன்னை எம்பரேஸ் பண்ண விரும்பலை. போன்ல நீ சட்டுன்னு கட் பண்ணி வெச்சிடுவியோன்னு பயந்தேன். அனுசரணையாப் பேசினே. அப்ப பழகின அதே

அன்போட நேர்ல வந்தே. பேசிட்டிருக்கே. ஐ ம் ஹேப்பி ரகு. நீ என்னை மறக்கலை!''

''எப்... எப்படி ஆர்த்தி மறக்க முடியும்?''

ரகுவுக்கு தொண்டை அடைக்க வேறு திசையில் திரும்பிக் கொண்டான்.

''ரகு, எனக்கு இந்த ஊர்ல யாருமே இல்லப்பா. உன்னோட அடிக்கடி போன்ல பேசலாமா? இந்த மாதிரி அப்பப்போ சந்திக்கலாமா? ஜஸ்ட் ஒரு ஃபிரண்ட்ஷிப்பா! ஐ நோ இப்ப நீ சாரதாவுக்கு சொந்தமானவன். ஐ நோ மை லிமிட்ஸ். எனக்கு மாரல் சப்போர்ட் வேணும் ரகு. நான் பார்த்து புன்னகைக்க யாராச்சும் ஒருத்தர் வேணும். கேன் யு அண்டர்ஸ்டாண்ட் மி ரகு?''

மௌனமாகத் தலையசைத்தான் ரகு.



ஷூவைக் கழற்றிப் போட்டான் ரகு. ஸாக்ஸ் உருவித் திணித்தான். தூளியை இடமும் வலமுமாக இரண்டு கையாலும் பிடித்து ஆட்டியபடி சத்தமே இல்லாத காட்சியை டி.வி.யில் பார்த்துக் கொண்டிருந்தாள் சாரதா.

சாப்பாடு கூடையை ஓரமாக வைத்துவிட்டு மூங்கில் நாற்காலியில் அமர்ந்த ரகு டி.வியை கவனித்து, ''என்ன இது சவுண்டே இல்லை? ரிப்பேரா?'' என்று ரிமோட் எடுத்தான்.

''ஷ்!'' என்று அதட்டினாள் சாரதா. ''இப்பதான் தூங்க ஆரம்பிக்கிறான். இவ்வளவு நேரம் ரகளை!'' என்றாள் ரகசியக் குரலில்.

டீப்பாய் மேல் வைக்கப்பட்டிருந்த அன்று வந்திருந்த இரண்டு கடிதங்களை எடுத்துப் பார்த்தான்.

''அஞ்சி நிமிஷம் கழிச்சி காபி தர்றேங்க.''

''சரி!''



ஒரு கடிதம் தங்கள் நிறுவனத்தில் மாதாந்திர சீட்டு கட்டினால் குலுக்கலில் தங்கக் காசு தருவதாகச் சொன்னது.

மற்றொன்று திருமண பத்திரிகை.

விலாசத்திலிருந்தே அது சாரதாவின் மாமா அனுப்பி யிருப்பதென்று புரிந்தது. உள்ளிருந்து அழைப்பிதழை எடுத்துப் பார்த்தான்.

''இளங்கோவுக்கு கல்யாணம் போலிருக்கு?''

''ஷ்! மெதுவாப் பேசுங்க. நான்தான் பத்து நாள் முன்னாடியே இளங்கோவுக்கு நிச்சயமான விஷயத்தை உங்ககிட்ட சொன்னனே...'' என்றவள் ரகசியக் குரலைத் தொடர்ந்தாள்.

''கல்யாணம் நாளைன்னைக்கு சேலத்தில சாரதா. கொஞ்சம் முன் கூட்டியே பத்திரிகை அனுப்பிச்சாத்தானே ட்ரெய்ன் ரிசர்வ் பண்ண சௌகரியமா இருக்கும். இப்படி லாஸ்ட் மினிட்ல அனுப்பிச்சா எப்படி பிளான் பண்றது?'' என்றான் இவனும் குரலைக் குறைத்துக் கொண்டு.

சரவணன் தூங்கி விட்டானா என்று பார்த்துவிட்டு, அவன் வாயில் வைத்திருந்த பிளாஸ்டிக் நிப்பிளை மெதுவாகப் பிடுங்கி வைத்துவிட்டு அவனருகில் வந்தாள்.

''டென்ஷனாகாதிங்க. ஒரு வாரம் முன்னாடியே போஸ்ட் பண்ணிருக்கார். சீல் தேதி பாருங்க. நம்ம போஸ்டல் டிபார்ட்மெண்ட் அவ்வளவு ஸ்பீடா வேலை செய்யுது.''

ஸ்டாம்ப் மேல் விழுந்துள்ள முத்திரையைப் பார்த்து விட்டு, ''ஆமாம். இருந்தாலும் இந்த மாதிரி தபால்ல அனுப்பிருக்கேன். அவசியம் வரணும்னு என் பேங்க் நம்பர்ல கூப்புட்டு ஒரு வார்த்தை சொல்லிருக்கலாமில்ல?'' என்றான்.

''அன்னிக்குத்தான் லட்சுமி கல்யாண ரிசப்ஷன்ல என் மாமா உங்க கையைப் பிடிச்சிக்கிட்டு 'இளங்கோ கல்யாணம் நிச்சயமாகற மாதிரி இருக்கு. பத்திரிகை அனுப்புறேன்.

அவசியம் வரணும்'னு சொன்னாரே. இன்னும் என்ன ஃபார்மாலிடி எதிர்பார்க்கறிங்க?''

''அசட்டுத்தனமாப் பேசாதே சாரதா. நான் ஃபார்மாலிடிக்காக எதையும் எதிர்பார்க்கலை. நாளைன்னைக்கு கல்யாணம்னா நாளைக்கு நைட்டு நாம புறப்படணும். போக, வர டிக்கெட் வேணாமா? லாஸ்ட் மினிட்ல கிடைக்குமா? பேங்க்ல லீவு சொல்ல வேணாமா? என் பிளானிங்குக்காகத்தான் சொன்னேன்.''

''பத்திரிகை லேட்டா வந்து சேரும்னு அவருக்கு எப்படிங்க தெரியும்?''

''சரி! விடு! ஆர்க்யூ பண்ணாதே. இதுவே திருச்சில இருக்காரே என் சகலை, அவருக்கு முன்கூட்டியே போன்ல சொல்லியிருப்பாரா மாட்டாரா? நீ வேணும்னா கேட்டுப்பாரு. பத்து நாளைக்கு முன்னாடியே அவருக்கு தேதி தெரிஞ்சிருக்கும். நேர்ல போயே பத்திரிகை வெச்சாலும் வெச்சிருப்பாரு. உன் மாமா என்னை அவ்வளவா மதிக்கிறதில்லைங்கறதுதான் உண்மை.''

''உங்களுக்கு இந்தக் கல்யாணத்துக்குப் போறதுக்கு இஷ்டமில்லைன்னு தெரியுது. நேரடியாச் சொல்லிட்டுப் போங்களேன்.''

ரகுவுக்கு ஆத்திரம் எகிறியது.

''அப்படி நான் சொன்னேனா? நீயா ஏன் அர்த்தம் கற்பிச்சிக்கிட்டு சண்டைக்கு வர்றே? நாம இந்தக் கல்யாணத்துக்கு வரணும்னு உங்க மாமா அவசியம் நினைச்சிருந்தாருன்னா இன்னும் கொஞ்சம் முக்கியத்துவம் கொடுத்திருப்பாருன்னு சொன்னேன்.''

''என் மாமா அப்படி ஒண்ணும் பாகுபாடு பார்க்கறவர் இல்லை.''

''திருச்சில இருக்கற உன் அக்கா புருஷனுக்கும் என்னை மாதிரியே பத்திரிகை பார்த்துதான் தேதி தெரியும்னு சொல்றியா?''



''என் மாமாவும் ஜுவல்லரி வெச்சிருக்கார். இவரும் ஜுவல்லரி வெச்சிருக்கார். வியாபார சம்பந்தமா இவர் சேலத்துக்கு அடிக்கடி போவார். அவர் திருச்சிக்கு வருவார். அடிக்கடி பார்த்துக்கறாங்க. பேசிக்கிறாங்க. அதனால தெரிஞ்சிருக்கும்.''

''உன் ஜனங்களை விட்டுக் கொடுக்கமாட்டியே.''

''நீங்கதாங்க என்னை விட்டுக் கொடுத்துட்டிங்க.''

''என்ன சொல்றே?''

''கல்யாணத்துக்கப்புறம் ஒரே சொந்தம்தானே, இதுல உன் சொந்தக்காரங்க, என் சொந்தக்காரங்கன்னு ஏன் பிரிச்சிப் பேசறிங்க?''

அவள் கேள்வி அவனை அறைந்தது.

எந்த வெறுப்பை இப்போது அவள் மேல் கொட்டிக் கொண்டிருக்கிறோம் என்பது அவனுக்குப் புரியவில்லை. ஆர்த்தியை சந்தித்துப் பேசியதிலிருந்து மனதில் இறங்கிய பெயரில்லாத ஒரு வெறுப்பு ஒரு திறப்புக்குக் காத்திருந்து இதோ இப்போது கிடைத்ததும் வெள்ளமாகப் பாய்ந்து கொண்டிருக்கிறது என்பது அவனுக்கேப் புரிந்தது.

வெள்ளம் எப்போதாவது கரை பற்றியோ, கரையோர குடிசை பற்றியோ, அணை பற்றியோ, அணையின் பலம் பற்றியோ கவலைப்பட்டதுண்டா?

வெள்ளம் என்பது வடிந்தாக வேண்டிய ஒன்று. அதற்கு காட்டுத்தனமான பாய்ச்சல் ஒன்றுதான் தெரியும்.

ரகுவுக்குள் துளித் துளியாக சேகரமான வெள்ளம் இப்போது வேகம் ஒன்றே பிரதானமாக பாய்ந்து கொண்டிருக்க...

''என்ன சொல்லிட்டேன் இப்போ? ஏன் இப்படி ஆவேசமாப் பேசறே?''

''நானா? நீங்களா? உங்களுக்கு பேங்க்ல ஏதோ பிரச்சினைன்னா அதுக்கு நான்தான் கிடைச்சேனா? உங்க

கோபம் செல்லுபடியாகற இடத்தில தானே காட்ட முடியும்?'' முகத்தை நொடித்தாள் சாரதா.

''சாரதா! நீ ரொம்பப் பேசறே! பொறுமைக்கு ஒரு எல்லை இருக்கு!''

''சரி, இப்ப சொல்லிருங்க கரெக்ட்டா! இந்தக் கல்யாணத்துக்குப் போறமா இல்லையா?''

''கிரீட்டிங்ஸ் அனுப்பிச்சாப் போதாதா?''

''எனக்கு இருக்கறது ஒரே மாமா. அவருக்கு ஒரேப் பிள்ளை. என்னை வளர்த்தவருங்க. அவர் வீட்ல பெரிய விசேஷம்.''

''சரி, ரயில்ல பெர்த் கிடைக்க வேணாமா?''

''பெர்த் கிடைக்கலைன்னா என்ன?''

''பெர்த் கிடைச்சா சௌகரியம். தூங்கிட்டுப் போகலாம்.''

''திருவள்ளுவர், பிரைவேட்டுன்னு நூறு பஸ்சு இருக்கு சேலத்துக்கு. இங்க இருக்கற சேலம்! அதென்ன அமெரிக்காலயா இருக்கு? உங்களுக்குப் போக வேணாம்னு தோணிடுச்சி. அதுக்கு ஆயிரம் நொண்டிச் சமாதானம் சொல்றிங்க! வீட்டுக்குள்ளேயே அடைஞ்சி கிடக்க வேண்டிய ஜென்மம் தானே நாங்க! கல்யாணம், காட்சின்னு போக ஆசைப்படறதுக்கு உரிமை இருக்கா என்ன?''

சாரதாவின் கண்களில் பொங்கின கண்ணீர் இப்போதை ரகுவின் மனநிலையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. மாறாக எரிச்சல் அதிகமானது.

''எதுக்கு இப்ப அழுகை? உன்னை என்ன ஜெயில்ல மாதிரி அடைச்சி வெச்சிருக்கேனா? காய்கறி கடைக்கு, ஷாப்பிங்குக்கு நீ தனியா போகலை, வரலையா? பீச்சுக்கோ, ஹோட்டலுக்கோ, சினிமாவுக்கோ உன்னைக் கூட்டிக்கிட்டுப் போகாம இருக்கேனா? இந்தக் கல்யாணத்துல கலந்துக்க எனக்கு இஷ்டமில்லை. உன்னைப் போக வேணாம்னு நான் சொல்லலை. தாராளமா போய்ட்டு வா!



நாளைக்கு பகல் டிரைய்ன்ல அனுப்பி வைக்கிறேன். உங்க அண்ணனுக்கு போன் பண்ணி தகவல் சொல்லிடறேன். அவனை ஸ்டேஷனுக்கு வந்து ரீசிவ் பண்ணிக்கச் சொல்றேன். மொய் எவ்வளவு எழுதணும்னு சொல்லு, பணம் தர்றேன்.''

''குழந்தையை வெச்சிக்கிட்டு நான் மட்டும் தனியா...''

''சரவணனை விட்டுட்டுப் போ. பாட்டில் பால்தானே சாப்பிடறான். அப்புறம் என்ன? நான் பார்த்துக்கறேன். நாளன்னைக்கு ஞாயித்துக்கிழமை தான். பேங்க் இல்லை. நான் வீட்ல இருந்து சரவணனைப் பார்த்துக்கறேன். நீ மட்டும் போய்ட்டு வந்துடு.''

''ஏன் இப்படி அழிச்சாட்டியம் பண்றீங்க? நான் மட்டும் போனா மரியாதையா இருக்காதுங்க.''

''என் மரியாதை கெடறதைப் பத்தி உனக்குக் கவலையே இல்லையா? இந்தப் பத்திரிகையோட நாலு வரி லெட்டராவது இருக்கா? அனுப்பாம விட்டுட்டா நாளைக்கு பேச்சு வரும்னு போனாப் போவுதுன்னு அனுப்பி வெச்சிருக்கார் உன் மாமா. எனக்குத் தெரியும். என் வாயைக் கிளறாதே! பல தடவை அவர்கிட்ட நான் அவமானப் பட்டுட்டேன். இஷ்டம் இருந்தா நீ மட்டும் போய்ட்டு வா. இல்லைன்னா போகாதே. என்னை மட்டும் வற்புறுத்தாதே! சொல்லிட்டேன்!''

கோபமாக சொல்லிவிட்டு அறைக்குள் சென்றான் ரகு.

உடைகளை நீக்கி குளித்தான்.

தலை சீவிக் கொண்டிருக்கும் போது மௌனமாக காபி வைக்கப்பட்டது. அமைதியாக நின்ற சாரதாவின் நாசி துவாரங்கள் விரிந்து அடங்கின.

''என்ன முடிவு செஞ்சே, சொல்லு!''

''நீங்க கிரீட்டிங்ஸ் அனுப்பிச்சிடுங்க'' என்றாள்.

அவளை நிமிர்ந்து பார்த்தபோது பரிதாபமாக இருந்தது. ஜில்லென்ற கண்ணீரில் குளித்ததில் ஆத்திரம் அடங்கி, நியாயம் புரிந்தது.

பாவம்! இவள் என்ன செய்தாள்?

ஏன் இவள்மேல் வெடித்தேன்?

என் கோபம் யார் மீது? ஆர்த்தியை இந்த நிலையில் சந்திக்க நேர்ந்ததற்கான காரணகர்த்தாவான அந்த முகம் பார்த்திராத சேதுவா? தன் மகள் இறந்துவிட்டாள் என்று நழுவிக் கொண்ட வாய்ச்சொல் வீரரான அவள் அப்பாவா? என் யோசனைக்கு அன்றைக்கு சம்மதிக்காமல் முட்டாள் தனமாக முடிவெடுத்துவிட்டு இன்றைக்கு அதை உணர்ந்து அழும் ஆர்த்தியா? இன்றைக்கும் ஆர்த்தி மீது பிரியமிருந்தும் எந்த உரிமையும் எடுத்துக் கொள்ள முடியாதபடி குடும்பஸ்தனாய், இன்னொரு பெண்ணுக்கு கணவனாய் நிறுத்தி வைத்திருக்கும் விதியா? யார் மீது என் கோபம்?

மனதில் வெள்ளம் வடிந்திருந்ததால், ''இப்படி உக்காரு சாரதா'' என்ற அவன் குரலில் அமைதி வந்திருந்தது.

''பரவால்லை. காபி ஆறுது!'' என்றாள் ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டு, விழியோரம் நீர்த்தேக்கம் மீண்டும் அணை மீறத் தயாராய் இருந்தது கண்ணீர்.

காபியை ஒரு வாய் பருகிவிட்டு, ''உக்காருன்னு சொல்றேன்ல'' என்று அவள் கையைப் பிடித்து கட்டிலின் உட்கார்த்தி வைத்தான்.

அமைதியாக தலையணை எம்பிராய்டரி கிளிமேல் விரலை ஓட விட்டுக் கொண்டிருந்தாள்.

''நான் நல்ல மூட்ல இல்லை சாரதா.''

''என்னாச்சாம்?'' என்றாள் ராகமாக.

''அது ஏன் இப்போ? ஸாரிம்மா! வெரி ஸாரி. நோகடிச் சுட்டேனா?'' என்றான் ரகு அதீத குற்ற உணர்ச்சியுடன்.



''கத்தறதும் ரெண்டே நிமிஷத்தில குழையறதும் எனக்கென்ன புதுசா? இன்னிக்கு ஆனா அதிகம்.''

''அதான் ஸாரி சொல்லிட்டேனில்ல? கொஞ்சம் சிரிக்கக் கூடாதா?''

''காபியைக் குடிச்சிட்டு டம்ளரைக் கொடுங்க. நான் போறேன்.''

''இந்தக் கல்யாணத்துக்கு அவசியம் போகணுமா சாரதா?''

''வேணாம்ப்பா, நான் எதுவும் வாயைத் திறக்கவில்லை உங்க இஷ்டம்.''

''நான் வர்றதாயிருந்தா உனக்காகத்தான் வரணும்.''

''உங்க தர்மசங்கடம் புரியுதுங்க. என் மாமா உங்ககிட்ட கொஞ்சம் அலட்சியமா நடந்துக்கறதை நானும் கவனிக்காம இல்லை. உங்ககிட்ட இதைச் சொல்லிருக்கேனான்னு ஞாபகமில்லை. என் மாமா, இளங்கோவுக்கு என்னை கட்டி வைக்கணும்னு ஆசைப்பட்டார்.''

''அப்படியா? சொன்னதே இல்லையே நீ?''

''கேளுங்க. ஆனா எங்கப்பாவுக்கு இஷ்டமில்லை.''

''ஏன்? இளங்கோ ஜம்முன்னுதானே இருக்கான்! ஒரேப் பிள்ளை. நகைக் கடை, கார், பங்களா! ஏன் பிடிக்கலை உங்கப்பாவுக்கு?''

''எங்கப்பாவுக்கு வியாபாரம்னாலே அலர்ஜி. எங்க தாத்தா பெருசா வியாபாரம் பண்ணி நொடிச்சிப் போய் எல்லா சொத்தையும் வித்தாராம். அதனால கவர்ன்மெண்ட் வேலைக்குப் போற மாப்பிள்ளைதான் வேணும்னு உங்களைப் பிடிச்சிட்டார். அதில மாமாவுக்கு வருத்தம். அதனால உங்களைப் பார்த்தாலே பிடிக்கலை போலிருக்கு.''

சட்டென்று வாய்விட்டு சிரித்தான் ரகு.

வியாபாரியாய் இல்லாததால் பெண் தர மறுத்தார் ஆர்த்தியின் அப்பா. வியாபாரியாய் இல்லாததால்தான்

பெண் கொடுத்தார் சாரதாவின் அப்பா. என்ன ஒரு முரண்பாடு! என்ன ஒரு கொள்கைகள்!

''எதுக்கு சிரிக்கிறீங்க?''

''ஒண்ணுமில்லை, விடு!''

''நீங்க சொல்றதும் நியாயம்தான், மரியாதை இல்லாத இடத்துக்குப் போக எப்படி மனசு வரும்? நான் மட்டும் போய்ட்டு வந்துடறேன். டிக்கெட் எடுத்துட்டு அண்ணனுக்கு சொல்லிடுங்க.''

''கோபம் இல்லையே?''

''இல்லை. சரவணனை தூக்கிட்டுப் போறேன்.''

''அதான் நான் பார்த்துக்கறேன்னு சொன்னனே...''

''பொறுப்பாய் பார்த்துக்குவீங்களா?''

''ஜுரம் வந்து ஒரு வாரம் கம்ப்ளீட் ரெஸ்ட்ல நீ இருந்தப்போ லீவு போட்டுட்டு நான் பார்த்துக்கலையா? நான் பார்த்துக்கறேன்.'' என்று எழுந்த ரகு சட்டை அணிந்தபடி, ''பைக் சாவி எடு. ரிசர்வ் பண்ணிட்டு வந்துடறேன்'' என்றான்.



## 9

சரியாக பூட்டியிருக்கிறோமா என்று டேபிள் லாக்கரை இழுத்துப் பார்த்துவிட்டு கேபினைப் பூட்டிவிட்டு லன்ச் அறைக்கு வந்து கேரியரைத் திறந்தபோது ரகுவுக்கு போன் வந்திருப்பதாக பியூன் சொல்ல, ஹாலுக்குச் சென்றான்.

''ஹலோ ரகு,'' என்றாள்.

''நான்தான் ரகு.''

''சொல்லு ஆர்த்தி.''

''ஒரு ஹேப்பி நியூஸ். இண்டெர்வியூ அட்டெண்ட் செஞ்சனே, அந்த வேலை எனக்குக் கிடைச்சிடுச்சி. ஒன்



ணாம் தேதிலேர்ந்து ஜாய்ன் பண்ணச் சொல்லிட்டாங்க. ரெண்டாயிரத்து ஐநூறு சம்பளம். ஐ ம் ஹேப்பி ரகு.''

''கோயமுத்தூர்ல உங்கப்பா இருபது பேருக்கு வேலை கொடுத்து வெச்சிருக்கார் ஆர்த்தி.''

''அப்பாவா? ஓ! மிஸ்டர் ஜெயராமனைச் சொல்றியா? விடு! நான் ஒரு இன்டிவிஜுவல். யாருக்கும் இப்ப என்மேல ஹோல்ட் இல்லை. நானும் யாரையும் எதுவும் கேக்க வேண்டியதில்லை. இந்த சுதந்திரம் எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? வருமானத்துக்கு வழி வேணு மேன்னுதான் கவலையா இருந்தேன். 'நொந்தது போதும், இன்னும் நொந்து போக வேணாம் பாவம்'ன்னு என்மேல ரொம்ப இரக்கப்பட்டு கடவுள் சீக்கிரமே இந்த வேலையை வாங்கிக் கொடுத்துட்டார். நான் ரொம்ப நாளைக்கப்புறம் இன்னிக்கு சந்தோஷமா இருக்கேன் ரகு. ஐ வாண்ட் டு செலபரேட். டின்னர் சேர்ந்து சாப்பிடலாமா? உனக்கு அப்ஜெக்ஷன் இல்லைன்னாத்தான்.''

''அப்ஜெக்ஷன் எதுவும் இல்லை ஆர்த்தி, ஆனா சூழ்நிலைதான் சரியில்லை. ஒரு கல்யாணத்துக்காக சாரதாவை சேலத்துக்கு அனுப்பி வெச்சிருக்கேன். நாளைக்குக் கல்யாணம். நாளைக்கு நைட்டுதான் அவ வருவா, குழந்தையை நான் பார்த்துக்கறேன்னு சொன்னதால விட்டுட்டுப் போயிருக்கா. பக்கத்து வீட்ல விஜயான்னு ஒரு அம்மா பாசமா பழகுவாங்க. அவங்ககிட்ட விட்டுட்டுதான் பேங்குக்கு வந்தேன். இன்னும் கொஞ்ச நேரத்தில வீட்டுக்குப் புறப்பட்டுடுவேன்.''

''ஓகே. ஐ கேன் அண்டர்ஸ்டாண்ட். நாளைக்கு ஸண்டேயாச்சே, பேங்க் இல்லை தானே?''

''ஆமாம். வீட்லதான் இருப்பேன். சொன்னனே, குழந்தையைப் பார்த்துக்கணும்னு.''

''ரகு, எனக்கு குட்டி ரகுவைப் பார்க்கணும் மாதிரி இருக்குப்பா, உன் வீட்டுக்கு வரட்டுமா நாளைக்கு? அதிகப்பிரசங்கித் தனமா நான் கேக்கறது?''

''சீச்சி! வாயேன். தாராளமா வா. நான் சொன்ன வழி ஞாபகம் வெச்சிருக்கியா?''

''எழுதியே வெச்சிருக்கேன். அப்புறம்?''

''வேற என்ன? நீதான் சொல்லணும். எப்ப வர்றே நாளைக்கு?''

''காலைல வர்றேன். பத்து மணிக்கு வர்றேன்.''

''ஆர்த்தி... ஒம்போது மணிக்கு வந்துடேன். டிபன் சேர்ந்து சாப்பிடலாம். இட்லி மாவு இருக்கு. இட்லி தோசை ரெண்டு அயிட்டம் உனக்கு புரொவைட் பண்ண முடியும்.''

''எதுக்குப்பா உனக்கு சிரமம்?''

''ஒண்ணும் சிரமமில்லை ஆர்த்தி.''

''சரி, வர்றேன். உனக்கு லைட் பிங்க் கலர் இன்னும் பிடிக்குமா ரகு?''

''என்ன திடீர்னு?''

''சொல்லேன்.''

''எப்பவும் அந்தக் கலர்தான் என் ஃபேவரைட். ஏன் கேட்டே?''

''சும்மாக் கேட்டேன் ரகு. இன்னொன்னு வெளிப் படையா கேட்பேன். நீ வெளிப்படையா பதில் சொல் லணும். இதை நேர்ல கேக்க வரலை. போன்ல ஏதோ ஒரு கவசம் இருக்கு.''

''என்ன, கேளு!''

''இப்படி திடுதிப்புன்னு நான் உன்னை காண்டாக்ட் பண்ணி பேசறது. பழகறது பத்தி நீ எப்படி ஃபீல் பண்றே? உன் பதில் ஃப்ராங்க்கா இருக்கணும் ரகு.''

''அது... அது... நாளைக்குத்தான் பார்க்கப் போறமே, அப்ப நேர்ல சொல்றனே.''

''சரி. வெச்சிடவா?''



''சாப்ட்டியா?'' என்றான் வைக்க மனமில்லாமல்.

''இப்பதான், நீ?''

''இனிமேதான். சரி, நாளைக்கு மீட் பண்ணலாம் ஆர்த்தி.'' என்று வைத்து விட்டான்.

மனம் குறுகுறுவென்றது. சாரதா ஊரில் இல்லை. ஆர்த்தியை வீட்டிற்கு அழைக்கிறேன். இது சரிதானா? தவிர்க்கப்பட வேண்டியதா?

உள்ளே ஏன் இப்படி இரண்டாகப் பிரிந்து நின்று வேடிக்கைக் காட்டுகிறது மனம்!

'என்னை மறந்து விடு' என்று காதலை முறித்துவிட்டுப் போனவள்தானே இவள்! இவளோடு என்ன இப்போது பழக்கம்? என்று கோபமாக சிந்திக்க ஏன் தோன்றவில்லை?

ஏன் நேற்றிரவு சாரதா உறங்கிவிட்டாளா என்று நிச்சயப்படுத்திக் கொண்டு நைஸாக எழுந்து ஹாலில் கப்போர்டில் மறைவாக வைத்திருந்த ஆர்த்தி எழுதிய பழைய காதல் கடிதங்களை எடுத்து விழிகள் வலிக்க, வலிக்க வழிய வழிய படித்துக் கொண்டிருந்தேன்?

இரவெல்லாம் உறக்கம் வராமல் அவளோடு பேசியது, சுற்றியது பற்றியே யோசித்துக் கொண்டிருந்தவனால் எப்படி 'வீட்டிற்கு வரட்டுமா?' என்று கேட்பவளிடம் 'வேண்டாம்' என்று சொல்ல முடியும்?

''எனி ப்ராப்ளம் ரகு?'' என்று அவன் தோளில் கை வைத்தான் செந்தில்.

சிந்தனை கலைந்து, ''நத்திங்'' என்றான்.

''யாரு ஆர்த்தி?''

''ம்?'' என்று பதறினான்.

''எழுதி வெச்சிருக்கிங்களேன்னு கேட்டேன்.''

தன் பென்சில் பிடித்த கை அனிச்சையாக மேஜை காகிதத்தில் 'ஆர்த்தி' என்று பூ வேலைப்பாட்டுடன் எழுதியிருப்பதை அப்போதுதான் கவனித்தான் ரகு.




காலை ஐந்தரைக்கே அலாரம் வைத்து எழுந்து விட்டான் ரகு. அவசரமாக ஷேவிங் செய்து குளித்து பீரோவில் எந்த உடையணியலாம் என்று யோசித்த போது

''உங்களுக்கு இந்த பிரௌன் செக்டு ஷர்ட் ரொம்ப எடுப்பா இருக்கு ரகு'' என்று ஆர்த்தி எப்போதோ சொன்னது நினைவிற்கு வந்தது.

ரொம்ப வருடங்களாக அணியாத அந்த சட்டையைத் தேடி எடுத்தான். அதை உதறி அணியப் போகும்போது

''இந்த சட்டை மட்டும் நீங்க ஏன் போடறதே இல்லையா?'' என்று சாரதா எப்போதோ கேட்டது நினைவிற்கு வந்தது உறுத்தியது.

'என்ன அசட்டுத்தனம் செய்கிறேன் நான்!' என்று தன்னையே கடிந்து கொண்டு அந்த பிரௌன் சட்டையை அதன் மடிப்புகளில் மடித்து உள்ளே வைத்துவிட்டு வேறு சட்டை அணிந்தான்.

கட்டிலின் பெட்ஷீட், தலையணைகளை உருவி சலவைக் கூடையில் போட்டுவிட்டு, அந்துருண்டை வாசனையுடன் கூடிய சலவை பெட்ஷீட் விரித்து, உறைகள் மாட்டினான். திரைச்சீலைகள் மாற்றினான். ஹாலில் அங்கங்கே கிடந்த புத்தகங்களை சேகரித்தான். டீப்பாய் மேல் அழுக்காய் இருந்த பிளாஸ்டிக் பூங்கொத்தை கழுவி செருகினான். மிதியடிகளைப் புரட்டிப் போட்டான்.

வேலைக்காரி வந்ததும் அவளை சீக்கிரமாக வீட்டைக் கூட்டச் சொன்னான். ஒட்டடை அடிக்கச் சொன்னான்.

''யாராச்சும் வர்றாங்களாய்யா?'' என்று அவள் கேட்டு விட, திணறி, அவசரமாக, ''ஆமாம், என் ஃபிரண்டு ஒருத்தன் சரவணனைப் பார்க்கறதுக்கு வர்றான்'' என்றான்.

அவள் வேலைகளை முடித்ததும் தூளியிலிருந்து தூக்கிக் கொடுத்தான். அவள் குளிப்பாட்டி, துடைத்து, உடைமாற்றி, முகத்திற்கு பவுடர் ஒற்றி, திருஷ்டிப் பொட்டு வைத்துக்



கொடுத்ததும், உற்சாகமாக குதித்த சரவணனுடன் கொஞ்சினான் ரகு.

''உன் வேலை எல்லாம் முடிச்சிட்டியானா, நீ போகலாம்மா.''

''அம்மா என்னை சாயங்காலம் வரைக்கும் குழந்தையைப் பார்த்துக்கிட்டு உங்களுக்கு ஒத்தாசையா இருக்கச் சொன்னாங்க.''

''எனக்கு வெளில போக வேண்டிய வேலை எதுவும் இல்லை. வீட்லயேதான் இருக்கப் போறேன். நான் பார்த்துக்கறேன். எதுக்கு நீ வேற அனாவசியமா? நீ போய்ட்டு நாளைக்கு வா.''

இயல்பாக ஆனால் வலுக்கட்டாயமாக அவளை அனுப்பி வைத்துவிட்டு மிக்ஸியில் சட்னி அரைத்தான் ரகு. தாளித்துக் கொட்டினான். ஃப்ரிஜ்ஜில் இருந்து இட்லி மாவை எடுத்து மேடையில் வைத்தான். பால் காய்ச்சி காபி போட்டுக் குடித்தான். சரவணனுக்கு பால் கலந்து கொடுத்தான். நனைந்த ஜட்டியைக் கழற்றி வேறு மாற்றிவிட்டு இடத்தை சாக்கு போட்டுத் துடைத்தான்.

துணைக்கு ஒரு நண்பனைப் போல டி.வி.யைப் போட்டுக் கொண்டு நிமிடத்திற்கு ஒருமுறை வாட்ச்சைப் பார்த்துக் கொண்டு ஆர்த்தியின் வருகைக்காக காத்திருந்தான்.

அவள் வந்துவிட்டுப் போகும்வரை வேறு யாரும் தொந்தரவாக வந்துத் தொலைத்துவிடக் கூடாது!

யாராவது வந்துவிட்டால்? ஆர்த்தியை யாரென்று சொல்லி அறிமுகப்படுத்துவது என்று யோசித்து வைத்துக் கொள்ள வேண்டும். எப்படிச் சொல்லலாம்?

ஆபீசில் வேலை பார்ப்பவள்? உறவுப் பெண்? கல்லூரியில் கூடப் படித்த தோழி? சாரதாவைப் பார்க்க வந்த அவளின் தோழி?

யோசித்து ஒரு முடிவுக்கு வரும் முன்பாக அழைப்பு மணி ஒலிக்கவே, சென்று திறந்தான்.

தோளில் மாட்டிய பேகோடு, கையில் கேரிபேகோடு, தலைநிறைய பூவுடன், காட்டன் புடவையில் புன்சிரிப் போடு நின்றிருந்த ஆர்த்தி, ''குட்மார்னிங் ரகு'' என்றாள்.

''குட் மார்னிங் வா! உள்ளே வா!''

உள்ளே அவள் வந்ததும் கதவை மூடினான்.

தரையில் ரப்பர் பொம்மைகளைத் தள்ளி விளையாடிக் கொண்டிருந்த சரவணனை பாய்ந்து சென்று உற்சாகத்துடன் தூக்கிக் கொண்டாள் ஆர்த்தி.

''ரொம்ப க்யூட் ரகு! மை குட்னெஸ்! அப்படியே அச்சா உன் முகம் ரகு! ஸோ ஸ்வீட்!'' என்று சரவணனின் கன்னங்களில் மாறிமாறி முத்தமிட்டாள்.

''ஹாய் லிட்டில் ரகு! கை கொடு! கை கொடு!''பிஞ்சு விரல்களைப் பற்றிக் குலுக்கினாள். ''சிரிக்கிறான் ரகு. என்னைப் பார்த்து எப்படிச் சிரிக்கிறான் பாரேன். டேய் படவா! என்னடா? என்ன சிரிப்பு? யார்றா இது புதுசா இருக்கேன்னு பார்க்கிறியா? ஐ ம் ஆர்த்தி. அய்யோ! கண்ணைப் பாரேன். பளிங்குமாதிரி! லவ்லி ரகு! குட்டிப் பையனுக்கு ஒரு புதுச்சட்டை போடலாமா? என்ன?''

நாற்காலியில் அமர்ந்து அவனை தன் மடியில் வைத்துக் கொண்டு தான் வாங்கி வந்திருந்த ஒரு புதுச்சட்டை, டவுசரை எடுத்தாள் ஆர்த்தி.

''என்ன ஆர்த்தி இதெல்லாம்?''

''ஃபார்மாலிட்டி இல்லை. என் சந்தோஷத்துக்காக'' என்றவள் சரவணன் போட்டிருந்ததைக் கழற்றிவிட்டு இதைப் போட, ரகுவும் உதவினான்.

'இப்ப எப்படி இருக்கு சரவணா? ஜம்முன்னு இருக்கா? உங்கப்பாவுக்குப் பிடிச்ச பிங்க் கலர்!'' என்று மீண்டும் முத்தமிட்டாள்.

''சரி, நீ அவனைக் கொஞ்சிக்கிட்டே இரு. நான் இட்லி ஊத்தி வெச்சிட்டு வந்துடறேன்'' என்றான் ரகு.

''நான் வரட்டுமா? ஹெல்ப் பண்ணட்டுமா ரகு?''



''வேணாம் இரு.''

ரகு சமையலறைக்குச் சென்று தட்டில் இட்லி ஊற்றி குக்கரில் வைத்துவிட்டு திரும்பி ஹாலுக்கு வந்தபோது அவனுக்கு முதுகுகாட்டி அமர்ந்திருந்த அவள் சரவணனின் பிஞ்சுக் கையைப் பிடித்து செல்லமாக தன் கன்னத்தில் அடித்துக் கொண்டு, ''அடி! நல்லா அடி! இது நான் இருக்க வேண்டிய வீடு தெரியுமா? முட்டாள்தனமா மிஸ் பண்ணிட்டேன் சரவணா'' என்றாள்.

''சுலபமா வழி கண்டுபிடிச்சிட்டியா ஆர்த்தி?'' எதிர் நாற்காலியில் அமர்ந்தான்.

''கொஞ்சம் சுத்தல்தான். ரகு, ப்ளீஸ்... டி.வியை ஆஃப் பண்ணிடலாமே. வேணுமா?'' என்றாள்.

''தேவையில்லை'' என்று அணைத்தான்.

''சேலத்தில யாருக்குக் கல்யாணம்?''

''சாரதாவோட மாமா பையனுக்கு.''

''ஏன் நீ போகலை?''

''எனக்கு இஷ்டமில்லை.''

''சாரதாவை அறிமுகப்படுத்த மாட்டியா?''

''அவதான்... ஓ! போட்டோ கேக்கறியா? இரு, வர்றேன்.''

படுக்கையறை சென்று பீரோ திறந்து திருமண ஆல்பம் மற்றும் ஹனிமூனுக்கு ஊட்டி சென்றபோது எடுத்த ஆல்பம் கொண்டு வந்து கொடுத்தான்.

''அவன் கண்ணு சொக்கறான். கொடு, தூங்க வெச்சிட லாம்'' என்று சரவணனை வாங்கிச் சென்று தூளியில் லாகவமாகப் படுக்க வைத்து ஆட்டி விடுவதையேப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஆர்த்தி.

''என்ன ஆர்த்தி?''

''ஒண்ணுமில்லை'' என்று ஆல்பம் புரட்டினாள். ''வாவ்! அழகாத்தான் இருக்காங்க. கொஞ்சம் ஒல்லி.''

''அது ரெண்டு வருஷம் முன்னாடி எடுத்தது. இப்ப உடம்பு புடிச்சிட்டா.''

''எனக்கப்புறம் ஒரு வருஷம் கழிச்சிதான் நீ கல்யாணம் பண்ணிக்கிட்டே. இல்லே?''

''ஆமாம். நான் வேணாம்னுதான் இருந்தேன். அம்மா வும், அண்ணனும் ரொம்ப வற்புறுத்தினாங்க. பொண்ணு பார்க்கக்கூட நான் போகலை. எல்லா ஏற்பாடும் செஞ்சது அண்ணன்தான். இரு வந்துட்டேன்.''

சமையலறை சென்று கியாஸை அணைத்து விட்டு, இட்லிகளை ஸ்பூனால் பெயர்த்து ஹாட்பேக்கில் போட்ட படி, ''ஆர்த்தி, உனக்கு இட்லி மட்டும் வேணுமா? தோசையும் வேணுமா?'' என்றான்.

''இட்லி மட்டும் போதும் ரகு.''

ஹாலில் ஓரமாக இருந்த டைனிங் டேபிள் தட்டுகள், இட்லி, சட்னி எல்லாம் எடுத்து வைத்து, தண்ணீர் ஊற்றும் முன், ''ஐஸ் வாட்டரா? ப்ளைய்ன் வாட்டரா?'' என்றான்.

''ப்ளைய்ன் வாட்டர் போதும்'' என்று ஹனிமூன் ஆல்பத் தைப் புரட்டியபடி வந்து நாற்காலி தள்ளி அமர்ந்தாள்.

சாப்பிட்டபடி புரட்டினாள். ரகு அமைதியாக சாப்பிட் டான்.

புகைப்படங்களைப் பார்த்து முடித்ததும் வெளிப்பட்ட பெருமூச்சை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

''வீடு ரொம்ப நீட்டா இருக்கு ரகு. இந்த மேட் நிட்டிங் சாரதா போட்டதா?''

''ஆமாம். அவளுக்கு தையல், ரங்கோலி, கிளாஸ் பெயிண்ட்டிங், டால்ஸ் மேக்கிங் இதெல்லாம் தெரியும். இண்ட்ரஸ்ட்டா செய்வா.''

''அப்படியா? சந்தோஷமா இருக்கியா ரகு?'' என்றாள் திடீரென்று.

''ம்'' என்றான் தயங்கி.



''ஏன் முழுங்கறே?''

''ஒரு வலி இல்லாம இருக்குமா ஆர்த்தி? ஒரு ராட்சசி எனக்கு பொண்டாட்டியா அமையாமல் போனது என் அதிர்ஷ்டம். சாரதா ரொம்ப ஸாஃப்ட். ப்ளஸ் ட்டு வரைக்கும்தான் படிச்சிருக்கோம்னு எப்பவும் ஒரு காம்ப்ளெக்ஸ். புது ஆளுங்ககிட்ட அதிகம் பேச மாட்டா. அவளுக்கு நான் மட்டும்தான் உலகம். குழந்தை பொறந்ததும் அந்த உலகம் கொஞ்சம் விரிவடைஞ்சிருக்கு. என்னைத் தாங்கற அன்பான பொண்டாட்டி! தினம் தாலியில குங்குமம் வெச்சிருக்கற, புதுப்புடவை கட்டினா கால்ல விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக்கற ரகம். நான்தான் சுலபத்தில அவளை நோகடிச்சிடுவேன்.''

''ஏம்ப்பா அப்படி?''

''அவ பாவம்னு தெரியும். இது தப்புன்னு தெரியும். இருந்தும் சில வெறுப்பான சமயங்கள்ல வார்த்தைகளால குதறிட்டு உடனே புரிஞ்சி சமாதானப்படுத்துவேன். முந்தா நாள்கூட கத்திட்டேன்.''

''முந்தா நாள் எதுக்கு வெறுப்பான மனநிலை வந்திச்சி உனக்கு?''

''உன்னைப் பார்த்ததால ஆர்த்தி.''

''என்னைப் பார்த்து வெறுப்பாய்டுச்சா?''

''உன் மேல இல்லை!''

''பின்னே?''

''யார்மேல கோபம்னு தெரியலை. ஆனா மனசு பூரா வெறுப்பு.''

''எனக்குத் தெரியும் எதுமேல கோபம்னு சொல்லட்டுமா? தன் இஷ்டத்துக்கு நம்மை ஆட்டிப்படைக்கிற இந்த கண்ணுக்குத் தெரியாத விதிமேலதானே கோபம்?''

சாப்பிடுவதை நிறுத்தி அவளை ஆச்சரியமாகப் பார்த்தான்.

''என்ன, கரெக்ட்டா சொல்லிட்டேனா? ரெண்டு பேரும் ஒரே பாதிப்புல உள்ளவங்கதானே? எனக்கு அன்னிக்கு

எப்படி இருந்திச்சோ அப்படித்தானே உனக்கும் இருந்திருக்கும்!''

எழுந்து சென்று வாஷ் பேசினில் கை கழுவினாள்.

அவன் எழுந்ததும் இவளே தட்டுக்களையும் சமையலறை சிங்கிற்கு எடுத்துச் சென்று, அவன் பரவாயில்லை என்று சொல்லச் சொல்ல கழுவி வைத்துவிட்டு சமையலறையை ஆர்வமாகப் பார்த்தாள்.

''ரொம்ப சுத்தமா இருக்கறது சாரதாவுக்குப் பிடிக்கும்னு நினைக்கிறேன்.''

''ஆமாம். ஒரு சின்ன அழுக்கு இருந்தாலும் அந்த சட்டையோட என்னை வெளில புறப்பட விடமாட்டா.''

''மும்பைல எங்க வீட்டுக் கிச்சன்...'' என்றவள் சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டு, ''பழைய ஞாபகம்! இப்போ அது சேது வீட்டு கிச்சன்!'' என்றாள்.

ஹாலில் மீண்டும் அமர்ந்தாள். மேகசின்ஸ் புரட்டினாள்.

ரகு காபி கலந்து எடுத்து வந்தான்.

வாங்கிப் பருகி, ''ஞாபகமா சர்க்கரை கம்மியாப் போட்டிருக்கியே'' என்றாள்.

''நூறு காபியாவது சேர்ந்து சாப்பிட்டிருக்க மாட்டமா?'' என்று அவனும் அமர்ந்தான்.

சட்டென்று ஒரு அமைதி விழுந்தது. அது உறுத்தியது. ஏதாவது பேசிக் கொண்டே இருக்கும் போது இருக்கும் இயல்புத்தன்மை - அமைதியின் போது கலைக்கப்படுவதாக உணர்ந்தான் ரகு.

இருவரின் பார்வைகளும் நேருக்கு நேர் சந்தித்து, தயங்கி மீண்டும் விலகின. காபிக் கோப்பையை வைத்தாள்.

''இந்த நிமிஷம் திடீர்னு உனக்குத் தெரிஞ்ச யாராச்சும் வந்துட்டா என்ன பண்ணுவே ரகு? ஐ மின், என்னை எப்படி அறிமுகப்படுத்தி வைப்பே?''

''என் ஃபிரண்டுன்னு.''



எழுந்து கொண்ட ஆர்த்தி, ''தாங்ஸ்.இந்த டீஸண்ட்டான அந்தஸ்துக்கு தேங்ஸ் ரகு. உன் லைஃப் பார்ட்னர்ஷிப்பை தான் மிஸ் பண்ணிட்டேன். உன் ஃபிரண்ட்ஷிப்பாவது வேணும் ரகு. அவசியம் வேணும்'' என்று கண் கலங்கினாள்.

''ஏன் பறப்பட்டுட்டே இவ்வளவு சீக்கிரம்?'' என்றான் வேறெதுவும் சொல்லத் தோன்றாமல்.

''குட்டி ரகுவைப் பார்க்கணும்னு ஆர்வமா இருந்திச்சி. அதான் வந்தேன். ஐ டோண்ட் வாண்ட் டு எம்பரேஸ் யூ ரகு. நீ குடியிருக்கிற இடத்தில உன் மரியாதை பாதிக்கப்பட்டுடக் கூடாது. வரட்டுமா?''

''ம்'' என்றான் அவனுக்கேக் கேட்காமல்.

''அப்புறம்... நான் போன்ல நேத்துக் கேட்ட கேள்விக்கு நீ பதிலே சொல்லலையே ரகு?'' என்றாள் ஹேண்ட்பேகை தோளில் அணிந்து.

''என்ன சொல்றதுன்னு புரியலை.''

''நழுவாதே! நான் உன் வாழ்க்கையை டிஸ்டர்ப் பண்றேனா?''

''இல்லை. ரொம்ப ஃப்ராங்க்கா சொல்லணும்னா மறுபடி உன்னை சந்திச்சதுல ஒரு குற்ற உணர்ச்சியோட கூடிய சந்தோஷம் மனசுல இருக்கு. இதோ இந்த நிமிஷம்கூட நீ வந்ததில, சேர்ந்து சாப்பிட்டதில, பேசிட்டு இருக்கிறதில ஒரு பக்கம் சந்தோஷமும், ஒரு பக்கம் உறுத்தலும் இருக்கு.''

''நேச்சுரல் ரகு. நான் டைவோர்ஸ் பண்ணிட்டேன். இப்போ நான் யாரோட திருமதியும் இல்லை. அதனால எனக்கு எந்த உறுத்தலும் இல்லை. ஆனா நீ சாரதாவுக்கு கணவன். சரவணனுக்கு அப்பா. இந்த சொசைட்டில உனக்குன்னு ஒரு நல்ல பேர் இருக்கு. அதனால உறுத்தல் இருக்கறது நேச்சுரல். அந்த உறுத்தலை நான் அதிகப்படுத்தக் கூடாதில்லையா? அதான்... புறப்படறேன். வர்றேன்.''

''நீ வேலைக்குப்போகப் போற கம்பெனி அட்ரஸ் என்ன ஆர்த்தி?''

''தர்றேன்'' என்று ஹேண்ட் பேகிலிருந்து விசிட்டிங் கார்ட் எடுத்துக் கொடுத்தாள். ஓடிச் சென்ற தூளி விலக்கி உறங்கிக் கொண்டிருக்கும் சரவணன் தலையைக் கோதி, கன்னத்தில் எடுத்து முத்தமிட்டு, ''வர்றேன் ரகு'' என்று செருப்புகளை அணிந்தாள்.

அவள் போனதும் அவனுக்கு அழுகை வந்தது.

## 11



மாலையில் ஊரிலிருந்து வந்த சாரதா முதலில் சரவணனுக்கு முத்தம் கொடுத்து விட்டு வீட்டை கவனித்து, ''என்ன வீடே சரஸ்வதி பூஜை கொண்டாடிய மாதிரி படுசுத்தமா இருக்குது?'' என்றாள்.

''சும்மாதானே இருக்கோம்னு நான்தான் கிளின் செஞ்சேன்.''

''மழைதான் வரப்போகுது போங்க.''

''சரி, கல்யாணம் எப்படி நடந்திச்சி?''

''பிரமாதம். நேத்து மாப்பிள்ளை ஊர்வலம் அமர்க்களப் படுத்திட்டாங்க. எல்லாரும் 'நீங்க வரல்லையா?'ன்னு விசாரிச்சாங்க.''

''நான் மட்டும் போயிருந்தா நீ வரல்லையான்னு கேப்பாங்க.''

''இந்த வாண்டு சமர்த்தா இருந்தானா?''

''ம். உன் அப்பா, அம்மால்லாம் நல்லாருக்காங்களா?''

''நல்லாருக்காங்க. அடுத்த மாசம் குடும்பத்தோட திருப்பதி போய்ட்டு வரலாம்னு பிளான் பண்ணிருக்காங்க. உங்ககிட்ட சொல்லச் சொன்னாரு. தபால் போடறேன்னாரு. அக்கா பையன் தினேஷ் இல்ல, என்னோட மெட்ராஸ் வரணும்னு ஒரே அடம்! தலை வலிக்குது. முதல்ல ஒரு காபி போட்டு சாப்டுட்டு வந்துடறேன், இருங்க'' என்று சமையலறைக்கு வந்தவள் இங்கிருந்தே, ''பால் வந்திச்சா?'' என்றாள்.



''வந்திச்சி.''

''வேலைக்காரி வந்தாளா?''

''வந்தா. சரவணனை அவதான் குளிப்பாட்டினா.''

''சாயங்காலம் வரைக்கும் இருந்தாளா?''

''இல்லை, அவளுக்கு ஒண்ணும் வேலை இல்லை. அதனால வீட்டுக்குப் போகச் சொல்லிட்டேன்.''

காபிக்காக சிங்கில் கிடந்த டம்ளர் ஒன்றை கழுவி எடுத்தபோது, கீழே இரண்டு மல்லிகை பூக்களைப் பார்த்தாள் சாரதா.

வேலைக்காரி பூ வைப்பதில்லையே!

காபி போட்டு எடுத்துக் கொண்டு வந்து அவனருகில் அமர்ந்து கொண்டு, ''வீட்டுக்கு யாராச்சும் வந்திருந் தாங்களா, என்ன?'' என்றாள்.

உஷாரானான் ரகு. ஏதோ ஒரு விஷயத்தை மோப்பம் பிடித்துதான் கேட்கிறாள். தடுமாறக் கூடாது. உளறக் கூடாது. சொல்லிவிடுவது நல்லது.

''ஆமாம். ஆர்த்தின்னு காலேஜ்ல என்கூட படிச்ச பொண்ணு. நேத்து பேங்குக்கு வந்திருந்தா. நம்ம கல்யாணத்துக்குக்கூட அவ வரலை, ஒரு நாள் வீட்டுக்கு வர்றேன்னு சொன்னா, அட்ரஸ் வாங்கிக்கிட்டா. காலைல வந்தா. சரவணனுக்கு ஒரு டிரெஸ் வாங்கிட்டு வந்திருந்தா. பீரோல வெச்சிருக்கேன்'' என்று இயல்பாக படித்துக் கொண்டிருந்த புத்தகத்தில் ஆர்வம் காட்டினான்.

''இங்க சாப்ட்டாளா?''

''ம்?'' என்று நிமிர்ந்து பார்த்தான். உதடுகள் துடித்தன.

''இல்லை, ரெண்டு காபி டவரா சிங்க்ல இருக்கேன்னு கேட்டேன்.''

''ஆமாம். நான் அப்பதான் சாப்பிட உக்காந்தேன். வந்துட்டேன். டிபன் சாப்பிடறிங்களான்னு மரியாதைக்கு

கேட்டேன். பசி போலிருக்கு, சாப்பிடறேன்னு சொன்னா, சர்வ் செஞ்சேன்.''

''வீட்டை சுத்திக் காட்டினிங்களாக்கும்?'' என்றதும் ஆத்திரம் பொங்க, அடக்கினான்.

''இதென்ன ராஜஸ்தான் பேலஸா, சுத்திக் காட்டறதுக்கு?''

''சமையல்கட்டுல பூ கிடந்திச்சி, அதனால கேட்டேன்.''

''சாப்புட்ட தட்டை அவளே சிங்க்ல கழுவி வெச்சா! ஏய்! என்ன நீ மடக்கி மடக்கி கேட்டுக்கிட்டிருக்கே?'' பொறுமை உடைந்து விட்டது.

''சும்மாதான் கேட்டேன். ஏன் கோபப்படறீங்க?''

''என்னமோ நான் தப்பு பண்ணிட்டவன் மாதிரி குறுக்கு விசாரணை செய்றியே? நான் ஒண்ணும் அப்படி இல்லை. தப்பு செய்யறதா இருந்தா நீ ஊர்ல இல்லாதப்ப வீட்ல வெச்சிதான் செய்யணுமா? நீ ஊர்ல இருக்கறப்பவே ஹோட்டல்ல ரூம் போட்டு தப்பு செஞ்சா உனக்குத் தெரியுமா?''

வாயடைத்துப் போனாள் சாரதா. சில நிமிடங்கள் அமைதியாக இருந்து விட்டு, ''இப்ப நான் என்ன கேட்டுட்டேன்? ஏன் இப்படி...'' என்றாள் மெதுவாக.

''நீ கேட்ட விதம் என்னை அவமானப்படுத்தற மாதிரி இருந்திச்சி சாரதா.''

''வந்தது யாருன்னு தெரிஞ்சுக்கற ஆர்வத்திலதாங்க கேட்டேன். நான் வேற எந்த உள்ளர்த்தமும் வெச்சிக் கேக்கலை. அதுவும் கேட்டது தப்புன்னா மன்னிச்சிடுங்க'' என்று விட்டு எழுந்து சென்றாள் சாரதா.



## 12

மகாலிங்கபுரத்தில் இரண்டு இடங்களில் நிறுத்தி விலாசம் விசாரித்துக் கொண்டு எட்டு போர்ஷன்கள் கொண்ட அந்த பழைய வீட்டின் ஓரத்தில் பைக்கை நிறுத்தினான் ரகு.



சிறிய நடையால் நடந்தால் இடது, வலது என்று போர்ஷன்கள் பிரிந்து ரேடியோ, டி.வி. குழந்தை சத்தங்கள், மர மாடிப்படிகளில் ஏறி மேலே வந்தால் அங்கே இரண்டு போர்ஷன்கள் அதில் 17/4 என்று எழுதின கதவில் தட்டினான்.

கதவைத் திறந்தாள் ஆர்த்தி, சூரிதார் அணிந்திருந்தாள்.

''வா ரகு'' என்றாள்.

ஒரு ஹால். அதையொட்டி ஒரு சின்ன கிச்சன். அதையொட்டி டாய்லெட். அவ்வளவே போர்ஷன் தனியாக படுக்கையறை இல்லை. ஹாலின் ஓரத்திலேயே பிளாஸ்டிக் பட்டை வயர்கள் வேய்ந்த ஸ்டீல் கட்டில். இன்னொரு பக்கம் ஒரு சின்ன மேஜை. இரண்டு நாற்காலிகள், குறுக்கில் கயிறு கட்டி உடைகள் தொங்கின.

அங்கங்கே கிடந்ததை அவசரமாக சுத்தம் செய்து விட்டு, ''உக்காரு'' என்றாள்.

''கோயமுத்தூர்ல உன் வீடு எவ்வளவு பெருசு ஆர்த்தி!'' என்றான் குரலடைக்க!

''உனக்கு ஞாபகமிருக்கா ரகு? உன்கிட்ட சவடாலா பேசினாரில்ல எங்கப்பா? மூணு ஏ.சி. ரூம் இருக்கு, தனியா அவளுக்கு கார் இருக்குன்னு!'' என்று சிரித்தாள்.

''ஆர்த்தி, எமோஷனலா உங்கப்பா உன்னை வெறுத்து எது வேணாலும் பேசலாம். ஆனா சட்டப்படி அவர் சொத்துக்கு ஒரே பொண்ணான நீதான் வாரிசு, நீ தனியா பிரிஞ்சி இருக்க வேணாம்னு நான் சொல்லலை. ஏன் இப்படி கஷ்டப்படணும்?''

''என்ன செய்யச் சொல்றே? எங்கப்பா 'மேல கேஸ் போடச் சொல்றியா? எனக்கு அவரையேப் பிடிக்கலைப்பா, அவரோட சொத்து மட்டும் எதுக்கு? அவரே கொடுத்தாலும் நயாபைசா தொடறதில்லைன்னு வைராக்யம்.''

''டைவோர்ஸ் வாங்கிட்டே, அப்பாவும் வேணாம், அம்மாவும் வேணாம்னு துணிச்சலா தனியா வந்துட்டே,

வேலையும் தேடிக்கிட்டே. அடுத்து உன்னோட பிளான் என்ன ஆர்த்தி? உன் எதிர்காலத்தைப் பத்தி என்ன யோசிச்சு வெச்சிருக்கே?''

உதடுகளை அமைதியாகப் பிதுக்கினாள்.

''என்ன அர்த்தம்?''

''எதுவும் யோசிக்கலை. இப்போதைக்கு உயிர் வாழுற துன்னு ஒரே தீர்மானம்தான். எப்பவும் போல மனசுக்குள்ளே தொடர்ந்து உன்னை லவ் பண்றதுன்னும் தீர்மானம்!'

அதிர்ந்து போனான்.

''என்ன சொல்றே அர்த்தமில்லாம?''

''நிஜம் பேசறேன் ரகு. எனக்கு கழுத்தில தாலி ஏறின அடுத்த செகண்ட் உன்னை மறந்தே போய்ட்டேன்னு டூப் சொல்லச் சொல்றியா? சேதுவோட சுயரூபம் தெரிய வரைக்கும் என்னை சந்தோஷமாத்தான் வெச்சிருந்தான். ஆனாலும் நடுநடுவில உன்னை நினைச்சிட்டுதான் இருந்தேன். அதெப்படி மனசிலேர்ந்து சுத்தமா துடைச்சிப் போடறது? 'என்ன இன்னும் ரகுவை நினைக்கிறேன். இது தப்பில்லையா?ன்னு என்னையே கண்டிச்சுக்குவேன். ஆனாலும் நினைக்கிறதை கட்டுப்படுத்த முடியாது. கல்யாணம் ஒரு சமூகச் சடங்கு. வாழ்க்கை ஒப்பந்தம், புனித பந்தம், எல்லாம் சரி. ஆனா, இந்த மனசு இருக்கே, அது ஒரு பிசாசு! சைத்தான்! அது மனுஷ விதிகளுக்குக் கட்டுப்படறதில்லையே... நான் சொல்றது சரிதானே ரகு?''

அமைதியாக தலையசைத்தான்.

''சொல்லு ரகு. உன் மனசைத் தொட்டுச் சொல்லு. கல்யாணத்துக்கப்புறம் நீ என்னை மறந்துட்டியா? முடிஞ்சதா? மறைக்காம சொல்லு.''

''இல்லை ஆர்த்தி. நீ சொன்ன மாதிரிதான். மனசு அப்பப்போ நடந்த எல்லாத்தையும் ஆசை ஆசையா அசை போடும். அப்போ அழுகை வரும். மனசு பாரமாகும். பெருமூச்சு விடறதைத் த்விர வேற என்ன செய்ய முடியும்?''



சில விநாடிகள் மௌனமாக இருந்துவிட்டு...

''என்ன சாப்பிடறே? டீ போட்டுத் தரட்டுமா?'' என்றாள்.

''வேணாம்.''

''சிகரெட் பிடிக்கிறதா இருந்தா பிடி. நோ ப்ராப்ளம்.''

''இல்லை, வேணாம்.''

கதவு தட்டப்படவே சென்று திறந்து எதிர்போர்ஷன் பெண் திருப்பிக் கொடுத்த விகடனோடு வந்தாள். கட்டிலில் அமர்ந்து கொண்டு முழங்கால்களைக் கட்டிக் கொண்டாள்.

''ஆர்த்தி, நான் கோவை போயி உங்கப்பாவைப் பார்த்துப் பேசட்டுமா?''

''என்ன பேசப் போற?''

''ஒரே பொண்ணு, புருஷனை டைவோர்ஸ் பண்ணிட்டு தனியா இருக்கற சூழ்நிலையில இப்படி 'எப்படியோப் போன்னு அலட்சியமா இருக்கறது சரியில்லை ஆர்த்தி.''

''அவர் என்ன செய்யணும்னு எதிர்பார்க்கறே?''

''கோவையில தன் வீட்ல வெச்சிக்கணும். என்ன ஆர்த்தி இது. நீ எதுக்கு கோழிக்கூண்டு மாதிரி இருக்கற இந்த போர்ஷன்ல தங்கணும்? எதுக்கு பஸ் பிடிச்சி வேலைக்குப் போகணும்?''

''இதெல்லாம் சுதந்திரம்னு உனக்குப் புரியலையா ரகு? இப்பதான் நான் சந்தோஷமா இருக்கேன். ப்ளீஸ்... விட்டுடேன். வேற பேசேன்.''

''ஓ.கே. தியாகராஜன்னு எனக்கு ஒரு ஃபிரண்டு.''

''சரி...''

''ரொம்ப நல்லவன். விசாலமான சிந்தனை உள்ளவன்.''

''ஓ! கல்யாணம் பத்திப் பேசறியா? சுத்தப் பேத்தலா இருக்கே! ஒரு பொண்ணு ஒண்ணு அவ அம்மா வீட்ல இருக்கணும். இல்லை, புருஷன் வீட்ல இருக்கணும், வேற ஆல்டர்னேடிவே இல்லையா? இப்படி சொந்தக் கால்ல தனியா நின்னா உறுத்துதா?''

''இப்ப நீ சேது மேல உள்ள வெறுப்புல பேசறே. உனக்கு வயசு இருக்கு ஆர்த்தி. உனக்கு ஒரு வாழ்க்கைத் துணை வேணும்.''

''அஃப்கோர்ஸ்! இந்தப் பாய்ண்ட்டை நான் ஒத்துக் கறேன். எனக்கு ஒரு வாழ்க்கைத் துணை வேணும். அது புருஷனாத்தான் இருக்கணுமா? ஒரு ஃபிரெண்டா இருக்கக்கூடாதா? நீ எனக்கு வாழ்க்கை பூரா ஃபிரெண்டா இருக்க மாட்டியா?''

''இதெல்லாம் விதண்டா வாதம்.''

''என் வாழ்க்கையில ரெண்டு ஆண்களை சந்திச்சுட்டேன் ரகு, நீயும், சேதுவும், உன்னோட சேர கொடுத்து வைக்கலை. சேதுவோட சேர்ந்தது பாவம்! அந்த ராஸ்கல் எப்படிப் பட்டவன்னு உனக்கு சொல்லலை இல்ல? இப்ப சொல்றேன். டிராவல்ஸ் வெச்சி ஏழெட்டு கார், வேன் வாடகைக்கு விட்டு கௌரவமா சம்பாரிச்சிட்டிருக்கான்னு நினைச்சிட்டிருந்தா... ஒரு நாள் போலீஸ் வருது வீட்டுக்கு. இந்தாளு டெல்லில வேலைன்னு போயிருக்கான். ஒரு மர்டர் கேஸ்ல போலீஸ் தேடுது. டெல்லில தங்கப் போறதா சொன்ன ஹோட்டல்ல செக் பண்ணா அங்க இல்லை! தலைமறைவு! போலீஸ் அவனைப் பத்தி சொல்லச் சொல்ல ஆடிப் போய்ட்டேன் ரகு. இவனுக்கு மெயின் தொழில் வேற! டிராவல்ஸ் சும்மா வெளிப்பார்வைக்குத்தான்.''

''அப்படி என்ன தொழில்?''

''சொன்னா நேர்ல போய் காறித்துப்பிட்டு வருவே! பெரிய மனுஷனுக்கெல்லாம் வயசுவாரியா, மாநிலம் வாரியா பொண்ணுங்களை சப்ளை பண்ற ஹைகிளாஸ் மாமா!''

''மை காட்!''

''எனக்கு எப்படி இருந்திருக்கும்னு நினைச்சிப் பாரு. ஆன்ட்டி சிபேட்டரி பெயில் வாங்கிட்டு ஊருக்குத் திரும்பி வந்து என்கிட்ட தெனாவட்டா 'இதுவும் ஒரு தொழில்தான். ஒரு இடத்தில தேவைப்படுது. ஒரு இடத்தில சரக்கு



இருக்கு. நான் சப்ளை செய்றேன். என்ன தப்புன்னு' பேசறான். அடுத்த நிமிஷம் பெட்டியைத் தூக்கிட்டுப் புறப்பட்டேன். இன்னும் கொஞ்சம் பணம் அதிகம் தர்றேன்னு எவனாவது சொன்னா ஸ்பெஷல் சரக்குன்னு இவன் என்னையே கொடுக்கமாட்டான்னு என்ன நிச்சயம் ரகு? ச்சே! எவ்வளவு நல்லவனா வேஷம் போட்டு மூணு வருஷம் என்னை முட்டாளாக்கிட்டானே ரகு! எப்படி எங்கப்பா பிடிச்ச பிசினெஸ்ல இருக்கற மாப்பிள்ளை பார்த்தியா? கிரேட் இல்ல? இப்படி ஒரு புருஷன் கோடில ஒருத்திக்கு வாய்க்குமா? அந்த கோடில் ஒரு பாக்யசாலி நான்'' என்றவள் அடுத்த நிமிடம் முழங்கால்களில் முகம் புதைத்து முதுகு குலுங்க அழத் துவங்கினாள்.

''ரொம்ப ஷாக்காத்தான் இருக்கு. ஆர்த்தி, நீ அவனை டைவோர்ஸ் செஞ்சது சரிதான். யாரும் செய்யறதுதான். எந்தப் பிரச்சினையா இருந்தாலும் விட்டுக் கொடுத்து அனுசரிச்சிப் போயிருக்கலாமேன்னு நினைச்சேன். இப்ப தானே உண்மை புரியுது. இப்படி ஒரு புருஷனை யார்தான் பொறுத்துக்க முடியும்? தைரியமா இரு ஆர்த்தி. ப்ளீஸ்... அழாதே! கஷ்டமா இருக்கு.''

அவள் அழுகை அதிகரித்தது. அழுகையினூடேயே, ''எப்படி ரகு அழாம இருக்க முடியும்?'' என்றாள்.

ரகுவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

''என் மனசு எவ்வளவு ரணப்பட்டிருக்கும்! என்னைப் போயி இன்னொரு கல்யாணம் பண்ணிக்கோன்னு...''

''ஸாரி! ஸாரிம்மா! எனக்கு உன் நிலைமை புரியாததால நான் பாட்டுக்கு அசட்டுத்தனமா அட்வைஸ் பண்ணிட் டேன். உன் மனசுல இந்த ரணம் ஆற கொஞ்ச நாள் ஆகும்.''

''ரகு! ஏன் ரகு நீயும் நானும் பிரிஞ்சோம்? எதுக்காக இப்படி மனசுக்குள்ளே ஆசையை ரகசியமா பூட்டி வெச்சி...'' கேவினாள். உணர்ச்சிவசப்பட்டாள். ''நீ என்ன வேணாலும் நினைச்சுக்கோ. ரகு, ஐ லவ் யூ! ஸ்டில் ஐ லவ்

யூ! காலம் பூரா உன்னை என் மனசுக்குள்ளே லவ் பண்ணிட்டுத்தான் இருப்பேன்.''

''ஓகே! ஓகே! கண்ட்ரோல் யுவர்செல்ஃப்! ப்ளீஸ்... பக்கத்து போர்ஷனுக்கு நீ அழறது கேக்கப் போகுது ஆர்த்தி.''

''கேட்டா கேக்கட்டும். ஐ டோண்ட் கேர்! எப்படி வேணாலும் நினைச்சுக்கட்டும். உன் வீட்டுக்கு வந்துட்டு சரவணனைப் பார்த்து விட்டு திரும்பி வந்துட்டு மூணு மணி நேரம் தொடர்ந்து அழுதேன் தெரியுமா? அது நான் வாழ வேண்டிய வீடு ரகு! எவ்வளவு உரிமையாய் பழகினோம். இப்ப எல்லா உரிமையும் போய்டுச்சி. உறுத்தல் வந்துடுச்சி. தப்போ, சரியோ... என் மனசு உன்னை நினைச்சி நினைச்சி தவிக்குது ரகு. தப்பு செஞ்சிட்டேன்னு என்னைக் கொல்லுது. சாரதா மேல பொறாமையா வருது'' என்றாள் விம்மலைக் கட்டுப்படுத்தியபடி.,

அமைதியாக தலை குனிந்து அமர்ந்திருந்தான் ரகு.

''நீ போனதும் நானும் அழுதேன்'' என்று சொல்ல நினைத்து சொல்லவில்லை.

திடீரென்று கண்களைத் துடைத்துக் கொண்ட ஆர்த்தி உறுதியான குரலில் கேட்டாள். ''ரகு, நமக்குள்ளே திரைகள் வேணாம். இப்பவும் உனக்கு என்மேல லவ் இருக்கா, இல்லையா? சொல்லு! மறைக்காம சொல்லு! வேஷமில்லாம சொல்லு!''

''யெஸ்'' என்றான் அமைதியாக.

எழுந்து அவனருகில் வந்தாள்.

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா ரகு?''

தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு.

''ஏய்! என்ன பேச்சு இது?''

''சீரியஸாத்தான் கேக்கறேன். ஐ வாண்ட் டு லிவ் வித் யூ! வெக்கத்தை விட்டுக் கேக்கறேன். என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ ரகு.''



''நீ ரொம்ப எமோஷனலாய்ட்டே ஆர்த்தி, யோசிக்காமப் பேசறே.''

''ஏன்? என்ன தப்பு? சாரதா ஒத்துக்கமாட்டாளா? நான் பேசறேன் அவகிட்ட, என் தவிப்பை எடுத்துச் சொல்றேன். புரிஞ்சுப்பா, அவ கால்ல விழுந்து சம்மதம் வாங்கறேன். சாரதாவோட சேர்ந்து ஒத்துமையா குடித்தனம் நடத்தறேன். இது ஒண்ணும் உலகத்தில நடக்காததில்லையே ரகு.''

''உலகத்தில நடக்கற எல்லாத்தையும் நாம நடத்திப் பார்க்கணும்னு அவசியமா ஆர்த்தி? அந்த மாதிரி நான் நினைச்சிப் பார்க்கவே தயாரா இல்லை.''

''என்னை இப்பவும் லவ் பண்றதாச் சொன்னியே...''

''அது அடிமனசிலேர்ந்து சொன்ன உண்மைதான். இந்த லவ். நீ சேதுவோட மனைவியா இருந்தப்பவும் என் மனசுல இருந்த லவ்தான். சப்போஸ் உனக்கு ஒரு துணை வேணும்னு உணர்ந்து நாளைக்கு இன்னொருத்தனுக்கு மனைவியாப் போனாலும் என் மனசுல தொடரும் லவ்! நான் சாகறவரைக்கும் இந்தக் காதல் நெருப்பு என் மனசுக்குள்ளே எரிஞ்சிக்கிட்டேதான் இருக்கும். இந்தக் காதலுக்கு செயல் வடிவம் கொடுக்கற வாய்ப்பு போய்டுச்சி. மறுபடி அதை உருவாக்க நினைக்கிறது சரியில்லை. எல்லாராட மனசும் ரணமாய்டும் ஆர்த்தி. நீயும் நானும் நினைச்ச மாதிரி வாழறதுக்காக சாரதாவோட மனசை குழி தோண்டிப் புதைக்கணுமா? அவ என்ன தப்பு செஞ்சா? இந்த மாதிரி நினைப்பே வேணாம் ஆர்த்தி. ப்ளீஸ்...''

ஆர்த்தி மௌனமாக நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தாள். மேஜையில் கவிழ்ந்து அழத் துவங்கினாள்.

அவள் அழுவது அவன் மனதைப் பிசைந்தது.

நான் ஆசை ஆசையாய் கைகோர்த்துத் திரிந்த காதலி! எத்தனை சினிமாக்கள்! சினிமாவுக்காகவா? சில்மிஷத்திற் காகவே! எத்தனை முத்தங்கள்! எத்தனை அணைப்புகள்!

எதிர்கால வாழ்க்கைப் பற்றி எத்தனைத் திட்டமிடல்கள்! கற்பனைகள்! கனவுகள்! இனிக்க இனிக்க, உருகி உருகி எவ்வளவு சம்பாஷனைகள்! பேசியது போதாதென்று பக்கம் பக்கமாக எத்தனைக் கடிதங்கள்! ரசனையாக தேர்ந்தெடுத்து அனுப்பிய காதல் அட்டைகள்!

''என் எல்லா ஜென்மத்திலும் நீதான் காதலி! (அடுத்த ஜென்மத்தில் நான் பன்றிக்குட்டியாகப் பிறந்தாலும் என் ஜோடிக் குட்டி நீதான்) என்றெல்லாம் தேடிப் பிடித்து அனுப்பினவை! பரிசுப் பொருள்கள்! பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

மனசு தித்திக்கத் தித்திக்க எத்தனை வாழ்ந்தாயிற்று!

அந்த இனிய காதலி இதோ இங்கே என் எதிரில் கண்ணீர் சிந்தியபடி, நான் அவளை எப்படி சமாதானப்படுத்துவது என்கிற தவிப்போடு!

ரகு எழுந்தான். அவள் அருகில் சென்றான்.

''இதபாரு! அழாதே! அழறதால எதாச்சும் மாறிடப் போகுதா?'' என்று அவள் தோளில் ஆறுதலாகக் கை வைத்தான்.

அந்தத் தொடலுக்குக் காத்திருந்தவள் போல விம்மிய படியே ஆர்த்தி அவன் மார்பில் சாய்ந்து தேம்ப... ஒரு விநாடித் தயக்கத்திற்குப் பின் அவளை அணைத்துக் கொண் டான். அவள் விலகவில்லை. மேலும் இறுக்கிக் கொண்டாள்.

அவள் கூந்தலின் வாசனை அவன் மேல் படர்ந்தது.

கண்ணாடி போட்டு கையில் பிரம்போடு உள்ளே நின்று கொண்டு இத்தனை நேரம் அதட்டிக் கொண்டிருந்த நீதி போதனை வாத்தியார் காணாமல் போய்விட... அவன் கைகள் அனிச்சையாக நகர்ந்தன.

அவள் முகம் அவன் மார்பிலிருந்து மெல்ல உயர்ந்து அவன் முகத்தை ஆசை ஆசையாய்ப் பார்த்தது. உதடுகள் துடித்தன.

அங்கே 'ரகு' இல்லை. அங்கே 'ஆர்த்தி இல்லை. ஒரு அவன்' ஒரு 'அவள்' இரண்டு எதிரின தேகங்கள் மட்டுமே



ஆட்சி செய்யத் துவங்க... அவளை கன்னத்தில் முத்த மிட்டான். கண்கள் செருகின அவளுக்கு.

''ஐ லவ் யூ ரகு'' என்றாள் கிசுகிசுப்பாக.

''ஐ லவ் யூ ஆர்த்தி'' என்றான் கிசுகிசுப்பாக.

அவன் கைகள் இப்போது சுதந்திரம் பெற்று விலக்கி முற்பட... அவள் அதற்கு இசைவாக அனுமதிக்க... சட்டென்று ஞானம் பெற்றவனாக, ''வேணாம் ஆர்த்தி'' என்றான்.

''ப்ளீஸ் ரகு...'' என்றாள். முத்தமிட்டாள். அணைத்துக் கொண்டாள்.

மீண்டும் ஞானம் ஓடிப் போயிற்று.

அவளை நிமிர்ந்து பார்க்க இயலாமல் தலைகுனிந்து அமர்ந்திருந்தான் ரகு. அவன் தோளைத் தொட்டாள் ஆர்த்தி. திரும்பினான்.

''டீ'' என்று அவனருகில் கோப்பையை வைத்தாள்.

''ஸாரி ஆர்த்தி'' என்றான் பலவீனமாக.

''என்ன இது பைத்தியக்காரத்தனமா!'' என்றாள்.

''இது... இது... தப்பு ஆர்த்தி.''

''ஒரு வெங்காயமும் இல்லை ரகு! இது நீ... நான் சம்பந்தப்பட்ட விஷயம்! இயற்கையான ஒரு நிகழ்ச்சி. இஷ்டப்பட்ட ஒரு சம்பவம். சும்மா துரோகம், கலாச்சாரம்னு யோசிச்சுப் பார்த்து மனசைக் கஷ்டப்படுத்திக்காதே!''

''எப்படி உன்னால இப்படியெல்லாம் பேச முடியுது?''

''யோசிச்சுப் பாரு! அந்த சமயம் ரெண்டு பேர் மன சாட்சியும் தொலைஞ்சி போயி நீ, நான், ரெண்டு பேரோட காதல் மட்டும்தானே இருந்தது? மறுபடி மனசாட்சி முழிச்சிக்கிட்டதும் உள்ளே தர்க்கம் ஆரம்பிச்சிடுச்சி. விடு ரகு! நான் விரும்பினதாலதானே அனுமதிச்சேன். இது ஒண்ணும் அத்துமீறல் இல்லை.''

''ஆனாலும்...''

''சரி, இப்ப என்ன, அழலாமா?''

அவளை மௌனமாகப் பார்த்தான் ரகு. எழுந்து கொண்டான்.

''நான் வர்றேன்.''

''சரி, இத பாரு, எனக்கு இதில சந்தோஷம்தான். எந்த உறுத்தலும் இல்லை. நீயும் எந்த உறுத்தலும் இல்லாம போ! எதையாச்சும் சிந்திக்காம கவனமா பைக்கை ஓட்டு! என்ன?''

அமைதியாக தலையசைத்துப் புறப்பட்டவனை கட்டிடத்தின் வாசல் வரைக்கும் வந்து வழியனுப்பினாள்.

பைக்கை ஓட்டியபோது மனம் தடதடத்தது.

உள்ளே ஆரவாரமாக இருந்தது. 'என்ன நடந்துவிட்டது?' என்று கட்சி கட்டினாலும்... 'டேய்! பாவி! பாவி!' என்று குற்றம் சாட்டியது இன்னொரு கிளை மனம்.

ஒரு நிறைவும், அருவெறுப்பும் ஒரே விகிதத்தில் மிதந்தன.

அவள் சொன்னது போல அந்த நிமிடம் எங்கே போயிற்று இந்த மனசாட்சி? இரண்டு தடவை எச்சரித்துப் பார்த்து விட்டு ஓரமாகப் போய் உட்கார்ந்து விட்டதே!

நியாயமில்லை என்று தீர்மானிப்பதும், நியாயம்தான் என்று அழிச்சாட்டியமாக செயல்படுத்துவதும் அதே ஒரு மனம்தானே? இப்போது சஞ்சலப்படுவதும் அதே மனம் தானே? சஞ்சலப்படுவதை தள்ளி நின்று அலசிப் பார்க்கும் மனமும் இதற்குள்தானே! என்ன விந்தை இது! இதில் எது என் மனம்.



## 13

**வீ**ட்டிற்கு வந்தபோது மலர்ந்த முகத்துடன் கதவைத் திறந்த சாரதாவின் முகத்தை நேருக்கு நேராகப் பார்க்க முடியவில்லை.

''ஏன் இன்னிக்கு இவ்வளவு லேட்டு?'' என்றாள் கதவை மூடியபடி.



''ஒரு ஃப்ரெண்ட்டைப் பார்த்துட்டு வர்றேன்.''

''கோவிலுக்குப் போய்ட்டு வருவமா?''

''இப்ப என்ன பாவம் பண்ணிட்டோம் கோவிலுக்குப் போறதுக்கு?'' என்று சட்டென்று கத்த... அரண்டு போனாள்.

முகத்திலிருந்த உற்சாகமெல்லாம் வடிந்து, ''இன்னிக்கு வெள்ளிக்கிழமைன்னு சாதாரணமாத்தான் கேட்டேங்க. ஏன் இப்படி...? பேங்க்ல எதாச்சும் பிரச்னையா? இப்பல்லாம் அடிக்கடி எரிஞ்சி விழறிங்க. என்னாச்சுங்க?'' என்றாள் தவிப்புடன்.

''ஒண்ணுமில்லை'' என்று பாத்ரூம் சென்று தண்ணீரை முகத்தில் அறைந்து கொண்டான்.

காபி எடுத்து வந்தாள்.

''ஏங்க... நான் ஏதாச்சும் தப்பு செஞ்சிட்டனா? சொல்லுங்க! எனக்குக் கஷ்டமா இருக்குங்க. நான் மட்டும் தனியா கல்யாணத்துக்குப் போய்ட்டு வந்தது உங்களுக்குப் பிடிக்கலையா? நீங்க சொன்னதாலதானே...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை சாரதா.''

''பின்னே ஏன் ஒரு மாதிரியா நடந்துக்கறிங்க?''

''எதுவும் இல்லைன்னு சொல்றனே...''

''இல்லை. நீங்க மறைக்கிறிங்க. எதையோ மனசுல வெச்சிக்கிட்டு கஷ்டப்படறிங்க. என்கிட்ட சொல்லக் கூடாதா?''

அவளை கனிவாகப் பார்த்தான். பரிதாபமான அந்த முகத்தை சில விநாடிகளுக்கு மேல் அவனால் பார்க்க முடியவில்லை. பார்வையை தாழ்த்திக் கொண்டு... பெருமூச்சு விட்டான்.

''சொல்லுங்க! என்னாச்சு?''

உன்னிடம் எப்படிச் சொல்வேன் சாரதா? என் வாழ்வில் வந்த ஒரே பெண் நீதான் என்று நினைத்துக் கொண்டிருக்கும்

உன்னிடம் எப்படி? உன் மனம் எனக்குத் தெரியும். அதன் பலமும், பக்குவமும் புரியும். தாங்க மாட்டாய் சாரதா, நொறுங்கிப் போவாய்! நொந்து போவாய்! அதிலும் இன்று நடந்ததைச் சொன்னால்... இல்லை! வேண்டாம்! உனக்குத் தெரிய வேண்டாம்.

''பேங்க்ல ரெண்டு கேஷியர்ல ஒருத்தர் ஒரு வாரமா லீவு சாரதா. அந்த வேலையையும் சேர்த்து என்னையே செய்யச் சொல்றாரு மேனேஜர். தினம் எனக்கும் மேனேஜருக்கும் வாக்குவாதம். அவர் ஆபீசர்ங்கிறதால கடைசில நான்தான் பணிஞ்சி போக வேண்டியிருக்கு. அந்த டென்ஷன்தான்!''

பெருமூச்சு விட்ட சாரதா, ''அவ்வளவுதானே? நான் என்னவோ, ஏதோன்னு பயந்துட்டேன்'' என்று புன்னகைத்தாள்.

ஆமாம் சாரதா, என்னவோதான்! ஏதோதான்!

அவள் புன்னகை அவன் நெஞ்சில் ஈட்டி பாய்ச்சியது.

''குழந்தையை ரெடி பண்ணு சாரதா.''

''எதுக்கு?''

''கோவிலுக்குப் போய்ட்டு வந்துடலாம்.''

''என்ன திடீர்னு?''

''பாவம் செஞ்சா மன்னிப்புக் கேக்க வேணாமா?''

''ம்?''

''உன்னைக் கோவிச்சுக்கிட்டது பாவமில்லையா?''

மீண்டும் புன்னகைத்த சாரதா, ''பேங்க்ல விசாரிச்சிங்களா?''

''எதைப் பத்தி?''

''வீடு கட்ட லோன் தர்றாங்களான்னு...''

''நாளைக்குக் கேட்டுடறேன் சாரதா.''



''வேளச்சேரில அந்த நிலத்தை எப்பப் பார்க்கப் போறோம்? கல்யாணத்துல பார்த்தப்போ அப்பா நமக்குத் தர்றதா இருக்கிற பணம் கைக்கு வந்திடுச்சி, பேங்க்ல போட்டு வெச்சிருக்கேன். மனை பார்த்துட்டு எப்ப சொன்னாலும் உடனே கொண்டாந்து தர்றேன்னு சொன்னாருங்க. அதான் கேட்டேன்.''

''போலாம் சாரதா. நாளைக்கு செந்தில்கிட்ட பேசிடறேன்.''

''மனை வாங்கினது போக மிச்சமிருந்தா ஒரு செயின் செஞ்சுக்கட்டுமா? அக்கா புது டிசைன்ல போட்டிருந்தா. அஞ்சி பவுன்தான். அவங்க கடையிலயே செஞ்சித் தர்றேன்னு சொன்னா. இப்பப் போட்டுக்கறது ரொம்ப பழைய டிசைனா இருக்கறதால கேட்டேன். உங்களுக்கு சம்மதமிருந்தாதான்.''

''செய்யலாம் சாரதா. உங்கப்பா தர்ற பணத்தைத் தொடணும்னு அவசியம் இல்லை. பேங்க் சேவிங்ஸ்ல இருக்கு. அஞ்சி பவுன்தானே சொல்றே? நானே செஞ்சித் தர்றேன். அதே டிசைன்ல செஞ்சிடச் சொல்லி உன் அக்காவுக்கு தபால் போட்டுடு. சரியா?''

முகம் தாமரையாக மலர்ந்தது சாரதாவுக்கு.

''நான் சரவணனை ரெடி பண்றேன்'' என்று உற்சாகமாகச் சென்றாள்.

'இது பாசமா இல்லை பிராயச்சித்தமா?' என்று தன்னையேக் கேட்டுக் கொண்டான் ரகு.

## 14



சாப்பிட்டு முடித்து பேங்க் வாசலில் நின்று சிகரெட் பிடித்துக் கொண்டிருந்த போது பியூன் வந்து, ''சார், உங்களுக்கு போன்'' என்றான்.

சிகரெட்டை அணைத்துவிட்டு உள்ளே வந்து எடுத்தான் ரகு.

''ஹலோ ரகு ஹியர்.''

''குட் ஆஃப்டர்னூன் ரகு.''

''குட் ஆஃப்டர்னூன், சொல்லு என்ன விஷயம்?''

''கோபமா இருக்கியா ரகு?''

''இல்லைன்னு சொன்றேனில்ல?''

''இல்லை. நீ கோபமாத்தான் இருக்கே.''

''என்ன விஷயம்?''

''நான் உன்கிட்ட நேர்ல பேசணும் ரகு.'',

மௌனமாக இருந்தான் ரகு.

''ரகு! என்னாச்சு? ஏன் பேச மாட்டேங்கறே?''

''என்ன பேசச் சொல்றே?''

''எப்போ மீட் பண்ணலாம்?''

''ஐம் ஸாரி ஆர்த்தி. நான் கொஞ்சம் பிஸியா இருக்கேன்.''

''புரியுது. நல்லாப் புரியுது.''

''புரிஞ்சா சரி. வெச்சிடட்டுமா?''

லொடக்கென்று வைத்துவிட்டு மீண்டும் வெளியே வந்து மற்றொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

விநாடிகளில் பியூன் வந்து, ''அதே லேடி மறுபடி கூப்பிடறாங்க சார்!'' என்றான்.

''நான் வெளில போய்ட்டேன்னு சொல்லிடுப்பா'' என்றான்.

பிறகு வேலையில் கவனம் சிதைந்தது. புலம்பல் துவங்கியது.

என்ன நான்! ஏன் இப்படி அநாகரிகமாக பேச்சைத் துண்டித்தேன்?

யார் அவள்? என் ஆர்த்தி! அவள் என்ன தப்பு செய்தாள்?



ஏற்கனவே தன் வாழ்க்கை சிதைந்துபோன சோகத்தில் மனம் நொந்து இருப்பவளை நான் ஏன் இப்படி வேதனைப் படுத்தினேன்?

அவள் மனம் என்ன பாடுபட்டிருக்கும்!

இந்த எரிச்சல் ஏன் அடிக்கடி வந்து சீறுகிறது?

அவள்மேல் என்ன கோபம்?

அந்த சம்பவத்தின் குற்ற உணர்ச்சி இன்னும் பாரமாக அழுத்திக் கொண்டிருந்தாலும் ஒரு தித்திப்பு மனதோரத்தில் இருக்கிறதென்பதை மறுக்க முடியுமா?

அதில் என் பங்கு இல்லையா?

அதற்காக அவள்மேல் கோபப்படுவானேன்?

இல்லை! இது கோபமில்லை! எரிச்சலில்லை! தற்காப்பு!

என்ன தற்காப்பு?

சாரதாவுடனான இனிய இல்லறம் என்கிற கூடு கலைந்து விடக் கூடாதே என்கிற அக்கறை! சாரதாவின் மனம் ரணமாகிவிடக் கூடாதே என்கிற பொறுப்புணர்ச்சி! பெரிய வில்லங்கமாகி சமூகம் முதுகுக்குப் பின்னால் பேசக் கூடாதே என்கிற எச்சரிக்கை! வாழ்க்கையின் சமூகம் கெட்டு விடக் கூடாதென்கிற பயம்!

எல்லாம் சரி! அதை இப்படித்தான் அநாகரிகமாக பேச்சைக் கட் செய்து தெரியப்படுத்த வேண்டுமா?

ஆர்த்தி படித்தவளில்லை? பக்குவப்பட்டவளில்லையா? புரிந்தவள் இல்லையா? நேரில் சந்தித்துப் பேசி பக்குவமாக இதை எடுத்துச் சொல்ல முடியாதா?

யோசிக்க யோசிக்க ரகுவுக்கு இப்போது தன் மீதே கோபம் வந்தது. கால்கள் அனிச்சையாக போனுக்கு நடந்தது. கை அனிச்சையாக போனை எடுத்தது. விரல் அனிச்சையாக எண்களைத் தொட்டது.

“அங்கே கம்ப்யூட்டர் ஆபரேட்டர் ஆர்த்திகிட்ட பேசணும்.”

“அவங்க இங்க இல்லையே.”

“வெளில போயிருக்காங்களா?”

“இல்லை சார். அவங்க வேலையை ரிசைன் பண்ணிட்டுப் போய்ட்டாங்க.”

“எப்போ?” என்றான் அதிர்ச்சியுடன்.

“நேத்து. ஏதோ பர்சனல் ரீசன்னு எழுதிக் கொடுத்துட்டுப் போய்ட்டாங்க.”

யோசனையுடன் போனை வைத்தான்.

மாலை பேங்க் முடிந்ததும் பைக்கில் அவள் போர்ஷனுக்குப் போனபோது பூட்டு தொங்கியது.

எதிர்போர்ஷன் கதவைத் தட்டி விசாரித்தான்.

“இன்னிக்குக் காலைலதான் காலி பண்ணிட்டுப் போனாங்க.”

“எங்க?”

“எங்கன்னு சொல்லலை சார்.”

“உங்ககிட்ட லெட்டர் மாதிரி ஏதாச்சும் கொடுத்துட்டுப் போனாங்களா?”

“இல்லையே சார்.”

மெதுவாக மாடிப்படிகளில் இறங்கினான் ரகு.

தன் பைக் அருகில் சாய்ந்தபடி அமைதியாக நின்றான்.

எங்கே போனாள் ஆர்த்தி? வேலையை நேற்றே ரிசைன் செய்துவிட்டு, வீட்டைக் காலையில் காலி செய்துவிட்டு மதியம் என்னிடம் பேசியிருக்கிறாள் என்றால்... ரயில்வே ஸ்டேஷன் அல்லது பஸ் ஸ்டாண்டிலிருந்து பேசியிருக்க வேண்டும்.

என்னைப் போலவே அவளும் மன உளைச்சலில் தவித்திருக்க வேண்டும். யோசித்துத் தீர்மானித்திருக்க வேண்டும்.



புறப்படும் முன்பு கடைசியாக சந்தித்துப் பேச ஆசைப்பட்டுதான் போன் செய்திருக்கிறாள். அவசரப் பட்டுவிட்டேன். அவளைப் பேசவே விடாமல் அலட்சியமாகப் பேசி வைத்துத் தொலைத்து விட்டேன்.

ஆம், தொலைத்துதான் விட்டேன். ரோஷக்காரி, கோவைக்கு செல்ல மாட்டாள். ஆர்த்தியை இனி நான் எங்கே எப்போது சந்திக்கப் போகிறேன்?

புயல் மாதிரி வந்தாள். திடீரென்று என் மனசை அலைக்கழித்தாள். வந்த வேகத்தில் காணாமல் போய்விட்டாள்.

‘ஆர்த்தியை இனி சந்திக்க வேண்டாம்’ என்று மனதில் எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் கத்தரித்துப் பேசி னாலும்... ‘ஆர்த்தியை இனி சந்திக்க நினைத்தாலும் முடியாது’ என்கிற உண்மை வலியோடு தாக்கியது.

பெருமூச்சு விட்ட ரகு பைக்கை ஸ்டார்ட் செய்தான்.

வீட்டிற்கு வந்து சாரதாவிடம், “நாளைக்கு வேளச்சேரிக்கு மனை பார்க்கப் போறோம் சாரதா” என்று சொல்லி அவள் முகத்தில் பொங்கிய குதூகலத்தை ரசித்தான்.

## 15



இரண்டு மாதங்களுக்குப் பிறகு பேங்க் முகவரிக்கு அவனுக்கு வந்த தபாலில் இருந்த கையெழுத்தைப் பார்த்ததுமே அது ஆர்த்தி எழுதியுள்ள கடிதம் என்பதைப் புரிந்து கொண்டு பரபரப்பாகப் பிரித்தான் ரகு.

“ஹலோ ரகு...

எப்படி இருக்கே?

இன்னும் என்மேல கோபமாத்தான் இருக்கியா? இல்லை இப்ப கொஞ்சம் தணிஞ்சிடுச்சா?

ஒரு கால இடைவெளி வேகத்தைத் தணிக்கும்ன்னுதான் இத்தனை நாள் நான் சைலண்டா இருந்தேன்.

யோசிச்சுப் பார்த்ததில அன்னிக்கு நான் எமோஷனலா டிஸ்டர்ப் ஆகி என்னைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு கெஞ்சி உன்னை தர்ம சங்கடப் படுத்தினதுக்காக ரொம்ப வெக்கப்பட்டேன் ரகு.

நான் டிவோர்ஸ் பண்ணிட்டதால சுதந்திரப் பறவை. எந்த பாண்டேஜும் இல்லை. ஆனா நீ அப்படி இல்லை. அன்பான சாரதாவோட அழகா குடித்தனம் நடத்திட் டிருக்கே. அதைக் கெடுக்கப் பார்த்தேனே... நல்ல வேளை, நீயும் எமோஷனலாகி 'சரி, நான் கல்யாணம் பண் ணிக்கிறேன்'னு சொல்லித் தொலைக்காம விவேகமாப் பேசி என் புத்திக்குப் புரிய வெச்சிட்டே.

ஆனா உடம்புங்கறது புத்தியைத் தாண்டியதாச்சே! உணர்ச்சிகளோட சங்கமத்தில எனக்கு சந்தோஷம் தான். ஆனா உன் மனசுல குற்ற உணர்ச்சியை விதைச் சிட்டேன்.

பாவம் நீ! சாரதாவைப் பார்க்கறப்பல்லாம் உறுத்தி யிருக்கும்.

ஒரு வகையில பார்த்தா நான் உன்னை சுயநலமா எக்ஸ்ப்ளாய்ட் பண்ணிட்டேன்னுதான் படுது. என் கோணத்தில சரியா இருக்கலாம். எனக்கு மட்டும் நியாயமா இருக்கலாம். உனக்கும் அது நியாயமா இருக்க வேணாமா?

உன் வாழ்க்கையில தப்பான சந்தர்ப்பத்துல நான் மறுபடி எண்டர் பண்ணியிருக்கவேக் கூடாது ரகு. பண்ணிட்டேன். என் சொந்த விரக்தில ஆறுதல் தேடி உன்னை டிஸ்டர்ப் பண்ணிட்டேன்.

அது தொடர வேணாம்னு நினைச்சேன். அதான் உனக்கும், சாரதாவுக்கும் நல்லதுன்னு பட்டுது. அதனால உன்னை விட்டு விலகத் தீர்மானிச்சி வேலையை ராஜினாமா செஞ்சிட்டுப் புறப்பட்டேன்.



போறதுக்கு முன்னாடி மனசு விட்டுப் பேசிடணும்னு ஆசைப்பட்டுதான் ரயில்வே ஸ்டேஷன்லேர்ந்து போன் செஞ்சேன். ஆனா நீ...

பரவால்லை ரகு. என்னால உன்னைப் புரிஞ்சுக்க முடிஞ்சது.

என்னை மாதிரியேதான் நீயும் சிந்திச்சிருக்கே. இந்த விஷயத்துலயும் நம்ம சிந்தனையில எவ்வளவு ஒற்றுமைன்னு சந்தோஷமா இருந்திச்சு.

ஒகே. இனிமே உன் வாழ்க்கையில நான் வேணாம் ரகு எண்ணத்திலேர்ந்து பிரிக்க முடியாதுன்னு எனக்குத் தெரியும். பழக்கத்தில வேணாம்.

நான் எந்த ஊர்ல இருக்கேன்னு நீ தெரிஞ்சுக்க வேணாம். பத்திரமா இருக்கேன். வேற வேலை தேடிக்க பதினஞ்சி நாள் கஷ்டப்பட்டேன். இப்ப செட்டில்டா இருக்கேன்.

இவ்வளவு எழுதிட்டு ஒரு முக்கியமான விஷயத்தை - அதுவும் நீ சம்பந்தப்பட்ட விஷயத்தை எழுதாம முடிச்சா... அது தப்புன்னு தோணுது.

இப்ப நான் தனியா இல்லை ரகு.

என் வாழ்க்கைக்கு ஒரு துணை வேணும்னு நீ சொன்ன மாதிரி ஒரு துணையோட இருக்கேன். நீ தந்த துணை! குட்டித் துணை!

யெஸ் ரகு! மாஸ்டர் ரகுவா இல்லை பேபி ஆர்த்தியான்னு தெரியலை... அழகா வளர்ந்திட்டிருக்கு. போதும்! இந்தத் துணை என் ஆயுளுக்குப் போதும். என் வாழ்க்கைக்கு அர்த்தம் கிடைச்சிடுச்சி!

தேங்ஸ் ரகு. ரொம்ப தேங்ஸ்! எல்லாத்துக்கும்!

மறுபடி எந்த குற்ற உணர்ச்சியும் வெச்சுக்காதே. சாரதாவோட சந்தோஷமா இரு. எப்பவும் போல எப்பவாச்சும் என்னை நினைச்சுக்கோ. நான் இப்பப் போலவே எப்பவும் உன்னை நினைச்சுக்கறேன்.

*இந்த புது மலரோடு தனியாக என் வாழ்க்கை நகர்ந்துடும்.*

*ஏதோ ஒரு ஊர்ல என்னிக்காச்சும் ஏதாவது ஒரு ராட்டினத்திலேர்ந்து என் குழந்தையோட நான் அவசரப் பட்டு கையைக் காட்டினாக்கூட, நீ கண்டுக்காமப் போயிடு ரகு. அதான் நல்லது. பை!*

உன்,

ஆர்த்தி

கண்களில் திரண்ட துளிகள் உதிர... அவசரமாக கர்சீப் எடுத்துத் துடைத்துக் கொண்டான். தொண்டை அடைத்தது. அழ வேண்டும் போலிருந்தது.

அவசரமாக கவரில் தபால் முத்திரையில் ஊரின் பெயரைப் படிக்க முயன்றான். சரியாகப் பதிவாகாததால் முடியவில்லை.

''சார், உங்களுக்குப் போன்.''

சென்று ரிசீவரை எடுத்தான்.

''நான்தாங்க. ஒண்ணுமில்லை. இன்னிக்கு சினிமாவுக்கு கூட்டிட்டுப் போறேன்னு சொன்னிங்களே, நைட்டு டிபன் வெளியில சாப்பிடப் போறமா, இல்லை வீட்லயான்னு கேட்டுகிட்டா அதுக்குத் தகுந்த மாதிரி ஏற்பாடு செய்ய லாமேன்னுதான் போன் பண்ணேன்.''

ஒரு விநாடி தடுமாறி, ''என்னால முடிவெடுக்க முடியலை. நான் ரொம்ப குழப்பத்தில இருக்கேன். உன் இஷ்டம் சாரதா'' என்றான் ரகு.


முற்றுப்புள்ளியில்
ஆரம்பம்
பட்டுக்கோட்டை பிரபாகர்